வெளியீடு 23-8-2003

Issued 23-8-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஜனவரி 29, 2003 – தொகுதி 34 – எண் 3

**Wednesday the 29th January, 2003 – Volume 34 – No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

0]

[Price Rs. 3.00

29-1-2003

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
| --- | --- | --- |
| **1.** | **வினாக்கள்-விடைகள்—** | |
| | (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 171-206 |
| | (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1, 2 மற்றும் 3) | 207-412 |
| **2.** | **அறிவிப்புகள்—** | |
| | (அ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபம் மற்றும் தாழ்வாரங்களில் செல்லுலார் ஃபோன் மற்றும் பேஜர் பயன்படுத்தத் தடை | 413 |
| | (ஆ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆஇ) | 416 |
| | (இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆஇ) | 419 |
| **3.** | **தகவல் கோரல்—** | |
| | (அ) 28-1-2003-ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகளை நீக்கியது | 413-415, 417-418, 420-421, 422-426 |
| | (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 421 |
| **4.** | **அறிக்கைகள் அளித்தல்—** | |
| | (அ) பொதுக் கணக்குக் குழு | 415,416 |
| | (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 416 |
| **5.** | **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| | (அ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 416-417, 418-419 |
| | (ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 419-420 |

தமிழ்நாடு ஆவண காப்பகம்
184534
நூலகம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 6. | **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்**—தொடர்ச்சி | 427-489, 496-601 |
| | திரு. ஐ. கணேசன் | 427-453 |
| | *மாண்புமிகு திரு. அ. அருணாசலம் | 454-465 |
| | திருமதி வளர்மதி ஜெபராஜ் | 465-475 |
| | திரு. மு. அப்பாவு | 475-481 |
| | திரு. கே. மகேந்திரன் | 485-489, 496-503 |
| | திரு. வை. சிவபுண்ணியம் | 503-525 |
| | திரு. எம்.ஏ. ஹக்கீம் | 525-542 |
| | *திரு. எம். சக்திவேல் முருகன் | 543-554 |
| | *திரு. ப. அரசன் | 554-562 |
| | திரு. கா. கந்தசாமி | 562-571 |
| | *திரு. க. முருகவேல் ராஜன் | 571-583 |
| | *திரு. என். நன்மாறன் | 584-591 |
| | *திரு. ப. இராஜரெத்தினம் | 591-601 |
| 7. | **தற்கொலை செய்துகொண்ட திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சண்முகத்தின் தற்கொலைக் குறிப்பு தொடர்பான காவல் துறையினரின் விசாரணை** | 490-495 |
| 8. | **அரசினர் தீர்மானம்**— | |
| | விதி 32-ஐத் தளர்த்துதல் | 602 |
| 9. | **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— | 603-604 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 15, சித்ரபானு, திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 ஜனவரி 29, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை *10-00* மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு."**

கொடைத் தன்மையும், குன்றாத புகழும் தவிர, வாழ்க்கைக்கு ஆக்கம் தரக்கூடியது வேறெதுவும் இல்லை.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் *21*, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**21—**

**பாலத்தைச் சீரமைத்தல்**

***6173—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம் ஊராட்சி ஒன்றியம், கீழக்கடையம் ஊராட்சி நெல்லையப்பபுரம் கிராமத்தில் உடைந்துள்ள பாலம் சீரமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சீரமைக்கப்பட்டுள்ளது.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லையப்பபுரத்தில் உள்ள இந்தப் பாலம் வெங்காடம்பட்டி-நெல்லையப்பபுரம் நெடுஞ்சாலைத் துறைக்கு உட்பட்ட இடத்தில் உள்ளது. இந்தச் சாலையும், கடையத்திலிருந்து கோயிலூத்து செல்லும் சாலையும் பல ஆண்டுகளாகச் சீரமைக்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்த ஆண்டு இந்தச் சாலையையும், இந்தப் பாலத்தையும் சீரமைத்தால் நெல்லையப்பபுரம், மற்றும் அருகில் உள்ள வெங்காடம்பட்டி, பூலாங்குளம், கிருஷ்ணபேரி, சாலைப்புதூர் ஆகிய கிராமங்களுக்கும் நல்ல பயனாக இருக்கும் என்பதால், இந்த ஆண்டே இந்தச் சாலையையும், பாலத்தையும் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள பாலம், வெங்காடம்பட்டி—நெல்லையப்பபுரம் சாலையில் மாவட்ட இதர சாலை, கிலோ மீட்டர் 0/2-ல் 3 கல்கொண்ட மூடுகல் பாலம் ஆகும். ஒரு கண்வாயில் உள்ள பழுதடைந்த மூடுகல்லை அகற்றி, கான்கிரீட் போடப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளது. இப்பாலத்தை அகலப்படுத்தி திரும்பக் கட்டத் தோராயமாக ரூ.5 இலட்சம் தேவைப்படும். வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் இப்பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பாலத்திலிருந்து அணுகு சாலையைச் செப்பனிட வேண்டுகோள் விடுத்தார்கள். வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22, டாக்டர் பி. வள்ளல் பெருமான், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**22—**

### புறவழிச் சாலை

***16678—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஜனவரி 29]

(அ) கடலூரிலிருந்து சிதம்பரத்திற்கு முட்லூர் வழியாக புறவழிச் சாலை அமைத்திட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது? எப்பொழுது திட்டம் துவக்கப்படவுள்ளது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்கு விரிவான தொழில்நுட்ப வடிவமைப்பு மதிப்பீடு ரூ.45.30 கோடி செலவில் ஆலோசகர் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் 2003 ஆம் ஆண்டு தொடங்கி, மூன்றாண்டு காலத்தில் செயலாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலையானது கடலூர் மாவட்டத்தில் மிக முக்கியமான ஒரு சாலையாகும். சிதம்பரம் நகரத்தில் நடராஜர் ஆலயம் உலகப் பிரசித்தி பெற்ற ஓர் ஆலயம். இந்த ஆலயத்திற்கு ஒரு நாளைக்கு ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். இங்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் என்று ஒரு பெரிய பல்கலைக்கழகம் இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் அங்கு வருகிறார்கள். அதுபோல், பாண்டிச்சேரியிலிருந்து காரைக்கால் செல்வதற்கும் சிதம்பரம் நகரம் வழியாகத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், சிதம்பரம் நகரத்தில் அந்தக் கோயிலைச் சுற்றி இருக்கிற மாட வீதிகளில்தான் போக்குவரத்து வாகனங்கள் செல்கின்றன. இதனால் பல விபத்துகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுபோல், கடலூரிலிருந்து சிதம்பரத்திற்கு வரவேண்டுமென்றால், புவனகிரி வழியாகத்தான் தற்சமயம் வந்து கொண்டிருக்கிறார்கள். 25 கிலோ மீட்டர் தூரம் வீணாக புவனகிரிக்குச் சென்று, வர வேண்டியிருக்கிறது. ஆகவே, முட்லூர் வழியாக பி. முட்லூர், சி. முட்லூர் ஆகியவற்றை இணைக்கும் பாலத்தைக் கட்டி புறவழிச் சாலை அமைக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், கடந்த பல்லாண்டுகளாகக் கிழக்குக் கடற்கரைச் சாலை போடும்போது, அது சிதம்பரம் புறவழிச் சாலை வழியாக வருமென்று சர்வே செய்யப்பட்டது.

அதுவும் கைவிடப்பட்டது. அதுபோல் அதற்கு அடுத்ததாக தேசிய நெடுஞ்சாலைத் துறை மூலமாக என்.எச். 45-ஏ—அந்தச் சாலை விழுப்புரம், பாண்டிச்சேரி, கடலூர், சிதம்பரம், சீர்காழி, நாகப்பட்டினம் வழியாக ரோட்டை ஒட்டி போடப்போவதாகப் புறவழிச் சாலைக்கு சர்வே செய்தார்கள். அந்தத் திட்டமும் கைவிடப்பட்டு, இப்போது Tamil Nadu Road Sector Project— தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உலக வங்கியின் உதவியுடன் வருவதாக இன்றைக்கு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள். இப்புறவழிச் சாலை இந்த ஆண்டாவது கட்டாயம் வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகருக்கு முட்லூர் வழியாக இந்தப் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளது. இப்புறவழிச் சாலை, கடலூர்—சிதம்பரம் சாலையில் கிலோ மீட்டர் 96/4 பி.முட்லூரிலிருந்து சி. முட்லூர் வழியாகச் சென்று சிதம்பரம்—சீர்காழி சாலையில் கிலோ மீட்டர் 114/4-ல் முடிவடைகிறது. இப்புறவழிச் சாலையின் நீளம் 16.9 கிலோ மீட்டர் ஆகும். இதற்கான விரிவான தொழில்நுட்ப வடிவமைப்பு மதிப்பீடு—ரூபாய் 45.30 கோடி—ஆலோசகர் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை உலக வங்கி ஆய்வுக் குழு 2002-2003-ல் வருகை தந்து ஆய்வு செய்து, கடன் நிதியுதவி பெறப் பரிந்துரை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது, மேலும், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம், 2003 ஆம் ஆண்டு தொடங்கி, மூன்றாண்டு காலத்தில் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடலூர் முதல் நாகப்பட்டினம் வரை உள்ள சாலை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. இச்சாலை மாநில அரசு சாலையாகத் தற்போது இல்லாவிட்டாலும், சிதம்பரம் நகரின் போக்குவரத்து நெரிசலையும், முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு, இப்புறவழிச் சாலை அமைக்கும் திட்டம், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது; தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.





**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர், சிதம்பரம் வழியாக புறவழிச் சாலை அமைப்பதோடு, நாகப்பட்டினம்-கன்னியாகுமரி வரை இருக்கிற கிழக்குக் கடற்கரைச் சாலை, அநேகமாக அந்தச் சாலை வரும் என்பதற்காகவே, பல ஆண்டுகளாக—கிழக்குக் கடற்கரைச் சாலை என்று சொல்லி—செப்பனிடப்பட முடியாமல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. தென் மாவட்டங்களுக்கு இது ஒரு பிரதான சாலையாகும். இதனுடைய பராமரிப்புப்பணிகூட இன்றுவரை செய்யப்படவில்லை. அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா? இல்லையென்று சொன்னால், நம்முடைய நெடுஞ்சாலைத் துறையாவது எடுத்துச் செப்பனிடுவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? தினந்தோறும் பல விபத்துகள் இதனால் ஏற்படுகின்றன. பல்வேறு திருத்தலங்களுக்குச் செல்வதற்கும், சென்னைக்கு வருவதற்கும் இது ஒரு பிரதானமான சாலையாக இருப்பதால், செப்பனிடப்பட முடியாமல் இருக்கிற இந்தச் சாலை இந்தத் திட்டத்தில் எடுக்கப்படுமா, இந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலை என்கிற திட்டம் இருக்கிறதா, இல்லையா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில், உலக வங்கியின் நிதியுதவியுடன் ஆற்காட்டிலிருந்து கடலூர் வழியாக, நாகப்பட்டினம் வழியாக, தூத்துக்குடி வரைக்கும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, தற்போது ஒப்பந்ததாரர்களின் முன் தொகையும் கோரப்பட்டு, முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்நிதியாண்டில் இந்த முக்கியத்துவம் வாய்ந்த சாலை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நிர்வாகத்தின் நல்ல நடவடிக்கையாக, துரிதப்படுத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. உறுதியாக, அந்தச் சாலை, அந்தப் பகுதி மக்களுக்குப் பயனுள்ள வகையில் அமையும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது அந்தப் பகுதியில் இருக்கிற சாலை பழுதுபட்டிருந்தால், அந்தப் பழுதினைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரைச் சாலை, இராமநாதபுரம் மாவட்டத்தில் மிக, மிக மோசமான நிலையிலே இருக்கிறது. பல தடவை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொல்லியும், இன்னும் அந்தக் குழிகள் சரி செய்யப்படாத ஒரு நிலை இருக்கிறது. அவர்களைக் கேட்டால், இந்தச் சாலையை விரிவான திட்டத்திலே அரசாங்கம்—கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்தின்கீழ்—செய்ய இருக்கிறது என்று கூறி, ஏறத்தாழ நான்கைந்து ஆண்டுகளாக அந்தச் சாலைகள் செப்பனிடப்படாமல், தற்போது வாகனங்கள் செல்ல முடியாத ஒரு நிலை இருக்கிறது. முதலிலே அந்தச் சாலையைச் செப்பனிட்டு, அதற்குப் பிறகு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரைச் சாலையின் முக்கியத்துவத்தை அறிந்துதான் அதை உலகத் தரம் வாய்ந்த சாலையாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், அங்கே சாலைகளில் பழுதுகள் ஏற்பட்டிருந்தால், உடனடியாகச் சீரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு நிதி அமைச்சர்.

**23—**

## வாக்காளர் பட்டியல்

***22981—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக வாக்காளர் பட்டியலில் தவறுகள் உள்ளதை அரசு அறியுமா?



2003 ஜனவரி 29]

(ஆ) ஆம் எனில், சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கால அட்டவணைப்படி, 1-1-2003 ஆம் நாளை, தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு சிறப்புத் திருத்தப் பணி மேற்கொள்ளப்பட்டு வாக்காளர் பட்டியல் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் 17-1-2003 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில், 2001-ல் இலட்சக்கணக்கான வாக்காளர்கள் விடப்பட்டதை நாம் அறிவோம். தொடர்ந்து வாக்காளர் சேர்த்தலில், விழிப்புணர்வு மக்களிடையே இல்லாததாலும், ஏழை மக்கள் கூலி வேலைக்கு அன்றாடம் சென்று விடுவதாலும், தொடர்ந்து பல ஆண்டுகளாக இணைப்புப் பட்டியல் தயாரிப்பதில் ஒவ்வொரு தொகுதிக்கும் உண்மையான வாக்காளர்களைச் சேர்க்க முடியாத நிலை உள்ளது. மேலும், கம்ப்யூட்டர் மூலம் வாக்காளர் பட்டியல் தயாரிப்பதில் பல குளறுபடிகள் உருவாகியுள்ளன. குறிப்பாக, ஒரே கதவு எண்ணில் 200, 300 வாக்காளர்கள் உள்ளதாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஒரே பெயரில் பல தெருக்கள் இருப்பதால், அவை அனைத்தும் ஒரே வரிசையில் அச்சடிக்கப்பட்டு உள்ளன. ஒரு தெருவில் உள்ள வாக்குகளை மற்றொரு தெருவில் சேர்ப்பது, கணவன் வாக்கு ஓர் இடத்திலும், மனைவி வாக்கு வேறோர் இடத்திலும் அச்சடிக்கப்படுவது என்று இதுபோன்ற குளறுபடிகள் அனைத்துத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களிலும் உள்ளன. எனவே, வரும் ஆண்டில் வேலைப் பளு உள்ள அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை விடுத்து, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்கள் மூலம் சட்டமன்றத் தொகுதிக்கான புதிய வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுபட்ட வாக்காளர்களைச் சேர்ப்பது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய அந்தக் குறைபாடுகள் எல்லாம் நடைமுறையில் இருப்பது உண்மைதான். அவற்றைக் களைய வேண்டுமென்றும் பல புதிய வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் தேர்தல் ஆணையத்திற்கு மாநில அரசு தெரிவித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய பல ஆலோசனைகளையும் இதில் உள்ளடக்கி மீண்டும் நாங்கள் தேர்தல் ஆணையத்தை வலியுறுத்துவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. வெங்கடாஜலம் சொன்னதுபோல, பல தொகுதிகளில்—உள்ளபடியே சாத்தான்குளத்தில்கூட பல சிறுபான்மையினர்களுடைய—ஓட்டுகள் நிறைய விடுபட்டு உள்ளன. சில பகுதிகளிலே, ஆளே இல்லாத இடத்தில், இருப்பது போல சில வாக்குகள் எல்லாம் பதியப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. தொடர்ந்து, எந்த ஆட்சி வந்தாலும் இப்படி நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கு, கட்சிச் சாயம் இல்லாமல், பொதுப்படையான ஏதாவது ஓர் அமைப்பைக் கொண்டு, உண்மையான வாக்காளர்கள், உண்மையான வாக்காளர் பட்டியலில் இடம் பெறச் செய்வதற்கு என்ன வழிமுறைகளைத் தேர்தல் ஆணையத்திற்கு நம்முடைய அரசு பரிந்துரை செய்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளமாக இருந்தாலும் சரி, வேறு எந்தப் பகுதியாக இருந்தாலும் சரி, வாக்காளர்களைச் சேர்க்கின்ற பணியைத் தேர்தல் ஆணையம் மேற்கொண்டிருக்கிறது. தேர்தல் ஆணையம் மாநில அரசினுடைய கட்டுப்பாட்டில் இல்லை. இது மைய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. இந்தக் குறைகளை மைய அரசிற்கு எடுத்துச் சொல்லி, மைய அரசு அவர்களுடைய வழிமுறைகளை மாற்ற வேண்டும். குறைபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை நமது அரசு தேர்தல் ஆணையத்திற்குத் தெரிவித்திருக்கிறது. மைய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிற தேர்தல் ஆணையம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்; நாம் வலியுறுத்தி வருகிறோம்.



2003 ஜனவரி 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தடவையும் வாக்காளர் பட்டியல் வெளியிடுகின்றபோது, 20, 30 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தவர்களுடைய பெயர்கள்கூட அந்த வாக்காளர் பட்டியலிலே தொடர்ந்து வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. சென்னை மாநகரைப் பொறுத்தளவிலே, பிறப்பு, இறப்புகளைப் பதிவு செய்கின்ற அலுவலகங்கள் மண்டல வாரியாக இயங்கிக் கொண்டு வருகின்றன. அந்த மண்டல அலுவலகங்களிலே இறந்தவர்களுடைய பெயர்கள் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன. ஆண்டுதோறும் வாக்காளர் பட்டியல் தயாரிக்கும்போது, அப்படி இறந்தவர்களுடைய பட்டியலை அந்த அலுவலகங்களிலிருந்து பெற்று, அவர்களுடைய பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்குவதற்குண்டான நடவடிக்கையை அரசு எடுக்க முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை தேர்தல் ஆணையத்திற்குத் தெரிவிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கக் கோரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜனநாயகத்தினுடைய உயிர்நாடியே வாக்காளர்கள்தான். எனவே, வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் குளறுபடி ஏற்படுகிறபோது, ஜனநாயகமே குளறுபடி ஆகிவிடுகிறது. *(சிரிப்பு)* எனவே, இப்போது ஆண்டாண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, அருமையான தத்துவம்! *(சிரிப்பு)*

**திரு. எ.வ. வேலு:** எனவே, ஆண்டாண்டு காலமாக வாக்காளர்களை இணைக்கிறோம் என்ற பெயரில், புதிதாக இணைக்கிறோம் என்று சொல்கிறபோது, பழையவர்களுடைய பெயர்கள் விடுபட்டு விடுகின்றன. குறிப்பாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய

தொகுதியில் ஒரு ஒன்றியத்தினுடைய துணைப் பெருந்தலைவர், அவர் ஏற்கெனவே தொடர்ந்து வாக்காளராக இருக்கிறார். இதுமாதிரி புதிதாக எடுக்கிறார்கள்; அவர் பெயரே இல்லை. இதனால், நான் ஏற்கெனவே சட்டமன்றத்திலேயே நம்முடைய நிதியமைச்சர் அவர்களிடத்திலே ஒரு கேள்வியை எழுப்பினேன். இது அங்கே இருக்கிற ஆசிரியர்களை வைத்து எடுக்கப்படுகிறது. ஆசிரியர்கள், பள்ளிக்கூடத்திலேயே உட்கார்ந்து கொண்டு. ஓய்வு நேரங்களிலே அங்கே இருக்கிற மாணவர்களைக் கூப்பிட்டு, உங்கள் வீட்டிலே யார், யார் இருக்கிறார்கள் என்று கேட்டு, சேர்த்துக்கொள்கிறார்கள். எனவே, Village Administrative Officers என்று சொல்லுகின்ற V.A.O.-க்களை இதிலே பயன்படுத்தலாம் என்கிற ஒரு கருத்தைச் சொன்னேன். வருவாய்த் துறை அதிகாரிகளை இதிலே முழுமையாகப் பயன்படுத்தலாம் என்கிற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறேன். எனவே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, கேள்வி வாலு மாதிரி போகக்கூடாது.

**திரு. எ.வ. வேலு:** இல்லை, இல்லை. உயிர்நாடி என்று சொல்லும்போது உயிர்நாடிக்குக் கொஞ்சம் டைம் கொடுங்களேன். எல்லோருக்குமாகத்தான் சொல்கிறேன். இதை ஒன்றும் தனிப்பட்ட முறையிலே சொல்லவில்லை. அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்காகவும்தான் சொல்கிறேன். இதை முறைப்படுத்த வேண்டும். முறைப்படுத்தாமல், இணைப்பு, இணைப்பு, இணைப்பு என்று போகும்போது, சில பெயர்கள் நீக்கல், நீக்கல் என்று போய்க்கொண்டு இருக்கிறது. எனவே, புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்க்கின்ற வகையில், ஒவ்வொரு வீடாகச் சென்று அதைச் சேர்ப்பதன் மூலமாக புதிய வாக்காளர் பட்டியலை உருவாக்க முடியும். அந்தத் திட்டம் அரசிடம் உள்ளதா? இல்லை என்றால், இதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள் ஏற்கெனவே கூறிய ஆலோசனையைக்கூட நாங்கள் தேர்தல் ஆணையத்திற்குத் தெரிவித்திருக்கிறோம். தற்போது அவர்கள் கடைப்பிடித்து வருகின்ற—ஒவ்வொரு வீட்டிலும் யார், யார் வாக்காளர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிவதற்கு அரசுப் பணியாளர்களைப் பயன்படுத்துகிற—நெறிமுறையிலுள்ள கோளாறுதான்





இதற்குக் காரணம். அப்படி வாக்காளர்கள் யார், யார், எங்கெங்கு இருக்கிறார்கள் என்பதைக் கண்டறியக்கூடிய பொறுப்பிலுள்ள அதிகாரிகளும் கடமையுணர்வோடு அதைச் செய்தாக வேண்டும். கடமை தவறுகிறபோது இதுபோன்ற கோளாறுகள் ஏற்படுகின்றன. எனவே, கடமையுணர்வுடன்—accountability and answerability ஆகிய பொறுப்புணர்வுகளுடன் அவர்கள் எப்படிச் செயல்பட வேண்டுமென்பதை நிர்ணயித்து, அந்த அடிப்படையிலே அந்தப் பணியை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் மாற்று முறைகளைக் கையாள வேண்டுமென்று மாநில அரசு தேர்தல் ஆணையத்திற்கு அறிவித்திருக்கிறது. நாங்கள் தொடர்ந்து அதை வற்புறுத்துவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர்கள் சேர்க்கை மற்றும் நீக்கங்களிலே இருக்கக்கூடிய குறைகளை நாம் எல்லோரும் ஒத்துக்கொள்ளக்கூடிய அதே நேரத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் குறைகளை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். தேர்தல் ஆணையத்தின் மூலமாகக் குறைகளைக் களைவதற்கு, அரசு வற்புறுத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிக் குறைகளைக் களையக்கூடிய அதே நேரத்திலே புதிதாக வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதா அல்லது விடுபட்டவர்களைச் சேர்ப்பதா எந்த முறையிலே அரசு தேர்தல் ஆணையத்தை வலியுறுத்தவிருக்கிறது என்பதைக் கேட்கக்கூடிய அதே நேரத்திலே, ஒவ்வொரு வாக்காளரும் விடுபடாமல் எல்லோரும் வாக்களிக்கக்கூடிய முறையிலே வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதற்கு அரசு எந்த வழிமுறைகளை ஆணையத்தின் மூலமாக வலியுறுத்துகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1-1-2002*-லிருந்து, தேர்தல் ஆணையம் புதிய வாக்காளர்களைச் சேர்க்கின்ற அல்லது தேவை இல்லாதவர்களை விடுவிக்கின்ற பணியை மேற்கொள்கின்றபோதே, 'a comprehensive work should be undertaken' என்று நாங்கள் சொன்னோம். ஒரு முழுமையான பணியை மேற்கொண்டு முற்றிலுமாக மாற்ற வேண்டுமென்று கூறினோம். ஆனாலும்கூட தேர்தல் ஆணையம் பழைய நடைமுறைகளின் அடிப்படையிலேயே தற்போது வாக்காளர்கள் பட்டியலைப் புதுப்பிக்கிற பணிகளை மேற்கொண்டு, *1-1-2003* அன்று புதிய பட்டியலை

[2003 ஜனவரி 29

வெளியிட்டிருக்கிறது. இனிமேல் அந்தப் புதிய அணுகுமுறைகளை மேற்கொள்ள நாம் மிகவும் வற்புறுத்தி வருகிறோம். விடுபட்டவர்களைச் சேர்க்கின்ற பணியைச் செம்மையாகச் செய்ய வலியுறுத்துவதுதான் சாத்தியக்கூறாக இருக்கும். அதை இந்த அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் பட்டியல் தயாரிக்கிற பணியில் பல்வேறு துறைகளை விடுவதைவிட, உள்ளாட்சி மன்றங்களிடத்திலே இந்தப் பொறுப்பை ஒப்படைக்கலாம். அவர்கள் வரி விதிக்கிறவர்கள்; பிறப்பு, இறப்புகளைப் பதிவு செய்கிறவர்கள்; எந்தெந்தத் தெருவிலே யார், யார் குடியிருக்கிறார்கள் என்பதை உணர்ந்தவர்கள். எனவே, நம்முடைய அரசு மத்திய அரசுக்கு இதை உணர்த்தி, உள்ளாட்சித் துறையின் மூலமாகக் கொடுத்தால், குறுகிய காலகட்டத்திலேயே அவர்கள் முடித்துவிடுவார்கள். சிற்றூரோ, பேரூரோ, நகராட்சியோ, மாநகராட்சியோ, எதுவாக இருந்தாலும், உள்ளாட்சித் துறையிடத்தில் ஒப்படைத்தால் குறுகிய காலத்திலும், மிகச் சிறந்த முறையிலும் இந்தப் பணி முடிவடையும் என்கிற காரணத்தால் நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்தி, அந்த முறையில் வாக்காளர் பட்டியலைத் தயாரிக்குமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையம் எடுக்க வேண்டிய முடிவு அது. உள்ளாட்சி அமைப்புகளை எந்த அளவிற்கு இதிலே உள்ளடக்க வேண்டுமென்பது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்த ஆலோசனை குறித்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப் பற்றி அரசு ஆலோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் கமிஷன் என்பது மைய அரசின் பொறுப்பிலே இருந்தாலும்கூட, மாநில அரசினுடைய ஆசிரியர்கள்தான் வாக்காளர்களைச் சேர்க்கின்ற பணியை மேற்கொண்டிருக்கிறார்கள்.



2003 ஜனவரி 29]

ஆசிரியர்கள் எங்களை வாக்காளர்களாகச் சேர்த்தால்தான் உண்டு. இல்லையென்று சொன்னால், நான் வாக்காளர் இல்லை. சென்ற முறை என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் 23,000 வாக்காளர்களின் பெயர்கள் விடுபட்டுப்போய் விட்டன. ஆகையினால் பெரிய அளவிலே இந்தத் தவறு நிகழாமல் இருக்கவேண்டுமென்று சொன்னால், Tata Consultancy போன்ற தனியார் நிறுவனங்கள் மூலம் இந்த வாக்காளர் சேர்க்கும் பணியை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு அலுவலர்கள்தான் இந்தப் பணியில் ஈடுபட்டாலும்கூட —for that limited purpose of enumeration, they are considered to be under the administrative control of the Election Commission— எனவே, தேர்தல் ஆணையம்தான் எந்த அணுகுமுறையையும் மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் நடைமுறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

**திரு. எஸ். ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வாக்காளர் பட்டியலில் விடுபட்டவர்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், லாயிட்ஸ் குடியிருப்பில் சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இருக்கின்றார்கள். அதிலுள்ள குடியிருப்புகள் ஒவ்வொன்றும் A to F, அதாவது 'B' பிளாக், 'A' பிளாக் என்று பிளாக் வாரியாகத்தான் உள்ளது. ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் இருக்கின்றன. ஆனால், வெளிவந்திருக்கிற அந்த வாக்காளர் பட்டியலிலே சராசரியாக டோர் நம்பர் 15 என்று போட்டு, அதிலேயிருந்து அவர்களுடைய பெயர்களை எப்படிக் கண்டுபிடிப்பது என்றே தெரியவில்லை. என் பெயர் இருக்கிறதா என்று போய்ப் பார்த்த நேரத்திலே என் பெயர் இல்லையென்று சொல்லி விட்டார்கள். அதற்குப் பிறகு ஆய்ந்த நேரத்தில், 15 என்ற எண்ணில் போட்டு, மொத்த பிளாக்குகளையும் 15 என்ற எண்ணில் எப்படிக் கண்டுபிடிப்பது என்று தெரியாத நிலையில் நான் புகார் சொன்னேன், சம்பந்தப்பட்ட அதிகாரியிடத்தில். இது எல்லாம்

முடிந்துவிட்டது; இனிமேல் இதில் ஆய்வு செய்வதற்கு முடியவில்லை என்று சொன்னார்கள். நான் சொன்னேன், சென்ற ஆண்டு வாக்காளர் பட்டியலில் (மணியடிக்கப்பெற்றது) அண்ணே, இது ரொம்ப முக்கியம் அண்ணே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள். (சிரிப்பு)

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'A', 'B' என்று எல்லாம் போட்டு இருக்கிறதே, அப்படி இனிஷியல் வாரியாக இருப்பதைச் சொன்னால், நீங்கள் 15 என்று போட்டால் எப்படி முடியும் என்று கேட்ட நேரத்திலே, சென்ற ஆண்டு அந்த வாக்காளர் பட்டியலைப் பார்த்து, நீங்கள் அந்தப் பெயர்களோடு பிளாக்கைப் போட்டிருக்கவேண்டும் என்று சொன்னால்கூட, 'அதுகூட முடியாது. நீங்களே செய்ய முடியுமா' என்று எங்களைக் கேட்கிறார்கள். தயவுசெய்து பேரவைத் தலைவர் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன், அந்த வாக்காளர் பட்டியலை மீண்டும் மறுபரிசீலனை செய்து, அதில் உள்ள பெயர்களை, 'A', 'B' என்ற அடிப்படையில் பதிவு செய்ய முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் காலக்கெடு முடிந்துவிட்டாலும்கூட, படிவம் 6, படிவம் 7, படிவம் 8-ஏ, படிவங்கள் 8-பி, அதைப்போலவே விதி 21, 21-ஏ அடிப்படையில், எந்த நேரத்தில் வேண்டுமானாலும் இவற்றைத் திருத்த முடியும். மாண்புமிகு உறுப்பினர் இந்தப் படிவங்களின் அடிப்படையில் மனுக்களைத் தாக்கல் செய்யவும். தேர்தல் ஆணையத்தினுடைய மாநில அதிகாரி மூலமாக நடவடிக்கை எடுக்க அரசின் சார்பிலே நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 24, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

**24—**

## உள்ளாட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு

***30114—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஒதுக்குவது குறித்து மாநிலத்தின் இரண்டாவது நிதிக் குழு அளித்துள்ள பரிந்துரை என்ன?

(ஆ) அதன்மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இரண்டாவது மாநில நிதி ஆணையம் அதன் அறிக்கையை 21-05-2001 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்களிடம் அளித்தது. மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு பற்றிய பரிந்துரைகள், இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் அறிக்கையில் "நிதிப் பகிர்வு முறை" என்ற அத்தியாயத்தில் (அத்தியாயம் XIII) விளக்கப்பட்டுள்ளது. இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் விளக்கக் குறிப்பு, ஆணையத்தின் அறிக்கையுடன் 8-5-2002 அன்று சட்டமன்றத்தில் வைக்கப்பட்டது.

(ஆ) ஆணையத்தின் அறிக்கையில் "நிதிப் பகிர்வு முறை" என்ற அத்தியாயத்திலுள்ள பரிந்துரைகளை அரசு பரிசீலித்து அரசாணை நிலை எண் 284/நிதித் (நி.கு.4) துறை, நாள் 12-8-2002-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகள் குட்டிக் குடியரசுகளாகத் திகழவேண்டும் என்பது தேசப்பிதா மகாத்மா காந்தியினுடைய இலட்சியக் கனவாக இருந்தது. அந்த இலட்சியக் கனவை நனவாக்குகின்ற வகையில், உண்மையான அதிகாரம் படைத்த அமைப்புகளாக உள்ளாட்சிகள் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் பஞ்சாயத்து ராஜ், நகர்பாலிகா சட்டங்களை ராஜிவ் காந்தி அவர்கள் கொண்டுவர நடவடிக்கை எடுத்தார்கள். அந்தச் சட்டங்கள் கொண்டு வந்ததற்குப் பின்னாலேயும்கூட உள்ளாட்சி அமைப்புகள் தாங்கள் விரும்புகின்ற வகையில் இயங்க முடியவில்லையென்ற புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. காரணம், போதிய நிதி அவர்களுக்குக் கிடைக்கவில்லை. நிதிப் பங்கீடு, நிதிப் பகிர்வு அவர்களுக்குக்

[2003 ஜனவரி 29

கிடைக்கவில்லை. சென்ற ஆண்டுகூட அவர்களுக்கு உரிய நிதி மாநில அரசிடமிருந்து வரவில்லை என்கிற புகார்கள் இன்னும் வந்துகொண்டிருக்கின்றன. இந்த நடப்பாண்டிலேகூட நிதி அவர்களுக்கு முழுமையாக வரவேயில்லை. எனவே அவர்களுக்கு, உள்ளாட்சிகளுக்கு நிதி கிடைப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைக் கொஞ்சம் தெளிவாக எடுத்துச்சொல்ல வேண்டும். 12-8-2002-ல் வந்திருக்கின்றது என்று சொன்னால் போதாது. தெளிவாக அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தெளிவாகச் சொன்னால், ரொம்ப நேரம் ஆகும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தினுடைய சொந்த வரி வருவாயிலிருந்து கேளிக்கை வரிகளை நீக்கிய பின்னர், நிகர வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய ஒட்டுமொத்த நிதிப் பகிர்வினுடைய சதவிகிதம் 2002-2003-க்கு 8 சதவிகிதம்; 2003-2004-க்கு 8 சதவிகிதம்; 2004-2005-க்கு 9 சதவிகிதம்; 2005-2006-க்கு 9 சதவிகிதம்; 2006-2007-க்கு 10 சதவிகிதம். இதை மாநில அரசு பரிசீலித்தது. அரசினுடைய நிதி இடர்ப்பாடுகள் எந்த அளவிற்கு இருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். மாநில அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வை நடைமுறைப்படுத்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது, நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றுதான். அதைப்போலவே, மைய அரசும் அதனுடைய நிதிப் பகிர்வை முறையாக மாநிலங்களுக்குத் தந்தாக வேண்டும். ஏற்கெனவே பல முறை நான் அவையில் கூறியிருக்கிறேன். ஆரம்ப கட்டமாக ஒரு 590 கோடி ரூபாய், இந்த ஆண்டு மைய அரசு தர வேண்டிய நிதிப் பகிர்விலிருந்து நமக்குத் தராமல் விட்டுவிட்டார்கள். அதையடுத்து, மேலும் ஒரு 540 கோடி ரூபாய் மைய அரசு மாநில அரசுக்குத் தர வேண்டிய நிதிப் பகிர்வை, தமிழகம் வளர்ந்த மாநிலம் என்று அவர்களுக்கே உரித்தான ஒரு வரையறையைக் கொண்டு, தரத் தவறி விட்டார்கள். இந்த நிலையிலும்கூட, சராசரியாக 8 சதவிகித நிதிப் பகிர்வை உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தர வேண்டும் என்று அரசு முடிவு செய்து, 12-8-2002-ல் அந்த ஜி.ஓ. எண் 284-ன்படி ஆணையிட்டிருக்கிறது. அதை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.



2003 ஜனவரி 29]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8 சதவிகித நிதிப் பகிர்வு என்று சொல்கிறார்கள். நான் பொதுவாகக் கேட்கிறேன்; தனியாகக் கேட்கவில்லை. சென்ற ஆண்டு 8 சதவிகித நிதிப் பகிர்வில் உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்க வேண்டிய தொகை எவ்வளவு? நடப்பு ஆண்டிலே எந்த அளவுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். அதேபோல, நிதிப் பகிர்விலே இருக்கிற குறைகள்; கல்விக்காக 'செஸ்' வசூலிக்கப்படுகிறது. வசூலிக்கப்படுகிற 'செஸ்' கல்விக்காகச் செலவிடப்படுவதில்லை. வேறு பணிகளுக்கு எடுத்துப் பயன்படுத்தும்படி அரசு அவர்களுக்கு அறிவுரை வழங்குகிறது. எனவே, இது போன்ற தவறுகளைத் திருத்திக்கொள்ளுமா, உரிய நிதிப் பங்கீடு அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டில், ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு மாற்றுவது தவறு என்று கருதக்கூடாது; இது தவிர்க்க முடியாதது என்றுகூட, அதை மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக்கொள்ள வேண்டும். தற்போது இருக்கின்ற நிதி நிலையில் மைய அரசே எங்களுக்கு இன்னும் கூடுதல் நிதியைத் தர வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம்; தருவார்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம். மாநில அரசு அதனுடைய வருவாய்க்குட்பட்டு, இயன்ற அளவிற்கு நிதிப் பகிர்வை அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தர வேண்டும் என்ற அக்கறையோடு, நான் ஏற்கெனவே சொன்னதுபோல ஆணையிட்டிருக்கிறோம். படிப்படியாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசு நிதிப் பகிர்வாகத் தர வேண்டிய பணத்தை, போதிய நிதியை--மைய அரசிடமிருந்து போதிய நிதி வந்தாலும், வராவிட்டாலும்-- நிதி ஆதாரத்தைப் பெருக்கியேனும் தர வேண்டும் என்பதுதான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கொள்கை. அதை அரசு நடைமுறைப்படுத்தும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சென்ற ஆண்டிலும், நடப்பு நிதி ஆண்டிலும் வழங்கப்பட்ட, அந்த சதவிகிதத்தினுடைய அடிப்படையில் வழங்கப்பட்ட மொத்த நிதி எவ்வளவு என்பதுதான் என்னுடைய கேள்வி.

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குத் தனி வினா போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இன்றைக்கு வேலைக்கு உணவு என்ற திட்டத்திலே, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்குப் பல்வேறு வகைகளில் பல்வேறு திட்டங்களின் மூலமாக நிதி ஒதுக்குகிறது. ஆனால், அங்குள்ள நிர்வாகங்கள் அந்த மனித உழைப்புக்கு அரிசி கொடுக்காமல், நிதி கொடுக்காமல் இயந்திரங்களைப் பயன்படுத்தி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. திரு. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஒதுக்குவது சம்பந்தமான பிரச்சினையிலே, பேரூராட்சி என்பது, ஊராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் நடுவாக இருக்கக்கூடிய ஓர் அமைப்பாக இருந்து கொண்டிருக்கின்றது. மத்திய அரசாங்கத்தினுடைய பல்வேறு விதமான உதவிகள் ஊராட்சிகளுக்குக் கிடைக்கின்றன; பேரூராட்சிகளுக்குக் கிடைப்பதில்லை. இந்த நிதியைக் கூடுதலாகவோ அல்லது அவர்களுக்கு ஒதுக்க வேண்டிய நிதியையோ உரிய காலத்தில் ஒதுக்க வேண்டும் என்று சொல்லி, கடந்த காலத்தில் நிறையக் கிளப்பப்பட்டிருக்கிறது. குறைந்தபட்சம் ஒரு குவார்ட்டர் மட்டும் கொடுக்கப்பட்டது என்று அந்தப் பேரூராட்சியினுடைய ஏ.டி.க்கள் சொல்கிறார்கள். இந்த ஆண்டு அதற்கான நிதி உரிய காலத்தில் ஒதுக்கீடு செய்யப்படுமா? அதோடு, அண்மையில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய 36 பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்றியிருக்கிற ஒரு மிகச் சிறந்த முடிவை மாநில அரசு எடுத்தது. நன்றி. அதே மாதிரி தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய பேரூராட்சி அமைப்புகளை ஊராட்சிகளாக மாற்றிவிட்டால் மிகப் பெரிய அளவிற்கு உதவிகளை அவை பெறும். அதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2003 ஜனவரி 29]

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில நிதி ஆணையத்தினுடைய நிதிப் பகிர்வில் பேரூராட்சிகளுக்கு 15 சதவிகிதமும், கிராம ஊராட்சிகளுக்கு 20 சதவிகிதமும் ஒதுக்க வேண்டுமென்று 12-8-2002-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டிய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு அதற்கான ஆணையிடப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு முறையே, எப்படி நிதிப் பகிர்வை மேற்கொள்ள வேண்டுமென்ற ஒரு முடிவுக்கு வந்தபோது, பேரூராட்சிகள் மிகவும் நலிந்த நிலையில் இருக்கிற காரணத்தால், பேரூராட்சிகளுக்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டார்கள். அந்த அடிப்படையில் 33 சதவிகிதம் மாநகராட்சிகளுக்கும், 32 சதவிகிதம் நகராட்சிகளுக்கும், 35 சதவிகிதம் பேரூராட்சிகளுக்கும் ஒதுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதைப்போலவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பேரூராட்சிகளையெல்லாம் ஊராட்சிகளாக மாற்றியதைப்போலவே, மைய அரசு ஊராட்சிகளுக்கு— பஞ்சாயத்துகளுக்கு-- நிதி ஒதுக்கீடு தருகிறது. அதைப்போலவே, முனிசிபாலிட்டி, கார்ப்பரேஷனுக்குத் தருகிறது. ஆனால், பேரூராட்சிகளுக்கு நிதி உதவி மைய அரசால் தரப்படுவதில்லை. அதை ஊராட்சிகளாக மாற்றுகிறபோது மைய அரசின் நிதிப் பகிர்விலிருந்து அதிக நிதியைப் பெற வாய்ப்பு இருக்கிற காரணத்தால், தமிழகத்திலுள்ள பெரும்பான்மையான பேரூராட்சிகளை எங்கெங்கே ஊராட்சிகளாக மாற்ற முடியுமோ, அந்தப் பேரூராட்சிகளினுடைய சம்மதத்தோடு மாற்றக்கூடிய பணியை அரசு' விரைவில் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டிலே, மாவட்ட ஊராட்சிகளுக்கு எத்தனை சதவிகிதம், ஊராட்சி ஒன்றியங்களுக்கு, ஊராட்சிகளுக்கு எத்தனை சதவிகிதம் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஊராட்சிகளிலே கட்டப்படுகின்ற இலவசத் தொகுப்பு வீடுகளுக்குக் கடந்த 2 ஆண்டுகளாகவே பணம் வரவில்லை என்கின்ற நிலை இருக்கிறது. அதைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை

[2003 ஜனவரி 29

எடுக்க வேண்டும். அந்த நிதியை ஏழையெளிய மக்களுக்காகத்தான் ஒதுக்குகிறார்கள். பாதியிலே அது நின்று விடுகின்ற காரணத்தால் மக்கள் பயனடைய முடியாத நிலை இருக்கின்றது. அதை முழுமையாகச் செயல்படுத்துவதற்கு, அந்தப் பணத்தைப் பெற்றுத் தருவதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகளுக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று மைய அரசிடம் நாங்கள் வலியுறுத்தி இருக்கிறோம். அவர்கள் சாதகமாக அதைப் பரிசீலிப்பார்கள்; அரசுக்கு உதவுவார்கள்; மாநில அரசுக்குத் தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரைக்கும், மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்த நிதிப் பகிர்விலிருந்து 87 சதவிகிதம் பஞ்சாயத்து நிறுவனங்களுக்கும், நகர்ப் பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கும் முறையே 58:42 என்ற முறையிலே பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசின் சார்பில் வழங்கப்படுகிற நிதியின் அளவு 8 சதவிகிதம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதை இந்திய அளவில் பார்த்தால், கர்நாடகம், கேரளம், ஆந்திரம், இன்னும் பல மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது 40 சதவீதத்திலிருந்து 45 சதவீதம் வரைக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. நமது மாநிலத்தில் மட்டும்தான் மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, இதைச் சரி செய்து நிதியை அதிகமாக ஒதுக்க வேண்டும். அதைப்போலவே நான் குறிப்பிட்டுச் சொன்ன மாநிலங்களிலே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு 29 அதிகாரங்கள் அங்கே வழங்கப்பட்டிருக்கின்றன. இங்கே வழங்க மறுக்கப்படுகிறது. அவற்றையும் பரிசீலித்து வழங்குவதற்குரிய முயற்சியை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திரா போன்ற மாநிலங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 40 சதவிகிதம் நிதி ஒதுக்கப்படுகிறது என்று சொல்வது தவறான தகவல். உச்சக்கட்டமாக 10 சதவிகிதம்தான் அனைத்து



2003 ஜனவரி 29]

மாநிலங்களிலும், மாநில நிதிப் பகிர்விலிருந்து ஒதுக்கப்படுகிறது. மீதி மைய அரசினுடைய தொகுப்பிலிருந்து வருகிறது. மைய அரசைப் பொறுத்தவரைக்கும் உங்களுக்குத் தெரியும். There is no constitutionally defined, or well defined guideline in this regard. அவர்கள் விருப்ப ஒதுக்கீடாக ஒதுக்குகிறார்கள். சில மாநிலங்கள் விருப்ப ஒதுக்கீடாக அதிக நிதியைப் பெறக்கூடிய நிலையிலே இருக்கின்றன. அதனால் நாங்கள் மைய அரசை வற்புறுத்தி வருகிறோம். விருப்ப ஒதுக்கீடு என்று வேண்டாம்; வளர்ந்த மாநிலம் என்ற ஒரு காரணத்தைச் சொல்லி, வளர்ந்த மாநிலமான தமிழகத்திற்கு ஒரு ஊக்குவிப்பு இல்லாத முறையில் எங்களுக்கு நிதியைக் குறைத்து விடாதீர்கள்; சோம்பேறித்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிற மாநிலங்களுக்கு ஊக்குவிப்பைத் தந்து அவர்களை மேலும் சோம்பேறியாக்கிவிடாதீர்கள்; எனவே, எங்களுக்கு அதிக நிதியைத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அப்படி அதிக நிதி வருகிறபோது, கட்டாயம் அந்த நிதியெல்லாம் உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் 8 சதவிகிதம், 8 சதவிகிதம் என்றும் வருகிற ஆண்டில் 9 சதவிகிதம் நிதி ஒதுக்குவோம் என்றும் குறிப்பிட்டார்கள். அதே நேரத்திலே மத்திய அரசு 2 ஆண்டுகளாக மாநிலத்திற்கு ஒதுக்கிய நிதியைத் தரவில்லை என்றும் இங்கே தன்னுடைய பதிலில் குறிப்பிட்டார்கள். அந்த ஒதுக்கீட்டு நிதியைப் பெறுவதற்கு மாநில அரசு இதுநாள் வரையில் எடுத்த நடவடிக்கை என்ன? அதே நேரத்தில் மத்திய அரசு...(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. (குறுக்கீடு) திரு. கணேசன்.

முற்பகல் 10-35

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகள் நலிந்திருப்பதை முன்னிட்டு, முப்பது பேரூராட்சிகள் பஞ்சாயத்துகளாக ஆக்கப்பட்டதாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதே வகையிலேதான், எங்களுடைய

[2003 ஜனவரி 29

பேரூராட்சியான இடங்கணசாலை பேரூராட்சி—கிட்டத்தட்ட 28,000 வாக்காளர்கள்; சுமார் 50,000 பேர் வாழக்கூடியது அந்தப் பகுதி-- போதுமான நிதி இல்லாமல் மிகவும் கஷ்ட நிலையில் உள்ளது. ஆகையால், அந்தப் பேரூராட்சிகளையெல்லாம் பஞ்சாயத்துகளாக ஆக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேரூராட்சி ஏகமனதாகத் தீர்மானம் போட்டு அனுப்பும்போது, கட்டாயம் அதை ஊராட்சியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, திரு. வி.கே. லட்சுமணன். மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**25—**

**சட்டக் கல்லூரி**

**•23947—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெங்களூரிலுள்ள தேசிய சட்டப் பள்ளிக்கு (National Law School) இணையாக கோயம்புத்தூர் சட்டக் கல்லூரியைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே அம்பேத்கர் பெயரிலே ஒரு சட்டப் பல்கலைக்கழகம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தப் பல்கலைக்கழகம் இருப்பதற்குரிய அறிகுறியே தென்படவில்லை. அங்கே நடைபெறும் நடவடிக்கைகளின்



2003 ஜனவரி 29]

மூலமாக அதைத் தெரிந்து கொள்ளலாம் என்று நினைத்தால், அதற்கு வாய்ப்பு ரொம்பக் குறைவாக இருக்கிறது. இன்றைக்கு உலகமே ஒரு Global Village ஆக மாறி, GATT, அதற்குப் பின்னால் W.T.O., Intellectual Property Rights எல்லாம் வந்துவிட்ட பின்னாலே, வெறும் வாய்தா வாங்கும் வக்கீலாக மட்டும் இல்லாமல், உலகளாவிய பிரச்சினைகளை, சட்ட நுணுக்கங்களைத் தெரிந்த வக்கீல்களை, வழக்கறிஞர்களைத் தயார் செய்ய வேண்டிய நிலைமை நமக்கு இருக்கின்றது. ஆகையினாலே கோவையிலே, நிறையத் தொழிற்சாலைகள் இருக்கிற அந்த இடத்திலே, பெங்களூரிலே உள்ள தேசிய சட்டப் பள்ளியைப் போல ஒரு பள்ளி மிக அவசியமாக இருக்கிறது. காரணம், பன்னாட்டு நிறுவனங்கள் அங்கே தொழிலைத் தொடங்குகின்றபோது, புதிய, புதிய சட்டச் சிக்கல்கள் தோன்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு, அப்பேர்ப்பட்ட நல்ல, தரமான, உலகத் தரத்திற்கு இணையான ஒரு சட்டக் கல்வியை அளிப்பதற்கு கோவையிலே இந்தப் பள்ளி தொடங்கப்படுமா? அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக மீண்டும் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரம் அறிந்தவர்கள். அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தைப்பற்றி ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த அந்தப் பல்கலைக்கழகம் வயதில் சிறிய குழந்தையாக இருந்தாலும், இரண்டு நிகழ்ச்சிகளைக் கண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களே வந்து கலந்துகொண்ட முதல் Convocation-- பட்டமளிப்பு விழா சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலே நடைபெற்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்து இருக்கமாட்டார்கள். அதேபோன்று, பெங்களூரிலே இருக்கின்ற தேசிய சட்ட சிறப்புப் பள்ளியைக் காட்டிலும் கூடுதலாகத் திறன் வாய்ந்ததாக சிறப்பு சட்டப் பள்ளி இருக்க வேண்டும் என்கின்ற ஒரு அரிய பெரும் சிந்தனையோடு முதன்முதலாக தமிழ்நாட்டின் வரலாற்றிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திலேயே, National Law School-ஐக் காட்டிலும் ஒரு சிறப்பான பள்ளி இருக்கவேண்டும் என்ற வகையிலே, ஒரு School of Excellence அமைத்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் upgradation

என்ற வகையில் அம்பேத்கர் சட்டக் கல்லூரியையும்கூடத் திறன் உயர்த்தி உத்தரவிட்டு இன்றைக்கு சிறப்பான முறையில் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இதையெல்லாம் அவர்கள் சொல்ல மறந்தது ஏன் என்பதை மாண்புமிகு உறுப்பினரிடம் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் உறுப்பினருக்கு, 'தற்போது இல்லை' என்றுதான் சொன்னேனே தவிர, எப்போதும் இல்லை என்று சொல்லவில்லை. வருங்காலங்களிலே அதனுடைய செயல்பாடுகளைப் பொறுத்தவரை 5 ஆண்டு காலத்திலே அதிலிருந்து வெளி வருகின்ற வழக்கறிஞர்கள் நிச்சயமாக நல்ல நிலையிலே வரக்கூடிய அளவிற்கு வாய்ப்புப் பெற்றவர்களாக இருப்பார்கள். அந்த அடிப்படையிலே வருங்காலங்களிலே உங்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-40*

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இரண்டு விதமான கல்வி முறைகள் இருக்கின்றன. ஒன்று மூன்றாண்டுக் கல்வி முறை; இன்னொன்று, 5 ஆண்டுக் கல்வி முறை. இதற்குப் பதிலாக, இந்த 5 ஆண்டுக் கல்வி முறைதான் இருக்கவேண்டுமென்று சட்டம் இயற்றுவது நல்லது என்று நான் கருதுகிறேன். காரணம், வேறொன்றும் படிக்க முடியவில்லை என்று சொன்னால், சட்டம் படிப்பது என்ற நிலை இல்லாமல், சட்டம் படிப்பதையே அவர்கள் தொழிலாக எண்ணி, எப்படிப் பொறியியல் படிபபுப படிக்கின்றார்களோ, எப்படி மருத்துவப் படிப்புப் படிக்கின்றார்களோ, அதைப்போல இதையும் பிளஸ் 2 படித்தவுடனேயே படிப்பதற்காக அரசு இந்த மூன்றாண்டுக் கல்வி முறையை எடுத்துவிட்டு, 5 ஆண்டுக் கல்வி முறையை அமல்படுத்த முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து சிறந்த கருத்தாக இருந்தாலும்கூட, உடனடியாக ஒரே phase-ல் நிச்சயமாக அதைச் செய்ய முடியாது. இப்போது அதனுடைய கருத்தின் அடிப்படையில்தான், சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் 3 ஆண்டு பட்டப் படிப்பு படித்தவர்களுக்கு, சட்டப் படிப்பு பயிலுவதற்கு வாய்ப்பு இல்லாததால் இங்கே





இருக்கின்றவர்களுக்காக இங்கு இருந்த இடங்களை--மற்றக் கல்லூரிகளுக்கு ஏறக்குறைய 120-க்கும் மேற்பட்ட இடங்களை அதிகப்படுத்தியதோடு சென்னையிலே டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியிலே-- 80 மாணவர்கள்-- ஒரு சிறப்பு சட்டப் பள்ளிக்கு இணையாகப் படிக்கின்ற— 5 ஆண்டு படிக்கின்ற மாணவர்களை படிப்புக்கு நாங்கள் அனுமதித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்.

**26—**

## மூலிகைப் பண்ணை

**•17005—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்ட அரசு மருத்துவமனையில் மூலிகைப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மூலிகைப் பயிர்கள் வளர்த்தல் மற்றும் மூலிகைப் பண்ணைகள் அமைத்தல் ஆகிய பணிகளை TAMPCOL என்று அழைக்கப்படுகின்ற தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம் மேற்கொண்டு வருகின்றது. இக்கழகம் தமிழ்நாட்டில் வேலூர் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் அரசு சார்பில் விவசாயிகளின் தோட்டங்கள் மூலமாக மூலிகைப் பயிர்கள் உற்பத்தி செய்வது தொடர்பான திட்டம் ஒன்றினை மத்திய அரசுக்கு அனுப்பிவைத்துள்ளது. மேற்படி திட்டம் மத்திய அரசால்

[2003 ஜனவரி 29

ஏற்றுக்கொள்ளப்பட்டபின், இத்திட்டம் தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தால் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் வேலூர் உட்பட மற்ற இடங்களிலும் இத்திட்டத்திற்கான உரிய இடம் தேர்வு செய்யப்படும்.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மைய அரசை வலியுறுத்தியும், நினைவூட்டுக் கடிதங்கள் அனுப்பியும், வருகின்ற நடப்பாண்டிலேயே வேலூர் மாவட்டம், அரசு மருத்துவமனையில் மூலிகைப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய நான் விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைச் செடிகளை வளர்ப்பதை ஊக்குவிக்க வேண்டுமென்ற அந்த அடிப்படையிலேதான் தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், கடந்த ஜூன் மாதம், Tamil Nadu Medicinal Plant Board என்ற ஓர் அமைப்பை அமைத்து, அந்த அமைப்பின் மூலமாகத் தனியார், இதுபோன்ற மூலிகைப் பண்ணைகளை அமைக்க முன்வருகிறபோது, அவர்களுக்கு உதவுகின்ற வகையில், அந்த மூலிகைச் செடிகளைப் பயன்படுத்தி. மருந்துகள் தயாரித்து, அதை மார்க்கெட் செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மைய அரசின் மூலமாக, கடன் உதவி போன்ற வசதி வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்து, அந்த மூலிகைச் செடிகளை உற்பத்தி செய்வதற்கு, வளர்ப்பதற்கு இந்த அரசு அக்கறையோடு திட்டங்களைத் தயாரித்து வருகிறது. இப்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமும் மூலிகைச் செடிகளை வளர்ப்பதை அரசு ஊக்குவித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மூலிகைப் பண்ணையை ஏற்படுத்துவதற்கு ஏற்கெனவே 2000-வது வருடத்திலே கன்னியாகுமரி மாவட்டத்திலே அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. கன்னியாகுமரி மாவட்டத்திலே அப்படி மூலிகைப் பண்ணை



2003 ஜனவரி 29]

அமைக்கப்பட்டு, இன்றைக்கு நடைமுறையிலே இருந்து கொண்டிருக்கிறதா? இல்லையென்றால் அங்கேயும் அரசு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு முடிவு செய்திருக்கிற பின்னணியில், அங்கே மூலிகைப் பண்ணை அமைத்து, ஒரு சித்தா பிரிவையும் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துமா என்பதைத் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன அந்த 10 இடங்களில், கன்னியாகுமரி மாவட்டமும் இடம் பெற்றிருக்கிறது. அப்படி அந்த இடத்திலே மூலிகைப் பண்ணை ஆரம்பிக்கிறபோது, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இந்திய மருத்துவத்தை, குறிப்பாக சித்த மருத்துவத்தை ஊக்குவிக்கிற வகையில், அந்த சித்த மருத்துவ முறையை மக்களிடையே பரவலாகப் பரப்புவதற்கும் இந்தத் திட்டம் நிச்சயமாகப் பயன்படும். அப்படி அந்த இடம் தேர்வு செய்யப்படுகின்றபோது, உறுப்பினர் அவர்களுடைய கருத்து கவனத்தில் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அடிப்படையில் ஒரு சித்த மருத்துவர் என்ற காரணத்தினாலே சொல்கிறேன். சித்த மருத்துவத்தில் தேவையான herbs—Raw drugs- மூலிகைகள் தரம் மிக்கதாகக் கிடைக்கின்ற சூழ்நிலை இன்றைக்கு இல்லை. அதுமட்டுமல்லாமல், உலக நாடுகள் அளவில் நம்முடைய மருந்துகள் அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் தமிழகத்தில், வளம் மிக்க நமது தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலே தரமான மூலிகைகளை வளர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் நிறைய இருக்கின்றன. ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்கிறபோது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலே ஒரு குழு நியமிக்கப்பட்டு, மூலிகை வளர்ச்சி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள்; மிகவும் பாராட்டுக்குரிய ஒன்று. அதே நேரத்தில், அந்தக் குழு மாநிலம் முழுவதும் ஆய்வு செய்து, தரம் மிக்க மூலிகைகளை உற்பத்தி செய்வார்கள் என்று சொன்னால், அது நம்முடைய நாட்டிற்குள் மட்டுமல்லாமல் வெளிநாட்டிலிருந்து அந்நியச் செலாவணியை ஈட்டித்

[2003 ஜனவரி 29

தருகின்ற வகையிலேயும் மிகவும் பயனுள்ளதாக அமையும். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே, மருத்துவாள் மலை என்கிற ஒரு மலை இருக்கிறது. அது புராணத்திலே இடம் பெற்ற மலை. அந்தப் பகுதியிலே தரமான மூலிகைகள் உற்பத்தியாகின்றன. எனவே, இப்படி மூலிகைகள், தரமான மூலிகைகள் உற்பத்தியாகின்ற இடங்களைத் தேர்ந்தெடுத்து-- குழுவிலே எடுத்து-- விரைவிலே அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு தரமான மூலிகைகளை உற்பத்தி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்கிற மூலிகைப் பொருட்களுடைய மதிப்பு மட்டும், கிட்டத்தட்ட ரூ. 800 கோடி அந்த அளவிற்கு இப்போது ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற அந்த மூலிகைப் பொருட்களை வைத்து வெளிநாட்டுக்காரர்கள், அதை மருந்துகளாகத் தயாரித்து, இங்கே நமக்கு விற்கிறபோது, அந்தத் தொகை ரூ. 5,000 கோடி என்ற அளவிற்கு ஆகிறது. எனவே, இதிலே கவனிக்கப்பட வேண்டியது, இதுபோன்ற அபூர்வ மூலிகைகளுக்கு Patent Right—காப்புரிமை பெற வேண்டும். அந்தக் காப்புரிமையைப் பெறுவதற்கு நம்முடைய அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை. மத்திய அரசுதான் அதைச் செய்ய வேண்டும். அதற்கு நம்முடைய அரசு மத்திய அரசை அடிக்கடி வற்புறுத்தி வருகிறது. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, நித்திய கல்யாணி என்ற அந்த மூலிகை புற்றுநோய்க்கு மிகச் சிறந்த மருந்தாகக் கருதப்படுகிறது. அந்த நித்திய கல்யாணியை இங்கே சில பேர், தனியார்கள் ஏற்றுமதி செய்து, ஜெர்மன் நாட்டிலே அந்த நித்திய கல்யாணியைப் பயன்படுத்தி Anti-Cancer Drug என்ற மருந்தைத் தயாரித்து, நம்முடைய மூலப்பொருட்களை வைத்து மருந்தைத் தயாரித்து— நம்முடைய நாட்டிலேயே அதிக விலைக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த நித்திய கல்யாணிக்கு நாம் காப்புரிமை பெற வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசிடம் கோரியிருக்கிறது. அதேபோல, மஞ்சள் காமாலைக்குக் கீழாநெல்லி மூலிகை மிகச் சிறந்த மருந்தாக இருக்கிறது. எனவே, அதுபோன்ற அந்த அபூர்வ மருந்துகளுக்குக் காப்புரிமை பெற வேண்டுமென்று மத்திய அரசை நாம் வற்புறுத்தி வருகிறோம்.



2003 ஜனவரி 29]

மத்திய அரசும் அதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே மஞ்சள், பாசுமதி, வேம்பு போன்ற பொருட்களுக்கு மத்திய அரசு காப்புரிமை பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இந்தப் பொருட்களுக்கும் காப்புரிமை பெறுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது நம்முடைய தமிழகத்தில் விளையக்கூடிய மூலிகைப் பொருட்களையெல்லாம் 800 கோடி ரூபாய்க்குப் பெற்று, 5,000 கோடி ரூபாய் மருந்தாக இங்கே நுழைவதைப் பற்றியெல்லாம் விரிவாகச் சொன்னார்கள். நம்முடைய தமிழக மருத்துவமனைகளிலேயே, நீங்களே-- அரசே இதுபோன்ற மருந்துகளைத் தயாரித்துப் பயன்படுத்தினால் அது நன்றாக இருக்கும். அந்த வகையில், இப்போதெல்லாம் எங்களுடைய வாலாஜாபேட்டை என்கிற இடத்தில் மஞ்சள் காமாலைக்குக் கீழாநெல்லியை வைத்து, மிக அற்புதமான மருந்தைக் கொடுத்து ஒரே வாரத்தில் குணப்படுத்துகிறார்கள். அதேபோல, வாணியம்பாடியில் டாக்டர் அக்பர் கவுஸர் அவர்கள், காசினிக் கீரையை வைத்துக் கொண்டு Kidney failure-ஐ ஓரளவு தடுக்கிறார்கள். இப்படிப் பலபேர் எங்களுடைய மாவட்டத்திலேயே புகழ் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அதேபோல, குப்புசாமி முதலியாருடைய மருத்துவமனையிலே, Paralysis Attack வந்தவர்களுக்கு, நல்ல மருத்துவம் செய்யப்படுகிறது. சி.எம்.சி. மருத்துவமனை கைவிட்டவர்களைக்கூட அந்த இடத்தில் காட்பாடியிலே மிகப் பிரமாதமாக வைத்தியம் செய்து காப்பாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். இப்படித் தமிழகத்தில் இவ்வளவு வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்ல மருத்துவ நிபுணர்கள் எல்லாம் இருக்கிறபோது, அவர்கள் ஆலோசனையைப் பெற்று, இதுபோன்ற மருந்துகளை அரசே தயாரித்து, அரசு மருத்துவமனைகளிலே புகுத்துவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2003 ஜனவரி 29

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, அரசு நிறுவனமாக இருக்கிற அந்த TAMPCOL நிறுவனம், இது போன்ற சூரணங்களை, மூலிகை மருந்துகளை, இதுபோன்ற இந்திய மருத்துவ முறைக்கு ஏற்ற மருந்துகளைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, மேலும் சில மருந்துகளைத் தயாரிப்பதற்கு இந்த நிறுவனத்திற்கு அரசு நல்ல ஆலோசனைகளை வழங்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நோக்கத்துடன்தான் 2002 ஜூன் மாதம் Tamil Nadu Medicinal Plant Board என்ற ஓர் அமைப்பை அமைத்து, இந்த மூலிகைகளை, குறிப்பாக இந்திய மருத்துவத்தை, அதிலும் குறிப்பாக சித்த மருத்துவத்தை மக்களிடையே பரவலாகப் பரப்புவதற்கு நல்ல முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். இந்த அமைப்பு அதுகுறித்து நிச்சயமாக நல்ல நடவடிக்கைகளை எடுக்கும் என்கின்ற அந்த உறுதியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**27—**

## மருத்துவக் கல்லூரி

***19399—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவக் கல்லூரி துவக்கிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2003 ஜனவரி 29]

(அ) மற்றும் (ஆ) ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவக் கல்லூரி துவங்கும் கருத்துரு இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஈரோடு, சி.எம்.சி. காலேஜை அரசு கலைக் கல்லூரியாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்கள் இரண்டு ஆண்டு காலத்திற்கு, மீண்டும் அரசுக் கல்லூரியாக ஆணையிட்டதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதச்சுவட்டை நோக்கி, பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈரோட்டிலே இயங்கி வரும் தந்தை பெரியார் தலைமை மருத்துவமனையில் தினமும் நாள் ஒன்றிற்கு 2100 புற நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள். 700-க்கும் மேற்பட்ட உள் நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஆண்டிற்கு 6000 பிரசவ சிகிச்சைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆண்டிற்கு 1800 பெரிய அறுவை சிகிச்சைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 2500-க்கு மேற்பட்ட குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட ஒரு பெரிய மருத்துவமனையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 25,74,604 பேர் என மக்கள் தொகை கொண்ட அந்த மாவட்டத்தில், அந்த மருத்துவமனையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மறுபரிசீலனை செய்து, அடுத்த ஆண்டிலாவது மருத்துவக் கல்லூரியைத் தொடங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு அரசு மருத்துவமனையில் புறநோயாளிகளின் எண்ணிக்கை, உள் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது என்பது உண்மைதான். இதைக் கருத்தில் கொண்டுதான் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நடந்து முடிந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில்கூட, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக மக்களுடைய அந்தக் கோரிக்கை எடுத்துவைக்கப்பட்டபோது, அந்த மாநாட்டிலேயே,

ஈரோடு அரசு மருத்துவமனையினுடைய விரிவாக்கத்திற்கான உத்தரவுகளை வழங்கி இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, அந்த மருத்துவமனை விரிவுபடுத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே தமிழகத்தில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சொந்த மாவட்டமான ஈரோடு மாவட்டத்தில், ஈரோட்டிற்கு மிக அருகிலே, 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பெருந்துறையிலே சாலைப் போக்குவரத்து நிறுவனம் நடத்தும் மருத்துவக் கல்லூரி ஒன்று இருக்கிறது. நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இங்கே அரசின் சார்பிலே தேனி, வேலூர், கன்னியாகுமரி ஆகிய மூன்று இடங்களிலும் அரசு மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கு ஆணை வழங்கி, தேனியிலே அமைக்கப்பட இருக்கிற அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 12 கோடி ரூபாயையும், வேலூரிலே அமைக்கப்படவிருக்கிற மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 5 கோடி ரூபாயையும், கன்னியாகுமரியிலே அமைக்கப்படவிருக்கிற மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 5 கோடி ரூபாயையும் ஒதுக்கி ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, திரு. அ. நடராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**28—**

### வேளாண்மைத் தகவல் மையங்கள்

***11022—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட்டம் அல்லது ஒன்றியம் அளவில் வேளாண்மைத் தகவல் மையங்கள் அமைத்து, விவசாயிகளுக்கு உரிய தகவல் அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?





**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலமாக வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையங்கள் 14 இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. தேவைக்கேற்ப இத்திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையாகவும், செயற்கையாகவும் நலிவடைந்த தமிழக விவசாயிகளின் எதிர்கால வாழ்க்கை கேள்விக்குறியாக உள்ள இந்த நேரத்தில் அமுதசுரபியாக விவசாயத் தொழிலாளர்களின் பசியைப் போக்க, மதிய உணவை அளித்திட்ட இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, விவசாயிகளின் சார்பில் நன்றி கூறுகிறேன். ஒன்றுபட்ட தஞ்சை விவசாயிகளுக்கு தட்பவெப்ப நிலைக்கேற்ப, கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு சிக்கனச் செலவில் மாற்றுப் பயிர் சாகுபடி முறையைக் கற்றுக் கொடுக்க, குடவாசல், குத்தாலம், மயிலாடுதுறை பகுதிகளில் வேளாண் விற்பனைத் தகவல் மையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலமாக, வேளாண் விற்பனைத் தகவல் மையம் ஏற்படுத்த வேண்டுமென மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுரை வழங்கி உள்ளார்கள். அதன் அடிப்படையில் தற்போது ரூ. 45.45 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 14 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையங்கள் அமைக்கப்படும் பணி நடைபெற்று வருகிற இந்த நேரத்தில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற இடத்திற்குத் தேவை ஏற்படும் என்று சொன்னால் அந்தத் தேவைக்கு ஏற்ப இந்தத் திட்டம் அந்தப் பகுதியிலே நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை நீரைச் சேகரிப்பதற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கின்றது. ஆனால், விவசாயிகளுக்கு இன்னும் சொட்டு நீர்ப் பாசனத்தைச் சரியாகப் பயன்படுத்த முடியாமல் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதிகூடச் செலவு செய்யப்படாமல் இருக்கிறது. செங்கம் மற்றும் திருவண்ணாமலையைச் சுற்றியுள்ள இடங்களிலெல்லாம் அதிகமாகப் பூக்கள் விளைகின்றன. அந்த மக்களெல்லாம் அதைச் சிறப்பாகச் செயலாக்குவதற்கான தகவல்களை வழங்கக்கூடிய வகையில் திருவண்ணாமலையில் ஒரு வேளாண்மை விற்பனை மையம் ஆரம்பிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலே குறிப்பிட்டதுபோல, தேவை ஏற்பட்டால் அந்த இடங்களுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, திரு. கு. ஜெயக்குமார், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**29–**

## பெண்கள் விடுதி

***24178—திரு. கு. ஜெயக்குமார்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாமக்கல் நகரில் வேலைக்குச் செல்லும் மகளிருக்காகப் பெண்கள் விடுதி கட்டித் தாப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2003 ஜனவரி 29]

*(அ)* நாமக்கல்லில் தற்போது அரசு பணிபுரியும் மகளிர் விடுதி துவங்க வாய்ப்பில்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, திறமையான ஒரு பெண்மணி மிக முக்கியமான இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கின்ற இந்த நேரத்தில், பெண்களுக்காக ஒரு வசதியை நாமக்கல்லிலே செய்து கொடுங்கள் என்று நான் கேட்கின்றபோது, 'இல்லை' என்று அவர்கள் சொல்வது எனக்கு உண்மையிலேயே வருத்தத்தை அளிக்கின்றது. நாமக்கல்லிலே வேலை செய்கின்ற பெண்களைக் குறித்தும், அவர்கள் எந்த அளவுக்கு அங்கே கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதைக் குறித்தும், நான் இங்கே எடுத்துச் சொல்லி அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய நிலை இல்லை என்று கருதுகின்றேன். ஏனென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாமக்கல்லுக்கு வந்தபோது அங்கே அவர்களுக்கு வரவேற்பு அளித்தவன் நான். அவர்கள் கலந்துகொண்ட கூட்டத்திலே 50 சதவிகிதத்திற்கு மேலாகப் பெண்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள் என்பதை அவர்கள் கண்கூடாக அங்கே கண்டார்கள். இன்றைக்குப் பெண்கள் வேலைக்குச் சென்றால்தான் சில வீடுகளில் அடுப்பு எரியும் என்ற நிலை இருக்கும் போது அவர்கள் வேலைக்குச் செல்வது அத்தியாவசியமாகிறது. அது மட்டுமல்ல.(மணியடிக்கபெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், கேள்விக்கு வாருங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முடியாது என்று சொல்லிவிட்ட நேரத்தில்—மத்திய அரசு இதுபோன்ற விடுதிகள் கட்டுவதற்கு நிதி கொடுக்கின்றது—அரசின் நிதிநிலை இடம் கொடுக்காது என்ற ஒரு நிலை இங்கே ஏற்பட்டிருக்குமேயானால், அதுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'இல்லை' என்று சொல்வதற்குக் காரணமாகுமானால், மத்திய அரசின் நிதியைப் பெற்றாவது இதுபோன்ற ஒரு விடுதியை அங்கே கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராட்டுக்கு நன்றி. தமிழகத்தின் எந்த மூலையிலே பெண்கள் கண்ணீர் சிந்தினாலும், 'உங்களின் தாய் நான் இருக்கிறேன்' என்கிற அரவணைப்பை அள்ளி வீசுகின்ற புரட்சித் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கிறபோது...

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சருடைய பதில் முடிகிற வரைக்கும், பேரவையின் முன்அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** பெண்களுடைய பிரச்சினைக்கு நிச்சயமாக அவ்வப்போது தீர்வு காணப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நாமக்கல் மாவட்டத்தில், தனியார் தொண்டு நிறுவனம் மூலம் நடத்தப்படும் பணிபுரியும் மகளிர் விடுதி இதுவரை செயல்படவில்லை. ஆனால், 3 தனியார் தொண்டு நிறுவனங்கள், மத்திய அரசிடமிருந்து கட்டட மானியம் பெற்று, பணிபுரியும் மகளிருக்கான விடுதிக் கட்டடங்களைத் தற்போது கட்டி வருகின்றன. அதுதவிர, தமிழகத்தினுடைய மானியத் தொகையாக, பணிபுரிகின்ற பெண்கள் விடுதி கட்டுவதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையின் கீழ் செயல்படுகின்ற அரசு, நடப்பு நிதியாண்டில் ரூ. 31.53 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.





## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### *பட்டியல் 1

1—

#### பாலத்தை அகலப்படுத்துதல்

**வினா எண் 468—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடியிலிருந்து சங்ககிரி செல்லும் மாவட்ட முக்கிய சாலையில் கரும்பட்டி ஓடை குறுக்கே உள்ள குறுகிய பாலத்தை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

தற்போதைய போக்குவரத்திற்கு இருந்துவரும் அகலம் போதுமானது. இருப்பினும் எதிர்காலத்தில் ஒருவழிப் பாதையாக இருக்கும் இச்சாலையை இருவழிப் பாதையாக அகலப்படுத்தப்படும்போது நிதிநிலைமைக்கேற்ப இப்பாலத்தையும் அகலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2—

#### சாலைப் பராமரிப்பு

**வினா எண் 8546—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, வைகுந்தம் சாலை கி.மீ. 3/2-6/8 மிகவும் பழுதடைந்துள்ளதை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

ஆம், இப்பணியை எதிர்வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அளித்து சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதுவரை

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2003 ஜனவரி 29

இச்சாலையில் ஏற்பட்டுள்ள குழி பள்ளங்களுக்கு அவ்வப்போது தார் நொடிகள் போட்டு வாகனப் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் நடக்கும்வகையில் சாலை பராமரிக்கப்பட்டு வருகிறது.

3—

**அஞ்சல் வழிக் கல்வி**

**வினா எண் 11699—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எந்தெந்த மத்திய சிறைச்சாலைகளில் கைதிகள், அஞ்சல் வழிக் கல்வி மூலம் கல்வி கற்று வருகிறார்கள்?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) பாளையங்கோட்டை, சேலம், வேலூர், கடலூர், கோவை, திருச்சி, மதுரை ஆகிய மத்திய சிறைகளில் உள்ள கைதிகள் அஞ்சல் வழிக் கல்வி மூலம் கல்வி கற்று வருகின்றனர்.

(ஆ) மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் (சிறைவாசிகளின் சிறப்புக் கல்வித் திட்டத்தின் கீழ்)

| வ. எண். | சிறையின் பெயர் | பி.ஏ. | எம்.ஏ. | எம்.பில். | மொத்த சிறை வாசிகள் |
|---|---|---|---|---|---|
| 1. | மத்திய சிறை, பாளையங்கோட்டை | 8 | 13 | .. | 21 |
| 2. | மத்திய சிறை, சேலம் | .. | 16 | .. | 16 |
| 3. | பெண்கள் தனிச் சிறை, வேலூர் | .. | 19 | .. | 19 |
| 4. | மத்திய சிறை, வேலூர் | .. | 9 | .. | 9 |
| 5. | மத்திய சிறை, கடலூர் | .. | 73 | 1 | 74 |
| 6. | மத்திய சிறை, கோவை | 9 | 49 | .. | 58 |
| 7. | மத்திய சிறை, திருச்சி | .. | 60 | .. | 60 |
| | மொத்தம் | 17 | 239 | 1 | 257 |



2003 ஜனவரி 29]

**இந்திரா காந்தி தேசிய திறந்த நிலை பல்கலைக்கழகத்தின் மூலம் கணிப்பொறிக் கல்வி**

| வ. எண். | சிறையின் பெயர் | எம்.சி.ஏ. | சி.ஐ.சி. | சி.எப்.என் | ப்பி.பி.பி. | மொத்த சிறை வாசிகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | மத்திய சிறை, கோவை | 1 | .. | 20 | .. | 21 |
| 2. | பெண்கள் தனிச்சிறை, வேலூர் | .. | 6 | 10 | .. | 16 |
| 3. | மத்திய சிறை, வேலூர் | .. | 10 | 15 | .. | 25 |
| 4. | மத்திய சிறை, மதுரை | .. | 2 | 22 | 15 | 39 |
| | மொத்தம் | 1 | 18 | 67 | 15 | 101 |

**மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்**

| வ.எண் | சிறையின் பெயர் | பி.ஏ. | ஜோதிடவியல் பட்டப்படிப்பு | மொத்த சிறைவாசிகள் |
|---|---|---|---|---|
| 1. | மத்திய சிறை, மதுரை | 1 | 3 | 4 |

4—

**கொசு ஒழிப்பு**

**வினா எண் 14012—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், மத்திய சிறையில் கொசுத் தொல்லையை ஒழிக்க உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

[2003 ஜனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

சேலம் மத்திய சிறையில், நாள்தோறும் சிறை வளாகம் சுத்தப்படுத்தப்பட்டு, தண்ணீர் தேங்கும் இடங்களில் பிளீச்சிங் பவுடர் மற்றும் பினாயில் உபயோகப்படுத்தி, கொசுத் தொல்லையினைக் கட்டுப்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் கொசுத் தொல்லையினைக் கட்டுப்படுத்த சேலம் மாநகராட்சி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டு, கொசு ஒழிப்பு மருந்துகள் அடிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5—

**சாலை செப்பனிடல்**

**வினா எண் 15105—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் புறநகர் சாலையான ஆர்.எஸ்.-இலிருந்து அனல்மின் நிலையம் வழியாக செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

இப்பணி தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. வரும் நிதி ஆண்டுகளில் அரசின் நிதி ஒதுக்கீடு கூடுதலாகக் கிடைக்கும்பட்சத்தில் இப்பணியை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.



2003 ஜனவரி 29]

6—

**புனரமைப்புப் பணிகள்**

**வினா எண் 16942—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டு உலக வங்கி உதவியுடன் தமிழகத்தில் எத்தனை ஏரிகள், எவ்வளவு மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள எடுத்துக் கொள்ளப்பட்டன?

(ஆ) இதில் எவ்வளவு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டு உலக வங்கி உதவியுடன் ஏரிகள் புனரமைப்புப் பணிகள் ஏதும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. 2001-2002 ஆம் ஆண்டில்தான் 620 ஏரிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

7—

**சாலை செப்பனிடல்**

**வினா எண் 17894—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், புதுப்பட்டி துரைச்சாமிபுரம் புதூர் சாலையை செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையை சீர்செய்து மேம்பாடு செய்ய தோராயமாக ரூ.13.00 இலட்சம் தேவைப்படும்.

அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள எந்தத் திட்டத்திலும் இது இடம்பெறவில்லை.

**8—**

**பள்ளி தரம் உயர்த்துதல்**

**வினா எண் 19960—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதியை சேர்ந்த 97 வலையூர் மற்றும் பெரகம்பு ஊரில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

முசிறி தொகுதியை சேர்ந்த 97 வலையூர் மற்றும் பெரகம்பு ஊரில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 97, பள்ளிக் கல்வி, நாள் 4-7-2002ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**9—**

**பள்ளி தரம் உயர்த்துதல்**

**வினா எண் 20640—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், வாராப்பூர் ஊராட்சியிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை ஒன்றியம், வாராப்பூர் ஊராட்சியிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 97, பள்ளிக் கல்வி, நாள் 4-7-2002-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.





**10—**

**தமிழ் மொழியில் பாடம்**

**வினா எண் 13311ஆ—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சட்டக் கல்லூரிகளில் தமிழ் மொழியைக் கட்டாயப் பாடமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) எழவில்லை.

**11—**

**வாய்க்கால் கட்டுதல்**

**வினா எண் 10462—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, திருவப்பூர் மாரியம்மன் கோயிலிலிருந்து வெளியாகும் தண்ணீரை முறையாக வாய்க்கால் கட்டி வெளியேற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2003 ஜனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவப்பூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் அபிஷேகத்திற்காகப் பயன்படுத்தப்படும் நீர் மற்றும் இதர வகையில் வெளியாகும் நீர் குழாய்கள் மூலம் திருக்கோயிலிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டு, நகராட்சி வாய்க்காலில் பெரிய குழாய்கள் மூலம் பூமிக்கடியில் முறையாக இணைப்பு கொடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டு வருகிறது. மேலும், பிரகாரங்கள் சுத்தம் செய்யும் பொழுதும் நீர் வெளியேற்றப்பட்டு நகராட்சி வாய்க்காலில் இணைக்கப்படுவதால் திருக்கோயிலில் தண்ணீர் தேங்குவதற்கு வாய்ப்பில்லை.

**12—**

**தூர் வாருதல்**

**வினா எண் 12212—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்தின் குளங்களைத் தூர்வாரி வருடந்தோறும் சுத்தப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்தின் குளங்களை வருடந்தோறும் தூர்வாரி செப்பனிட இயலாது. தண்ணீர் குறைந்து காணப்படும் சமயத்தில் தேவைப்படும்போது தூர்வாரி சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2003 ஜனவரி 29]

(ஆ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் பிரம்மதீர்த்தம் மற்றும் சிவகங்கை தீர்த்தம் என இரண்டு தீர்த்தங்கள் உள்ளன. இவை அமைந்துள்ள பகுதியைச் சுற்றி கருங்கல் தளவரிசை போடப்பட்டுள்ளது. இதனால் மழைக் காலங்களில் மழைநீருடன் மண் செல்வது தடுக்கப்படுகிறது. இவ்விரு குளங்களும் சுமார் 40 அடி ஆழமுள்ளவை. சிவகங்கை தீர்த்தம் ரோட்டரி கிளப் மூலம் சமீபத்தில் தூர்வாரப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளது. பிரம்மதீர்த்தம் தூய்மையாக நல்ல நிலையில் உள்ளது. இவை தவிர திருக்கோயிலின் கிழக்கு இராஜகோபுரத்தின் எதிரில் அக்கரை தீர்த்தகுளம் உள்ளது. இதனை சேவா பாரதி சங்கம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அனைத்து வியாபாரிகள் சங்கம் மற்றும் நகராட்சியின் துணை கொண்டு முழுவதுமாக தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**13—**

**திருக்கோயில் வருமானம்**

**வினா எண் 19368—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், தாந்தோணி அருள்மிகு கல்யாண வெங்கட்ரமண சுவாமி திருக்கோயிலில் சென்ற ஆண்டு (2000-2001) நுழைவுச் சீட்டு மூலம் கிடைக்கப்பட்ட வருமானம் எவ்வளவு?

(ஆ) அர்ச்சனைச் சீட்டு விற்பனையின் மூலம் பெறப்பட்ட வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ரூ.6,23,863

(ஆ) ரூ.8,59,112

**14—**

## குடிநீர் வசதி

**வினா எண் 19953—திருமதி செல்வி முருகேசன் :** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னிமலை முருகன் திருக்கோயிலில் உடனடியாக குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் சேவார்த்திகளுக்காக, தூய்மைப்படுத்தப்பட்ட சுகாதாரமான குடிநீர் வழங்குவதற்காக திருக்கோயிலின் அடிவாரத்திலுள்ள கிணற்றில் இருந்து மின் மோட்டார் மூலம் தரை தொட்டிக்குக் கொண்டு வந்து சேமிக்கப்பட்டு பின்பு அன்றே மின் மோட்டார் மூலம் மலைக்கோயிலுக்கு சென்று, அங்குள்ள தொட்டிகளில் சேமிக்கப்பட்டு மீண்டும் பக்தர்கள் வசதிக்காக சிறு குழாய்கள் மூலம் நீரினை மணி மண்டபம் அருகில் முகம், கை, கால்கள் சுத்தம் செய்வதற்காகவும் மற்றொரு சிறு குழாய் மூலம் நீரினைக் கொண்டு வந்து வாட்டர் டாக்டர் மற்றும் அக்வா கார்டு ஆகிய இயந்திரங்கள் மூலம் சுத்திகரிக்கப்பட்டு குடிநீராக பக்தர்கட்கு பயன்படுத்த வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**15—**

## கோயில் வருமானம்

**வினா எண் 20322—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி வெண்ணங்குடி-முனியப்பன் கோயில் ஆண்டு வருமானம் எவ்வளவு?



(ஆ) சாலை ஓரத்தில் அமைந்துள்ள கோயிலை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகராட்சி வெண்ணங்குடி-முனியப்பன் கோயிலின் பசலி 1411-க்கு ஆண்டு வருமானம் ரூ.70,20,338.10 ஆகும்.

(ஆ) கோயிலின் பின்புறம் மற்றும் முன்புறம் உள்ள இடம் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான புறம்போக்கு நிலமாகும். இருப்பினும் திருக்கோயிலின் பின்புறம் உள்ள நான்கு வழிப்பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஆனால் திருக்கோயில் இடத்தை மட்டும் விட்டுவிட்டு மற்ற இடங்களில் நெடுஞ்சாலைத் துறையினர் அப்புறப்படுத்தியுள்ளனர். கோயிலின் வடபுறம் 100 அடி நீளமும் 15 அடி அகலமும், தென்புறம் 50 அடி நீளமும் 10 அடி அகலமும் உள்ள இடத்தினை மட்டும் நெடுஞ்சாலைத் துறையினர் ஒதுக்கீடு செய்து கொடுத்து உள்ளனர். எனவே, திருக்கோயிலை விரிவுபடுத்தும் உத்தேசம் இல்லை.

**16—**

## மருத்துவமனை

**வினா எண் 20072—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் மன நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க எவ்வளவு படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சென்னையில் மன நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க, அரசால் நடத்தப்படும் அரசு மன காப்பகம், சென்னை-10 (1800), அரசு பொது மருத்துவமனை (40), அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை (30) மற்றும் அரசு ஸ்டான்லி மருத்துவமனை (45) ஆகியவற்றில் மொத்தம் 1915 படுக்கை வசதிகள் உள்ளன. இங்கு ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

[2003 ஜனவரி 29

17—

## கூட்டுறவுக் கடன்

**வினா எண் 8891—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஆரம்பக் கூட்டுறவு வங்கிகள் மூலம் நிலக்கடலை சாகுபடிக்கு வழங்கப்படும் மொத்தக் கடன் தொகை எவ்வளவு?

(ஆ) கடன் தொகையில் எவ்வளவு மானியமாக அளிக்கப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டிற்கு திருவண்ணாமலை மாவட்டத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் நிலக்கடலை சாகுபடிக்கு ரூ.1026.96 இலட்சம் மொத்தக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் நிலக்கடலை சாகுபடிக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.4,725 வீதம் அதிகபட்சமான கடன் வழங்கப்படுகிறது.

(ஆ) வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகைக்கும் மானியத் தொகை ஏதும் வழங்கப்படவில்லை. பயிர்க் கடன்களுக்கு மானியம் ஏதும் வழங்கப்படுவதில்லை.

18—

## பொது விநியோகக் கடை

**வினா எண் 15523—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, மேல்கொடுங்காலூர், நர்மாபள்ளம், கீழ்கொளத்தூர், மேல்கொளத்தூர், நெல்வாய், பெரும்பாலை ஆகிய கிராமங்களுக்கு பொது விநியோகக் கடை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?



2003 ஜனவரி 29]

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

வந்தவாசி தொகுதியில் மேல்கொடுங்காலூர் மற்றும் மேல்கொளத்தூர் நியாயவிலைக் கடைகள் வாடகை கட்டடங்களில் செயல்படுகின்றன. நர்மாபள்ளம், கீழ்கொளத்தூர், நெல்வாய் மற்றும் பெரும்பாலை நியாயவிலைக் கடைகள் ஊராட்சி கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மேற்காணும் பகுதிகளில் உள்ள கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்கு திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி வங்கி முகமையால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் நியாயவிலைக் கடைகளுக்கு கட்டடம் கட்ட தக்க நடவடிக்கை மேற்கொள்ள இக்கடைகளை நடத்திவரும் தொடக்கக் கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்களுக்கு மண்டல இணைப் பதிவாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

19—

## கூட்டுறவு வங்கிக் கட்டடம்

**வினா எண் 17095—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம் ஆச்சாள்புரம் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

20—

### கூட்டுறவுப் பண்டகசாலை

**வினா எண் 22974—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எத்தனை அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் கூட்டுறவுப் பண்டகசாலை நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில், 2951 அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் 1218 நல்லமுறையில் பொருளீட்டி செயல்படுகின்றன. மேலும் 194 பண்டகசாலைகள் பொருளிழப்பு இன்றி செயல்படுகின்றன. மீதமுள்ளவை நட்டத்தில் செயல்படுகின்றன.

21—

### நில ஆக்கிரமிப்பு

**வினா எண் 13942—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி—திருவதிகையிலுள்ள கெடிலம் நதிக்கரை ஓரத்தில் உள்ள சுடுகாட்டை ஆக்கிரமிப்பாளர்கள் விளை நிலமாக்கி வருவதை தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி வட்டம், கெடிலம் நதிக்கரை (திருவதிகை) வார்டு சி. பிளாக் 15 டி.எஸ்.நெ.16/1-இல் 0.1800 மயான புறம்போக்கில்



மேற்படி கிராமத்தைச் சேர்ந்த அருணாசலம் மகன் திரு. ஜெயபிரகாஷ் என்பவர் கம்பு, மரவள்ளி நடவு செய்தது மூலம் ஆக்கிரமிப்பு செய்து வந்தார். தற்போது மேற்படி ஆக்கிரமிப்பு காலி செய்யப்பட்டு, பண்ருட்டி நகராட்சியால் சுற்றி மதில் சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

22—

### பட்டா வழங்குதல்

**வினா எண் 23035—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், காவேரிபுரம் கிராமம், மேட்டுக்காவேரிபுரம், தெலுங்கானூர், செட்டிப்பட்டி, காரைக்காடு, கோட்டையூர், மாமரத்தூர் ஆகிய ஊர்களில் பொதுப் பணித் துறைக்கும் சமூக காடுகளுக்கும் சொந்தமான நிலத்தில் நீண்ட காலமாக விவசாயம் செய்து வரும் ஏழை மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், காவேரிபுரம் கிராமம், மேட்டுக்காவேரிபுரம், தெலுங்கானூர் மற்றும் மாமரத்தூர் ஆகிய பகுதிகளில் ஆக்கிரமிப்பு மூலம் விவசாயம் செய்து வரும் நிலங்கள் பொதுப் பணித் துறை ஸ்டேன்லி நீர்த்தேக்கத் திட்டம் என கிராம கணக்குகளில் பதிவாகி உள்ளது. மேற்படி நிலங்களில் மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகமாக உள்ள காலங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ள பகுதி தண்ணீரில் மூழ்கிவிடும். மேற்படி பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகள் மிகவும் ஆட்சேபகரமானவை. எனவே இப்பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புதாரர்களுக்கு பட்டா வழங்க இயலாது.

[2003 ஜனவரி 29

**23—**

### சார் பதிவக வருமானம்

**வினா எண் 23890—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பரமத்தி வேலூர், பரமத்தி மோகனூர், நல்லூர் ஆகிய இடங்களில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்தின் மூலமாக 1999-2000 ஆம் ஆண்டில் அரசுக்கு வந்த வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பரமத்தி வேலூர், பரமத்தி மோகனூர், நல்லூர் ஆகிய இடங்களில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்தின் மூலமாக 1999-2000 ஆம் ஆண்டில் அரசுக்கு வந்த வருமானம் கீழே உள்ளபடி தெரிவிக்கப்படுகிறது.

| சார் பதிவகம் | வருவாய் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. பரமத்தி | 72.88 |
| 2. வேலூர் | 160.32 |
| 3. மோகனூர் | 83.81 |
| 4. நல்லூர் | 52.10 |
| மொத்தம் | 369.11 |

**24—**

### மனைப் பட்டா

**வினா எண் 24467—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஜனவரி 29]

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்தாண்டு மனைப் பட்டா எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

(ஆ) இந்த ஆண்டு எத்தனை பேருக்கு மனைப் பட்டா கொடுக்கும் உத்தேசம் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002ஆம் ஆண்டில் 1538 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் 1000 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**25—**

### நிலப் பட்டா

**வினா எண் 24685—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு புறம்போக்கு நிலங்களை உழுது விவசாயம் செய்பவர்களுக்கே நிலக்கிரய அடிப்படையில், அந்த விவசாயிகளுக்கே நிலப் பட்டாக்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

அரசு புறம்போக்கு நிலங்களை உழுது விவசாயம் செய்பவர்களுக்கு தகுதியின் அடிப்படையிலும் நிலத்தின் தன்மையின் அடிப்படையிலும் விதிமுறைகளுக்குட்பட்டு நிலப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

**26—**

### பத்திரக் கட்டண வருவாய்

**வினா எண் 25054—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் பத்திரக் கட்டணம் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்கள் மூலம் அரசுக்கு மொத்தமாக ரூபாய் 1264.20 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

**27—**

### வேலைவாய்ப்பு

**வினா எண் 25864—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அச்சுத் துறையில் மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீட்டின்படி வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆரம்ப நிலைப் பதவிகளில் நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்யப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விவரம் வருமாறு:

| | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பணியாளர் எண்ணிக்கை. |
|---|---|
| 1. இளநிலை தனியச்சு வார்ப்பட பணியாளர் | 1 |
| 2. தொழில்நுட்ப உதவியாளர் | 2 |
| 3. இளநிலை புத்தகம் கட்டுநர் | 16 |
| 4. அச்சுக் கோர்ப்பாளர் | 2 |
| 5. இளநிலை இயந்திர இயக்கி | 9 |
| 6. காவலர் | 8 |
| 7. சுகாதாரப் பணியாளர் | 3 |
| 8. மஸ்தூர் | 31 |
| 9. இளநிலை மின்வினைஞர் | 1 |



**28—**

### பணி நிரந்தரம்

**வினா எண் 26621—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் ஆண்டில் அரசு அச்சகத்தில் பணிபுரிந்த தற்காலிகப் பணியாளர்கள் எவ்வளவு பேரை அரசு பணி நிரந்தரம் செய்தது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் தற்காலிகமாக பணிபுரியும் பணியாளர்கள் எவரும் இல்லை. துறை மாற்றம், கருணை அடிப்படை, தேர்வாணைய நியமனம் மூலம் பணியமர்த்தப்பட்ட 44 பணியாளர்கள் 2001-2002-ல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளனர்.

**29—**

### ஆணை வழங்குதல்

**வினா எண் 9772—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் துறையில் அலுவலர்கள் மீது நிலுவையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் மீது இறுதி ஆணை வழங்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு குடிமுறைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின், விதி எண் 12 (2)(ii)-ன்படி, மாநில நிலை அலுவலர்கள் மீது தமிழ்நாடு குடிமுறைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) 17(பி)-ன்கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை வழக்குகள் மீது இறுதி ஆணை வழங்கும் அதிகாரம் அரசுக்கு மட்டுமே உள்ளது. எனவே தமிழ்நாடு குடிமுறைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17(பி)-ன்கீழ் மாநில நிலை வேளாண்மை அலுவலர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் தக்க நிலையில் இறுதி ஆணை வழங்க வேண்டி அரசுக்கு ஒப்படைக்கப்படுகின்றன. இவைகளின்மீது அரசால் இறுதி உத்தரவுகள் வழங்கப்படுகின்றன.

மேலும் தமிழ்நாடு குடிமுறைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதியின், விதி எண் 12 (2) (I)-ன்படி தமிழ்நாடு குடிமுறைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17 (அ)-ன்கீழ் வேளாண்மை அலுவலர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளில் அலுவலகத் தலைவர்களாகும் வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் உயர் அலுவலர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகளில் துறைத் தலைவராலும் தக்கவாறு இறுதி ஆணைகள் வழங்கப்படுகின்றன மற்றும் சார்நிலைப் பணி அலுவலர்களைப் பொறுத்தவரையில் அந்தந்த அதிகாரம் பெற்ற அலுவலர்களால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு தக்க ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

**30—**

**நவப்ரா அலுவலகம்**

**வினா எண் 11347—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதிக்கு விவசாய மேம்பாட்டிற்கான நவப்ரா என்னும் துறை அலுவலகம் எங்கு உள்ளது?



(ஆ) மேற்கண்ட அலுவலக அதிகாரிகள் அவர்களுடைய திட்டத்தை எங்கு அமல்படுத்த உள்ளார்கள்?

(இ) இது குறித்து அரசிடம் என்ன திட்டம் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) நாட்ராம்பள்ளி தொகுதிக்கு என தனியாக நவப்ரா அலுவலகம் இல்லை. 10-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2002-2003-ம் ஆண்டில் நவப்ரா திட்டம் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட புதிய வழிமுறைகளின்படி செயல்படுத்தப்படும். மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட நீர்ப்பிடிப்பு திட்டக் குழு அமைக்கப்பட்டு அதன் மூலம் மாவட்ட இணைப்பு முகமை வாயிலாக மாவட்ட ஆட்சியர் அவர்களே இத்திட்ட அனுமதி மற்றும் செயலாக்க முழு அதிகாரம் பெற்றவராகிறார். இதன் மூலம் உள்ளூர் மானாவாரி நீர்பிடிப்பு பகுதி மக்கள் தேவைக்கு ஏற்ப அரசு சாரா நிறுவனங்கள் இதர துறைகள் மூலமாக திட்டம் செயலாக்கப்படும்.

(ஆ) மாவட்ட நீர்ப்பிடிப்பு திட்டக் குழு மற்றும் மாவட்ட இணைப்பு முகமை மூலமே திட்டத்தை எந்தெந்த பஞ்சாயத்து/கிராமங்களில் செயல்படுத்த வேண்டும் என முடிவெடுக்கப்படும். தற்போது வேலூர் மாவட்டத்தில் குழுக்கள் அமைக்கப்பட்டு கிராமங்கள் தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(இ) நவப்ரா திட்டத்திற்கு 2002-2003-ம் ஆண்டில் வேலூர் மாவட்டத்திற்கு பயிற்சி இயற்கை வளம் சமுதாய அமைப்பு, நிலம் சாரா தொழில்களுக்கு ரூ.148.750 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், 76 மைக்ரோ நீர்பிடிப்பு பகுதிகளில் செயலாக்க உத்தேசமாக திட்டமிடப்பட்டுள்ளது. அதில் நாட்ராம்பள்ளி சட்டமன்றத் தொகுதிக்கான செயல் இலக்குகளை மாவட்ட ஆட்சியர் அவர்களே நிர்ணயம் செய்வார்.

**31—**

**மண் அரிப்பைத் தடுத்தல்**

**வினா எண் 14401—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் மண் அரிப்பைத் தடுக்க வளம் குன்றிய நிலங்களை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாப்பாக்குடி ஒன்றியத்தில் மண் அரிப்பைத் தடுக்கவும் வளம் குன்றிய நிலங்களை மேம்படுத்தவும் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் ஏற்கெனவே பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது, சுமார் 300 ஹெக்டேர் நிலப்பரப்பு மண் அரிப்பைத் தடுத்திட சமமட்ட வரப்பு அமைக்கும் பணிக்காக திட்டக் கருத்துரு திருநெல்வேலி, செயற்பொறியாளர் அவர்களிடம் உள்ளது. 2002-2003 ஆம் ஆண்டுக்கு மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு அளிக்கப்படவில்லை. எனவே இப்பணியினை செய்ய முடியாத நிலை உள்ளது. இனி வரும் ஆண்டுகளிலும் நிதி நிலைமைக்கேற்ப இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

பாப்பாக்குடி ஒன்றியத்தில் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்:

பாப்பாக்குடி ஒன்றியம், அம்பா சமுத்திரம் வட்டம்.

| வ எண் | கிராமத்தின் பெயர் | நீர் பிரிமுகடின் பெயர் | வேலையின் பெயர் | பயன்பெற்ற பரப்பு (ஹெக்டேர்) | குறிப்பு (செலவினம்) (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1999-2000 | | | | | |
| 1. | வடக்கு அரிய நாயகிபுரம் | பாப்பாக்குடி | சமமட்ட வரப்பிடுதல் | 66.90.0 | 1,20.900 |
| 2 | " | " | வனம் அமைத்தல் | 36.45.5 | 1,45,100 |
| 3 | " | " | உயிர்வேலி அமைத்தல் | 54.98.5 | 89,293 |
| 4 | " | " | பசுந்தாள் உரமிடுதல் | 153.34.0 | 22,000 |
| 5 | " | " | தீவன அபிவிருத்தி | 100.02.0 | 9,996 |
| | | | | | 3,87,189 |
| 2000-2001 | | | | | |
| 1. | இடைகால் | பாப்பாக்குடி | சமமட்ட வரப்பிடுதல் | 197.22.5 | 1,92.762 |
| 2. | " | " | சமமட்ட உழவு | 90.00.0 | 33,747 |
| 3. | " | " | பண்ணைக் காடுகள் | 11.54.0 | 66,931 |
| 4. | வடக்கு அரியனயத்திடபுரம் | " | சமமட்ட வரப்பிடுதல் | 119.57.0 | 1,66.496 |
| 5. | பாப்பாக்குடி | " | சமமட்ட வரப்பிடுதல் | 115.81.0 | 1,62,995 |
| 2000-2001 | | | | | |
| 1. | பாப்பாக்குடி | " | வனம் அமைத்தல் | 5.00.0 | 19,999 |
| 2. | " | " | உயிர்வேலி அமைத்தல் | 15.05.0 | 29,539 |
| | | | | | 6,72.469 |





32—

## விவசாயிகளுக்கு உபகரணம்

**வினா எண் 21211—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு மானிய விலையில் மண்வெட்டி, கடப்பாரை கடந்த 2001-2002-ல் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

(ஆ) அதை விஸ்தரிக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 2001-2002-ல் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. மேலும் இத்திட்டத்தை செயல்படுத்த அரசிடம் கருத்துரு ஏதும் இல்லை.

[2003 ஜனவரி 29

**33—**

**கரும்பு உற்பத்தி**

**வினா எண் 21512—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையை சுற்றி வேலூர், சமயநல்லூர், பரவை, தோடவர், குமாரம் வைரநத்தம், கொண்டையப்பட்டி, மேட்டுப்பட்டி போன்ற ஊர்களில் புதிய தொழில் நுட்பத்தின் மூலம் கரும்பு உற்பத்தியைப் பெருக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் புதிய தொழில்நுட்பத்தின் மூலம் கரும்பு உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

**34—**

**வேளாண்மைப் பொறியியல் மையம்**

**வினா எண் 22404—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் ஒரு வேளாண்மை பொறியியல் மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகரில் வேளாண்மைப் பொறியியல் மையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.



2003 ஜனவரி 29]

**35—**

**விவசாயிகளுக்கு மானியம்**

**வினா எண் 23365—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு சாகுபடியில் களைகளை நீக்க உதவும் பவர் டில்லர் வாங்க விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரும்பு சாகுபடியில் களைகளை நீக்க 'பவர் டில்லர்', மானியத்தில் வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. எனினும், களைகள் முளைக்கும் முன்பாகவே அவற்றை நீக்க உதவும் களைக்கொல்லி மருந்துகள் அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிலும் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. களைக்கொல்லி மருந்தை உபயோகித்து களைகளை நீக்குவதே குறைந்த செலவில் செய்யப்படும் உத்தியாகும்.

**36—**

**வேளாண்மை விரிவாக்க மையம்**

**வினா எண் 25826—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல் நத்தம் ஊராட்சியில் வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது புதிதாக வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்க போதிய வாய்ப்புகள் இல்லை. காரணம், அரசின் நிர்வாகச் செலவுகளைக் கட்டுப்படுத்த அனைத்துத் துறைகளும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அனைத்துச் செலவினங்களிலும் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்றும் நிலை நிதிக் குழு முடிவுசெய்துள்ளதாலும், மேலும் வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படாத அல்லது சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்படாத புதிய திட்டங்களுக்கு இந்நிதியாண்டில் ஒப்புதல் அளிக்கப்படமாட்டாது.

**37—**

**பயிர் விளைச்சல் போட்டி**

**வினா எண் 26526—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளைச்சலைப் பெருக்கவும், விவசாயிகளை ஊக்குவிக்கவும் பயிர் விளைச்சல் போட்டி திட்டத்தினை வட்டம் அளவிற்கு கொண்டு வந்து கவர்ச்சிகரமாக நடத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பயிர் விளைச்சல் போட்டி, மாவட்டம் மற்றும் மாநில அளவுகளில் மட்டுமே நடைபெற்று வருகிறது. தற்சமயம் வட்டம் அளவில் பயிர் விளைச்சல் போட்டி நடத்திட அரசிற்கு நோக்கம் ஏதும் இல்லை.





**38—**

**கடனுதவி**

**வினா எண் 14437—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இடி, மின்னல் தாக்கி ஊனமுற்றோருக்கு தொழில் செய்து பிழைக்க மானியத்துடன் கடன் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

இயற்கைச் சீற்றமான இடி மின்னல் தாக்கி அதனால் நிரந்தரமாக பார்வையிழந்த, காது கேளாத மற்றும் வாய் பேச இயலாத கை, கால் ஊனமுற்ற நபர்களில் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலருக்கும் சுயமாக தொழில் செய்து பிழைக்கத் தக்க வகையில் அரசு மானியத்துடன் வங்கி விதிமுறைகளுக்குட்பட்டு வங்கிக் கடன்கள் அரசு விதிகளின்படி மாவட்ட மறுவாழ்வு மையங்களின் மூலம் பெற்றுத் தரப்பட்டு வருகின்றன.

**39—**

**தொழுநோய் மறுவாழ்வு இல்லம்**

**வினா எண் 20061—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழுநோயால் அவதியுறும் மக்களுக்காக தொழுநோய் மறுவாழ்வு இல்லம் எத்தனை உள்ளது?

(ஆ) இவர்களுக்கு அரசு செலவிடும் வருடத் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தொழுநோயால் அவதியுறும் ஏழை நோயாளிகளுக்கு மருத்துவ உதவிகளை விரிவுபடுத்தி புனர்வாழ்வு அளித்திட தமிழ்நாடு அரசு, பத்து மறுவாழ்வு இல்லங்களை கீழ்க்கண்ட இடங்களில் அமைத்துள்ளது.

| வ.எண் | | அரசு மறுவாழ்வு இல்லம் |
|---|---|---|
| 1 | பரனூர் | காஞ்சிபுரம் மாவட்டம் |
| 2 | உளுந்தூர்பேட்டை | விழுப்புரம் மாவட்டம் |
| 3 | பர்கூர் | தர்மபுரி மாவட்டம் |
| 4 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை மாவட்டம் |
| 5 | விண்ணப்பள்ளி | ஈரோடு மாவட்டம் |
| 6 | மனையேறிப்பட்டி | தஞ்சாவூர் மாவட்டம் |
| 7 | யா. புதுப்பட்டி | மதுரை மாவட்டம் |
| 8 | மல்லவாடி | திருவண்ணாமலை மாவட்டம் |
| 9 | செல்லியம்பட்டி | தர்மபுரி மாவட்டம் |
| 10 | தேவியாக்குறிச்சி | சேலம் மாவட்டம் |

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.437.47 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.472.62 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**40—**

**உதவித் தொகை**

**வினா எண் 19042—திரு. க. பாரமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், சட்டப்படிப்பு முடித்தவர்கள் தனியாக தொழில் நடத்த உதவும் வகையில் ஒரு தடவையில் வழங்கும் (One time grant) உதவித் தொகை 1999 ஆம் ஆண்டிலிருந்து 2002 வரை எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?





விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

சட்டப்படிப்பு முடித்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தனியாக தொழில் நடத்த உதவும் வகையில் ஒருமுறை மட்டும் வழங்கப்படுகின்ற (One time grant) உதவித் தொகையான ரூ.5,000 1999 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரை மொத்தம் 98 பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**41—**

**மகளிர் கலைக் கல்லூரி**

**வினா எண் 20472—திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்கு ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி தொடங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

புதியதாக மாணவ, மாணவியர் விடுதிகள் தொடங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**42—**

**விபத்துக்கள் விவரம்**

**வினா எண் 1441—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் போக்குவரத்து விபத்துக்கள் எத்தனை? உயிரிழப்புகள் எத்தனை?

(ஆ) விபத்துக்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு அரசிடத்தில் என்ன திட்டம் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட மொத்த போக்குவரத்து—

சாலை விபத்துக்கள் : 50308

அதில் உயிரிழப்புகள் : 9334

(ஆ) வாகன விபத்துக்கு காரணமாக அமையும் அளவுக்கு அதிகமாக பாரம் ஏற்றும் வாகனங்கள் ஓட்டுவதை தடுத்தும் வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்த வேகத்தடை அமைத்தும், குடிபோதையில் வாகனம் ஓட்டும் ஓட்டுநர்களின்மீது நடவடிக்கை எடுத்தும், மித மிஞ்சிய வேகத்தில் வாகனங்களை ஓட்டுதலை தடுத்தும், வாகனங்களில் கண்களைக் கூசச் செய்யும்படி அமைக்கப்பட்டுள்ள முகப்பு விளக்குகளைத் தடுத்தும், நெடுஞ்சாலை அருகில் இருக்கும் தடுப்புச்சுவர் இல்லாத கிணறுகளை மூடுதல் மற்றும் அவற்றைச் சுற்றி சுற்றுச் சுவர் அமைத்தும், குறுகிய வளைவுகளில் வாகன விபத்து ஏற்படும் ஆபத்தான இடங்களை தெரிவிக்கும் வகையில் உரிய விளம்பர பலகை அமைத்தும், நெடுஞ்சாலைகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றியும் சாலை விபத்துக்களை தடுக்க காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுத்து வருகின்றனர். குறுகிய சாலைகளை அகலப்படுத்தி, சாலையின் மத்தியில் தடுப்புச்சுவர் ஏற்படுத்தி சாலைகளை இருவழிப்பாதையாக மாற்றியும், தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் இரவு நேரங்களில் நெடுஞ்சாலை காவல் துறை பிரிவினரால் ரோந்துப் பணி செய்தும் வாகன விபத்துக்கள் ஏற்படாவண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**43—**

## பேருந்து

**வினா எண் 5852—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



நல்லூர்-வந்தவாசி செல்லும் பேருந்து சோகத்தூர் பேருந்து நிலையத்தில் காலை, மாலையும் நின்று செல்வதற்காக அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வந்தவாசியிலிருந்து நல்லூருக்கு இயக்கப்படும், காஞ்சிபுரம் அரசு போக்குவரத்துக் கழகத்தின் தடம் எண் 147 மற்றும் வேலூர் அரசு போக்குவரத்துக் கழகத்தின் தடம் எண் டபிள்யூ 9 மற்றும் சோகத்தூர் வழியாக இயக்கப்படும் நாராயணமூர்த்தி மற்றும் வி.எம். என்ற தனியார் பேருந்துகளும் அனைத்து நடைகளிலும், காலை, மாலை வேளைகளிலும் சோகத்தூர் நிறுத்தத்தில் நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றன.

**44—**

## சிக்னல் அமைத்தல்

**வினா எண் 8120—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர்-சேலம் சாலையில் புளியம்பட்டி பேருந்து நிறுத்தத்தின் அருகில் சிக்னல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர்-சேலம் சாலையில் புளியம்பட்டி பேருந்து நிறுத்தத்தின் அருகில் சிக்னல் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) எழாது.

**45—**

## போக்குவரத்துக் காவலர்கள்

**வினா எண் 4133—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சி, பவானி சாலையில், ஜலகண்டபுரம் சாலையில் போக்குவரத்து காவலர்களை நியமித்து போக்குவரத்தை சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சி, பவானி சாலையில், ஜலகண்டபுரம் சாலையில் போக்குவரத்து காவலர்களை நியமித்து போக்குவரத்து சீர் செய்யப்படும்.

**46—**

## பேருந்து வசதி

**வினா எண் 7745—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வநதவாசி தொகுதி, சத்தியவாடி ஊராட்சிக்கு போதிய பேருந்து வசதி இல்லாததால் திண்டிவனத்தில் புறப்படும் பேருந்து எண் 29, சத்தியவாடி கிராமம் வழியாக சென்று வர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வந்தவாசி தொகுதிக்குட்பட்ட சத்தியவாடி கிராமம் கீழ்க்கண்டவாறு பேருந்து வசதி பெற்றுள்ளது—

| வ. எண் | வழித்தட எண் | தடமும் வழியும் | நடைகள் |
|---|---|---|---|
| 1. | டி 10 | திண்டிவனம் - வேப்பங்கரனை (வழி) கொடியம், தாதாபுரம், சத்தியவாடி | 6 |
| 2. | டி 25 | திண்டிவனம் - கொண்டையாங்குப்பம் (வழி) கொடியம், தாதாபுரம், சத்தியவாடி | 4 |
| 3. | டி 25 | திண்டிவனம் - நல்லூர் (வழி) கொடியம், தாதாபுரம் சத்தியவாடி கொண்டையாங்குப்பம் | 4 |
| 4. | தனியார் (ஜெயலட்சுமி) | திண்டிவனம் - மாவளவாடி குறுக்கு ரோடு (வழி) தாதாபுரம், சத்தியவாடி | 8 |
| | | மொத்த நடைகள் | 22 |





மேலும் திண்டிவனத்திலிருந்து வெள்ளிமேடுபேட்டை, காட்டேரி இராமலிங்கபுரம், தெய்யார் மார்க்கமாக இயக்கப்பட்டு வரும் டி29 நகரப் பேருந்தின் நடைகளை கொடியம், தாதாபுரம், சத்தியவாடி, செங்கேணிக்குப்பம், இராமலிங்கபுரம் வழியாக கோரிக்கைப்படி தட மாற்றம் செய்தால் தட நீளம் 9.2 கி.மீ. கூடுதலாகும். இதனால் 5 கட்டண நிலைகளும் அதற்கேற்ற நிலையில் பயண நேரமும் கூடுதலாகும்.

எனவே, மேற்கண்ட காரணங்களால் டி29 நகரப் பேருந்தின் நடைகளை சத்தியவாடி வழியாக தடமாற்றம் செய்திடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**47—**

## வேகத்தடை அமைத்தல்

**வினா எண் 8651—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வெலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி ஊராட்சி, ஆவுடையாள்புரம் கிராமத்தின் வடக்கு பேருந்து நிலையத்தின் அருகில் நான்கு சாலைகள் சந்திக்குமிடத்தில் வேகத்தடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி ஊராட்சி, ஆவுடையாள்புரம் கிராமத்தில் வடக்கு பேருந்து நிலையம் அருகில் உள்ள சாலைகள் சந்திக்குமிடம் வழியாக திருச்செந்தூர் மற்றும் கூத்தன் குழி செல்லும் பேருந்துகள் மட்டும் சென்று வருகின்றன. அடிக்கடி பேருந்துகள் செல்வதில்லை. இருப்பினும் அவ்விடத்தில் வேகத்தடை அமைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**48—**

## போக்குவரத்து வசதி

**வினா எண் 8828—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட மேச்சேரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கும், அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கும் சென்று வர அமரகுந்தி, தொளசம்பட்டி, கோவிலூர், கரட்டூர், செங்காட்டூர், புதூர், வீரப்பனூர், தொப்பம், மேலூர் தொப்பம், கீமூர், ஆண்டியூர், தொப்பம் தயிர்காரனூர், தொங்கலானூர், பொளச்சிவளவு, மலையனூர், பவளத்தாம்பட்டி ஆகிய ஊர்களில் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட அமரகுந்தி, தொளசம்பட்டி, கோவிலூர், கரட்டூர், செங்காட்டூர், புதூர், வீரப்பனூர், தொப்பம், மேலூர் தொப்பம், கீமூர், ஆண்டியூர், தொப்பம் தயிர்காரனூர், தொங்கலானூர், பொளச்சிவளவு, மலையனூர், பவளத்தாம்பட்டி ஆகிய ஊர்களிலிருந்து மேச்சேரி பள்ளிகளுக்குச் செல்ல கீழ்க்கண்டவாறு பகுதி வாரியாக நகர மற்றும் புறநகரப் பேருந்து வசதி உள்ளது:

| தடம் எண் | வழித்தடப் பகுதி | நடைகள் எண்ணிக்கை |
|---|---|---|
| ஓ 8 நகர் | தொளசம்பட்டி முதல் மேச்சேரி வரை | 4 |
| 22 நகர் | தொப்பம்புதூர் முதல் மேச்சேரி வரை | 8 |
| புறநகர் | அமரகுந்தி முதல் மேச்சேரி வரை | 3 |
| | மொத்தம் | **15** |

இவ்வழித்தடத்தில் பயணிகள் அடர்வு 44% மட்டுமே உள்ளது. எனவே, மேற்கண்ட பேருந்து வசதியே மாணவர்கள் மற்றும் பொது மக்களின் போக்குவரத்து தேவையினை நிறைவு செய்யப் போதுமானதாகக் கருதப்படுகிறது.



**49—**

## ஓய்வூதியம் வழங்கும் திட்டம்

**வினா எண் 13903—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் எப்போது யாரால் கொண்டு வரப்பட்டது?

(ஆ) இதுவரை பயனடைந்தோர் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாங்க ஊழியர்களுக்கு இணையான ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்தும்படி தொழிற்சங்கங்கள் கேட்டுக் கொண்டதன் விளைவாக போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு என ஒரு புதிய ஓய்வூதியத் திட்டம் உருவாக்கப்பட்டு 1-9-1998 என முன்தேதியிட்டு 17-12-2000 முதல் தமிழ்நாடு அரசால் அமல்படுத்தப்பட்டது. 31-01-2002 வரை ஓய்வுபெற்ற/இறந்த மொத்தம் 6,655 பணியாளர்களுள் 5,111 பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

**50—**

## மினி பேருந்து வசதி

**வினா எண் 14320—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் நகரப் பேருந்து செல்ல இயலாத சிறு கிராமங்களுக்கு மினி பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

[2003 ஜனவரி 29

*விடை—*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் நகரப் பேருந்து செல்ல இயலாத சிறு கிராமங்களுக்கு ஏற்கெனவே நடைமுறையில் உள்ள திட்டத்தின்கீழ் மினி பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.*

**51—**

**சொகுசுப் பேருந்துகள்**

**வினா எண் 14363—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம்-சென்னை, சேலம்-பெங்களூர் வழித்தடங்களில் இரவு முழுவதும் தனியார் சொகுசுப் பேருந்துகள் இயக்கப்படுவதைப்போல அரசு சொகுசுப் பேருந்துகளை இயக்க திட்டம் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சேலத்திலிருந்து சென்னைக்கு நாள்தோறும் 17 சொகுசு மற்றும் சாதா பேருந்துகள் 32 நடைகளாக இயக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் சேலம் வழியாக சென்னைக்கு நாள்தோறும் 30 சொகுசு மற்றும் சாதா பேருந்துகள் பகல் மற்றும் இரவு முழுவதுமாக இயக்கப்பட்டு வருகின்றன. இதுபோன்ற சேலம்-பெங்களூர் தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மற்றும் தருமபுரி ஆகிய கழகங்களிலிருந்து 12 நேரடிப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த வசதியை சேலம்-பெங்களூர் பயணிகள் பயன்படுத்திக் கொள்ள வசதியாக உள்ளது.*

**52—**

**பேருந்து வசதி**

**வினா எண் 15340—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2003 ஜனவரி 29]

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சிக்குட்பட்ட கொத்தன்குளம் கிராமத்திற்கு பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சிக்குட்பட்ட, கொத்தன்குளம் சுமார் 70 வீடுகளையும், மக்கள் தொகை சுமார் 350-ம் கொண்ட குக்கிராமம் ஆகும். இக்குக்கிராமம், காவல்கிணறு-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் இருந்து விரிந்து சுமார் 2.4 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள சங்கனாபுரம் விலக்கிலிருந்து, சுமார் 1.8 கி.மீ. தூரத்தில் மிகவும் உட்புறமாக அமைந்துள்ளது. கொத்தன்குளத்திலிருந்து 3.0 கி.மீ. தூரத்தில் உள்ள சங்கனாபுரத்திற்கு, தற்போது தினசரி 25-க்கும் மேற்பட்ட சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் அரசு விதிகளின்படி, 1000-க்கும் குறைந்த மக்கள் தொகை கொண்ட கொத்தன்குளம் கிராமத்திற்கு முன்னுரிமை கொடுத்து பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.*

**53—**

**அலுவலக உதவியாளர் அலவன்ஸ்**

**வினா எண் 19551—திரு. கி. பாரிமோகன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) போக்குவரத்துக் கழக அதிகாரிகளுக்கு அலுவலக உதவியாளர் அலவன்ஸ் வழங்கப்படுகிறதா?*

*(ஆ) ஆம் எனில், எந்த வகை அதிகாரிகளுக்கு வழங்கப்படுகிறது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) ரூ.10,000-325-16,500 என்கிற சம்பள விகிதம் மற்றும் அதற்கு மேற்பட்ட சம்பள விகிதத்தில் சம்பளம் பெறும் அனைத்து அதிகாரிகளுக்கும் அலுவலக உதவியாளர் அலவன்ஸ் மாதம் ஒன்றுக்கு ரூ.250 வீதம் வழங்கப்படுகிறது.*

**54—**

**நிலுவைத் தொகை வழங்கல்**

**வினா எண் 2887—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள தொகையை அரசு உடனே வழங்க ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

வந்தவாசியிலுள்ள விவசாயிகள், செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு கரும்பு அனுப்புகின்றனர். செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 2001-2002 ஆம் அரவைப் பருவத்தில் 30-6-2002 நிலவரப்படி கரும்பு கிரய பாக்கி முழுவதும் நிலுவை ஏதுமின்றி கரும்பு விவசாயிகளுக்கு செலுத்திவிட்டது.

**55—**

**தள்ளுபடித் தொகை நிலுவை**

**வினா எண் 3679—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சர்வோதய சங்கங்கள் மற்றும் கதர் நிறுவனங்களுக்கு அரசு கொடுக்க வேண்டிய தள்ளுபடித் தொகை எத்தனை ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது?

(ஆ) 31-3-2001 முடிய கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு?





விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) பொதுவாக சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களின் தள்ளுபடி மானியக் கோரிக்கைகள் துறைத் தணிக்கையரால் சரி பார்க்கப்பட்டு அவர்களின் சான்றொப்பம் பெறப்பட்ட பின்னர் வாரியத்தில் பெறப்பட்ட அரசுக்கு அனுமதி வேண்டி வாரியத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும். அரசும் சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களின் தள்ளுபடி மானியக் கோரிக்கைத் தொகையினை அனுமதித்து ஆணை வழங்கிய பின்னர் வாரியத்தின் மூலம் தொகை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். அவ்வாறே, மேற்படி சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட 1996-97 முதல் 1999-2000 வரையிலான ஆண்டுகளுக்கான தள்ளுபடி மானியக் கோரிக்கைகளை வாரியம் அரசின் பரிசீலனைக்கு சமர்ப்பித்தது.

இதனிடையில், சில சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் விற்பனை மீது சில முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டிருந்த அறிக்கையின் அடிப்படையில் மேற்படி வருடங்களுக்கான (1996-97 முதல் 1999-2000 ஆண்டு வரை) சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களின் தள்ளுபடி மானியக் கோரிக்கைகளை மிகத் துல்லியமாக மறு தணிக்கை செய்ய வேண்டுமென அரசாணை (நிலை) எண் 36 கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர் (எப்.2) துறை, நாள் 28-3-2001-ன் வழி ஆணையிட்டது.

அதன் அடிப்படையில் மேற்படி நிறுவனங்களின் 1996-97 முதல் 1999-2000 ஆம் ஆண்டு வரையிலான தள்ளுபடி மானியக் கோரிக்கைகளை மறு தணிக்கை மேற்கொள்ள வேண்டி அனைத்து நிறுவனங்களுக்கும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. அவை மறு தணிக்கை செய்து மீள பெறப்பட்டவுடன் தணிக்கைச் சான்றின் அடிப்படையில் தள்ளுபடி மானியத் தொகைகளை அரசு அனுமதித்து ஆணை வழங்கும்.

(ஆ) சான்றளிக்கப்பட்ட சர்வோதய சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட மானியக் கோரிக்கைகளில் 31-3-2001 முடிய மொத்த பாக்கித் தொகை ரூ.33,52,67,758 ஆகும்.

[2003 ஜனவரி 29

**56—**

**மேக்னசைட் கற்கள்**

**வினா எண் 11563—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் எந்தெந்த மாவட்டத்தில் மேக்னசைட் கற்கள் வெட்டி எடுப்பதற்கு பதிவு செய்து வைத்திருக்கிறது? அதற்காக மாவட்ட வாரியாக நிலத்தின் பரப்பளவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

1. (அ) சேலம் மாவட்டம், சேலம் வட்டம், செட்டிச்சாவடி கிராமம், புல எண் 14-இல் உள்ள 40.10.0 ஹெக்டேர்

(ஆ) சேலம் மாவட்டம், சேலம் வட்டம், செட்டிச்சாவடி கிராமம், புல எண் 42-இல் உள்ள 83.40.0 ஹெக்டேர்.

2. (அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், திருமல் கிராமம், புல எண் 88-இல் 4.53.5 ஹெக்டேர்.

(ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், வில்லிப்பாளையம் கிராமம் புல எண் 187, 20.5 மற்றும் நாமக்கல் வட்டம், கீராம்பூர் கிராமம் புல எண் 23/1, 23/2 ஆகியவற்றில் 9.22.5 ஹெக்டேர்.

3. சேலம் மாவட்டம், ஜாகீர்அம்மாபாளையம் கிராமத்தில் புல எண் 161/1 மற்றும் மூங்கில்பாடி கிராமத்தில் க.ச.எண் 55/1 இரண்டிலும் 10.56.0 ஹெக்டேர் பரப்பும், நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், திருமல கிராமம், க.ச.எண். 88-ல் (7.75 ஏக்கர்) 3.13.6 ஹெக்டேர் பரப்பும் பதிவு செய்து ஒதுக்கப்பட்டுள்ளது. (Reserved for State Exploitation)

4. இவை தவிர சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாத்தலங்கார்பேட்டை புல எண் 153-ல் (காப்பு காடுகள்) 234.29.0



2003 ஜனவரி 29]

ஹெக்டேர் பரப்பளவில் சுரங்க குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. சுரங்கம் நடைபெற்று வருகிறது.

**57—**

**மேக்னசைட் கற்கள்**

**வினா எண் 11565—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தியா மெக்னீசியா ப்ராடெக்ட் நிறுவனத்திடமிருந்து சேலம் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் எந்த ஒப்பந்த அடிப்படையில் மேக்னசைட் கற்கள் விலைக்கு மாதந்தோறும் பெறப்படுகிறது?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இரசாயன தர மேம்படுத்தும் திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக கூட்டு நிறுவனமாக இந்தியா மேக்னீசியா ப்ராடக்ட் நிறுவனம் 1991-ல் ஏற்படுத்தப்பட்டது. இந்தக் கூட்டு நிறுவனம் ஏற்படுத்துவதற்காக செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் தன் வசமிருந்த கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள 47.00 ஏக்கர் மீதான சுரங்க குத்தகை உரிமையை மாற்றித் தந்தது. மேலும் கூட்டு ஒப்பந்தத்தில், கூட்டு நிறுவனம் வெட்டி எடுக்கும் மேக்னசைட் கற்களை முதலில் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் விருப்பப்பட்டால் கொடுக்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறு விருப்பமில்லாத பட்சத்தில் கூட்டு நிறுவனம் தான் வெட்டி எடுக்கும் மேக்னசைட் கற்களை வேறு நிறுவனங்களுக்கு விற்று விடலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்த அடிப்படையில் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் கடந்த ஐந்து வருடங்களாக பெரிய மேக்னசைட் கற்களை தனது நிலை சூளை பிரிவிற்கு வாங்கி உபயோகித்து வருகின்றது. கூட்டு நிறுவனத்தில் மேக்னசைட் கற்கள்

விலை. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் உற்பத்திச் செலவை விட மிகவும் குறைவாகவே உள்ளது. மேலும், இந்நிறுவனம் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தில் கூட்டு நிறுவனம் என்பதால் மேக்னசைட் விற்பனை விலை மற்றவர்களுக்கு விற்கும் விலையை விட சிறிதளவு குறைவாகவே இருந்து வருகிறது.

(ஆ) தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் இந்தியா மெக்னீசியா ப்ராடக்ட் நிறுவனத்திடமிருந்து கடந்த 5 ஆண்டுகளில் கொள்முதல் செய்த மேக்னசைட் கற்கள் அளவு பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1996-1997 | - | 8,819 | டன்கள் |
| 1997-1998 | - | 12,217 | டன்கள் |
| 1998-1999 | - | 10,716 | டன்கள் |
| 1999-2000 | - | 5,550 | டன்கள் |
| 2000-2001 | - | 6,295 | டன்கள் |
| 2001-2002 | - | 5,201 | டன்கள் |

**58—**

**கதர் பொருட்கள் ஏற்றுமதி**

**வினா எண் 12495—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து கதர்த் துறை மூலம் வெளி நாடுகளுக்கு எவ்வளவு மதிப்புள்ள கதர் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

கதர் கிராமத் தொழில் வாரியத்தினைப் பொறுத்தமட்டில் இதுவரை கதர் இரகங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. வாரியத்தில் உற்பத்தி செய்யப்படும் கதர், பாலிவஸ்திரா மற்றும் பட்டு இரகங்கள் தமிழ்நாட்டிலுள்ள 201 கதரங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு ரூ.23.78 கோடி மதிப்புள்ள கதர் இரகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தினைப் பொறுத்தவரையில் வாரியத்தின் மூலம் உற்பத்தியாகும் கதர் துணிகளை வெளிநாடுகளில் விற்பனை செய்வதற்கு ஏதுவாக இணைய தளம் (web site) மூலம் முழுமையான விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இம்முயற்சியின் காரணமாக இனி கதர் துணிகளுக்கு ஏற்றுமதி ஆணைகள் பெற வாய்ப்புகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், கதர் ஆணைக்குழு மூலம் ஏற்றுமதி செய்வதற்கும் சாத்தியக் கூறுகள் உள்ளனவா என வாரியம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.



கிராமத் தொழில்களைப் பொறுத்தமட்டில் வாரியம் சோப்பு வகைகளை ரூ.86,400 மதிப்பிற்கு ஒத்திகை அடிப்படையில் (Trial Basis) வெளிநாடுகளுக்கு விநியோகம் செய்துள்ளது.

**59—**

**கதர் ஏற்றுமதி**

**வினா எண் 12496—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து கதர்த் துறை மூலம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் கதர் தயாரிப்புகள் குறைந்துவிட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், ஏற்றுமதியை அதிகரிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் இதுவரை கதர் இரகங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை.

(ஆ) எழவில்லை.

60—

## கதர் நெசவு

**வினா எண் 13287—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கதர் நெசவுத் தொழில் செய்பவர்களுக்கு கதர்த் துறை மூலம் அச்சு, நாடா, தளி போன்ற இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கி கதர் நெசவை ஊக்கப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் பணிபுரியும் நெசவாளர்களுக்கு அச்சு, நாடா, தளி போன்ற இயந்திரங்கள் பகுதி-2 திட்டத்தின்கீழ் அரசிடமிருந்து பெறப்படும் மானியத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகிறது. 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் தறிகளை நவீனப்படுத்தும் பொருட்டு 200 பட்டு நெசவாளர்களுக்கும், 500 கதர் நெசவாளர்களுக்கும் அச்சு மற்றும் விழுதுகள் ரூ.5.25 இலட்சம் மதிப்பிற்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 600 பட்டு நெசவாளர்களுக்கு தலா இரண்டு ஜக்கார்டு பெட்டிகள் வீதம் 1200 ஜக்கார்டு பெட்டிகள் வழங்குவதற்கு ரூ.7.20 இலட்சம் மானியம் பெறப்பட்டு தற்போது 162 நெசவாளர்களுக்கு ஜக்கார்டு பெட்டிகள் வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 438 நெசவாளர்களுக்கும் ஜக்கார்டு பெட்டிகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்துடன் 400 பட்டு நெசவாளர்களுக்கு தறியினை நவீனப்படுத்தி உற்பத்தியினை மேம்படுத்தும் பொருட்டு தலா ரூ.2,500/- வீதம் தறி உபகரணங்களுக்கென ரூ.10.00 இலட்சம் மானியத்தில் பெற்று அவற்றினை வழங்குவதற்கும் இவ்வாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



61—

## பட்டு நெசவு மையம் ஆரம்பித்தல்

**வினா எண் 13327—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் கதர் வாரியத்தின் மூலம் ஒரு பட்டு நெசவு மையம் ஆரம்பிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் கதர் வாரியத்தின் மூலம் ஒரு பட்டு நெசவு மையம் ஆரம்பிக்கும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

62—

## பனை ஓலை தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 13971—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியத்தில் பனை ஓலை தொழிற்பயிற்சி நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2003 ஜனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் கடலூரில் மண்டல பனைபொருள் பயிற்சி நிலையம் ஒன்றினை நடத்தி வருகிறது. அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வரும் பயிற்சியாளர்களுக்கு பனைபொருள் தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. எனவே கடையம் ஒன்றியத்தில் புதியதாக பனை ஓலை தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

63—

**பனை ஓலை தொழிற்பயிற்சி நிலையம்**

**வினா எண் 14538—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் பனை ஓலை தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் கடலூரில் மண்டல பனைபொருள் பயிற்சி நிலையம் ஒன்றினை நடத்தி வருகிறது. அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வரும் பயிற்சியாளர்களுக்கு பனைபொருள் தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. எனவே புதியதாக பனை ஓலை தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை.



2003 ஜனவரி 29]

64—

**பூட்டு, சுருட்டு தொழில் வளர்ச்சி**

**வினா எண் 15845—செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் புகழ்பெற்ற பூட்டுத் தொழில், சுருட்டுத் தொழில் நலிவடைந்து உள்ளதால் அதன் வளர்ச்சிக்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) இத்தொழில்கள் விரிவுபடுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) திண்டுக்கல்லில் பூட்டுத் தொழில் வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சுருட்டுத் தொழில் நலிவடைந்ததற்கானக் காரணங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

(ஆ) பூட்டுத் தொழிலை மேம்படுத்த பூட்டுத் தொழில் நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் பூட்டுத் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கத்தில் ரூ.10/- இலட்சம் செலவில் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் தேசிய பூட்டு வளர்ச்சி திட்டத்தின்கீழ் யுனிடோ (Unido) உதவியுடன் இச்சங்க உறுப்பினர்கள் மற்றும் பூட்டுத் தொழிலில் ஈடுபட ஆர்வம் உள்ள 25 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பூட்டுத் தொழிலில் பயிற்சியும் தொழில் முனைவோர் பயிற்சியும் முறையே ரூ.2/- இலட்சம் மற்றும் ரூ. 70,000 செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. தொழில் முனைவோர் பயிற்சி முடித்து தொழில் துவங்க முன்வருபவர்களுக்கு தொழிற்கூடங்கள் யூனிடோ நிதியுதவியுடன் அமைக்க செயல்திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

65—

**கூட்டுறவுச் சங்கங்கள்**

**வினா எண் 19050—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 29

(அ) கதர் வாரியத்தின் மூலம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை எத்தனை? அவற்றின் பணிகள் என்ன?

(ஆ) அரசு மூலம் அச்சகங்களுக்குத் தரப்படும் பணிகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கதர் வாரியத்தின் மூலம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1,586 ஆகும். ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் தனது அங்கத்தினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு சங்கம் சொந்த பொறுப்பில் வேலைவாய்ப்பை உருவாக்கி அதன் மூலம் சங்கத்தை நடத்தி வருகிறது. மட்பாண்டம், நார் (மற்றும்) பாய் பொருட்கள், தச்சு, எண்ணெய் உற்பத்தி, தோல் பொருட்கள், கைக்குத்தலரிசி, மூங்கில் (மற்றும்) பிரம்பு பொருட்கள், சுண்ணாம்பு, தேனீ வளர்ப்பு, பனை (மற்றும்) தென்னை ஓலைப் பொருட்கள், கைக்காகிதம், அலுமினியப் பொருட்கள், பழப்பக்குவப்படுத்தல், மின்னணுப் பொருட்கள், எழுதுபொருட்கள், கடுக்காய் பொருட்கள், ஊசிமணி, பாசிமணி மாலை செய்தல், வைரம் பட்டை தீட்டுதல், மூலிகைப் பொருட்கள், இரப்பர் பேண்டுகள், ஊசி மற்றும் அதன் சார்பு பொருட்கள், விவசாயக் கருவிகள், பால் பொருட்கள், கதர் துணிகள், கதர் பட்டு போன்ற பொருட்கள் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை தவிர கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு மூலமாக பல்வேறு தொழில்களில் வேலை வாய்ப்பு அளிக்கும்பொருட்டு அரசுத் துறைகளுக்குத் தேவையான மரத் தளவாடங்கள், கல்வி பயிலுவதற்கான உபகரணங்கள், மருத்துவ விடுதிக்குத் தேவையான உபகரணங்கள், உணவுப் பொருட்கள், துணி வகைகள் போன்ற பல்வேறு வகையான பொருட்களும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

(ஆ) கதர் வாரியத்திலுள்ள அலகுகளில் உற்பத்தி ஆகும் பொருட்கள் அரசு துறைக்கு விற்பனை செய்ய தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் துணை விதிகளின்படி என்னென்ன தொழில்களுக்கு சங்கம் பதியப்பட்டதோ அந்தந்த தொழில்களுக்குரிய பணி ஆணைகளை நிறைவேற்ற அரசிடமிருந்தோ, தனியார் துறையிடமிருந்தோ தேவை



2003 ஜனவரி 29]

நமூனா பெற்று செயல்பட்டு வருகிறது. இது தவிர அரசாணை எண் 452, நிதி (சம்பளம்) துறை, நாள் 16-11-2001-ன்படி ஒளிவு மறைவு அற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகளின்படி அரசின் பொதுத் துறை நிறுவனங்களுக்கு வரையறுக்கப்பட்ட தகுதிகளின்படி ஒப்பந்தப் புள்ளிகளில் கலந்துக்கொள்ள வாரியத்தின்கீழ் செயல்படும் சங்கங்களுக்கும் வாய்ப்புள்ளது. இவ்விதியைப் பயன்படுத்தி சங்கங்கள் அரசுக்குத் தேவையானப் பொருட்களை சங்கங்களின் மூலமாக விநியோகம் செய்து வேலைவாய்ப்பைப் பெருக்கிட வாய்ப்புள்ளது.

**66—**

**கடன் வழங்குதல்**

**வினா எண் 19735—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் கடன்பெறும் முறையில், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு நபர் ஜாமினில் கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாநிலத்தில் தொழில் வளர்ச்சியின் வேகத்தை அதிகரிக்கவும், தொழில் தொடங்குவதில் எல்லா பிரிவினர்களையும் ஊக்குவிக்கவும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வெவ்வேறு திட்டங்களின்கீழ் கடன் வழங்கி வருகிறது. பொதுவாக, இக்கடன்கள் தொழில்முனைவோரின் முதல் நிலை சொத்துக்கள் பேரிலும் 25%, 50%, 10% துணை பிணையத்தின் பேரிலும் கடன் வழங்கப்படுகிறது. கடந்த கால அனுபவங்களைக் கருத்தில் கொண்டு தனி நபர் ஜாமின் பேரில் கடன் வழங்குவது உகந்ததாக இல்லை என முடிவு செய்து தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தனி நபர் ஜாமின் பேரில் கடன் வழங்கும் முறையை தற்போது நிறுத்தி வைத்துள்ளது. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு உதவும் வகையில், வாகன

கடன் அனுமதிக்கும்போது, 25% தொகை துணைப் பிணையமாக பெறப்படுகிறது. மேலும் இவர்களுக்கு தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனம் மூலம் பெறப்பட்ட மானியத் தொகையையும் விளிம்புத் தொகையையும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினால் அனுமதிக்கப்பட்ட கடன் தொகையை வழங்கும்போது அளிக்கப்படுகிறது.

**67—**

**அரசு மானியம்**

**வினா எண் 20297—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "சூரிய ஒளி சுடுநீர் அமைப்பு" நிறுவுவதற்கு அரசு மானியம் வழங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், 2001-2002 இல் எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம். 2001-2002-ல் சூரிய ஒளி சுடுநீர் அமைப்பு நிறுவுவதற்கு அரசு மானியம் வழங்கப்பட்டது.

(ஆ) 2001-2002 இல் வீட்டு உபயோகத்திற்கான 400 சூரிய ஒளி சுடுநீர் அமைப்புகளுக்கு (நாளொன்றிற்கு 100 லிட்டர் சுடுநீர் தயாரிக்க வல்லது) ஒரு பயனீட்டாளருக்கு ரூ.3000/- வீதம் ரூ.12 இலட்சம் மானியமாக அரசு வழங்கியது. மேலும், தொழிற்சாலைகளுக்கான 20 சூரிய ஒளி சுடுநீர் (நாளொன்றிற்கு 1000 லிட்டர் சுடுநீர் தயாரிக்கவல்லது) அமைப்பு ஒன்றிற்கு ரூ.20,000/- வீதம் ரூ.4.00 லட்சம் அரசு மானியமாக வழங்கியுள்ளது. மேலும் சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவர், மாணவியர் விடுதி முதலிய இடங்களில் முழுமையான அரசு நிதியுதவியுடன் மூன்று சூரிய ஒளி சுடுநீர் அமைப்புகள் ரூ.10.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.



**68—**

**கிரானைட் குவாரிகள்**

**வினா எண் 24641—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கிரானைட் குவாரிகள் எவ்வளவு?

(ஆ) கிரானைட் குவாரிகளின் மூலம் அரசுக்கு கிடைக்கும் வருமானம் ஆண்டுக்கு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 31

(ஆ) 2001-2002 ஆம் நிதியாண்டில் கிரானைட் குவாரிகள் மூலம் வருமானம் ரூ.1,31,01,300/-

**69—**

**ஆலோசனைக் குழு**

**வினா எண் 23838—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்ட நடைமுறைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெறுவது தொடர்பாக நான்கு குழுக்கள் வணிக வரித் துறையில் அதிகாரிகள் மட்டத்தில் உள்ளதை விரிவுபடுத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் ஆலோசனைக் குழுவில் சேர்க்க அரசு பரிசீலனை செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

சட்ட நடைமுறைகள் மற்றும் ஆலோசனை பெறுவது தொடர்பாக குழுக்கள் வணிக வரித் துறையில் அதிகாரிகள் மட்டத்தில் இல்லை.

எனினும் வணிக வரித் துறையில் கீழ்க்கண்ட குழுக்கள் உள்ளன:

(1) மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு:

இதில் ஆறு சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

(2) மாவட்ட அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு:-

இதில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் உள்ளார்.

(3) வரி சீரமைப்புக் குழு:

அரசு அலுவலர்கள் மட்டுமே நியமிக்கப்படுகிறார்கள். இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைச் சேர்க்க இயலாது.

(4) சிறப்புக் குழு:-

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959, பிரிவு 16-D-இன் கீழ் இச்சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு சட்டபூர்வமாக ஆணையிடும் குழு. ஆலோசனைக் குழு அல்ல. இதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைச் சேர்க்க இயலாது.

இவை தவிர வணிகர் நல வாரியம் ஒன்று உண்டு. சட்ட நடைமுறைகள் சம்பந்தமான ஆலோசனை வழங்குவது இவ்வாரியத்தின் பணி அல்ல.

மேற்குறிப்பிட்ட முதல் இரண்டு குழுக்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். மற்ற இரண்டு குழுக்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைச் சேர்க்க இயலாது.



70—

**நிதி ஒதுக்கீடு**

**வினா எண் 23839—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சிக்கு கேளிக்கை வரி வருவாய் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு நிதி ஒதுக்கீடு 2001-2002 ஆம் ஆண்டுக்கு செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாநகராட்சிக்கு 2001-2002 ஆம் ஆண்டுக்கு கேளிக்கை வரி வருவாயில் ரூ.2,25,12,087/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

71—

**காட்டு வளத்தைப் பெருக்குதல்**

**வினா எண் 10497—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் காட்டு வளத்தைப் பெருக்க மற்றும் பாதுகாக்க அரசு என்னென்ன திட்டங்களைச் செயல்படுத்த உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் காட்டு வளத்தைப் பெருக்க மற்றும் பாதுகாக்க கீழ்க்காணும் திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1. சந்தன மரத் தோட்ட உற்பத்தித் திட்டம்

2. சிறுவனப் பொருட்கள் தோட்ட உற்பத்தித் திட்டம்

3. தடிமரத் தோட்ட உற்பத்தித் திட்டம்

4. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

5. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாடுத் திட்டம்

6. வனப் பாதுகாப்புத் திட்டம்

7. வன ஒருங்கிணைப்புத் திட்டம்

8. ஒருங்கிணைந்த வனவளர்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தித் திட்டம்

9. தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டம்

**72—**

**கல்குவாரி**

**வினா எண் 18947—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கராபுரம் தொகுதியில் எத்தனை கல்குவாரி ஏலம் விடப்பட்டுள்ளது. அக்குவாரி அரசின் அனுமதி பெற்று நடைபெறுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

சங்கராபுரம் தொகுதியில் வனத் துறை மூலம் கல்குவாரிகள் ஏதும் ஏலம் விடப்படவில்லை. சங்கராபுரம் தொகுதிக்கு உட்பட்ட கானை காப்புக் காட்டில் 0.97 ஹெ. பரப்பில், வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி மத்திய அரசு ஆணைபெற்று செஞ்சுரி ரூரல்ராக் ஓர்க்ஸ் என்ற நிறுவனத்திற்கு 10 ஆண்டு காலத்திற்கு கருப்புக்கல் குத்தகை ஆணை 18-3-1994 நாளிட்ட அரசாணை (2டி) எண் 4-ல் வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.





**73—**

**குரங்குகளைப் பிடிக்க நடவடிக்கை**

**வினா எண் 19115—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் வீரகேரளம்புதூரில் குரங்குகள் சிறு குழந்தைகளைக் கடித்தும், வீடுகளில் புகுந்து உணவை உண்டும் அதிக தொல்லை செய்வதால் குரங்குகளைப் பிடிப்பதற்கு அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

ஆலங்குளம் மற்றும் வீரகேரளம்புதூர் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு தொல்லை கொடுக்கும் குரங்குகளைப் பிடித்து வனப்பகுதிக்கு அனுப்ப தனிக் குழு அமைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**74—**

**அண்ணா உயிரியல் பூங்கா**

**வினா எண் 22933—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டு சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு எவ்வளவு பேர் வருகை புரிந்தனர்?

(ஆ) இதன் மூலம் அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைத்தது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு 5,98,864 பேர் வருகை புரிந்தனர்.

(ஆ) 2001-2002 ஆம் நிதியாண்டில் கிடைக்கப் பெற்ற மொத்த வருமானம் ரூ.38,22,273/- ஆகும்.

**75—**

### மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்

**வினா எண் 23509—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு புதியதாக சட்ட வரைமுறை வகுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

மாசு சம்மந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க வெவ்வேறு காலகட்டங்களில் மத்திய அரசால் இயற்றப்பட்ட சட்டங்களை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கென தனியாக சட்ட வரைமுறை வகுக்கும் அதிகாரம் எதுவும் கிடையாது.

**76—**

### குடியிருப்புகள் பழுதுபார்த்தல்

**வினா எண் 1041—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் ரேஸ்கோர்ஸில் உள்ள பழுதடைந்த அரசினர் குடியிருப்புகள் எப்பொழுது பழுது பார்க்கப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

அரசு ஆணை (நிலை) எண் 118, நாள் 7-3-2001 இல் சென்னை மற்றும் மாநிலத்தின் பிற பகுதிகளில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளுக்கு சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளை ரூ.13.18 கோடி செலவில் மேற்கொள்ளவும், அப்பணிக்காக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ.11.03 கோடி கடன் பெறவும் மீதித் தொகையினை அரசு நிதியிலிருந்து வழங்கவும் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி அரசாணையில் கோயம்புத்தூர் ரேஸ் கோர்ஸ் பகுதியில் உள்ள அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளுக்கு சிறப்பு பழுது பார்க்கும் பணிக்காக ரூ.18.33 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் ரேஸ்கோர்ஸ் பகுதியில் உள்ள அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளின் எண்ணிக்கை 982. மேல்நிலை தண்ணீர் தொட்டியில் ஏற்பட்டுள்ள கசிவுகளை நிறுத்துதல், மேல் தளத்தில் பதித்துள்ள ஓடுகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளைச் சரிபார்த்தல் மற்றும் சுண்ணாம்புச் சல்லிகளை மாற்றுதல், கதவு மற்றும் ஜன்னல்களைப் பழுதுபார்த்தல், கழிவு நீர் மற்றும் குடிநீர்க் குழாய்கள் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல், சுவர்களில் பழுதான சிமென்ட் பூச்சு வேலைகளைப் பழுதுபார்த்தல், சுண்ணாம்பு அடித்தல் போன்ற பணிகள் அங்குள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் தொடங்கப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளையும் விரைவில் முடிக்க வீட்டுவசதி வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**77—**

### சுடுகாடு கொட்டகை

**வினா எண் 5634—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கன்னுத்தோப்பு கிராமத்தில் சுடுகாடு கொட்டகை அமைத்துத் தரப்படுமா?

[2003 ஜனவரி 29

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, கன்னுத்தோப்பு கிராமத்தில் மயானக் கொட்டகை அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

**78—**

**வீடுகள் சீர்செய்தல்**

**வினா எண் 10821—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, சஞ்சல் நத்தம் ஊராட்சி, பட்டக்காரன் கொட்டாய் காலனியில் மிகவும் பழுதடைந்துள்ள வீடுகளைச் சீர் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(அ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிதியில் கட்டித் தரப்பட்ட காலனி வீடுகளைப் பழுது பார்க்கும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, சஞ்சல் நத்தம் ஊராட்சி, பட்டக்காரன் கொட்டாய் காலனியில் மிகவும் பழுதடைந்துள்ள வீடுகளைச் சீர் செய்யும் பணியை மேற்கொள்ள தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**79—**

**வீடுகள் விபரம்**

**வினா எண் 16589—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஜனவரி 29]

(அ) தமிழகத்திலுள்ள குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்குட்பட்ட வீடுகள் எத்தனை?

(ஆ) சென்னை மாநகரில் மட்டும் எத்தனை உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சென்னை மற்றும் இதர நகரில் 77,769 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) சென்னை நகரில் மட்டும் 6,111 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

**80—**

**ஜீவன்தாரா கிணறு திட்டம்**

**வினா எண் 21234—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஜீவன்தாரா திட்டக் கிணறு வெட்ட இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரத்தை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1-4-1999 முதல் ஜீவன்தாரா கிணறு திட்டம் நிறுத்தப்பட்டு விட்டது. எனவே, அத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்க இயலாது.

[2003 ஜனவரி 29

81—

### புதிய கால்நடை மருத்துவமனைகள்

**வினா எண் 12499—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் நிதியாண்டில் சேலம், தர்மபுரி, நாமக்கல், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் எத்தனை கால்நடை மருத்துவமனைகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டன?

(ஆ) அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் புதிய கால்நடை மருத்துவமனை எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

82—

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 16511—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம், ஒன்றியம், 38 தாண்டவன்குளம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்யப்பட்டு திரும்பப் பெறப்பட்டு விட்டதை மீண்டும் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து தீர்மானங்கள் நிறைவேற்றிப் பெறப்படாத நிலையில் அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.



2003 ஜனவரி 29]

(ஆ) எழாது.

83—

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 16513—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) காரைமேடு கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் 3,776 கால்நடைகள் மட்டுமே உள்ளதாலும், 6 கி.மீ. தூரத்தில் சீர்காழியில் கால்நடை மருத்துவமனை ஒன்றும், 8 கி.மீ. தூரத்தில் செம்மங்குடியில் பார்வை கிளை நிலையம் ஒன்றும் செயல்படுவதால், காரைமேடு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தும் சாத்தியக்கூறு இல்லை.

(ஆ) எழாது.

84—

### மருந்தகங்கள்

**வினா எண் 16837—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் எந்தெந்த இடங்களில் கால்நடை மருந்தகம் புதிதாக வேண்டி விண்ணப்பித்திருந்தார்கள்?

(ஆ) அங்கு மருந்தகங்கள் புதிதாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் கோட்டம், எடப்பாடி தொகுதிக்கு உட்பட்ட மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட இடங்கணாசாலை என்ற கிராமத்தில் புதியதாக கால்நடை மருந்தகம் தொடங்கிட பிரேரணை பெறப்பட்டு அங்கு புதிய கால்நடை மருந்தகம் தொடங்கிட உரிய சாத்தியக்கூறுகள் இல்லை என முடிவெடுக்கப்பட்டது.

**85—**

**கால்நடை வளர்ச்சித் திட்டம்**

**வினா எண் 20260—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரூ.3.36 கோடி செலவில் டானிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம், 336 ஊராட்சி ஒன்றியங்களில் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஆம். நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**86—**

**கடனுதவி**

**வினா எண் 22406—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) எடப்பாடி பகுதியில் கறவை மாடுகள், எருமைகள் வாங்க கடன் உதவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கறவை மாடுகள், எருமைகள் வாங்க கால்நடை பராமரிப்புத் துறை வழியாக கடன் உதவி வழங்கப்படுவதில்லை.

(ஆ) எழாது.

**87—**

**மருத்துவர் நியமனம்**

**வினா எண் 22859—திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, புதுரோட்டின் கால்நடை மருத்துவமனைக்கு மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் ஆளுகைக்குட்பட்ட, எரியோடு கால்நடை கிளை நிலையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் புதுரோடு கிராம பார்வைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. பார்வைக் கிளை நிலையத்திற்கென தனியாக கால்நடை ஆய்வாளர் நியமனம் செய்வது கிடையாது. எனவே, எரியோடு கால்நடை கிளை நிலையத்தின் கால்நடை ஆய்வாளர் நிலை-2 அவர்களே புதுரோடு பார்வைக் கிளை நிலையப் பணிகளைக் கூடுதல் பொறுப்பில் கவனித்து வருகிறார்.

[2003 ஜனவரி 29

**88—**

**இலவச வீட்டுமனைப் பட்டா**

**வினா எண் 13774—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள குப்புசெட்டிப்பட்டி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம் குப்புச்செட்டிப்பட்டி கிராமத்தில் வசிக்கும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் இன மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க அரசிடம் திட்டம் தற்போது இல்லை.

**89—**

**மாணவ, மாணவியர் விடுதி**

**வினா எண் 20394—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலப்பள்ளி மாணவிகள், மாணவர்கள் விடுதிகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றில் விடுதிவாரியாக எத்தனை பேர் தங்கிப் படித்து வருகிறார்கள்?



2003 ஜனவரி 29]

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நல மாணவமாணவியர் விடுதிகள் எண்ணிக்கை 13, மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/மாணவியர் விடுதிகள் எண்ணிக்கை 5.

(ஆ) விடுதி வாரியாக தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர் எண்ணிக்கை பின்வருமாறு:—

| வ.எண் | விடுதியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட மாணவர்/மாணவியர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரசு கல்லூரி மாணவர் விடுதி, நாமக்கல் | 40 |
| 2. | அரசு கல்லூரி மாணவியர் விடுதி, நாமக்கல் | 55 |
| 3. | அரசு பள்ளி மாணவர் விடுதி, செல்லப்பம்பட்டி | 75 |
| 4. | அரசு பள்ளி மாணவர் விடுதி, காளப்பநாய்க்கன்பட்டி | 50 |
| 5. | அரசு பள்ளி மாணவர் விடுதி, மங்களபுரம் | 50 |
| 6. | அரசு பள்ளி மாணவர் விடுதி, விட்டம்பாளையம் | 50 |
| 7. | அரசு பள்ளி மாணவர் விடுதி, எலச்சிபாளையம் | 70 |
| 8. | அரசு பள்ளி மாணவர் விடுதி, இராசிபுரம் (இ) ஆர். புதுப்பாளையம் | 50 |

| | | |
|---|---|---|
| 9. | அரசு பள்ளி மாணவர் விடுதி, அத்தனூர் | 50 |
| 10. | அரசு பள்ளி மாணவர் விடுதி, காரைக்குறிச்சிபுதூர் | 50 |
| 11. | அரசு பள்ளி மாணவர் விடுதி, எருமப்பட்டி | 70 |
| 12. | அரசு பள்ளி மாணவியர் விடுதி, முள்ளுக்குறிச்சி | 50 |
| 13. | அரசு பள்ளி மாணவியர் விடுதி, வையப்பமலை | 50 |
| | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | |
| 14. | அரசு பள்ளி மாணவர் விடுதி, மல்லசமுத்திரம் | 70 |
| 15. | அரசு பள்ளி மாணவர் விடுதி, இராமபுரம் | 40 |
| 16. | அரசு பள்ளி மாணவர் விடுதி, முள்ளுக்குறிச்சி | 50 |
| 17. | அரசு பள்ளி மாணவர் விடுதி, திம்மநாய்க்கன்பட்டி | 50 |
| 18. | அரசு பள்ளி மாணவியர் விடுதி, திருச்செங்கோடு | 60 |
| | மொத்தம் | **970** |

**90—**

### தொழிலாளர்கள் நலச் சட்டம்

**வினா எண் 5622—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) தமிழகத்தில் பணியாற்றும் தோட்டத் தொழிலாளர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) தோட்டத் தொழிலாளர்கள் நலச் சட்டத்தின் கீழ் சலுகைகள் பெறும் தொழிலாளிகள் எத்தனைப் பேர்?

(இ) தோட்டத் தொழிலாளர் நலச் சட்டம் சரிவர அமல்படுத்தாததற்கு அரசு வழக்கு போடப்பட்ட தோட்ட நிர்வாகங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வது. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் மொத்தம் 94,627 தோட்டத் தொழிலாளர்கள் உள்ளனர். இவர்களில் 84,315 பேர் பதிவு செய்யப்பட்ட தோட்ட நிறுவனங்களில் வேலை செய்கின்றனர். 10,312 பேர் பதிவு செய்யப்படாத தோட்ட நிறுவனங்களில் வேலை செய்கின்றனர்.

(ஆ) 84,315 தொழிலாளர்கள் தோட்டத் தொழிலாளர்கள் நலச் சட்டத்தின் கீழ் சலுகைகள் பெறுகின்றனர்.

(இ) தோட்டத் தொழிலாளர்கள் நலச் சட்டம், சரிவர அமல்படுத்தாததற்கு ஜனவரி 2002 முதல் ஆகஸ்ட் 2002 வரை வழக்கு நடவடிக்கை தொடரப்பட்ட தோட்ட நிர்வாகங்களின் எண்ணிக்கை 217.

**91—**

### வேலைவாய்ப்பு

**வினா எண் 23213—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர், எண்ணூர், ராயபுரம் பகுதியில் வாழும் அனைத்து மீனவர்களும் தொழில்ரீதியாக மிகவும் வறுமையில் வாடுவதால், வட சென்னையில் அமையப் பெற்றுள்ள துறைமுகம், அனல்மின் நிலையம் இவற்றின் வாயிலாக பாதித்துள்ள இவர்களுக்கு 50% வேலைவாய்ப்பு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விரைவான நடவடிக்கை எப்போது எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. திருவொற்றியூர், எண்ணூர், ராயபுரம் பகுதியில் வாழும் மீனவர்கள், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருப்பின், பதிவு மூப்பு, வயது, இட ஒதுக்கீடு, கல்வித் தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் வேலையளிப்போரால் கோரப்படும் பணிக் காலியிடங்களுக்கு இவர்களின் பெயர்கள் பரிந்துரை செய்யப்படும்.

92—

### வேலைவாய்ப்பு அலுவலகம்

**வினா எண் 24008—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், கிளை அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) புதிய பதவிகளை உருவாக்குவதன்மீது விதிக்கப்பட்டுள்ள அரசின் தடை இன்னும் அமலிலிருப்பதாலும், வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், கிளை அலுவலகம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் தற்போது இல்லை.



(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

93—

### வசூல்

**வினா எண் 24441—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயத் தொழிலாளர்கள் வாரியத்திற்கு கூட்டுறவு மற்றும் தனியார் மூலம் குவின்டாலுக்கு 1 ரூபாய் வசூல் செய்வது போல முறைசாரா தொழிலாளர் நல வாரியத்திற்கு சிமெண்ட், கம்பி, இரும்புத் தகடு, பெயின்ட் போன்ற உற்பத்தியாளர்களிடமிருந்து வாரியத்திற்கு தொகை வசூல் செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அத்தகைய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

94—

### கட்டடம்

**வினா எண் 16318-அ—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதி, ஏ. வெளாம்பட்டி அக்ரஹாரத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

[2003 ஜனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், ஏ. வெளாம்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 2,100 சதுர அடி காலிமனை சொந்தமாக உள்ளது. மேற்படி இடத்தில் சொந்தமாகக் கட்டடம் கட்ட சங்கத்தில் போதுமான நிதி ஆதாரம் இல்லை.

**95—**

**தானியங்கி பால் விற்பனை நிலையம்**

**வினா எண் 19195—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரில் தானியங்கி பால் விற்பனை நிலையம் அமைத்திட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு விடை எழவில்லை.

**96—**

**பால் கொள்முதல்**

**வினா எண் 21642—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஜனவரி 29]

*(அ) சேலம் ஆவின் நிறுவனம் எத்தனை பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நாள் ஒன்றுக்கு எவ்வளவு லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது?*

*(ஆ) எத்தனை விற்பனை மையங்களின் மூலம் பால் விற்பனை செய்யப்படுகிறது?*

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் 932 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 3.05 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து வருகிறது.

(ஆ) 415 விற்பனை மையங்கள் மூலம் பால் விற்பனை செய்யப்படுகிறது.

**97—**

**பால் விற்பனை**

**வினா எண் 21644—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோவையில் உள்ள ஆவின் நிறுவனம் மூலம் விற்பனை செய்துவரும் புதிய ரக பால் (6% வெண்ணெய் சத்து 9% இதர சத்து) சேலத்திற்கும் விற்பனை கொண்டு வரும் திட்டம், அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2003 ஜனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) கோவையிலுள்ள ஆவின் நிறுவனம் விற்பனை செய்துவரும் 6% வெண்ணெய் சத்து 9% இதர சத்தும் கொண்ட புதிய பாலை (Full Cream Milk) லிட்டர் ஒன்றுக்கு ரூ.16 வீதம் விற்பனை செய்வது போன்ற திட்டம் ஏதும், சேலம் ஒன்றியத்தில் தற்போது இல்லை. எனினும், சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஆய்வு செய்து, அதனடிப்படையில் 6% வெண்ணெய் சத்தும் 9% இதர சத்தும் உள்ள 'ஆவின் கோல்டு' என்ற பால் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் லிட்டர் ரூ.15.50 வீதம் தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

2) 6% வெண்ணெய் சத்தும் 9% இதர சத்தும் கொண்ட கொழுப்பு சத்து நிறைந்த பால் கோயம்புத்தூர் மாவட்ட ஒன்றியத்தைத் தவிர சென்னை மாநகரத்தில் மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு விடை எழவில்லை.

**98—**

## ஆபாச சுவரொட்டிகளைத் தடுத்தல்

**வினா எண் 5303—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் ஆபாச சுவரொட்டிகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2003 ஜனவரி 29]

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு முழுவதும் ஆபாச சுவரொட்டிகள் ஒட்டப்படுவதைத் தடுக்க, அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

(ஆ) தமிழ்நாட்டில் ஆபாச சுவரொட்டிகள் மற்றும் விளம்பரப் பலகைகள் அமைப்பதைத் தடுக்க காவல் துறை இந்திய தண்டனைச் சட்டம், நகர் காவல் சட்டம், தமிழ்நாடு பொது இடங்களின் சீரினைச் சிதைத்தல் சட்டம், பெண்களை இழிவாகக் காட்டுவதற்கான தடைச் சட்டம் ஆகியவற்றின்கீழ் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆபாச சுவரொட்டிகள் ஒட்டப்படுவதைத் தடுக்கும்வகையில் காவல் துறையால் சிறப்புப் படைகள் அமைக்கப்பட்டு, குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. இதன் தொடர்பாகக் காவல் துறைத் தலைமை இயக்குநர், அனைத்து மாவட்ட கண்காணிப்பாளர்களுக்கும் அறிவுரை வழங்கியுள்ளார். சுவரொட்டிகள், விளம்பரப் பலகைகள் மற்றும் சுவர் விளம்பரங்களில் ஆபாசத்தைத் தடுக்க சம்பந்தப்பட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் ஒத்துழைப்பையும் காவல் துறை பெற்று வருகின்றது. இதுகுறித்து அந்தந்த மாவட்டங்களில் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

**99—**

## கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 12247—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் அதிக லாபத்தில் இயங்கும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் எது?

[2003 ஜனவரி 29

(ஆ) அதை மேம்படுத்த உதவி செய்யும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள கே.கே.23 கிழக்கு வனவாசி பருத்தி மற்றும் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அதிக இலாபத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) கே.கே. 23 கிழக்கு வனவாசி பருத்தி மற்றும் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தை மேம்படுத்த மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியால் செயல்படுத்தப்படும் அனைத்து நலத் திட்டங்களும், சங்க உறுப்பினர்களுக்குப் பயனளிக்கும்வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**100—**

**மீன் பண்ணை தொடங்க கடன்**

**வினா எண் 16884—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001-ம் ஆண்டில் சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் மீன் பண்ணை தொடங்க கடன் வேண்டி விண்ணப்பித்தவர்கள் எத்தனைப் பேர்?

(ஆ) இவர்களில் எத்தனைப் பேருக்குக் கடன் வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் மீன் பண்ணை தொடங்க கடன் வேண்டி விண்ணப்பங்கள் ஒன்றும் பெறப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



2003 ஜனவரி 29]

***பட்டியல் 2**

**1—**

**தங்கும் விடுதிகள்**

**வினா எண் 6582—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நெடுஞ்சாலையோரங்களில் தங்கும் விடுதிகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் நெடுஞ்சாலையோரங்களில் தங்கும் விடுதிகள் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**2—**

**கைதிகள் விவரம்**

**வினா எண் 23903—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் காவல் துறை துணை கண்காணிப்பாளர் சரகத்திற்கு உட்பட்ட காவல் நிலையங்களில் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள், சென்ற 2001 ஆம் ஆண்டு எவ்வளவு பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் காவல் துறை துணை கண்காணிப்பாளர் சரகத்திற்கு உட்பட்ட காவல் நிலையங்களில் சென்ற

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

2001 ஆம் ஆண்டில் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் எவரும் இல்லை.

3—

## தொடக்கப் பள்ளி

**வினா எண் 13312—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சி, ஆயாமரத்துப்பட்டி கிராமத்தில் தொடக்கப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், நடப்பாண்டில் தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2002-2003 ஆண்டில் அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தின்கீழ் 304 புதிய ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. அதில் பெண்ணாகரம் ஒன்றியம், ஆயாமரத்துப்பட்டி கிராமத்துப் பள்ளியும் ஒன்றாகும்.

4—

## தொடக்கப் பள்ளிகள் தொடங்குதல்

**வினா எண் 13294—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், சொரங்கப்பன் புதூர், ஓமல்நத்தம், காமராஜ் நகர் ஆகிய கிராமங்களில் நடப்பாண்டில் தொடக்கப் பள்ளிகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2002-2003 ஆம் ஆண்டில் அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தின்கீழ் 304 தொடக்கப் பள்ளிகள் தொடங்க ஆணை



வழங்கப்பட்டது. அதில் தருமபுரி வட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், சொரங்கப்பன் புதூர் கிராம பள்ளியும் ஒன்றாகும். ஓமல்நத்தம் மற்றும் காமராஜ் நகர் ஆகிய கிராமங்களில் புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்குவதற்கான கருத்துருக்கள் பெறப்படவில்லை. அக்கருத்துருக்கள் பெறப்பட்டதும் தேவை மற்றும் தகுதியின் அடிப்படையில் அரசு தக்க ஆணை வெளியிடும்.

5—

## ஆசிரியர் நியமித்தல்

**வினா எண் 16329—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, குருவிகுளம் ஒன்றியம், பிள்ளையார்நத்தம் அரசு உயர்நிலைப் பள்ளியில் கணக்கு பாட ஆசிரியர் மற்றும் காலியிடப் பணிகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிள்ளையார்நத்தம் அரசு உயர்நிலைப் பள்ளியில் பள்ளி உதவி ஆசிரியர் பணியிடங்கள் எதுவும் தற்போது காலியில்லை.

6—

## உயர்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா எண் 16499—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியிலுள்ள திருநகர் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியிலுள்ள திருநகர் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தக் கோரும் கருத்துரு 2002-2003ஆம் கல்வியாண்டில் பெறப்படவில்லை.

7—

### நடுநிலைப்பள்ளியாக உயர்த்துதல்

**வினா எண் 19064—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் ஒன்றியம் பாரதப் பள்ளியில் இயங்கிவரும் அரசு தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் கல்வி என்ற மைய மற்றும் மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டத்தின்கீழ் 2002-2003-ம் கல்வியாண்டில் கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் ஒன்றியம் பாரதப் பள்ளியில் இயங்கிவரும் அரசு தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

8—

### தேரைப் பழுது நீக்குதல்

**வினா எண் 20587—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ஆத்தாளூர் அருள்மிகு ஸ்ரீவீரமாகாளியம்மன் ஆலய தேரைப் பழுது நீக்கி தேர் ஓடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ஆத்தாளூர் அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயிலைச் சுற்றி அமைந்துள்ள களத்தூர், தென்னங்குடி, முடப்புளிக்காடு மற்றும் கழனிவாசல் ஆகிய 4 கிராமங்களைச் சேர்ந்த நபர்களையே இத்திருக்கோயிலுக்குப் பரம்பரை அறங்காவலர்களாக நியமனம் செய்ய வேண்டும் என நிர்வாகத் திட்டம் ஒன்று ஏற்படுத்தக் கேட்டு, சட்டப் பிரிவு 64(1)-ன்கீழ் வழக்கு ஒன்று சம்பந்தப்பட்ட கிராம முக்கியஸ்தர்களால் இணை ஆணையர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அவ்வழக்கு ஓ.ஏ. 22/95-ன்படி விசாரணையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கு முடியும் வரையில் திருக்கோயிலில் திருவிழா மற்றும் தேரோட்டம் நடத்தக்கூடாது என மேற்குறிப்பிட்ட கிராம மக்கள் ஆட்சேபணை எழுப்பி அதன் காரணமாக 1991-ம் ஆண்டு முதல் திருவிழா மற்றும் தேரோட்டம் எதுவும் நடைபெறாமல் உள்ளது. இந்த வழக்கினை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பழுதாகியுள்ள தேரினை விரைவில் பழுதுபார்த்து தேரோட்டம் நடத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) இந்த வழக்கு முடிவடைந்த பின்னரே தேரோட்டம் நடத்த இயலும்.

9—

### குடியிருப்பு பழுதுபார்த்தல்

**வினா எண் 15915—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் மேல்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தமான காலனி குடியிருப்பு 5 வீடுகள் கவனிப்பாரின்றி இருப்பதை உபயோகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதியில் மேல்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தமான காலனி குடியிருப்பு கட்டடங்களின் பழுதுகளை நீக்கவும், சுற்றுச் சுவர் கட்டவும், பொதுப் பணித் துறை உதவி செயற் பொறியாளரிடமிருந்து மதிப்பீடு பெற்று அனுப்பும்படி கோயம்புத்தூர் துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கிய பிறகு கட்டடப் பழுதுகள் சரிசெய்யப்படும்.

**10—**

**சுற்றுச் சுவர்**

**வினா எண் 18074—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி அரசு மருத்துவமனையைச் சுற்றி ஆக்கிரமிப்பு உள்ளதால் சுற்றுச் சுவர் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

செல்லம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றி ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை. மேலும் செல்லம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தற்போது சுற்றுச் சுவர் கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**11—**

**அறுவை சிகிச்சை கட்டணம்**

**வினா எண் 19997—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்தில் அரசு மருத்துவமனையில் உள்ள புதிய அறுவை சிகிச்சை பிரிவில் கட்டணம் செலுத்தாமல் நோயாளிக்கு அறுவை சிகிச்சை செய்ய அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

பொதுவாகவே அரசு மருத்துவமனையில் மாதம் ரூ.1000/-க்கு குறைவாக வருமானம் உள்ள நோயாளிகளுக்கு அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்காக எந்த அறுவை சிகிச்சையானாலும் மைனர் (Minor), மேஜர் (Major) மற்றும் சிறப்பு (Special) எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை மாதம் ரூ. 1000/-க்கு மேல் வருமானம் உள்ள நோயாளிகளிடமிருந்து அவர்களின் வருமான விகிதத்திற்கேற்ப அரசு நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டண விதிகளின்படி வகுப்புவாரியாக பிரிவு செய்து (A Class, B Class & C Class) அதற்கேற்ப அறுவை சிகிச்சைக்காக கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

**12—**

**நரம்பு அறுவை சிகிச்சை**

**வினா எண் 19999—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்தில் உள்ள அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 2001-2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முடிய எத்தனை நோயாளிகளுக்கு நரம்பு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 2001-2002 ஆம் ஆண்டில் 59 நோயாளிகளுக்கு நரம்பு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

**13—**

**மன நோயாளிக்குச் சிகிச்சை**

**வினா எண் 20021—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 29

2001-ஆம் ஆண்டில் சென்னை மனநோய் மருத்துவமனையில் எவ்வளவு மன நோயாளிக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சென்னை அரசு மனநலக் காப்பகத்தில் 2001 ஆம் ஆண்டில் 1,09,967 நபர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். இதில் 1,668 நபர்கள் உள்நோயாளிகளாகவும் 1,08,299 நபர்கள் வெளிநோயாளிகளாகவும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

**14—**

**நிதியுதவி**

**வினா எண் 20057—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எந்தெந்த மாவட்டங்களில் இந்திய அரசின் நிதி உதவியுடன் மன நலத் திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருச்சி, இராமநாதபுரம் மற்றும் மதுரை ஆகிய மூன்று மாவட்டங்களில் இந்திய அரசின் நிதி உதவியுடன் மன நலத் திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

**15—**

**ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம்**

**வினா எண் 23445—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், விக்கிரமங்கலம் பஞ்சாயத்து, நரியம்பட்டியில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால் அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?



2003 ஜனவரி 29]

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

நரியம்பட்டி துணை சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட 16 சென்ட் நிலம் சர்வே எண் 344/1-ல் கிராம நத்தம் நிலம் ஒதுக்கீடு செய்து தர செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத் தலைவர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார். நிலம் ஒதுக்கீடு பெற்று முன் நுழைவு கிடைத்தவுடன், கட்டடம் கட்ட நபார்டு நிதி உதவி கோரப்பட்டு, கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**16—**

**செவிலியர்கள் தங்குமிடம்**

**வினா எண் 24018—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள கிராம துணை சுகாதார நிலையங்களில் செவிலியர்கள் தங்கிப் பணியாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் சுகாதாரப் பகுதி மாவட்டத்தில் உள்ள துணை சுகாதார நிலையங்களில் பணிபுரியும் கிராம சுகாதார செவிலியர்கள் அனைவரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட அரசுக் குடியிருப்புகளிலும் அல்லது குடியிருப்பு இல்லாத துணை சுகாதார நிலையங்களில் தலைமையிடங்களில் தங்கிப் பணிபுரியவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**17—**

**அவசர ஊர்தி**

**வினா எண் 24513—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி பேர் பெரியான்குப்பம் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசர ஊர்தி அளித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டத்தின்கீழ் இயங்கிவரும் பேர் பெரியான்குப்பத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாகும். கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வாகன வசதிகள் வழங்கும் திட்டம் தற்பொழுது இல்லாததால், பேர் பெரியான்குப்பம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசர ஊர்தி வழங்கும் கருத்துரு தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

**18—**

### குடிதண்ணீர் வசதி

**வினா எண் 22176—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, கள்ளப்பட்டி அரசு கள்ளர் பள்ளியில் குடிதண்ணீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, கள்ளப்பட்டி அரசு கள்ளர் பள்ளியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

**19—**

### இசைக் கருவிகள்

**வினா எண் 26591—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) நாவிதர்களுக்கு இசைக் கருவிகள் இலவசமாக வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வரும் நிதியாண்டில் எவ்வளவு பேருக்கு இசைக் கருவிகள் வழங்கப்படும் என அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாவிதர்களுக்கு இசைக் கருவிகளை இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

**20—**

### விட்டுமனைப் பட்டா

**வினா எண் 17021—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, எடக்குடி வடபாதி ஊராட்சியிலுள்ள கீழவெளியில் சுமார் 14 வீடுகள் பட்டா கொடுக்கப்படாமல் உள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அறநிலையத் துறை உதவியுடன் தருமபுரம் ஆதினத்தில் இடத்தை வாங்கி இலவச வீட்டுமனைப் பட்டா கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) சீர்காழி வட்டம் 65/1 எடக்குடி வடபாதி கிராமம் கீழவெளி பகுதியில் புல எண் 252/5-ல் உள்ள புன்செய் நிலத்தில் 15 நபர்கள் ஆக்கிரமித்து வீடுகட்டி வசித்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் மிகவும் பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்கள்.

இவர்கள் ஆக்கிரமிப்பில் உள்ள நிலம் வேளூர் தேவஸ்தானம் அருள்மிகு வைத்தீஸ்வரன் கோவிலுக்குச் சொந்தமானதாகும். இந்தப் புலத்தில் குடியிருப்போர் அனைவரும் அருள்மிகு வைத்தியநாத சுவாமி கோவில் நிலங்களில் குத்தகை சாகுபடிதாரர்களாக உள்ளனர். இவர்கள் மயிலாடுதுறையில் உள்ள தனித் துணை ஆட்சியர் வருவாய் நீதிமன்றத்தின் மூலம் குடியிருப்புச் சட்டத்தின்கீழ் தகுதியின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா பெற இயலும்.

**21—**

**வழிகாட்டிப் பதிவேடு**

**வினா எண் 25091—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சார்பதிவாளர் அலுவலகங்களில் வழிகாட்டிப் பதிவேடு, பொதுமக்கள் பார்வைக்கு வெளிப்படையாக வைப்பது இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விதிப்படி வழிகாட்டிப் பதிவேட்டை வெளிப்படையாக வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை, வழிகாட்டிப் பதிவேடுகள் சம்பந்தப்பட்ட சார்பதிவாளர்களின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் சார்பதிவாளரை அணுகி, தேவைப்படும் மதிப்பு விவரத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். பொதுமக்கள் கோரும் விவரங்களைத் தெரிவித்திடுமாறு சார்பதிவாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(ஆ) வழிகாட்டி மதிப்புகளை வெளிப்படையாக்கும் நோக்கில் அவற்றின் பிரதிகளை வணிக சங்கங்களிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும், கிராமப் பஞ்சாயத்து அலுவலகங்களிலும் வைக்குமாறு ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களுக்கான வழிகாட்டி மதிப்புகளும், பதிவுத் துறையின் கணினி இணையதளம் மூலம் தெரிந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.





**22—**

**நீர்வடிப்பகுதி திட்டங்கள்**

**வினா எண் 21220—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 2001-2002ஆம் ஆண்டில் எத்தனை நீர்வடிப்பகுதி (வாட்டர்ஷெட்) திட்டங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டன?

(ஆ) எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்களில் நீர்வடிப்பகுதி திட்டங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில், 2001-2002-ம் ஆண்டில், நீர்வடிப்பகுதி திட்டங்கள் ஏதும் ஒப்பளிப்பு செய்யப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**23—**

**பால்வாடி அமைத்தல்**

**வினா எண் 2754—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியிலுள்ள பெத்தன்னங்குப்பம் வடக்கு காலனி மற்றும் சிவனந்திபுரம் ஆகிய இடங்களில் பால்வாடி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியிலுள்ள பெத்தன்னங்குப்பம் வடக்கு காலனி மற்றும் சிவனந்திபுரம் ஆகிய கிராமங்கள் துணை கிராமங்களாக உள்ளதால் அக்கிராமங்களில்

இத்திட்டத்தின்கீழ் சமுதாய ஊட்டச் சத்துணவு மையங்கள் (பால்வாடி) செயல்படவில்லை. இக்கிராமங்களின் பயனாளிகள் அருகிலுள்ள பிரதான கிராமத்தில் செயல்பட்டுவரும் சமுதாய ஊட்டச்சத்து மையங்கள் மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

**24—**

**பால்வாடி பள்ளி**

**வினா எண் 3209—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பால்வாடி பள்ளி, பஞ்சாயத்து அலுவலகத்திலிருந்து புதிய இடத்தில் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதியிலுள்ள இரண்டு சமுதாய ஊட்டச்சத்து மையங்கள் (பால்வாடி) பஞ்சாயத்து அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கட்டடங்களில் இயங்கி வருவதால், இம்மையங்களுக்கு அரசு நிதி பெற்று கட்டடம் கட்டுவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் மேற்குறிப்பிட்ட மையங்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

**25—**

**கலப்புத் திருமணம்**

**வினா எண் 3437—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் எத்தனை பேர் கலப்புத் திருமணம் செய்து கொண்டனர்?



(ஆ) கலப்புத் திருமணத் தம்பதியினர் எத்தனை பேருக்கு அரசு உதவித்தொகை வழங்கியுள்ளது?

(இ) எடப்பாடி தொகுதியில் இத்திட்டத்தின் மூலம் எத்தனை பேர் பயன் பெற்றனர்?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் எத்தனை பேர் கலப்புத் திருமணம் செய்து கொண்டனர் என்ற விவரம் அரசிடம் இல்லை. எனினும் அந்நிதியாண்டில் கலப்புத் திருமண நிதியுதவி திட்டத்தின்கீழ் 2,361 தம்பதிகளுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

(இ) 2000-2001ஆம் நிதியாண்டில் எடப்பாடி தொகுதியில் கலப்புத் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் 3 தம்பதியர் பயன் அடைந்துள்ளனர்.

**26—**

**குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள்**

**வினா எண் 4663—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஆதரவற்ற, கைவிடப்பட்ட குழந்தைகள் நலத்திற்காக அரசு எத்தனை பராமரிப்பு இல்லங்கள் நடத்துகிறது?

(ஆ) அந்தப் பராமரிப்பு இல்லங்களில் எவ்வளவு குழந்தைகள் உள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளின் நலத்திற்காக சேலம் மற்றும் ஆத்தூர்

[2003 ஜனவரி 29

ஆகிய இரு இடங்களில் குழந்தைகள் காப்பகங்களை அரசு நடத்தி வருகிறது. இவ்விரு காப்பகங்களில் தற்போது முறையே 250 மற்றும் 100 குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

27—

### சத்துணவு மையக் கட்டடம்

**வினா எண் 5572—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொள்ளக்காடு ஊராட்சியில் புதிய சத்துணவு மையக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், கொள்ளக்காடு ஊராட்சியில் புதிய சத்துணவு மையம் கட்ட தற்போது செயற்குறிப்பு இல்லை. புதிய சத்துணவுக் கட்டடம் கட்ட ரூ. 195 இலட்சம் செலவாகும். தற்போதுள்ள நிதி நெருக்கடி காரணமாக தற்போது புதிய கட்டடம் கட்டும் கோரிக்கையினை பரிசீலிக்க இயலவில்லை.

28—

### சத்துணவுக் கூடம் பழுதுபார்த்தல்

**வினா எண் 10105—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996 முதல் 2000 ஆம் ஆண்டு வரை எத்தனை சத்துணவுக் கூடங்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளன?

(ஆ) அதற்கான செலவு எவ்வளவு?



2003 ஜனவரி 29]

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1996 முதல் 2000-ம் ஆண்டு வரை பழுதுபார்க்கப்பட்ட சத்துணவுக் கூடங்கள் மற்றும் செலவினங்கள் கீழ்க்கண்டவாறு—

| வ. எண் | துறையின் பெயர் | வருடம் | பழுதுபார்க்கப்பட்ட மையங்கள் | செலவுத் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1 | ஊரக வளர்ச்சி இயக்குநர் | 1999-2000 | 2842 | 2.00 கோடி |
| | | 2000-2001 | 1697 (ஊரக பள்ளி சத்துணவு மையங்கள்) | 151.67 இலட்சங்கள் |
| | | | 1154 (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்) | 164.33 இலட்சங்கள் |
| 2 | சமூக நல ஆணையர் | 1996-1999 | 100 அங்கன்வாடி மையங்கள் (மத்திய அரசு உதவியுடன் மற்றும் சிடா திட்டத்திலும் சேர்ந்தது) | 70.00 இலட்சங்கள் |
| | | 2000-2001 | 209 புதிய அங்கன்வாடி மையங்கள் (ஊரக வளர்ச்சித் துறையின் மூலம்) | 313.50 இலட்சங்கள் |
| 3 | நகராட்சி நிர்வாக ஆணையர் | 1996-2000 | 1151 சத்துணவு மையங்கள் (புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்/ஒ.கு.வ.தி.) | 4.32 கோடி |

**29—**

### சொந்தக் கட்டடம்

**வினா எண் 10106—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996 முதல் 2000 ஆம் ஆண்டு வரை எத்தனை சத்துணவுக் கூடங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டன?

(ஆ) அதற்கான செலவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1996 முதல் 2000 ஆம் ஆண்டு வரை சத்துணவுக் கூடங்களுக்கு கட்டப்பட்ட சொந்தக் கட்டடங்கள் மற்றும் அதற்கான செலவின விவரங்கள் கீழ்க்கண்டவாறு—

| வ. எண் | துறையின் பெயர் | வருடம் | சத்துணவுக் கூடங்களுக்கு கட்டப்பட்ட சொந்தக் கட்டிடம் | செலவுத் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1 | ஊரக வளர்ச்சி இயக்குநர் | 1996--2001 | 1691 | 2170.80 இலட்சங்கள் |
| 2 | சமூக நல ஆணையர் | 1996-1999 | 100 - அங்கன்வாடி மையங்கள் -(மத்திய அரசு உதவியுடன் மற்றும் சிடா திட்டத்திலும் சேர்ந்தது) | 70.00 இலட்சங்கள் |
| | | 2000-2001 | 209 புதிய அங்கன்வாடி மையங்கள் (ஊரக வளர்ச்சித் துறையின் மூலம்) | 313.50 இலட்சங்கள் |
| 3 | நகராட்சி நிர்வாக ஆணையர் | 1996-2000 | 166 - சத்துணவு மையங்கள் (புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்/ ஒகுவதி) | 1.88 கோடி (நகராட்சி/ மாநகராட்சியின் நிதியிலிருந்து செலவிடப் பட்டது) |



**30—**

### விசேஷ சலுகை

**வினா எண் 10182—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து முஸ்லீம் மதத்தைச் சார்ந்த கலப்புத் திருமணம் புரிந்த தம்பதியினருக்கு அரசின் நலத் திட்டம் மற்றும் விசேஷமான சலுகை அளிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) முஸ்லீம் மதத்தினைச் சார்ந்தவர்கள் பிற்பட்டோர் பிரிவுகளின்கீழ் வருவதால், இவர்கள் இந்த மதத்தைச் சார்ந்த முற்பட்டோர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைத் திருமணம் புரிந்து கொண்டால் அத்திருமணம், கலப்புத் திருமணமாகக் கருதப்படுகிறது. கலப்புத் திருமணத்திற்கான அரசின் நிதியுதவி பெற அவர்கள் தகுதியுள்ளவர்கள் ஆவார்கள்.

**31—**

### சத்துணவு மையக் கூடம் அமைத்தல்

**வினா எண் 10796—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நெருப்பூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் சத்துணவு சமையல் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 ஜனவரி 29

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், நெருப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சத்துணவு சமையல் கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

**32—**

**திருமண நிதியுதவி**

**வினா எண் 12338—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு ஜுலை மாதம் வரை சேலம் மாவட்டத்தில் தமிழக அரசு வழங்கும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) இதில் எடப்பாடி தொகுதியில் இத்திட்டத்தின் மூலம் எவ்வளவு பேர் பயன் பெற்றனர்?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டு ஜுலை மாதம் வரை சேலம் மாவட்டத்தில் தமிழக அரசு வழங்கும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவி பெற்றவர்கள் 697 பேர்.

(ஆ) எடப்பாடி தொகுதியில் பயனடைந்தவர்கள் 24 பேர்.

**33—**

**உதவித் தொகை**

**வினா எண் 12370—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஜனவரி 29]

(அ) சேலம் மாவட்டத்தில் 2000 ஆம் ஆண்டு கலப்புத் திருமணம் செய்து கொண்டதால் எத்தனை பேருக்கு அரசு உதவித்தொகை வழங்கியுள்ளது?

(ஆ) கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகை எவ்வளவு?

(இ) இதை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 2000 ஆம் ஆண்டு கலப்புத் திருமணம் செய்து கொண்ட தகுதியுள்ள 92 நபர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 20,000/- வீதம் 89 நபர்களும் ரூ. 10,000/- வீதம் 3 நபர்களும் பயன்பெற்றுள்ளனர்.

(ஆ) (1) கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியரில் ஒருவர் முற்பட்ட வகுப்பினராகவும் மற்றவர் பிற்பட்ட (அல்லது) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் இருந்தால் ரூ. 10,000/- உதவித்தொகை அளிக்கப்படுகிறது. இதில் ரூ. 3,000/- காசோலை/ வரைவோலையாகவும் ரூ. 7,000/-க்கு தேசிய சேமிப்பு பத்திரமாகவும் வழங்கப்படுகிறது.

(2) தம்பதியர்களில் ஒருவர் தாழ்த்தப்பட்டவர்/மலை சாதியினராகவும் மற்றொருவர் முற்பட்ட/பிற்பட்ட/மிகவும் பிற்பட்ட வகுப்பினராகவும் இருந்தால் ரூ. 20,000/- இதில் ரூ. 10,000/- காசோலை/ வரைவோலையாகவும் ரூ. 10,000/-க்கு தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படுகிறது.

(இ) அனைத்து திருமண நிதியுதவி திட்டங்களும் அரசு ஆணை (நிலை) எண் 124, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் 10-10-2001 முதல். வயது மற்றும் நிதியுதவித் தொகைகளும் ஒரே சீராக மாற்றியமைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. உதவித்தொகையை அதிகரிக்கும் கருத்து[illegible] அரசின் பரிசீலனையில் இல்லை.

184534. சென்னை-600 009

34—

## பாலர் பள்ளி

**வினா எண் 12697—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வெளிமடம் கிராமத்தில் ஏழைக் குழந்தைகளுக்கு பாலர் பள்ளி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வெளிமடம் கிராமத்தில் மக்கள் தொகை குறைவாகவே (275) உள்ளது. இக்கிராமத்துப் பயனாளிகள் அருகிலுள்ள நாடியம் குழந்தைகள் நல மையத்தில் பயன்பெற்று வருகின்றனர். எனவே, மக்கள்தொகை, பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் இடைப்பட்ட தூரம் இவைகளைக் கருத்தில் கொண்டால், அரசு விதிகளின்படி புதிய பாலர் பள்ளி ஏற்படுத்த வாய்ப்பில்லை.

35—

## புதிய சத்துணவு மையம்

**வினா எண் 12743—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கஞ்சங்காடு கிராமத்தில் புதிய சத்துணவு மையம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், கஞ்சங்காடு கிராமத்தில் புதிய சத்துணவு மையக்



கட்டடம் கட்ட தற்போது செயற்குறிப்பில்லை. புதிய சத்துணவு மையக் கட்டடம் கட்ட ரூ. 60,000/- ஆகும். தற்போது சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லாததால் புதிய சத்துணவு மையம் கட்ட தற்போது உத்தேசம் இல்லை.

36—

## ஊட்டச்சத்து மையம்

**வினா எண் 12749—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மேற்குடிகாடு கிராமத்தில் ஊட்டச்சத்து மையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மேற்குடிகாடு கிராமத்திற்கு அருகில் 2 கி.மீ. தூரத்தில் உள்ள கள்ளம்பட்டி குழந்தைகள் நல மையத்தில், தற்போது மேற்குடிகாடு கிராமத்தில் உள்ள பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர். மேலும், மேற்குடிகாடு கிராமத்தில் மக்கள் தொகை குறைவாக உள்ளது. (465 பேர்கள் மட்டுமே) மேற்குடிகாடு கிராமத்திற்கும், அருகிலுள்ள கள்ளம்பட்டி குழந்தைகள் நல மையத்திற்கும் உள்ள இடைப்பட்ட தூரம் 2 கி.மீ. எனவே, மக்கள் தொகை பயனாளிகள் மற்றும் இடைப்பட்ட தூரம் இவைகளை கருத்தில் கொண்டு அரசு விதிகளின்படி புதிய ஊட்டச்சத்து மையம் தொடங்க சாத்தியம் இல்லை.

37—

## சத்துணவுக் கூடம் சரிசெய்தல்

**வினா எண் 16417—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 29

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, பத்தியநாதபுரம் கிராமத்தில் பழுதடைந்த நிலையில் உள்ள சத்துணவுக் கூடத்தை சரிசெய்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, பத்தியநாதபுரம் கிராமத்தில், பெனடிக்ட் நடுநிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இது தனியாருக்குச் சொந்தமாக இருக்கிறது. எனவே, இதிலுள்ள சத்துணவு மையத்தினைப் பழுதுநீக்கம் செய்ய அரசு விதிகளில் இடமில்லை என்றாலும், மேற்காணும் பள்ளி சத்துணவு மையத்தினைப் பழுதுநீக்கம் செய்ய சம்பந்தப்பட்ட பள்ளி நிர்வாகத்தினைத் தொடர்பு கொண்டு, தக்க நடவடிக்கை எடுக்குமாறு வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அறிவுரையும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட்டுள்ளது.

38—

### பாலர் பள்ளி அமைத்தல்

**வினா எண் 16466—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சி, பனவிளை கிராமத்தில் பாலர் பள்ளி அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சி, பனவிளை கிராமத்தில் மக்கள்தொகை குறைவாக இருக்கிறது. இங்கு 13 பயனாளிகள் மட்டுமே இருக்கிறார்கள். இவர்கள் 3/4 கி.மீ. தூரத்தில் உள்ள சங்கநேரி கிராமத்தில் உள்ள குழந்தைகள் நல மையத்தில் பயனடைந்து வருகிறார்கள். மேலும், இக்கிராமத்தில் மக்கள் தொகை குறைவாகவே இருக்கிறது. எனவே, மேற்படி பனவிளை கிராமத்தில் பாலர் பள்ளி அமைக்க தேவையில்லை.



2003 ஜனவரி 29]

39—

### சத்துணவு மையத்தில் வசதிகள்

**வினா எண் 19946—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி சோழப்பட்டு கிராமத்தில் இருக்கும் சத்துணவு மையத்தில் மின்சார வசதி, கழிப்பிட வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சங்கராபுரம் தொகுதி சோழப்பட்டு கிராமத்தில் இருக்கும் சத்துணவு மையத்தில் மின்சார வசதி, கழிப்பிட வசதி, கட்டட வசதி செய்துதர தற்போது எந்தவித நடவடிக்கையும் இல்லை. இதற்கு ரூ. 1,00,000/- தேவைப்படும். தற்போதுள்ள நிதி நெருக்கடியில் மேற்படி வசதிகளைச் செய்ய வகையில்லை.

(ஆ) வினா எழவில்லை.

40—

### நிதி ஒதுக்கீடு

**வினா எண் 19203—திருமதி கு. கலாவதி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 5 ஆண்டு காலத்தில் பழங்குடியினருக்காக மத்திய அரசு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்து இருந்தது?

(ஆ) ஒவ்வொரு வருடமும் பழங்குடியினருக்காக எவ்வளவு தொகை எந்தெந்த திட்டங்களுக்காக செலவு செய்தது?

[2003 ஜனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடந்த 5 ஆண்டு காலத்தில் பழங்குடியினருக்காக மத்திய அரசு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது:—

திட்டங்கள் (100%) மானியம்

| வ.எண். | ஆண்டு | பழங்குடியினர் துணைத் திட்ட சிறப்பு மைய நிதி | இந்திய அரசியலமைப்பு சட்ட விதி 275(1)ன் கீழ் விடுவிக்கப்படும் நிதி (தொகை ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1997-98 | 263.31 | 121.00 |
| 2 | 1998-99 | 295.91 | 42.00 |
| 3 | 1999-2000 | 258.27 | 83.93 |
| 4 | 2000-2001 | 258.27 | 63.00 |
| 5 | 2001-2002 | 323.32 | 210.00 |

திட்டங்கள் (50:50 மானியம்) (மைய அரசின் பங்கு 50% மட்டும்)

| வருடம் | உதகையில் அருங்காட்சியகம் அமைத்தல் | விடுதிகள் கட்டுதல் |
|---|---|---|
| 1997-98 | 15.00 | .. |
| 1998-99 | .. | .. |
| 1999-2000 | .. | .. |
| 2000-2001 | .. | 150.00 |
| 2001-2002 | .. | .. |
| | 15.00 | 150.00 |



2003 ஜனவரி 29]

மைய அரசு விடுவித்த சிறப்பு மைய நிதியிலிருந்து பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு செலவழிக்கப்பட்ட தொகை

| வருடம் | திட்டம் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1997-98 | தோட்டக்கலை துறை | 40.00 |
| | வேளாண் பொறியியல் துறை | 30.00 |
| | கால்நடைப் பராமரிப்பு துறை | 38.00 |
| | கதர்கிராமத் தொழில் வாரியம் | 10.00 |
| | சிறுபாசனம் | 10.00 |
| | வனத் துறை | 10.00 |
| | கூட்டுறவுத் துறை | 45.71 |
| | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை | 9.60 |
| | பரவிவாழும் பழங்குடியினர் நலன் | 30.00 |
| | பண்டைய பழங்குடியினர் நலன் | 40.00 |
| | | **263.31** |
| 1998-99 | தோட்டக்கலை துறை | 20.00 |
| | வேளாண் பொறியியல் துறை | 30.00 |
| | வனத் துறை | 25.71 |
| | பரவிவாழும் பழங்குடியினர் நலன் | 30.00 |
| | பண்டைய பழங்குடியினர் நலன் | 40.00 |
| | தனிநபர் தொழில் முனைவோர் திட்டம் | 150.00 |
| | | **295.71** |
| 1999-2000 | வேளாண் பொறியியல் துறை | 40.00 |
| | கதர்கிராமத் தொழில் வாரியம் | 5.00 |
| | பட்டு வளர்ச்சித் துறை | 15.00 |
| | வனத் துறை | 38.27 |
| | கூட்டுறவுத் துறை | 40.00 |
| | பரவிவாழும் பழங்குடியினர் நலன் | 30.00 |
| | பண்டைய பழங்குடியினர் நலன் | 40.00 |
| | தனிநபர் தொழில் முனைவோர் திட்டம் | 50.00 |
| | | **258.27** |

| | | |
|---|---|---|
| 2000-2001 | வேளாண் பொறியியல் துறை | 92.00 |
| | பரவிவாழும் பழங்குடியினர் நலன் | 30.00 |
| | பண்டைய பழங்குடியினர் மேம்பாடு | 40.00 |
| | கதர்கிராமத் தொழில் வாரியம் | 10.00 |
| | கூட்டுறவுத் துறை | 86.27 |
| | | **258.27** |
| 2001-2002 | பழங்குடியினர் மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்த அரசினால் ஒப்பளிக்கப்பட்ட தொகை செலவிடப்படாமல் உள்ளது. | 323.27 |

இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவுக்கூறு 275(1)ன் (1997-98 முதல் 2001-2002 வரை) விடுவிக்கப்பட்ட தொகை.

| | |
|---|---|
| பள்ளிக் கட்டடங்கள் | 25.10 |
| சாலை வசதி | 150.00 |
| சிறை அமைத்தல் | 3.00 |
| மின்வசதி | 33.46 |
| வீடுகள் கட்டுதல் | 70.31 |
| குடிநீர் வசதி | 20.45 |
| மாதிரி மேல்நிலைப் பள்ளி | 100.00 |
| இணைப்புச்சாலைகள் | 70.00 |
| | **472.77** |

2000-2001 ஆம் ஆண்டு மைய அரசால் விடுவிக்கப்பட்ட தொகை ரூ. 210.00 இலட்சத்தினைக் கொண்டு சாலைகள் அமைக்கும் திட்டத்திற்கு அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உதகை அருங்காட்சியகம் மற்றும் விடுதி கட்டடங்களுக்கான செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**41—**

### இடுகாட்டிற்குப் பாதை

**வினா எண் 19208—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை ஒன்றியம், மாரப்பம்பாளையம் அருந்ததியர் மக்கள் பயன்படுத்தும் இடுகாட்டிற்குச் செல்லும் பாதை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை ஒன்றியம் மாரப்பம்பாளையம் அருந்ததியர் காலனி சர்வே எண் 158-ல் உள்ளது. மேற்படி சர்வே எண்ணிலிருந்து சர்வே எண் 166, 167, 168 நிலங்களிலுள்ள பட்டா பாதை வழியாக சர்வே எண் 275/8-ல் உள்ள மயானத்திற்கு 3 மீட்டர் அகலத்திற்கு பட்டா பாதை செல்கிறது. இந்தப் பட்டா பாதையில் அருந்ததியர்கள் சவத்தை எடுத்துச் சென்றால் பட்டா பாதை நிலத்து சொந்தக்காரர்கள் ஆட்சேபனை செய்யக்கூடும் என்பதால் தமிழ்நாடு அரிசன நல நில எடுப்புச் சட்டம் 1978-ன் கீழ் நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**42—**

### சிறப்புப் பயிற்சி

**வினா எண் 20271—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில், மகளிர் கூட்டமைப்பு அமைத்து வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான சிறப்புப் பயிற்சி அளிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் பயன் பெற்றுள்ளார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[2003 ஜனவரி 29

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் மகளிர் கூட்டமைப்பு அமைத்து வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான சிறப்புப் பயிற்சி 1070 பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டது.

2002-2003 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் 1340 ஆதிதிராவிடர்களுக்கும் மற்றும் 1370 பழங்குடியின நபர்களுக்கும் வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

**43—**

**பேருந்தை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 4100—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணியிலிருந்து வெட்டன் விடுதிக்கு கருக்காகுறிச்சி வழியாக காலை 11 மணிக்கு சென்று கொண்டிருந்த பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை மீண்டும் இயக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேராவூரணியிலிருந்து கருக்காகுறிச்சி வழியாக வெட்டன்விடுதிக்கு சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு காலை 10.20 மணிக்கு பேருந்து ஒன்று இயக்கப்பட்டது. இந்நடைகளில் மக்கள் பயன்பாடு குறைவாக உள்ளதாலும், புள்ளான்விடுதி மக்கள் பிரச்சினை எழுப்பியதாலும், ஆலங்குடி வட்டாட்சியர் முன்னிலையில் ஏற்பட்ட சமாதானக் கூட்ட முடிவின்படி, மேற்படி நடைகள் பேராவூரணி—வடகாடு (வழி) நெடுவாசல், புள்ளான்விடுதி தடத்தில் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, பேராவூரணியிலிருந்து கருக்காக்குறிச்சி வழியாக வெட்டன்விடுதிக்கு காலை 10.20 மணிக்கு இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட நடைகளை மீண்டும் இயக்க இயலாத நிலை உள்ளது. மேலும் தற்போது பேராவூரணி, வெட்டன்விடுதி வழி கருக்காகுறிச்சி



2003 ஜனவரி 29]

வழித்தடத்தில் நடை எண் ஏ2 கும்பகோணம் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து மூலம் இரு நடைகள் இயக்கப்பட்டு வருகிறது.

**44—**

**நகரப் பேருந்துகள் இயக்கம்**

**வினா எண் 4184—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு நகரத்திலிருந்து எத்தனை நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன?

(ஆ) மேலும் அதிகப்படுத்தும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் அரசு போக்குவரத்துக் கழகத்தால், செங்கற்பட்டு நகரிலிருந்து 50 நகரப் பேருந்துகள் இயக்கப்படுகிறது.

(ஆ) செங்கற்பட்டை சுற்றியுள்ள கிராமங்களுக்கு செங்கற்பட்டிலிருந்து போதிய பேருந்து வசதி உள்ளது. எனவே, செங்கற்பட்டு நகரத்திலிருந்து இயக்கப்படும் நகரப் பேருந்துகளை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**45—**

**பேருந்து நின்று செல்லுதல்**

**வினா எண் 9242—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம், பழவூர் ஊராட்சிக்குட்பட்ட ஆதிதிராவிட இன மக்கள் வசிக்கும் கே.சி. பழவூர் புதுகாலனியில் பேருந்துகள் நின்று செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

காவல்கிணறு விலக்கிலிருந்து பழவூர் வழியாக கன்னியாகுமரிக்குச் செல்லும் சாலையிலிருந்து பிரிந்து உட்புறமாக சுமார் 1 பர்லாங் தொலைவில் கே. சி. பழவூர் காலனி அமைந்துள்ளது. இந்தக் காலனி, சுமார் 80 வீடுகளும், மக்கள் தொகை தோராயமாக 250-க்குள்ளும் கொண்டது. தற்போது, பிரதான சாலையில், அதாவது கே.சி. பழவூர் காலனியிலிருந்து இரு திசைகளில் 1 பர்லாங் தூரத்தில் உள்ள பழவூர் விலக்கு மற்றும் உயர்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் உள்ள பேருந்து நிறுத்தங்களில் ஏற்கெனவே திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நின்று செல்கின்றன. எனவே, கே.சி. பழவூர் காலனிக்கென தனியாக பேருந்து நிறுத்தம் வழங்கத் தேவையில்லை.

**46—**

**பேருந்துகள் நின்று செல்லுதல்**

**வினா எண் 11003—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர்-திருச்செந்தூர் சாலையில் PET தொழில்நுட்பக் கல்லூரி முன்பு பேருந்துகள் நின்று செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வள்ளியூர்-திருச்செந்தூர் சாலையில் கோட்டயடி மற்றும் மடப்புரம் ஆகிய இரு கிராமங்களுக்கு இடையே PET தொழில்நுட்பக் கல்லூரி அமைந்துள்ளது. இக்கல்லூரி இருக்குமிடத்தில் குடியிருப்புப் பகுதிகள் எதுவும் கிடையாது. இருப்பினும் இக்கல்லூரி முன்பு இதன் வழியாக இயக்கப்படும் திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகத்தின் நகரத்தடம் எண் 3, 8, 4, 15, 21ஏ ஆகிய பேருந்துகள் நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றன. மேலும் இக்கல்லூரிக்கு அருகாமையில் சுமார் 50 மீட்டர் தூரத்தில் இருக்கும் மடப்புரத்தில்





நகரப் பேருந்துகளும் சாதாரண புறநகர் பேருந்துகளும் நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றன.

**47—**

**பேருந்துகள் நிறுத்தம்**

**வினா எண் 11031—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்றாம்பள்ளி தொகுதியில் நாட்டறாம்பள்ளியில் த.எ.444 எண்ணுள்ள தமிழ்நாடு போக்குவரத்து பேருந்துகள் நாட்றாம்பள்ளியில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வேலூர்-பெங்களூர் தடத்தில் இயக்கப்படும் வேலூர் அரசு போக்குவரத்துக் கழகத்தின் தடம் எண் 444 புறநகர் பேருந்துகள் அனைத்தும் நாட்றாம்பள்ளியில் நின்று செல்கின்றன.

**48—**

**பேருந்து நிறுத்தம்**

**வினா எண் 11070—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம் திசையன்விளை-உடன்குடி சாலையில் உள்ள முருகேசபுரத்தில் பேருந்துகள் நின்று செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

முருகேசபுரம் எனும் கிராமம் திசையன்விளை-உடன்குடி சாலையிலிருந்து பிரிந்து 0.2 கி.மீ. தூரத்தில் உட்புறமாக அமைந்துள்ளது

தற்போது முருகேசபுரம் விலக்கிலிருந்து உடன்குடி செல்லும் திசையில் 0.2. கி.மீ. தூரத்தில் லயன்ஸ் கிளப் நிழற்கொடை என்ற இடத்திலும் இவ்விலக்கிலிருந்து திசையன்விளை செல்லும் திசையில் 0.6 கி.மீ. தூரத்தில் உள்ள மடத்து அச்சம்பாடு விலக்கு என்ற இடத்திலும் ஏற்கெனவே இரு பேருந்து நிறுத்தங்கள் செயல்பட்டு வருகின்றது. எனவே மிகவும் குறுகிய இடைவெளியில் அதாவது 0.8 கி.மீ.-க்குள், மற்றொரு பேருந்து நிறுத்தம் புதிதாக உருவாக்க தேவை எழவில்லை.

**49—**

### புதிய நகரப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 11197—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் முதல் எரியூர் வழியாக செல்லமுடி, டி. கோளப்பாடி வரை புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் முதல் எரியூர், செல்லமுடி வழியாக டி. கோளப்பாடி வரை தடத்தின் நீளம் 36.2 கி.மீ. ஆகும். அரசு ஆணைப்படி இதுவரை பேருந்து வசதி பெறாத கிராமங்களுக்கு மட்டுமே 35.0 கி.மீ. வரை நகரப் பேருந்து இயங்கி வருகின்றன. பேருந்து வசதி கோரியுள்ள பெண்ணாகரம்-டி.கோளப்பாடி (வழி) எரியூர், செல்லமுடி தடத்தின் நீளம் 36.2 கி.மீ. ஆக உள்ளதால் நகரப் பேருந்து இயக்கிட இயலாத நிலை உள்ளது. மேலும் பெண்ணாகரத்திலிருந்து எரியூர் வழியாக செல்லமுடிக்கும் அதேபோல் பெண்ணாகரத்திலிருந்து முதுகம்பட்டி வழியாக மஞ்சாரஅள்ளி வரைக்கும் நகரப் பேருந்து வசதி உள்ளது. பெண்ணாகரத்திலிருந்து முதுகம்பட்டி வழியாக மஞ்சாரஅள்ளி செல்லும் பேருந்தை டி. கோளப்பாடி வரை நீட்டித்து இயக்குவதற்கான சாத்தியக் கூறுகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.



**50—**

### அரசுப் பேருந்து

**வினா எண் 11465—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசு போக்குவரத்துப் பணிமனையில் எத்தனை பேருந்துகள் உள்ளன?

(ஆ) இவற்றுள் எத்தனை பேருந்துகள் நல்ல நிலையில் உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் தற்பொழுது மொத்தம் 944 பேருந்துகள் உள்ளன. இவற்றுள் சேலம் நகரில் உள்ள 8 பணிமனைகளில் 350 பேருந்துகள் உள்ளன.

(ஆ) அனைத்து பேருந்துகளும் நல்ல நிலையில் உள்ளன.

**51—**

### கூடுதல் பேருந்து

**வினா எண் 12816—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதியில் ஏரியூர்-மேச்சேரி வழித்தடத்தில் கூடுதலாக பஸ் இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக புறநகர் பேருந்து தடம் எண் 741ஏ-ன் மூலம் நாளொன்றுக்கு

8 நடைகள் ஏரியூர்-மேச்சேரி (வழி) பூச்சூர், பழையூர் தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, சந்தை தினங்களில் புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் நாளொன்றுக்கு கூடுதலாக ஒரு பேருந்து மூலம் 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பேருந்தைத் தொடர்ந்து தினசரி இயக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

**52—**

## பேருந்து

**வினா எண் 14182—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி-சென்னை செல்லும் பேருந்து தற்போது பகல் 1.45 மணிக்கு புறப்பட்டுச் செல்வதை இரவு 8 மணிக்கு மேல் புறப்பட அரசு ஏற்பாடு செய்து தருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து சென்னைக்குப் பகல் நேரத்தில் பேருந்து வசதி பொதுமக்களால் கோரப்பட்டதன் காரணமாகத்தான், பகல் 1.48 மணிக்கு இயக்கப்படுகிறது. இதை இரவு 8.00 மணிக்கு மேல் மாற்றி இயக்கினால் பொதுமக்களுக்குத் தற்போதுள்ள பகல் நேரப் பேருந்து வசதி இரத்தாக நேரிடும். மேலும் எடப்பாடியில் இருந்து சேலம் வரவும், சேலத்திலிருந்து சென்னை செல்லவும் இரவு நேரத்தில் கீழ்க்கண்டவாறு பேருந்து வசதி உள்ளது.

எடப்பாடி-சேலம் 12 நடைகள் (இரவு 7.00 மணிக்கு மேல்),
சேலம்-சென்னை 10 நடைகள் (இரவு 9.00 மணிக்கு மேல்)

ஆகவே கோரிக்கையில் உள்ளவாறு, பேருந்தின் நேரத்தை மாற்றியமைக்க வேண்டிய தேவை எழவில்லை என்று கருதப்படுகிறது.

**53—**

## பேருந்து நீட்டித்து இயக்குதல்

**வினா எண் 14900—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் பெரும்பாலை செல்லும் நகரப் பேருந்தை போடம்பட்டி வழியாக கெண்டையன அள்ளி புதூர் வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பெண்ணாகரம் முதல் பெரும்பாலை வரை நகரப்பேருந்து ஏதும் இயக்கப்படவில்லை. பெண்ணாகரத்திலிருந்து பெரும்பாலை வழியாக காமத்தாள் வரை தடம் எண் 03 நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்தின் நீளம் 33.0 கிலோ மீட்டர் ஆகும். இத்தடத்தை பெரும்பாலையிலிருந்து போடம்பட்டி வழியாக கெண்டையன அள்ளி புதூர் வரை சென்று வருமாறு இயக்கினால் தடத்தின் நீளம் 42.0 கி.மீ. ஆகும். அரசு ஆணையின்படி யாதொரு பேருந்து வசதியும் இல்லாத கிராமங்களுக்கு மட்டும் 35.0 கி.மீ. வரை நகரப் பேருந்தை நீட்டித்து இயக்க இயலும். கெண்டையன அள்ளி புதூர் ஏற்கனவே பேருந்து வசதி உள்ளதாலும், நீட்டித்து இயக்கக் கோரும் தடத்தின் நீளம் 42.0 கி.மீ. ஆக உள்ளதாலும் தடம் எண் 03 நகரப் பேருந்தை கெண்டையன அள்ளி புதூர் வரை நீட்டித்து இயக்க இயலாத நிலை உள்ளது. எனவே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பெரும்பாலை செல்லும் நகரப் பேருந்தை போடம்பட்டி வழியாக கெண்டையன அள்ளி புதூர் வரை இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**54—**

## காப்புத் தொகை

**வினா எண் 10559—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீடுகளுக்கும், மோட்டார் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் செய்பவர்களுக்கும் மின் வாரியத்தால் உயர்த்தப்பட்டுள்ள கூடுதல் காப்புத் தொகையை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

குறைந்த மின் அழுத்தப் பிரிவைச் சார்ந்த வீடுகளுக்கும், மோட்டார் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் நுகர்வோர்களுக்கும் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை ஏப்ரல் மாதத்திற்கு முந்தைய 12 மாதங்களுக்கான மின் கட்டணத்தின் சராசரியில் மூன்று மாத மின் கட்டணம் காப்புத் தொகையாக இருக்க வேண்டுமென கணக்கிடப்பட்டு கூடுதல் காப்புத் தொகை வசூலிக்கும் முறை இருந்தது. தற்போது அந்த முறை மாற்றப்பட்டு நுகர்வோர் செலுத்த வேண்டிய காப்புத் தொகை படிமுறைகளில் (slab system) நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இனிமேல் காப்புத் தொகை போதுமான அளவில் உள்ளதா என்பது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை கணக்கிடப்பட உள்ளது. இந்த வகையில் மேலே குறிப்பிட்ட குறைந்த மின் அழுத்தப் பயனீட்டாளர்களுக்கான காப்புத் தொகை பற்றிய அடுத்த ஆய்வு 2006 ஆம் ஆண்டு செய்யப்பட உள்ளது.

மின் கட்டணம் செலுத்துவதற்கு அனுமதிக்கப்படும் நாட்களையும் ஐந்து ஆண்டுகால இடை-வெளியில் அதிகரிக்கக்கூடும் மின் உபயோக அளவையும், உத்தேசமான மின் கட்டண சீரமைப்பையும் கணக்கில் கொண்டால், படிமுறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள காப்புத் தொகை அளவு சரியானது எனக் கருதப்படுகிறது. மின் வாரியத்தின் நெருக்கடியான நிதி நிலையினால் காப்புத் தொகை அளவை குறைக்க இயலாது.

**55—**

### மும்முனை மின்சாரம்

**வினா எண் 10602—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி பேரூராட்சியில் முழுநேர மும்முனை மின்சாரம் வழங்குவதால் ஆலைகள் இலாபம் அடைகிறது, ஆனால் மற்ற ஆலைகளுக்கு அவ்வாறு இணைப்பு இல்லாமையால் நட்டத்தில் இயங்கி வருவதால் இதற்கு மின் துறை நட்டத்தினை ஈடுகட்டுமா?



(ஆ) இல்லையெனில், எல்லோருக்கும் முழுநேர மின் இணைப்பு வழங்க முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வேண்டுதலுக்கிணங்கவும், விண்ணப்பதாரர் ரூ.54,150/-ஐ செலுத்தியதால், நாட்றாம்பள்ளி ஜோலார்பேட்டை கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் நாட்றாம்பள்ளி மின் மாற்றி 1 மற்றும் 8-ல் அமைந்துள்ள இரு குடிநீர் நீரேற்று நிலையங்களுக்கு நாட்றாம்பள்ளி 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து, நாட்றாம்பள்ளி மின் மாற்றி 1 மற்றும் மின்மாற்றல் 8 வரையில் 4-வது (11 கே.வி.) கம்பி அமைத்து 4-4-1997 முதல் 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் நாட்றாம்பள்ளி மின் மாற்றி 1 மற்றும் மின் மாற்றி 8 ஆகியவற்றில் அமைந்துள்ள தாழ்வழுத்தத் தொழிற்சாலைகளுக்கு 24 மணி நேர மின்சாரம் கிடைக்கின்றது. மற்ற மின் மாற்றிகளில் அமைந்துள்ள தாழ்வழுத்தத் தொழிற்சாலைகளுக்கு கட்டுப்பாடுடன் மின்சாரம் அளிக்கப்படுகிறது.

(ஆ) முழுநேரமும் மும்முனை மின்சாரம் வேண்டுமெனில், மின்சார வாரியம் செலுத்தக்கோரும் மதிப்பீட்டுத் தொகையினைச் செலுத்த முன்வந்தால் மற்ற தொழிற்சாலைகளுக்கும் முழுநேர மும்முனை மின்சாரம் வழங்க ஆவன செய்யப்படும்.

**56—**

### மின் இணைப்பு

**வினா எண் 10603—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்றாம்பள்ளி தொகுதியில் விவசாயிகள் நிலத்தடி நீர் வற்றிவிட்டதால் விவசாயிகள் ஆழ்குழாய் போட்டுதான் தண்ணீரை நீர்மூழ்கி மோட்டார் மூலம்தான் இறைக்கின்றார்கள். ஆனால் மின் துறை, அருகாமையில் 100 மீட்டர் தூரத்திற்கு ஊராட்சி மேல்நிலை

ஆழ்குழாய் இருக்குமானால் மின் இணைப்பு கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

பொது நலன் கருதி, அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் மூலம் அமைக்கப்பட்டுள்ள பொது ஆழ்குழாய்க் கிணற்றிற்கும் மற்றும் திறந்த வெளி கிணற்றிற்கும் அருகில் 100 மீட்டர் தூரத்திற்குள் அமைக்கப்படும் தனியார் ஆழ்குழாய்க் கிணற்றிற்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களின் ஒப்புதல் பெற்ற பின்பே கொடுக்கப்பட வேண்டும் எனத் தமிழ்நாடு மின்சார வாரியம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

**57—**

## வீடுகளுக்கு மின் இணைப்பு

**வினா எண் 10605—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் வட்டம், ஜோலார்பேட்டையில் 50 வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுத்ததுபோல் தற்போது கட்டியுள்ள வீடுகளுக்கும் மறுக்காமல் மின் இணைப்பு கொடுக்க முடியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

திருப்பத்தூர் வட்டம், ஜோலார்பேட்டையில் தற்போது கட்டியுள்ள வீடுகளுக்கு வாரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி பயனீட்டாளர்களிடமிருந்து முறையான விண்ணப்பம் பெறப்பட்டதும், முன்பு மின் இணைப்பு வழங்கியது போலவே மின்சாரம் வழங்கப்படும்.



1. வீட்டின் உரிமையாளரோ அல்லது அவ்வீட்டில் குடியிருப்போர் ஒயரிங் வேலை முடித்த பின்னர் முறையான விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகத்தில் ஒப்படைத்து மின் இணைப்பு வழங்க வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையினை செலுத்தியதும், கம்பமில்லா மின் இணைப்பு என்றால் அதே நாளிலும், கம்பம் நட்டு மின் இணைப்பு வாங்க வேண்டியிருந்தால் 30 தினங்களுக்குள்ளும் மின்சாரம் வழங்கப்படும்.

2. புறம்போக்கு நிலத்திலுள்ள குடிசைகளுக்கு மீட்டர் வைக்கும் வீட்டு மின் இணைப்பு வேண்டுவோர் வீட்டு வரி கட்டிய ரசீது அல்லது குடும்ப அட்டையினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து விண்ணப்பிப்பதோடு ரூ. 40/-மதிப்புள்ள பிணைமுறிவு பத்திரத்தில் ஒப்பந்தமிட்டு வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையினைச் செலுத்தியதும் கம்பமில்லா மின் இணைப்பு என்றால் அதே நாளிலும், கம்பம் நட்டு மின் இணைப்பு வழங்க வேண்டியிருந்தால் 30 தினங்களுக்குள்ளும் மின்சாரம் வழங்கப்படும்.

3. புறம்போக்கு நிலத்திலுள்ள குடிசைகளுக்கு இலவச மின் இணைப்பு வேண்டுவோர் சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடமிருந்து தடையில்லாச் சான்று பெற்று விண்ணப்பித்தால் வாரியம் நிர்ணயிக்கும் ஆண்டு இலக்கிற்கேற்ப மின்சாரம் வழங்கப்படும்.

**58—**

## புதிய மின் கம்பம்

**வினா எண்—10729 திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கோயிலூர் ஊராட்சி சிறு பட்டாக்கரையில் ஆதிதிராவிடர் தெருவிற்கு புதிய மின் கம்பம் அமைத்துத் தெருவிளக்கு வழங்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

[2003 ஜனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கோயிலூர் ஊராட்சி சிறு பட்டாக்கரையில் ஆதி திராவிடர் தெருவிற்கு புதிய மின் கம்பம் அமைத்துத் தெருவிளக்கு வழங்க அரசு குறியீடு ஏதுமில்லை. மேலும், செலவுத் தொகையினை தாங்களே ஏற்றுக் கொண்டு ஊராட்சிச் செலவில் அமைத்துக் கொள்ளும் வகையிலான விண்ணப்பம் ஏதும் ஊராட்சியிடமிருந்து பெறப்படவில்லை.

**59—**

**மின் கம்பிகளை மாற்றுதல்**

**வினா எண் 10865—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், விஜயாபதி ஊராட்சி, இடிந்தகரை வடக்கு அரிசன காலனி தெருவில் இரண்டு மின் கம்பங்களுக்கு இடையேயுள்ள மின் கம்பிகள் தாழ்வான நிலையிலுள்ளதை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், விஜயாபதி ஊராட்சி இடிந்தகரை அரிசன காலனி தெருவின் இரண்டு மின் கம்பங்களுக்கு இடையில் 8 மீட்டர் மின் கம்பம் ஒன்று சனவரி மாதம் 11-ம் நாள் நடப்பட்டுத் தாழ்வாக இருந்த மின் கம்பிகள் சரிசெய்யப்பட்டது.



2003 ஜனவரி 29]

**60—**

**மின் கம்பத்தை மாற்றுதல்**

**வினா எண் 10872—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரம், மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி ஊராட்சி, தில்லை நகர் கிராமத்தில் பழுதடைந்த நிலையிலுள்ள மின் கம்பத்தை மாற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், விஜயாபதி ஊராட்சி, தில்லை நகர் கிராமத்தில் பழுதடைந்த மின் கம்பங்கள் 22-01-2002 அன்று மாற்றப்பட்டன.

**61—**

**மின் வசதி**

**வினா எண் 10902—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், காவல்கிணறு ஊராட்சி, காமராஜர் நகர் பகுதியில் வசிக்கும் ஏழை மக்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், காவல்கிணறு ஊராட்சி, காமராஜர் நகர் பகுதியில் வசிக்கும் ஏழை மக்களுக்கு மின்சார வசதி ஏற்பாடு செய்வதற்கான விண்ணப்பம் பெறப்படவில்ல. முறையான விண்ணப்பம் பெறப்பட்டால் மின்வாரிய

[2003 ஜனவரி 29

விதிகளுக்குட்பட்டு மின் இணைப்பு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**62—**

**தெரு விளக்கு**

**வினா எண் 13436—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சியில் மருக்கம்பட்டி கிராமம், அர்த்தனாரி கொட்டாய் அருகில் தெரு விளக்கு வேண்டி பணம் செலுத்தி நிலுவையிலுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில், நடவடிக்கை எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், கெண்டையன அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த மருக்கம்பட்டி கிராமம், அர்த்தனாரி கொட்டாய்க்கு மின்னிணைப்பு வேண்டி எவ்வித விண்ணப்பமும் தற்சமயம் நிலுவையில் இல்லை. தெருவிளக்கு மின்னிணைப்பு தேவைப்படின் ஊராட்சித் தலைவர் மூலமாகவும், மற்ற மின்னிணைப்புகள் தேவைப்படின் உரிய விண்ணப்பதாரர் மூலமாகவும் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டால் வாரிய விதிமுறைகளின்படி மின்னிணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**63—**

**தெரு விளக்கு**

**வினா எண் 13437—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஜனவரி 29]

(அ) பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சியில் காவக்காடு கிராமம் மற்றும் சின்னபழையூரில் தெரு விளக்கு வேண்டி பணம் செலுத்தி நிலுவையில் உள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆமெனில், நடப்பாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், கெண்டையன அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த காவக்காடு மற்றும் சின்னபழையூர் ஆகிய கிராமங்களிலிருந்து மின்னிணைப்பு வேண்டி எவ்வித விண்ணப்பமும் தற்சமயம் நிலுவையில் இல்லை. தெருவிளக்கு மின்னிணைப்பு தேவைப்படின் ஊராட்சித் தலைவர் மூலமாகவும், மற்ற மின்னிணைப்புகள் தேவைப்படின் உரிய விண்ணப்பதாரர் மூலமாகவும் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டால் வாரிய விதிமுறைகளின்படி மின்னிணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**64—**

**மின் விநியோகம்**

**வினா எண் 13950 திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி நகரிலுள்ள இருளங்குப்பம் மக்கள் சி.என். பாளையம் துணை மின் நிலையத்தின் கண்ட்ரோல் மூலமாக மின் விநியோகத்தைப் பெற்று வருவதை மாற்றி 32-வது வார்டைச் சேர்ந்த இருளங்குப்பத்தில் நகர மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட 32-வது வார்டான இருளங்குப்பத்தில் 9 மின் மாற்றிகள் இயக்கத்தில் உள்ளன. 221 வீட்டு மின் இணைப்புகள், 3 குடிநீர் தொட்டிகள், 1 பள்ளிக்கூட மின் இணைப்பு, 4 கோவில் மின் இணைப்புகள், 5 தொழில் மின் இணைப்புகள், 7 கடை மின் இணைப்புகள், 94 விவசாய மின் இணைப்புகள் ஆகியவை பண்ருட்டி துணை மின் நிலையத்தின் மூலம் மின் விநியோகம் பெறும் 9 மின் மாற்றிகள் மூலம் பயன் பெறுகின்றன. திருவதிகை 22 கே.வி. மின்னூட்டி மூலமாக ஏற்கனவே பண்ருட்டி துணை மின் நிலையத்திலிருந்து நகர மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது.

**65—**

**உடனடி மின் இணைப்புத் திட்டம்**

**வினா எண் 14458—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம், மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டு தமிழக அரசு கொண்டுவந்த உடனடி மின் இணைப்புத் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் மொத்தம் எத்தனை பேர் பயனடைந்துள்ளார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டு தமிழக அரசு கொண்டுவந்த உடனடி மின் இணைப்புத் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் 30-4-2002 முடிய மொத்தம் 9,88,101 பேர் பயனடைந்துள்ளார்கள்.

**66—**

**மின் மாற்றி**

**வினா எண் 16179—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், செட்டிகுளம் ஊராட்சி, புதுமனை கிராமத்திற்கு 100 வாட் மின் மாற்றி அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தாலுக்கா, செட்டிகுளம் பகுதியில் உள்ள மின் மாற்றி எண்.10,63, கே.வி.ஏ-ஐ மாற்றி 100 கே.வி.ஏ. மின் மாற்றியாக அமைப்பதற்கான மதிப்பீடு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்பட்ட நாள் 15-4-2002 இந்தப் பணி விரைவில் முடிக்கப்படும்.

**67—**

**மின்சாரம் வழங்குதல்**

**வினா எண் 16388—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், வாராப்பூர் ஊராட்சியில் ஏற்கெனவே வழங்கப்பட்டது போல 20 மணி நேர மின்சாரம் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவேரி டெல்டா பகுதியில் உள்ள விவசாய மின் இணைப்புகளுக்கு மும்முனை மின்சார சலுகை வழங்கப்பட்டுள்ள அரசு ஆணை 1192, நாள் 16-6-89-ல் புதுக்கோட்டை மாவட்டம், வாராப்பூர் ஊராட்சிப் பகுதிக்கு 20 மணி நேர மும்முனை மின்சார சலுகை அளிக்கப்படாததால் அப்பகுதிக்கு 20 மணி நேர மும்முனை

[2003 ஜனவரி 29

மின்சாரம் வழங்கப்பட இயலாது. மற்ற பகுதிக்கு அளிப்பது போல் மும்முனை மின்சாரம் 14 மணி நேரம் மட்டுமே வழங்க இயலும்.

**68—**

**மின் இணைப்பு**

**வினா எண் 16413—திரு. மு. அப்பாவு :** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, பத்தியநாதபுரம் கிராமத்தில் குடிநீர்த் தேவைக்காக தோண்டப்பட்ட கிணற்றுக்கு மின்னிணைப்பு கொடுத்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, பத்தியநாதபுரம் கிராமத்தில் குடிநீர்த் தேவைக்காக தோண்டப்பட்ட கிணற்றுக்கு மின்னிணைப்பு கொடுப்பதற்கான முறையான படிவத்திலான விண்ணப்பம் இது நாள் வரை வடக்கன்குளம் பிரிவு அலுவலகத்தில் பெறப்படவில்லை. குறிப்பிட்ட விண்ணப்பம் பெறப்பட்டதும் மின்னிணைப்பு வழங்குவதற்கான பணி மேற்கொள்ளப்படும்.

**69—**

**மின் விளக்குகள்**

**வினா எண் 16414—திரு. மு. அப்பாவு :** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஜனவரி 29]

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் திசையன்விளை பேரூராட்சி, வார்டு எண். 10, நெடுவிளை தெற்குத் தெருவில் புதிதாக மின் விளக்குகள் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முறையாக செயல் அலுவலர் மூலம் புதிய தெருவிளக்கு வேண்டி விண்ணப்பம், தீர்மான நகல் மற்றும் நிதிநிலைச் சான்றுடன் அனுப்பி வைப்பதுடன், மதிப்பீட்டுத் தொகை செலுத்த சம்மதக் கடிதமும் சேர்த்து இளநிலைப் பொறியாளர், திசையன்விளை அலுவலகத்தில் விண்ணப்பப் பதிவுக் கட்டணம் செலுத்தி உதவி செயற்பொறியாளர்/விநியோகம்/திசையன்விளை அலுவலகத்திற்கு முழுமையான விண்ணப்பம் கொடுத்தால் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 10, நெடுவிளை தெற்குத் தெருவிற்கு, தெரு விளக்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**70—**

**மின் விளக்கு வசதி**

**வினா எண் 16463—திரு. மு. அப்பாவு :** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிக்குட்பட்ட பாளைமண்டலம், 25-வது வார்டு, டேனியல் தாமஸ் தெருவிலுள்ள மின் கம்பங்களில் (எண். 96, 97, 98) தெரு மின் விளக்குகள் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், 25-வது வார்டு, டேனியல் தாமஸ் தெரு, மின் கம்பம் 97-ல் மின் விளக்கு (குழல் விளக்கு) உள்ளது. மின் கம்பம் எண். 96 மற்றும் 98-ல் மின் விளக்கு பொருத்துவதற்கான முறையான படிவத்திலான விண்ணப்பம் திருநெல்வேலி மாநகராட்சியிலிருந்து பெறப்பட்டவுடன், மின் விளக்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**71—**

**மின் இணைப்பு வழங்குதல்**

**வினா எண் 16477—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, புதுமாவிலங்கை ஊராட்சிக்குட்பட்ட அகரம் கிராமத்திற்குத் தெரு விளக்குகள் அமைத்து மின் இணைப்பு வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, புதுமாவிலங்கை ஊராட்சிக்குட்பட்ட அகரம் கிராமத்திற்குத் தெரு விளக்குகள் அமைக்கக்கோரி எந்த விண்ணப்பமும் நிலுவையில் இல்லை.

**72—**

**மின் இணைப்பு**

**வினா எண் 17206—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி நகரில் அருள்மிகு ஸ்ரீநீலகண்ட பிள்ளையார் ஆலயத்திற்குச் சொந்தமான நிலத்தில் குடியிருக்கும் மக்களுக்கு மின் இணைப்பு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி நகரத்தில் அருள்மிகு ஸ்ரீநீலகண்ட விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான இடத்தில் குடியிருப்போர் மின் இணைப்பு பெற இந்து சமய அறநிலையத் துறையிடமிருந்து தடையில்லா சான்றிதழோடு விண்ணப்பம் சமர்ப்பித்தால் மின் இணைப்பு வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

**73—**

**சூரிய அடுப்புகள் வழங்குதல்**

**வினா எண் 26394—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற மக்களுக்கு மானிய விலையில் சூரிய அடுப்புகள் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கிராமப்புற மக்களுக்கு மானிய விலையில் சூரிய அடுப்புகள் வழங்க அரசிடம் தற்போது திட்டம் ஏதுமில்லை.

(ஆ) ஆயினும் தமிழ்நாடு அரசும், மத்திய அரசும் சூரிய அடுப்புகளுக்கு 1995-1996 வரை வழங்கிய மானியம், விபரம், சூரிய அடுப்பின் விலையுடன் பின்வருமாறு:-

| வ. எண். | வருடம் | சூரிய அடுப்பின் விலை | தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வந்த மானியம் | இந்திய அரசால் வழங்கப் பட்டு வந்த மானியம் | மொத்த மானியம் | பயனீட்டாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1. | 1991-92 | 905 | 250 | - | 250 | 235 |
| 2. | 1992-93 | 1050 | 250 | 150 | 400 | 106 |
| 3. | 1993-94 | 1400 | 250 | 150 | 400 | 45 |
| 4. | 1994-95 | 1500 | 250 | - | 250 | 8 |
| 5. | 1995-96 | 1500 | 250 | - | 250 | 4 |

**74—**

### எரிசக்தி திட்டம்

**வினா எண் 26395—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், கொண்டகர அள்ளி பஞ்சாயத்தில் உள்ள வத்தல் மலையில் ஒருங்கிணைந்த எரிசக்தி திட்டத்தை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை, ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம், தருமபுரி மாவட்டத்தில் தற்போது பர்கூர் மற்றும் அரூர்



ஆகிய இரு ஊராட்சி ஒன்றியங்களில் செயல்பட்டு வருகிறது. ஒரு மாவட்டத்திற்கு இரண்டு ஒன்றியங்கள் என்ற மத்திய அரசின் வழிகாட்டு முறைப்படி தருமபுரி மாவட்டத்தில் ஏற்கெனவே இரண்டு ஒன்றியங்களில் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திட்டம் செயல்பட்டு வருவதால் கூடுதலாக பிற ஒன்றியங்களில் செயல்படுத்துவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**75—**

### அடிகுழாய் அமைத்தல்

**வினா எண் 3348—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி நகராட்சி, 15-வது வார்டு நேதாஜி நகர் தெருவிலுள்ள அடிகுழாயை மூடிவிட்டதால், மீண்டும் அடிகுழாய் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி நகராட்சி, 15-வ்து வார்டு நேதாஜி நகர் தெருவிலுள்ள அடிகுழாய் பயனற்றுபோய்விட்டதால் வேறிடத்தில் ஆழ்துளை கிணறு அமைக்க ரூ. 35,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. உசிலம்பட்டி நகராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால் இப்பணி நகராட்சியால் இதுவரை செய்ய இயலவில்லை.

**76—**

### சாலை அமைக்கும் திட்டம்

**வினா எண் 3352—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சி, திருமுல்லைவாயில் பகுதியில் 11-வது வார்டில் திண்காரை கட்டுசாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[2003 ஜனவரி 29

*(ஆ) ஆமெனில், இத்திட்டம் எப்பொழுது செயல்பட துவங்கும்?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சி, திருமுல்லைவாயில் பகுதியில் 11-வது வார்டில் திண்காரை கட்டு சாலை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**77—**

**சாலை வசதி**

**வினா எண் 6263—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், துராங்குடி பகுதியில் மயானத்திற்கு சாலை வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், துரங்குடி பகுதி மயானப் பகுதி, பெருமகளூர் பேரூராட்சிக்கு உட்பட்டது. இம்மயான சாலை 2 கிலோ மீட்டர் உள்ளது. இதனை தார்ச் சாலையாக மாற்ற ரூபாய் 6.00 லட்சம் செலவாகும். இச்செலவினத்தை மேற்கொள்ள பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

**78—**

**சோடியம் மின் விளக்கு அமைத்தல்**

**வினா எண் 7986—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஜனவரி 29]

(அ) சேரன்மகாதேவி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட ஆனந்தபொன் நகரில் சோடியம் மின்விளக்கு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சிக்குட்பட்ட ஆனந்த பொன் நகரில் 2 சோடியம் ஆவி விளக்குகளும், 4 மின் குழல் விளக்குகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேற்கூறிய விளக்குகள் போதுமானதாகவே உள்ளதால் மேற்கொண்டு சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கும் அவசியம் ஏற்படவில்லை.

**79—**

**மயான மதில் சுவர்**

**வினா எண் 8916—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, குறிச்சி பேரூராட்சி பகுதி எண் 10 மேட்டூரில் மயானத்தைச் சுற்றி அரசு மதில் சுவர் கட்டிக் கொடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரூர் தொகுதி, குறிச்சி பேரூராட்சி பகுதி எண் 10, மேட்டூரில் மாயனத்தைச் சுற்றி மதில் சுவர் கட்ட பேரூராட்சியில் தற்சமயம் நிதி வசதி இல்லாததால் இத்திட்டம் செயல்படுத்த இயலாது.

[2003 ஜனவரி 29

80—

## பொதுக் கழிப்பிடம்

**வினா எண் 9011—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபாலசமுத்திரம் பேரூராட்சி வடக்கூரில் ஒரு பொதுக் கழிப்பிடம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோபாலசமுத்திரம் பேரூராட்சி வடக்கூரில் பொதுக் கழிப்பிடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

81—

## சாலை வசதி

**வினா எண் 10340—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் 2-வது தொகுதி கன்னங்குறிச்சி பேரூராட்சி 15-வது வார்டு கோவிந்தராஜாபட்டணத்தில் சாலை வசதி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் 2-வது தொகுதி கன்னங்குறிச்சி பேரூராட்சி 15-வது வார்டு கோவிந்தராஜாபட்டணத்தில் 0.350 கி.மீ. சாலையை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. இதற்கு ரூ. 1.85 லட்சம் தேவைப்படுகிறது. இதற்கு பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் பணி செய்ய இயலாது.



2003 ஜனவரி 29]

82—

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 11911—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட ஆதித்தனார் நகர், களக்காடு பிரதான சாலை முதல் கீழ்பக்கம் வரை, ஆவடி பரணி நகர், மேலநடுத் தெரு, நேதாஜி நகர் ஆகிய இடங்களுக்கு தார்ச் சாலை போடுவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட ஆதித்தனார் நகர், களக்காடு பிரதான சாலை முதல் கீழ்பக்கம் வரை தனியாருக்கு சொந்தமானது. எனவே மேற்படி தெருவில் தார்ச் சாலை அமைக்க இயலாது. ஆவடி பரணி நகர், மேலநடுத் தெரு, நேதாஜி நகர் ஆகிய இடங்களுக்குத் தார்ச் சாலை அமைக்க பேரூராட்சியில் தற்போது நிதி வசதி இல்லாததால் இப்பணி செய்ய இயலாது.

83—

## தார்ச் சாலை

**வினா எண் 11915—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட இராமசாமி கோயில் மேல வடக்குத் தெரு, சூரப்புரம் சாலை, பழைய பேருந்து நிலையம், இரயில்வே லைன் ஆகிய இடங்களுக்கு தார்ச் சாலை போடுவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட இராமசாமி கோயில் மேல வடக்குத் தெரு, சூரப்புரம் சாலை 191 மீட்டர் நீளம், பழைய பேருந்து நிலையம், இரயில்வே லைன் 190 மீட்டர் நீளம் உள்ளது. தற்போது பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே மேற்கூறிய இடங்களுக்குத் தார்ச் சாலை போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

[2003 ஜனவரி 29

84—

**பொதுக் கிணறு**

**வினா எண் 12819—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், செஞ்சி கிராமப் பொதுக் கிணறு மூடப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செஞ்சி ஊராட்சியில் அமைந்திருந்த பழைய பொதுக் கிணறு நீர் இல்லாததாலும், துர்நாற்றம் வீசி பொது மக்களுக்கு சுகாதாரக் கேடாக இருந்ததாலும் செஞ்சி ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் இயற்றப்பட்டு மூடப்பட்டுவிட்டது.

85—

**நவீன கழிப்பிட வசதி**

**வினா எண் 13379—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் மற்றும் பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் நவீன கழிப்பிட வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் பேருந்து நிலையம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் பேரூராட்சியில் ஏற்கனவே பேருந்து நிலையம் கட்டண கழிப்பிட வசதிகளுடன் இயங்கி வருகிறது. கூடுதலாக நவீன கழிப்பிடம் கட்ட போதிய இட வசதியில்லாததால் நவீன கழிப்பிட வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் அமைக்க சாத்தியக்கூறு இல்லை. பாப்பாரப்பட்டி பேரூராட்சியில்



2003 ஜனவரி 29]

இடவசதி இல்லாததால் பேருந்து நிற்குமிடம் மட்டுமே உள்ளது. இங்கு நவீன கழிப்பிட வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

86—

**பேருந்து நிலையம் பராமரிப்பு**

**வினா எண் 15192—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கயத்தார் பழுதாகியுள்ள பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கான தங்குமிடம், கழிப்பறைகள் கட்ட உள்ளாட்சி நிர்வாகம் நிதி ஒதுக்கீடு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு பேரூராட்சி பகுதியிலுள்ள பேருந்து நிலையம் பழுதடைந்து உள்ளதையும், பயணிகளுக்கான தங்குமிடம் மற்றும் கழிப்பறைகளைக் கட்டுவதற்கு தற்போது பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை என்பதால் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள திட்டம் எதுவும் இல்லை.

87—

**தொலைக்காட்சிப் பெட்டி**

**வினா எண் 15546—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், தேதியூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் தெருவிற்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், தேதியூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் தெருவிற்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

[2003 ஜனவரி 29

88—

## தொலைக்காட்சிப் பெட்டி

**வினா எண் 15550—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடவாசல் ஒன்றியம், சீதக்கமங்களம் ஊராட்சி, மணவெளி கிராமத்திற்கு தொலைக்காட்சிப் பெட்டி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குடவாசல் ஒன்றியம், சீதக்கமங்களம் ஊராட்சி, மணவெளி கிராமத்திற்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

89—

## பாலம் கட்டுதல்

**வினா எண் 17407—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி நகரம், நங்கநலத் தெருவிற்கு தார்ச் சாலை, சிறிய பாலம் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி நகராட்சி நங்கநலத் தெரு 250 மீட்டர் நீளமுடையதாகும். மேற்படி சாலையில் 150 மீ. நீளத்திற்கு 1998 ஆம் ஆண்டில் "சொர்ண ஜெயந்தி சகார் ரோஜ்கார் யோஜனா" திட்டத்தின் கீழ் ரூ. 1.50 இலட்சத்தில் சாலைப் பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 100 மீ. சாலை மற்றும் சிறிய பாலம் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ. 2.00 லட்சம் ஆகும். தற்சமயம் நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால், மீதமுள்ள சாலை மற்றும் சிறுபாலம் கட்டும் பணியை நகராட்சியால் செய்ய இயலவில்லை.



2003 ஜனவரி 29]

90—

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 17436—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி நகரம், திருவந்திக் கட்டளை ஆதிதிராவிட தெருவிற்கு தார்ச் சாலை போட்டுக் கொடுப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி நகரம் திருவந்திக்கட்டளை ஆதிதிராவிட தெரு மொத்தம் 500 மீட்டர் நீளமுடையது. இதில் 400 மீட்டர் நீள சாலை 1997-98 ஆம் ஆண்டு தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 1.17 லட்சத்தில் தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. நகராட்சியின் பொது நிதியில் நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் மீதமுள்ள 100 மீட்டர் நீளத்துக்கு இந்த நிதி ஆண்டில் தார்ச் சாலை அமைக்க இயலவில்லை.

91—

## குளம் தூர் வாருதல்

**வினா எண் 17541—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, சீர்காழி நகராட்சிக்குட்பட்ட காந்திப் பூங்காவில் உள்ள கரிககுளத்தை தூர்வாரி சுத்தம் செய்து பொது மக்களுக்கு உபயோகமாக இருக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி நகராட்சிக்குட்பட்ட காந்தி பூங்கா மையத்தில் அமைந்துள்ள கரிக்குளம் 70 மீ. x 60 மீ. அளவுள்ளது ஆகும். மேற்படி குளத்திற்கு தடுப்புச் சுவர் கட்டவும் தூர்வாரி சுத்தம் செய்யவும் ரூ. 7.00 லட்சம் செலவாகும். நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் மேற்படி பணியை நகராட்சியால் எடுத்துச் செய்ய இயலவில்லை.

**92—**

**வாலாஜா வாய்க்கால் பணி**

**வினா எண் 18439—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி பண்ருட்டி நகரத்தில் 5-வது வார்டில் வாலாஜா வாய்க்கால் பணியை பூர்த்தி செய்து தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பண்ருட்டி தொகுதி பண்ருட்டி நகரத்தில் 5-வது வார்டு வாலாஜா வாய்க்காலின் ஒரு பகுதி பணிகள் 1996—2001 ஆம் ஆண்டின் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் மீதமுள்ள பணியை எடுத்துச் செய்ய நகராட்சியால் இயலவில்லை.



**93—**

**சந்தனக் கடத்தல் வழக்குகள்**

**வினா எண் 25633—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கடந்த ஆண்டு சந்தனக் கடத்தல் வழக்குகள் எத்தனை பதிவு செய்யப்பட்டது?

*(ஆ)* அதன் மதிப்பு எவ்வளவு என அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* கடந்த ஆண்டில் (1-4-2001 முதல் 31-3-2002 வரை) சந்தனமரக் குற்றங்கள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 408.

*(ஆ)* கடந்த ஆண்டில் (1-4-2001 முதல் 31-3-2002 வரை) குற்ற வழக்குகளில் 17.40 டன் சந்தன மரங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் மதிப்பு ரூ. 62.85 லட்சம் ஆகும்.

**94—**

**கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்**

**வினா எண் 21641—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., ஈ.டி. 912, 2001 ஆம் ஆண்டில் எவ்வளவு லாபத்தில் இயங்கியது?

*(ஆ)* இந்த உற்பத்தியாளர் ஒன்றியத்திலிருந்து என்னென்ன பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் தணிக்கை 2000-2001 ஆம் ஆண்டிற்கு முடிவு பெறவில்லை. ஒன்றியத்தின் 2000-2001 ஆம் ஆண்டின் உத்தேச நட்டம் ரூ. 151.27 இலட்சங்கள். ஒன்றியத்தின் 2001-2002 ஆம் ஆண்டின் உத்தேச நட்டம் ரூ. 313.52 இலட்சங்கள்.

(ஆ) சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில், பால், சமநிலைப்படுத்திய பால், கொழுப்புச்சத்து நீக்கிய பால், குறைந்த கொழுப்புச்சத்து உள்ள பால், அதிக கொழுப்புச்சத்து உள்ள பால், வெண்ணெய், நெய், பால்பொடி, மசாலா மோர், பால் கோவா, மைசூர்பாக், டெட்ரா பால், டெட்ரா நறுமணப்பால், டெட்ரா மாம்பழச்சாறு ஆகியவை தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**95—**

### அரசு படகு கட்டுமானம்

**வினா எண் 16865—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் சிறுபடகுகள் கட்டுமான தொழிலகம் அரசு அமைத்துள்ளது?

(ஆ) தனியார் வசமுள்ள சிறுபடகுகள் கட்டுமானத் தொழிலகம் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் சிறுபடகுகள் கட்டுமான தொழிலகம் அரசால் ஏதும் அமைக்கப்படவில்லை.

(ஆ) தமிழகத்தில் தனியார் வசமுள்ள சிறுபடகுகள் கட்டுமான தொழிலகங்கள் மொத்தம் 31 உள்ளன. அவை மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—



| | | |
|---|---|---|
| 1. காஞ்சிபுரம் மாவட்டம் | .. | 4 |
| 2. கடலூர் மாவட்டம் | .. | 5 |
| 3. புதுக்கோட்டை மாவட்டம் | .. | 4 |
| 4. தஞ்சாவூர் மாவட்டம் | .. | 3 |
| 5. தூத்துக்குடி மாவட்டம் | .. | 7 |
| 6. கன்னியாகுமரி மாவட்டம் | .. | 8 |
| மொத்தம் | .. | 31 |

**96—**

### குற்ற வழக்குகள்

**வினா எண் 17018—திரு. டி. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் புத்தேரி குளத்தில் 30-1-2002 அன்று மீன் பிடிப்பது மற்றும் குத்தகைக்கு விடுவது தொடர்பாக இரு தரப்பினருக்கிடையே ஏற்பட்ட மோதல் தொடர்பாக அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவரெவர் மீது குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டம், புத்தேரி குளத்தில் மீன் பிடிப்பது மற்றும் குத்தகைக்கு விடுவது தொடர்பாகவும், ஏற்பட்ட பிரச்சினை குறித்து மாவட்ட ஆட்சித்தலைவரின் ஆலோசனைப்படி 1-2-2002 மற்றும் 2-2-2002 ஆகிய நாட்களில் இரு பிரிவினரையும் அழைத்து நடத்திய சமாதானக் கூட்டத்தில் எவ்வித உடன்பாடும்

ஏற்படவில்லை. மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களிடையே 4-2-2002-ல் நடைபெற்ற சமாதானக் கூட்டத்திலும் உடன்பாடு ஏதும் ஏற்படவில்லை.

(ஆ) இது தொடர்பாக வடசேரி காவல் நிலையத்தில் குற்ற வழக்கு ஏதும் எவர் மீதும் பதிவு செய்யப்படவில்லை.

**97—**

**மீனவர் விடுவித்தல்**

**வினா எண் 18435—திரு. டி. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், தூத்தூர் கிராமத்திலிருந்து கடலில் மீன்பிடிக்கச் சென்று திசைமாறி மினிகாய் கடல் எல்லைக்குள் வைத்து 9-1-2002 அன்று மாலத்தீவு அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்ட கே.கே.டபிள்யூ.பி. 1073 ''நதீஸா'' என்ற படகினையும் அதன் உரிமையாளரான திரு. ஆல்பர்ட் என்பவரை விடுவிக்க தமிழக அரசு, மத்திய அரசு மூலமாக என்ன நடவடிக்கை எடுத்துள்ளது.

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூர் மீனவர் கிராமத்தைச் சேர்ந்த 11 மீனவர்கள் ''நதீஸா'' என்று பெயரிடப்பட்ட விசைப்படகு எண் கே.கே.டபிள்யூ.பி. 1073-ல் சட்ட விரோதமாக மாலத்தீவு கடற்பகுதிக்குள் நுழைந்ததைத் தொடர்ந்து 10-01-2002 அன்று மாலத்தீவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு மாலத்தீவில் [illegible] ட்டனர். மத்திய அரசு உதவியுடன் இவ்வரசு [illegible] ள்ள இந்திய தூதரகம் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் கைது செய்யப்பட்ட 11 மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டு தாயகத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டு விட்டனர். மேற்கண்ட விசைப்படகின் உரிமையாளர் திரு. வி. ஆல்பர்ட்



என்பவர் அப்படகில் இல்லாததால், அவர் மாலத்தீவு அதிகாரிகளால் கைது செய்யப்படவில்லை.

**98—**

**மீன் விற்பனை நிலையம்**

**வினா எண் 19194—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரில் காலியாக உள்ள நகராட்சி இடத்தில் மீன் விற்பனை நிலையம் துவங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரில் காலியாக உள்ள நகராட்சியின் இடத்தில் மீன் விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**99—**

**சுற்றுலாத் துறை கைடுகள்**

**வினா எண் 11471—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 29

(அ) ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் கோயிலுக்கு சுற்றுலாப் பயணிகளுக்காக அரசு ஏதேனும் கைடுகள் (Tourist Guide) நியமனம் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் திருக்கோயிலுக்கு சுற்றுலாப் பயணிகளுக்காக சுற்றுலாத் துறை கைடுகள் (Tourist Guide) நியமனம் செய்யவில்லை. ஸ்ரீரங்கம் கோயில் நிர்வாகத்தால் அனுமதி அளிக்கப்பட்ட 42 வழிகாட்டிகள் இங்கே பணிபுரிகிறார்கள்.

(ஆ) எழவில்லை.

100—

### சுற்றுலா மயமாக்குதல்

**வினா எண் 12823—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராணிப்பேட்டை தொகுதி, வள்ளிமலை அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மற்றும் ரத்தினகிரி திருக்கோயில் சுற்றுலா மயமாக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

வேலூரில் ராணிப்பேட்டை தொகுதி, வள்ளிமலை அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மற்றும் ரத்தினகிரி திருக்கோயில் ஆகியவற்றை சுற்றுலா மயமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகிறது.



2003 ஜனவரி 29]

## *பட்டியல் 3

1—

### வேகத் தடை

**வினா எண் 9395—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியிலிருந்து திருப்பத்தூர் சாலையில் அரியகுளம் கூட்ரோடு அருகில் விபத்தைத் தவிர்க்க "வேகத் தடை" அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?"

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

தருமபுரி-திருப்பத்தூர் சாலையில் அரியகுளம் கூட்ரோடு சாலை சந்திப்பில் போதுமான அளவு இடவசதி உள்ளது. இவ்விடத்தில் பஸ் நிறுத்தம் உள்ளதால் மேற்படி இடத்தில் வேகத்தடை அமைக்கத் தேவையில்லை.

2—

### சாலையை அகலப்படுத்துதல்

**வினா எண் 9912—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏலகிரி-பழைய ஏலகிரி சாலை வரை தார்ச் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பணியினை இனிவரும் ஆண்டுகளில் நிதி வசதிக்கேற்ப எடுத்துச் செய்ய பரிசீலனை செய்யப்படும்.

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2003 ஜனவரி 29

3—

**தார்ச் சாலையைச் சீர்செய்தல்**

**வினா எண் 9914—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி பழனிகவுண்டன் கொட்டாய் வரையிலான தார்ச் சாலையை சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலையில் கி.மீ.0/0-2/0 வரையிலான பகுதி பழுதடைந்த சாலைப் பகுதிகள் சீரமைத்தல் கட்டம் 2-ன் கீழ் சாலை செப்பனிடப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள பகுதி கி.மீ. 2/0-4/0 முன்னுரிமை அடிப்படையில் நிதியுதவி பெறப்பட்ட பின்னர் சீரமைக்க தகுந்த ஏற்பாடு செய்யப்படும்.

4—

**தார்ச் சாலை**

**வினா எண் 9920—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், இண்டூர்-நல்லம்பள்ளி தார்ச் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை சீர் செய்து தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*



2003 ஜனவரி 29]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலைப் பகுதிகள், "பழுதடைந்த சாலைப் பகுதிகள் சீர் செய்தல்" கட்டம் 2-ன் கீழ் ஏற்கெனவே சீரமைக்கப்பட்டு விட்டன. அவ்வப்போது ஏற்படும் நொடிகள் தார் நறுக்குகள் கொண்டு சீரமைத்து போக்குவரத்திற்கு ஏற்ப சாலை பராமரிக்கப்பட்டு வருகின்றது.

5—

**பாலங்கள்**

**வினா எண் 16947—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 2000-2001 ஆம் நிதியாண்டில் புதிதாக எத்தனை பாலங்கள் தமிழகத்தில் கட்டி முடிக்கப்பட்டன?*

*(ஆ) இதற்காக அரசு ஒதுக்கிய நிதி எவ்வளவு?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் நிதியாண்டில் புதியதாக அமைக்கப்பட்ட பாலங்கள் மொத்தம் 191 பாலங்கள் ஆகும்.

(ஆ) இதற்காக அரசு ஒதுக்கிய நிதி ரூ.232.42 கோடிகளாகும்.

[2003 ஜனவரி 29

6—

### சாலை வசதி

**வினா எண் 17886—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம் ஏழுமலை சாலையிலிருந்து பிரிந்து ஜோதில்நாயக்கனூர் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

இச்சாலை 2000-2001 ஆம் ஆண்டில் காலமுறை புதுப்பித்தல் நிதியின் கீழ் புதுப்பிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

7—

### சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 17889—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், நாட்டாப்பட்டி, அரவகுடி வீதி அய்யனார்கோயில் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையை மேம்பாடு செய்ய ரூ.8.50 இலட்சம் தேவைப்படும். எதிர்வரும் நிதியாண்டுகளில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப இப்பணியினைச் செய்ய தக்க வழிவகைகள் ஆய்வு செய்யப்படும்.



2003 ஜனவரி 29]

8—

### சாலை வசதி

**வினா எண் 17891—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், வத்தலக்குண்டு, பேரையூர் சாலையில் பிரிந்து மெக்கிழார்பட்டி வடகாட்டுப்பட்டி செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

இச்சாலையை சீர்செய்ய தோராயமாக ரூ.12.00 இலட்சம் தேவைப்படும். நிதி நெருக்கடி காரணமாக தற்போது இப்பணியினைச் செய்யும் வாய்ப்பு இல்லை.

9—

### சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 17893—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், அல்லிக்குண்டம் ராஜாக்காபட்டி தும்மலக்கப்பட்டி சாலையைச் செப்பனிட அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

இச்சாலையை மேம்பாடு செய்ய சுமார் ரூ.20.50 இலட்சம் தேவைப்படுகிறது. பத்தாவது ஐந்தாண்டு திட்ட (2002-2007) காலங்களில் நபார்டு வங்கியுதவியுடன் எடுக்கப்படவுள்ள மொத்த சாலைப் பணிகளில் இதுவும் சேர்க்கப்பட்டுள்ளது. நபார்டு வங்கி ஒப்புதல் அளித்தவுடன் இப்பணி மேற்கொள்ளப்படும்.

10—

## போதைப் பொருட்கள்

**வினா எண் 24885—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு எத்தனை போதைப் பொருள் கடத்தல் வழக்குகள் போடப்பட்டன?

(ஆ) அதில் எவ்வகையான போதைப் பொருள்கள் கடத்தப்பட்டன?

(இ) அதில் முடிக்கப்பட்ட வழக்குகள் எத்தனை என்பதை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த ஆண்டு 2001-ல் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு போலீசாரால் 1,313 போதைப் பொருள் கடத்தல் வழக்குகள் போடப்பட்டன.

(ஆ) அதில், உலர்ந்த கஞ்சா, கஞ்சாச் செடிகள், ஹிராயின் பவுடர், டிடி ஊசிகள் மற்றும் டயாசிபாம் ஆகிய போதைப் பொருள்கள் கடத்தப்பட்டன.

(இ) அதில், 822 வழக்குகள் முடிக்கப்பட்டன.



11—

## வாகனங்கள்

**வினா எண் 25127—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆய்த்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சாராயக் கடத்தலுக்காக பயன்பட்ட வாகனங்கள் எவ்வளவு காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டன?

(ஆ) அதை அரசாங்கம் ஏலம் விட நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்ட கள்ளச் சாராயக் கடத்தலுக்காகப் பயன்பட்ட வாகனங்களின் விவரம்:—

| | வாகனங்கள் | 2001 | 2002 (ஆகஸ்டு மாதம் வரை). |
|---|---|---|---|
| 1 | லாரி | 13 | 1 |
| 2 | வேன் | 4 | 4 |
| 3 | கார் | 6 | 2 |
| 4 | மோட்டார் சைக்கிள் | 178 | 153 |
| 5 | சைக்கிள் | ... | 16 |
| | மொத்தம் | **201** | **176** |

(ஆ) கள்ளச் சாராயக் கடத்தலில் பயன்பட்டு கைப்பற்றப்பட்ட வாகனங்களை, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் உரிய காலத்திற்கு முன்பாகவே கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக பயன்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், கள்ளச் சாராயக் கடத்தலில் பயன்பட்டு கைப்பற்றப்பட்ட வாகனங்களை அவை அரசுக்கு பயன்படாத நிலையில் இருந்தால் அவற்றை அரசுடைமையாக்கி ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2003 ஜனவரி 29

12—

உடற்பயிற்சி சாதனங்கள்

**வினா எண் 10850—திரு மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், க. உவரி ஊராட்சியிலுள்ள கீழ உவரி/மேல உவரி கிராமங்களுக்கு உடற்பயிற்சி சாதனங்கள் வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

தற்போது நிதிநிலைமையின் காரணமாக திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், க. உவரி ஊராட்சியிலுள்ள கீழ உவரி/மேல உவரி கிராமங்களுக்குத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் உடற்பயிற்சி சாதனங்கள் வழங்கிட வழிவகை இல்லை.

13—

விளையாட்டுப் பள்ளிகள் தொடங்குதல்

**வினா எண் 12008—திரு பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் விளையாட்டுப் பள்ளிகள் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் ஆரம்பிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் விளையாட்டுப் பள்ளிகள் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



2003 ஜனவரி 29]

14—

உடற்பயிற்சி மையம்

**வினா எண் 25495—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை காந்தி நகரில் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் உடற்பயிற்சி மையம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள நிதி நிலைமைகள் காரணமாக புதுக்கோட்டை காந்தி நகரில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் உடற்பயிற்சி மையம் அமைக்க வழிவகை இல்லை.

15—

திருமண மண்டபம்

**வினா எண் 12125—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் விநாயகர் கோயில் திருமண மண்டபத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் அருள்மிகு விநாயகர் திருக்கோயில் திருமண மண்டபத்திற்கு மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு ஆகிய வசதிகள் செய்யப்பட்டு, மராமத்துப் பணிகள் உபயதாரர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு, தற்போது நல்ல நிலையில் உள்ளதால் இதனை அரசு புதுப்பிக்கும் அவசியம் எழவில்லை.

[2003 ஜனவரி 29

16—

### விடுதி

**வினா எண் 20589—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ஸ்ரீநீலகண்ட விநாயகர் ஆலயத்தில் பக்தர்கள் தங்குவதற்கு அறநிலையத் துறையின் மூலம் தங்கும் விடுதி ஏற்படுத்தித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ஸ்ரீநீலகண்ட விநாயகர் திருக்கோயிலுக்கு அருகில் தங்கும் விடுதி ஒன்று ரூபாய் மூன்று லட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டு விரைவில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு உரிய நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அங்கீகாரம் பெற்று பணிகள் தொடங்கப்பட உள்ளன.

17—

### அதிகாரிகள் மற்றும் எழுத்தர் நியமனம்

**வினா எண் 20693—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வட்டம், பெருமாநல்லூர் அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் கோயிலுக்கு முழு நேர நிர்வாக அதிகாரி மற்றும் எழுத்தர் நியமனம் செய்ய அரசு உத்தரவிடுமா?



2003 ஜனவரி 29]

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், பெருமாநல்லூர் அருள்மிகு கொண்டத்து காளியம்மன்கோயில் சட்டப் பிரிவு 46(2)-ன்கீழ் பட்டியலில் சேர்க்கப்பட்ட திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலைத் தலைமையிடமாகக் கொண்டு தனியே செயல் அலுவலர் நிலை-3 பதவி ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இதுகாறும் தனி செயல் அலுவலர் நியமனம் செய்யப்படாமல் பணியிடம் காலியாக உள்ள நிலையில் இத்திருக்கோயிலுக்குத் திருப்பூர் வட்டம், முதலிபாளையம், அருள்மிகு கரிய காளியம்மன் திருக்கோயிலின் 3-ம் நிலை செயல் அலுவலர் கூடுதல் பொறுப்பில் நியமிக்கப்பட்டு நிர்வாகம் பார்க்கப்பட்டு வருகிறது. தேர்வாணையம் மூலம் புதிய செயல் அலுவலர் தேர்வு செய்யப்பட்டவுடன் அல்லது இத்திருக்கோயிலுக்கு மாறுதல் வேண்டி நிலை 3 செயல் அலுவலர் யாரேனும் விண்ணப்பித்தாலோ தனியே முழு நேர செயல் அலுவலர் உடனடியாக நியமனம் செய்யப்படுவார். இத்திருக்கோயிலுக்கு எழுத்தர் பணியிடம் தேவையின் அடிப்படையில் கோரிக்கை வரப்பெறின் அதனை அரசு பரிசீலிக்கும்.

18—

### துணை சுகாதார நிலையம்

**வினா எண் 23755—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் உள்ள சின்னவீரம்பட்டி, குரலுக்குட்டை, கன்னமநாய்க்கனூர், கொடுங்கியம், திருமூர்த்தி நகர், போடிப்பட்டி, வல்லக்குண்டாபுரம், சின்னவாளவாடி, வெங்கிட்டாபுரம் ஆகிய இடங்களில் அரசு துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 ஜனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சின்னவீரம்பட்டி, கன்னமநாய்க்கனூர், திருமூர்த்தி நகர், போடிப்பட்டி, வல்லக்குண்டாபுரம், சின்னவாளவாடி, வெங்கிட்டாபுரம் ஆகிய ஏழு இடங்களிலும் ஏற்கெனவே துணை சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன.

குரலுக்குட்டை மற்றும் கொடுங்கியம் ஆகிய இரு கிராமங்களும் முறையே மலையாண்டிபட்டினம் மற்றும் எரிசல்பட்டி ஆகிய துணை சுகாதார நிலையங்கட்கு உட்பட்ட பகுதியாகும். இந்தத் துணை சுகாதார நிலையங்கள் வாயிலாக குரலுக்குட்டை மற்றும் கொடுங்கியம் கிராமங்களில் உள்ள மக்களுக்குப் பொது சுகாதாரம் மற்றும் தாய்சேய் நலப் பணிகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

மைய அரசின் வழிகாட்டியின்படி 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. குரலுக்குட்டை மக்கள் தொகை 2036 மற்றும் கொடுங்கியம் மக்கள் தொகை 1,840 ஆகும். குரலுக்குட்டை மற்றும் கொடுங்கியம் கிராமத்தின் மக்கள் தொகை குறைவாக உள்ளதால் இக் கிராமங்களில் துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**19—**

### விடுமுறை இல்லங்கள்

**வினா எண் 28578—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மூலமாக தொழிலாளர்கள் குடும்பத்துடன் 'சுற்றுலா' சென்று தங்குவதற்கு அரசு சார்பில் எத்தனை விடுமுறை இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மூலமாக தொழிலாளர்கள் குடும்பத்துடன் சுற்றுலா சென்று தங்குவதற்கு அரசு சார்பில் விடுமுறை இல்லங்கள் ஏதும் கட்டப்படவில்லை.



2003 ஜனவரி 29]

**20—**

### பதிவுத் திருமணங்கள்

**வினா எண் 25072—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை எடப்பாடியில் உள்ள சார்பதிவகத்தில் எத்தனை பதிவுத் திருமணங்கள் நடைபெற்றன?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

1967 ஆம் ஆண்டிலிருந்து 2001 டிசம்பர் வரை 484 திருமணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 2001 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய மட்டிலும் 17 திருமணங்கள் பதிவு செய்யப்பட்டன.

**21—**

### திட்டப் பணிகள்

**வினா எண் 16799—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண்மைத் துறை மூலமாக செயலாக்கத்திலுள்ள திட்டப் பணிகள் என்னென்ன?

(ஆ) அவற்றின் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் மத்திய அரசு, மாநில அரசு திட்டங்கள் 2001-2002 ஆம் ஆண்டு மார்ச் 2002 மாதம் வரை செயல்படுத்தப்பட்ட விவரம் இத்துடன் திட்டவாரியாக இணைக்கப்பட்டுள்ளது.

(ஆ) திட்டப் பணிகள் அனைத்தும் நல்ல முன்னேற்றம் பெற்று சாதனை அடைந்துள்ளன.

## புதுக்கோட்டை மாவட்டம்

திட்டப் பணிகள் முன்னேற்றம் மார்ச் 2002 முடிய செயல் பணிகள்

ரூபாய் இலட்சத்தில்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | 2001-2002 திருத்திய மதிப்பீடு | மார்ச் 2002 முடிய சாதனை |
|---|---|---|---|
| 1. | அரசு விதைப் பண்ணைகள் | 7.700 | 9.953 |
| 2. | நெல், சிறுதானிய விதைக் கொள்முதல் மற்றும் விநியோகம் | 64.700 | 66.887 |
| 3. | நெல், சிறுதானிய விதைக் கொள்முதல் மற்றும் விநியோகம் (சிறப்புக் கூறுகள் திட்டம்) | 20.220 | 22.164 |
| 4. | 100 வேளாண்மை விரிவாக்க மையங்கள் | 0.451 | 0.459 |
| 5. | பயறு விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம் | 11.550 | 11.550 |
| 6. | பயறு விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம் (சிறப்புக் கூறுகள் திட்டம்) | 1.782 | 1.772 |
| 7. | விதை சுத்திகரிப்பு நிலையங்கள் | 4.440 | 2.068 |
| 8. | எண்ணெய் வித்துக்கள் உற்பத்திப் பெருக்கத் திட்டம் | 20.700 | 26.735 |
| 9. | எண்ணெய் வித்துக்கள் உற்பத்திப் பெருக்கம் (சிறப்புக் கூறுகள் திட்டம்) | 10.552 | 10.582 |
| 10. | நிலக்கடலை ஆதார விதை உற்பத்தி மையங்கள் | 55.749 | 48.147 |
| 11. | காய்கறி விதை உற்பத்தி மற்றும் விநியோகம் | 12.531 | 12.531 |
| 12. | பசுந்தாளுர விதைக் கொள்முதல் மற்றும் விநியோகம் (25 சதம் மானிய விலையில் விநியோகம்) | 1.100 | 1.100 |
| 13. | பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் | 3.978 | 4.523 |
| 14. | பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் (சிறப்புக் கூறுகள் திட்டம்) | 0.829 | 0.843 |
| 15. | ஒருங்கிணைந்த தென்னை மேம்பாடு | 5.680 | 2.890 |
| 16. | தென்னங்கன்றுகள் மேம்பாட்டிற்கான விரைவுத் திட்டம் | 5.780 | 2.710 |



ரூபாய் இலட்சத்தில்

| வ.எண் | திட்டத்தின் பெயர் | 2001-2002 திருத்திய மதிப்பீடு | மார்ச் 2002 முடிய சாதனை |
|---|---|---|---|
| 17. | உழவர் பயிற்சி நிலையங்கள் | 0.471 | 0.471 |
| 18. | தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் | 0.300 | 0.300 |
| 19. | தமிழ்நாடு பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (சிறப்புக் கூறுகள் திட்டம்) | 19.518 | 13.069 |
| 20. | நுண்ணூட்ட உரக்கலவை உற்பத்தி மற்றும் விநியோகம் (நிலக்கடலை) | 199.550 | 96.480 |
| 21. | நீலப் பச்சைப் பாசி உற்பத்தி மற்றும் விநியோகம் | 0.166 | 0.166 |
| 22. | மண் பரிசோதனை நிலையங்கள் | 17.094 | 9.060 |
| 23. | நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் | 11.456 | 7.650 |
| 24. | நுண்ணுயிர் உர உற்பத்தி மற்றும் விநியோகம் உயிர் உரங்கள் உற்பத்தி மையங்கள் | 32.242 | 30.110 |
| 25. | மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம் | 31.003 | 26.860 |
| 26. | பயிர் விளைச்சல் போட்டி | 0.300 | 0.305 |
| | **பகுதி 2 திட்டங்கள்** | | |
| 27. | பயறு வகைப் பயிர்களின் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு உழவர் வயல்வெளிப் பள்ளிகள் அமைத்தல் | 0.195 | 0.195 |
| 28. | வீரிய ஒட்டு நெல் | 0.500 | 0.500 |
| | மாநில திட்டங்கள் மொத்தம் | 540.537 | 412.080 |
| | **மத்திய அரசுத் திட்டங்கள் (100 சதம் உதவி)** | | |
| 1. | அரிசி சிறுதளைத் திட்டம் | 1.064 | 1.064 |
| 2. | சோளம், கம்பு பயிர்களுக்கான சிறுதளைத் திட்டம் | 1.205 | 1.205 |
| | மத்திய அரசு திட்டங்களின் மொத்தம் | 2.269 | 2.269 |
| | **மத்திய மாநில அரசுகள் இணைந்து பங்கேற்கும் திட்டங்கள்** | | |
| | **அ. தொழில் நுட்பக் குழு திட்டங்கள்** | | |
| 1. | தேசிய பயறு வகைகள் மேம்பாட்டுத் திட்டம் | 5.356 | 5.305 |
| 2. | தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டம் | 2.236 | 2.223 |

[2003 ஜனவரி 29

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ரூபாய் இலட்சத்தில் 2001-2002 திருத்திய மதிப்பீடு | மார்ச் 2002 முடிய சாதனை |
|---|---|---|---|
| | பந்தி தொழில்நுட்பக் குழு-சிறு குழு II | | |
| 3. | எண்ணெய்வித்துக்கள் பெருக்கத் திட்டம் | 12.664 | 12.338 |
| | ஆ. வேளாண்மை மேலாண்மைத் திட்டம் | | |
| 1. | ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம்-அரிசி | 6.444 | 24.628 |
| 2. | ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம்-அரிசி (சிறப்புக் கூறுகள் திட்டம்) | 2.753 | 4.692 |
| 3. | தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 20.400 | 18.103 |
| 1. | தென்னை வளர்ச்சித் திட்டம் | 2.120 | 2.210 |
| 5. | தென்னந்தோப்புகளின் உற்பத்தி அதிகரிக்க ஒருங்கிணைந்த பண்ணையம் | 1.630 | 1.630 |
| | மத்திய மாநில அரசுகள் பங்கேற்கும் திட்டங்கள் மொத்தம் | 53.603 | 71.129 |

**22—**

### சத்துணவு மையம்

**வினா எண் 5352—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், சேர்விளாகம், மதுராகாந்தி நகரில், சத்துணவு மையம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, சேர்விளாகம், மதுராகாந்தி நகரில் தொடக்கப் பள்ளி ஏதும் இல்லை. இங்கு சத்துணவு மையம்



2003 ஜனவரி 29]

செயல்படவில்லை. சேர்விளாகம் மதுராகாந்தி நகரில் பள்ளி ஏதும் செயல்படாததால் சேர்விளாகம் கிராமத்தில் பள்ளி சத்துணவு மையத்தில் மொத்தமாக தற்போது மாணவர்கள் மதிய உணவு சாப்பிடுகின்றனர். மேலும், வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில். சேர்விளாகம் என்பது வருவாய் கிராமம் ஆகும். அதனுடைய குக்கிராமம் சேர்விளாகம் மதுராகாந்தி நகர் என்பதாகும். இவ்விரண்டிற்கும் சுமார் 1.5 கி.மீ. தூரம் இடைவெளி உள்ளது. மதுராகாந்தி நகரில் சத்துணவு மையம் ஏதும் இல்லாததால் வருவாய் கிராமமான சேர்விளாகத்தில் உள்ள அவ்வை நிதியுதவி பெறும் பள்ளியில் சத்துணவு மையம் செயல்படுகிறது, அதில் 130 மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

**23—**

### சத்துணவுக் கூடங்களைப் புதுப்பித்தல்

**வினா எண் 10134—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதிக்குட்பட்ட குறிச்சி பேரூராட்சியில் பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடங்களைப் புதுப்பிக்க அரசு திட்டம் வைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை நிலை எண் 171, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 5-11-2001-ல் பழுதடைந்துள்ள இம் மையங்களை 2001-2002 ஆம் ஆண்டில் பழுது நீக்கம் செய்ய ரூ. 2510.28 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டிருந்தது. அரசின் நிதி நிலை காரணமாக 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ. 12.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டில், கோவை மாவட்டத்தில் பழுதடைந்துள்ள மையங்களை பழுது நீக்கம் செய்யும் பணி எடுத்துக்கொள்ளப்படும்.

24—

### சத்துணவுக் கூடக் கட்டடம்

**வினா எண் 10551—திரு. தி. வேல் முருகன் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி முத்து சரன்குப்பம் கிராமத்தில் சத்துணவுக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, முத்து சரன்குப்பம் கிராமத்தில் உள்ள பள்ளி சத்துணவு மையத்தில் சமையல் அறைக் கூடம் நல்ல நிலையில் உள்ளது. எனவே, சத்துணவுக் கூடம் கட்டவேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

25—

### குழந்தைகள் நல காப்பகம்

**வினா எண் 10688—திரு. ஓ. பழனிசாமி :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், அக்கரைக்கோட்டகம் ஊராட்சி சந்தனநல்லூர் கிராமத்தில் குழந்தைகள் நலக் காப்பகம் (பாலர் பள்ளி) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், அக்கரைக்கோட்டகம் ஊராட்சி, சந்தனநல்லூர் கிராமத்தில் குழந்தைகள் நலக் காப்பகம் (பாலர் பள்ளி) அமைக்கும் திட்டம்



அரசிடத்தில் இல்லை. காரணம் அரசு விதிகளின்படி புதியதாக பாலர் பள்ளி தொடங்கிட மொத்த மக்கள் தொகை 1,000 இருக்க வேண்டும். மேற்படி சந்தனநல்லூர் கிராமத்தில் மக்கள் தொகை 424 மட்டுமே உள்ளது. மேலும், 6 வயது வரையிலான குழந்தைகளின் எண்ணிக்கை 50 மட்டுமே உள்ளது. எனவே, புதியதாக பாலர் பள்ளி அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

26—

### பாலர் பள்ளி

**வினா எண் 12030—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், கோவிந்தப்பேரி கிராமத்தில் பாலர் பள்ளி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், கோவிந்தப்பேரி கிராமத்தில் ஏற்கனவே குழந்தைகள் நல மையம் செயல்பட்டுவருகிறது. இதில் 2 குழந்தைகளே பயன்பெற்று வருகிறார்கள். இக்கிராமத்தில் மக்கள் தொகையும் மிகவும் குறைவாகவே இருக்கிறது. எனவே, அரசு விதிகளின்படி இக்கிராமத்தில் புதியதாக பாலர் பள்ளி அமைக்க இயலாது.

27—

### சத்துணவுக் கூடம்

**வினா எண் 12577—திரு. தி. வேல் முருகன் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மானடிகுப்பம் கிராமத்தில் சத்துணவுக் கூடம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மானடிகுப்பம் கிராமத்தில் உள்ள பள்ளி, நிதி உதவி பெறும் ஆரம்பப் பள்ளி ஆகும். நிதி உதவி பெறும் பள்ளிகளைப் பொறுத்தமட்டில் பள்ளி நிர்வாகம்தான் சத்துணவுக் கூடம் அமைத்துக்கொள்ள வேண்டும். அதே போல் மேற்படி பள்ளியில் புதியதாக சமையல்கூடம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ள பள்ளி நிர்வாகிக்கு கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**28—**

### மூன்று சக்கர மிதி வண்டி

**வினா எண் 14515—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001-ல் கோயம்புத்தூர், நாமக்கல், தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் உடல் ஊனமுற்றோர்க்கான மூன்று சக்கர மிதிவண்டி எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

(ஆ) காத்திருப்போர் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

| வ.எண் | மாவட்டம் | வழங்கப்பட்ட மூன்று சக்கர மிதிவண்டிகள் | காத்திருப்போர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கோவை | 55 | 56 |
| 2. | நாமக்கல் | 55 | 33 |
| 3. | தருமபுரி | 95 | 100 |
| 4. | சேலம் | 115 | 200 |
| | மொத்தம் | **320** | **389** |





(இ) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு, 2002-2003 ஆம் ஆண்டில் மூன்று சக்கர சைக்கிள் வேண்டி காத்திருப்போருக்கு, மூன்று சக்கர சைக்கிள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**29—**

### மூன்று சக்கர வாகனங்கள்

**வினா எண் 14686—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊனமுற்ற பள்ளி மாணவ, மாணவியர்க்கு மூன்று சக்கர வாகனங்கள் வழங்க அரசு சார்பில் திட்டம் தீட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

ஒவ்வொரு ஆண்டும் ஊனமுற்ற பள்ளி மாணவ, மாணவியருக்கு இலவசமாக மூன்று சக்கர சைக்கிள் அரசு மூலம் வழங்கப்பட்டு வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டிற்கும் மூன்று சக்கர சைக்கிள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**30—**

### பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 14945—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் காலியாகவுள்ள ஆயாக்களின் பணியிடங்களை நிரப்ப அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக அரசின் தடையாணை உள்ளதால் இத்தடையாணை

நீக்கப்பட்ட பின்னரே குழந்தைகள் காப்பகத்தில் காலியாகவுள்ள ஆயாக்களின் பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக அரசால் நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

31—

மூன்று சக்கர சைக்கிள்

**வினா எண் 14964—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூன்று சக்கர சைக்கிள் வழங்கக் கோரி விண்ணப்பித்த ஊனமுற்ற பள்ளி மாணவ, மாணவியருக்கு போர்க்கால அடிப்படையில் மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இத்திட்டம் தீவிரப்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மூன்று சக்கர சைக்கிள்கள் மாவட்டங்களுக்கு தேவையின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மூன்று சக்கர சைக்கிள் வேண்டி விண்ணப்பித்த ஊனமுற்ற நபர்களில் ஊனமுற்ற மாணவ மாணவிகளுக்கு இந்த ஆண்டிலும் முன்னுரிமை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

32—

பாதை வசதி

**வினா எண் 1231—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியம் பாலமலையில் அடக்கும் மேற்பட்ட ஊர்கள் உள்ளதால் மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்டத்தில் சேர்த்து பாதை வசதி அமைத்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், பாலமலை பகுதியை, "ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதியாக" அறிவிக்க கோரி இம்மாநில அரசால் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மைய அரசின் பதில் பெற்றபின் இது தொடர்பாக மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

33—

கடன் உதவி

**வினா எண் 15021—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பண்டஅள்ளி ஆதிதிராவிடர் காலனியில் வசிக்கும் ஏழை மக்களுக்கு தொழில் செய்ய கடன் உதவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி பண்டஅள்ளி ஆதிதிராவிட மக்களிடமிருந்து தாட்கோ மூலம் கடன் உதவி கேட்டு மனுக்கள் வரப்பெறவில்லை. கடன் உதவி கேட்டு மனுக்கள் வரும்பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தகுதியான பயனாளிகளுக்கு கடன் உதவிகள் வழங்கப்படும்.

34—

### சாப்பாட்டுக் கட்டணம்

**வினா எண் 10041—திரு. க. பாரமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசின் மாணவ/மாணவியர் விடுதியில் தங்கிப் படிக்கும் ஆதிதிராவிடர் மாணவ, மாணவியருக்கு 2001-2002 ஆம் ஆண்டில் மாதம் ரூ. 225-லிருந்து ரூ. 300 ஆக உயர்த்தி கொடுக்கப்பட்ட சாப்பாட்டுக் கட்டணம் சேவை ஸ்தாபனங்கள் நடத்தும் இல்லங்களில் படிக்கும் மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இருந்து வழங்கப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள் நடத்தும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ/மாணவியர்களுக்கு, அரசு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 5-12-2001 முதல் ரூ.300 என வழங்கப்படும் உணவுக் கட்டணத்தில், 2/3 பங்கு தொகை (அதாவது மாதமொன்றுக்கு ரூ.200) உணவுக் கட்டணமாக வழங்கப்படுகிறது. இந்தத் தொகை ஆணை வெளியிடப்பட்ட நாளான 20-8-2002 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

35—

### மாணவியர் விடுதி

**வினா எண் 20420—திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அத்தாணியில் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

புதியதாக மாணவ, மாணவியர் விடுதிகள் தொடங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

36—

### பட்டா நிலம்

**வினா எண் 23510—திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதியில் குஜிலியம்பாறை ஒன்றியத்திலுள்ள திருக்கூர்ணம் என்ற ஊரில் 95 ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்ட பட்டா நிலம் பயனாளிகளுக்கு கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், திருக்கூர்ணம் கிராமம், சர்வே எண் 204-ல் 1.620 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 94 வீடற்ற ஆதிதிராவிடர் பயனாளிகளுக்கு 17-6-1999 அன்று தலா 2 சென்ட் வீதம் மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. கடந்த 1-8-2002 அன்று பயனாளிகளுக்கு நிலம் அளந்து கொடுக்கப்பட்டது. இதன்படி 83 பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர்.

37—

### மாணவர் விடுதி

**வினா எண் 24205—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை அரசு மாணவர் கல்லூரி விடுதியில் ஆதிதிராவிட மாணவர்களுக்கான இடங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 ஜனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**38—**

**மாணவியர் விடுதி**

**வினா எண் 24206—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை அரசு மகளிர் கல்லூரி மாணவியர் விடுதியில் ஆதிதிராவிட மாணவிகளுக்கான இடங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**39—**

**பேருந்து நிறுத்தம்**

**வினா எண் 4849—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்காசி-புளியங்குடி சாலையில் உள்ள முத்துசாமிபுரம் கிராமத்தில் பேருந்து நிறுத்தம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தென்காசி-புளியம்பட்டி. சாலையில் உள்ள முத்துசாமிபுரம் கிராமத்தில் சாதாரண குறைந்த தூர புறநகர் பேருந்துகளும், நகர பேருந்துகளும், முத்துசாமிபுரத்தில் நிறுத்தி, பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.



2003 ஜனவரி 29]

**40—**

**திருக்குறள்**

**வினா எண் 5836—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பேருந்துகளில் திருக்குறளை தற்போது புதியதாக எழுதப்படவும், கடிகாரம் வைக்கப்படவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனைத்து அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் பல ஆண்டுகளாக திருக்குறள் எழுதப்படும் வழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது. இதே முறை தற்போதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. பேருந்துகளில் கடிகாரம் வைக்கப்படுவது நடைமுறையில் இல்லை.

**41—**

**பேருந்து வசதி**

**வினா எண் 7745—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, சத்தியவாடி ஊராட்சிக்கு போதிய பேருந்து வசதி இல்லாததால் திண்டிவனத்தில் புறப்படும் பேருந்து எண் 29 சத்தியவாடி கிராமம் வழியாக சென்று வர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வந்தவாசி தொகுதிக்குட்பட்ட சத்தியவாடி கிராமம் கீழ்க்கண்டவாறு பேருந்து வசதி பெற்றுள்ளது.

| வ. எண் | வழித்தட எண் | தடமும் வழியும் | நடைகள் |
|---|---|---|---|
| 1 | டி 10 | திண்டிவனம்-வேப்பங்கரணை (வழி) கொடியம், தாதாபுரம்-சத்தியவாடி | 6 |
| 2. | டி.25 | திண்டிவனம்-கொண்டையாங்குப்பம் (வழி) கொடியம் தாதாபுரம்-சத்தியவாடி | 4 |
| 3 | டி.25 | திண்டிவனம்-நல்லூர் (வழி) கொடியம், தாதாபுரம் சத்தியவாடி கொண்டையாங்குப்பம் | 4 |
| 4. | தனியார் (ஜெயலட்சுமி) | திண்டிவனம்-மாவளவாடி குறுக்கு ரோடு (வழி) தாதாபுரம், சத்தியவாடி | 8 |
| | | மொத்த நடைகள் | **22** |

மேலும் திண்டிவனத்திலிருந்து வெள்ளிமேடுபேட்டை, காட்டேரி இராமலிங்கபுரம், தெய்யார் மார்க்கமாக இயக்கப்பட்டு வரும் டி.29 நகரப் பேருந்தின் நடைகளை கொடியம், தாதாபுரம், சத்தியவாடி, செங்கேணிக்குப்பம் இராமலிங்கபுரம் வழியாக கோரிக்கைப்படி தட மாற்றம் செய்தால் தட நீளம் 9.2 கி.மீ கூடுதலாகும். இதனால் 5 கட்டண நிலைகளும் அதற்கேற்ற நிலையில் பயண நேரமும் கூடுதலாகும்.

எனவே, மேற்கண்ட காரணங்களால் டி.29 நகரப் பேருந்தில் நடைகளை சத்தியவாடி வழியாக தடமாற்றம் செய்திடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**42—**

## நகரப் பேருந்துகள்

**வினா எண் 8270—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில் இயக்கப்படும் அரசு நகரப் பேருந்துகள் எத்தனை?





விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டத்தில், திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகத்தால் 206 நகரப் பேருந்துகள், 8 பணிமனைகளிலிருந்து இயக்கப்பட்டு வருகின்றன. பணிமனை வாரியாக நகரப் பேருந்துகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | | | |
|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி நகரப் பணிமனை | 65 | நகரப் பேருந்துகள் |
| 2. | கட்டபொம்மன் நகர கிளை | 34 | ” |
| 3. | வள்ளியூர் கிளை | 13 | ” |
| 4. | திசையன்விளை கிளை | 3 | ” |
| 5. | பாபநாசம் கிளை | 25 | ” |
| 6. | தென்காசி கிளை | 36 | ” |
| 7. | புளியங்குடி கிளை | 13 | ” |
| 8. | சங்கரன்கோவில் கிளை | 17 | ” |
| | மொத்தம் | **206** | நகரப் பேருந்துகள் |

**43—**

## பேருந்து வசதி

**வினா எண் 9622—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், யாக்கோபுரம் கிராமத்தில் தடம் எண் 250 (அரசு பேருந்து-திருநெல்வேலி) செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழக தடம் எண் 250 மூலம் வள்ளியூர்-செட்டிகுளம் என 4 சுற்றுக்கள் யாக்கோபுரம் வழியாக இயக்கப்பட்டு வருகிறது. இது தவிர, அப்போக்குவரத்துக்

கழகத்தின், நகரப் பேருந்து ஒன்றும், யாக்கோபுரம் வழியாக 6 சுற்றுக்கள் சென்று வருகிறது. மதுரை கோட்டம் 3ன் நகரப் பேருந்துகள் மூலம் யாக்கோபுரம் 10 சுற்றுக்கள் பேருந்து வசதி பெற்றுள்ளது. மக்கள் தொகை சுமார் 600 மட்டுமே கொண்ட இச்சிறிய கிராமத்திற்கு தற்போதுள்ள இப்பேருந்து வசதிகளே போதுமானதாகும். எனவே, யாக்கோபுரம் கிராமத்திற்கு, திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழக தடம் எண் 250 மூலம் கூடுதல் சுற்றுக்கள் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

44—

## சொகுசுப் பேருந்துகள்

**வினா எண் 14363—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்-சென்னை, சேலம்-பெங்களூர் வழித்தடங்களில் இரவு முழுவதும் தனியார் சொகுசு பேருந்துகள் இயக்கப்படுவதைப் போல அரசு சொகுசு பேருந்துகளை இயக்க திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்து கழகத்தின் மூலம் சேலத்திலிருந்து சென்னைக்கு நாள்தோறும் 17 சொகுசு மற்றும் சாதா பேருந்துகள் 32 நடைகளாக இயக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் சேலம் வழியாக சென்னைக்கு நாள்தோறும் 30 சொகுசு மற்றும் சாதா பேருந்துகள் பகல் மற்றும் இரவு முழுவதுமாக இயக்கப்பட்டு வருகின்றன. இதுபோன்று சேலம்-பெங்களூர் தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மற்றும் தருமபுரி ஆகிய கழகங்களிலிருந்து 12 நேரடிப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த வசதியை சேலம்-பெங்களூர் பயணிகள் பயன்படுத்திக்கொள்ள வசதியாக உள்ளது.



45—

## பேருந்து வசதி

**வினா எண் 14902—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் முதல் நரசிமேடு செல்லும் நகரப் பேருந்தை டி.கோளப்பாடி வரை நீட்டிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தடம் எண் 09 மூலம் பெண்ணாகரத்திலிருந்து நரசிமேடு வரை தினசரி 8 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. தடத்தின் நீளம் 30 கி.மீ. ஆகும். நரசிமேடு கிராமத்திலிருந்து டி.கோளப்பாடி வரை தடத்தின் நீளம் 6.2 கி.மீ. தற்போதுள்ள அரசு ஆணைப்படி யாதொரு பேருந்து வசதியும் பெறாத கிராமங்களுக்கு மட்டுமே 30 வது கி.மீ.-லிருந்து 35.0 கி.மீ. வரை நீட்டித்து இயக்க இயலும். நீட்டித்து இயக்க கோரும் தடத்தின் நீளம் 36.2 கி.மீ. ஆக உள்ளதால் பெண்ணாகரம் முதல் நரசிமேடு செல்லும் நகரப் பேருந்தை டி.கோளப்பாடி வரை நீட்டித்து இயக்க இயலாத நிலை உள்ளது. இருப்பினும் பெண்ணாகரத்திலிருந்து முதுகப்பட்டி, இராமகொண்டஅள்ளி வழியாக மஞ்சார அள்ளிவரை இயக்கப்படும் எண் 04 நகரப் பேருந்தினை டி.கோளப்பாடிவரை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

46—

## நேரப் பட்டியல்

**வினா எண் 10601—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 29

நாட்றம்பள்ளி தொகுதியில் முன் அறிவிப்பு இல்லாமல் அடிக்கடி மின்தடை ஏற்படுவதோடு ஒரு நாளைக்கு 6 மணி நேரம் கூட விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதில்லை என்பதால் அரசு தனி கவனம் செலுத்தி மின்சாரம் வழங்கும் நேர பட்டியல் அறிவிப்பு கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு கட்டமைப்பில் அவ்வப்போது ஏற்படும் மாறுதலுக்கேற்ப மின் பளு கட்டுப்பாட்டு மையத்தின் உத்திரவிற்கிணங்க சில நாட்களில் நாட்றம்பள்ளி தொகுதியில் முன்னறிவிப்பில்லாமல் கட்டுப்படுத்தி மின்சாரம் வழங்கப்பட்டது. அதன் பிறகு தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருவதோடு விவசாயிகளுக்கு பகலில் 6 மணி நேரம் மும்முனை மின்சாரமும் வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கப்படும் நேரமும், ஒவ்வொரு மின் பாதையிலும் சுற்றுமுறையில் மின்சாரம் வழங்கப்படும் விவரங்கள் சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகங்களிலும், துணை மின் நிலையங்களிலும் அறிவிப்பு பலகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தகவல் அறிவிக்கப்படாமல் இருக்கும் துணை மின் நிலையங்களிலும் அத்தகவல் அறிக்கையை வெளியிட கள அதிகாரிகளுக்கு உத்தரவு இடப்பட்டுள்ளது.

**47—**

**தனியார் மின்சாரம்**

**வினா எண் 12103—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தனியார் நிறுவனங்களிடமிருந்து எத்தனை சதவீதம் மின்சாரத்தை மின்சார வாரியம் ஆண்டுதோறும் பெற்று வருகிறது?



2003 ஜனவரி 29]

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் தற்போது ஜி.எம்.ஆர். பவர் கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட், சாமல்பட்டி பவர் கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட், பி.பி.என். பவர் ஜெனரேடிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட் மற்றும் சமயநல்லூர் பவர் கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட் எனும் நான்கு தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. இந்நிறுவனங்களிலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியம் ஆண்டுதோறும் பெறும் மின்சாரத்தின் அளவு சதவீதத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1999-2000 | .. | 3.393% |
| 2000-2001 | .. | 3.412% |
| 2001-2002 | .. | 7.34% |

**48—**

**புதிய திட்டங்கள்**

**வினா எண் 12294—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் புதிய திட்டங்கள் மூலம் எடுக்கப்பட்ட மின்சார அளவு எவ்வளவு?

(ஆ) அவ்வாண்டில் திட்ட குறியீடு எவ்வளவு? அது பற்றிய விவரத்தை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் புதிய திட்டங்கள் மூலம், 100 மியூ மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது.

[2003 ஜனவரி 29

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் புதிய மின் உற்பத்தி திட்ட குறியீடு 112.38 மெகாவாட் ஆகும்.

49—

**சீரான மின் விநியோகம்**

**வினா எண் 13946—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் போலீஸ் லைன் 6, 7-வது தெருவிற்கு சீரான மின் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகரத்தில் உள்ள போலீஸ் லைன் 4, 5, 6, 7 மற்றும் 8-வது தெருக்களுக்கு பண்ருட்டி மின் மாற்றி 3-லிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. பண்ருட்டி நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புதிதாக ஒரு மின் மாற்றி (100 கே.வி.எ/22 கி.வோ. திறன் கொண்டது) அமைக்கப்பட்டு போலீஸ் லைன் 7-வது மற்றும் 8-வது தெருக்களுக்கு புதிய மின் பாதைகளும் அமைக்கப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், போலீஸ் லைன் 4, 5, 6-வது தெருக்களுக்கு பண்ருட்டி மின் மாற்றி 3-லிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஆகையால் தற்போது 6 மற்றும் 7-வது போலீஸ் லைன் தெருக்களுக்கு சீரான மின் அழுத்தமுள்ள மின்சாரம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

50—

**மின் வசதி**

**வினா எண் 16658—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஜனவரி 29]

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையபாளையம் ஊராட்சி, கொடக்காரமுடை முருகன் கோயில் தெருவிற்கு மின் வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையபாளையம் ஊராட்சி, கொடக்காரமுடை முருகன் கோயில் தெருவில் மின் வசதி செய்து கொடுக்க 2001-2002 ஆம் ஆண்டு சமன்பாடு மற்றும் ஊக்கநிதி திட்டத்தின்கீழ் 4 (நான்கு) கம்பங்கள் நட்டு 2 மின் விளக்குகள் அமைக்க ஒதுக்கீடு உள்ளதாக பஞ்சாயத்து தலைவர் தெரிவித்துள்ளார். விரைவில் விண்ணப்பம் கொடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளார். விண்ணப்பம் பெறப்பட்டு, இத் திட்டத்திற்கான தொகை அரசினால் செலுத்தப்பட்டவுடன் வேலை முடிக்கப்பட்டு மின் வசதி செய்து கொடுக்கப்படும்.

மேலும், இத்தெருவில் குடியிருப்பவர்கள் எவரிடமிருந்தும் வீட்டு மின் இணைப்பு கோரி விண்ணப்பம் பெறப்படவில்லை. அவ்வாறு பெறப்படின் உடன் மின் வசதி செய்து கொடுக்கப்படும்.

51—

**ஒரு விளக்கு திட்டம்**

**வினா எண் 16819—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் அரசு வழங்கும் இலவச ஒரு வீட்டிற்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தை முறைகேடாக பயன்படுத்தியதாக எத்தனை பேரை அரசு கண்டறிந்துள்ளது?

(ஆ) அவர்கள்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

[2003 ஜனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் அரசு வழங்கும் இலவச 'ஒரு வீட்டிற்கு ஒரு விளக்கு' என்ற திட்டத்தில் முறைகேடாக பயன்படுத்தியதாக 21,053 பேரை அரசு கண்டறிந்துள்ளது.

(ஆ) அவற்றில் 20,896 பேருக்கு நிரந்தர வீட்டுமின் இணைப்புக்களாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன. 156 இணைப்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டன. விதி மீறல் நீக்கப்பட்டு அபராதத் தொகை வசூலிக்கப்பட்ட ஒரு வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**52—**

**இலவச மின்சாரம்**

**வினா எண் 16820—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஒரு வீட்டுக்கு ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் வழங்கி வரும் மின்சாரத்தின் அளவு சுமாராக வருடத்திற்கு எவ்வளவு யூனிட்?

(ஆ) இத்தகைய இலவச மின்சாரத் திட்டத்திற்கு அரசு எவ்வளவு தொகை ஒதுக்க வேண்டியுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் குடில்களுக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தின் கீழ் ஆண்டிற்கு சுமார் 170 மில்லியன் யூனிட் அளவிற்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இத்தகைய இலவச மின்சாரத் திட்டத்திற்கு அரசு உதவித் தொகை எதுவும் வழங்குவதில்லை.



2003 ஜனவரி 29]

**53—**

**மின் கம்பங்கள்**

**வினா எண் 16822—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் எடப்பாடியில் 2001 ஆம் நிதியாண்டில் நவம்பர் மாதம் முடிய பழுதடைந்த எத்தனை மின் கம்பங்களை அரசு மாற்றியமைக்க உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடியில் 2001 ஆம் நிதியாண்டில் நவம்பர் மாதம் வரை பழுதடைந்த ஆர்.சி.சி. 7.5 மீட்டர் கம்பம் 2 எண்களும், ஆர்.சி.சி. 8.0 மீட்டர் கம்பம் 3 எண்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

**54—**

**தொழிற்சாலை**

**வினா எண் 16962—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கரை ஆலையில் கிடைக்கும் சர்க்கரைப்பாகைக் கொண்டு எரிசாராய தொழிற்சாலை அமைக்கலாம் என்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் 3 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் கரும்பிலிருந்து சர்க்கரை

[2003 ஜனவரி 29

உற்பத்தி செய்து வருகின்றன. மேற்படி 19 ஆலைகளிலும் உற்பத்தியாகும் கழிவுப்பாகு சேலம் மற்றும் அமராவதி ஆகிய இரண்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பயன்படுத்தப்படுகிறது. கழிவுப்பாகு பிற நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. கூட்டுறவுத் துறையில் அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் எரிசாராயம் தயாரிக்கும் வடிப்பகம் அமைக்கப்பட்டு எரிசாராயம் உற்பத்தி செய்யப்படுகிறது. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் கழிவுப்பாகை பயன்படுத்தி எரிசாராயம் உற்பத்தி செய்யும் வடிப்பகங்கள் நிர்மாணிக்க போதுமான நிதி ஆதாரம் கிடையாது. ஆலைகளில் நிதி பற்றாக்குறை காரணமாகவும், நட்டத்தில் இயங்கி வருவதாலும், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் கழிவுப்பாகை பயன்படுத்தி புதியதாக எரிசாராய தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**55—**

## சமாதான் திட்டம்

**வினா எண் 27762—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வணிக் வரித் துறையால் அறிவிக்கப்பட்டுள்ள சமாதான் திட்டத்தால் அரசுக்கு கிடைத்துள்ள வரி வருவாய் எத்தனை கோடி?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

1-7-2002 முதல் 31-10-2002 முடிய 4 மாத காலத்திற்கு தமிழ்நாடு விற்பனைவரி (பூசல்களை தீர்வு செய்தல்) சட்டம் 2002-ல் வணிக வரித் துறையால் அறிவிக்கப்பட்ட சமாதான் திட்டம் 2002-ன் கீழ் ரூ.10.34 கோடி வரி வருவாயாக அரசுக்கு கிடைத்துள்ளது.

**56—**

## கூட்டுறவு மதுபானக் கடை

**வினா எண் 15155—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 ஜனவரி 29]

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் கூட்டுறவு மதுபானக் கடை அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

கூட்டுறவுச் சங்கங்கள் மதுபானக் கடைகளை ஏற்று நடத்த முன்னுரிமை ஏதும் வழங்கப்படவில்லை. குலுக்கல் முறையிலோ அல்லது ஏலத்திலோ கலந்து உரிமம் பெற்றால்தான் ஒட்டப்பிடாரத்தில் கூட்டுறவு மதுபானக் கடை அமைக்க வாய்ப்புண்டு.

**57—**

## கழிவுநீர் கால்வாய் கட்டுதல்

**வினா எண் 1172—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சி 9-வது வார்டு கருக்கட்டான்பட்டி பகுதிக்கு கழிவுநீர் கால்வாய் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

உசிலம்பட்டி நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் உசிலம்பட்டி 9-வது வார்டு கருக்கட்டான்பட்டி பகுதிக்கு கழிவுநீர்க் கால்வாய் கட்டித்தர இயலாது.

**58—**

## கால்வாய் வசதி

**வினா எண் 1174— திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சி 1-வது வார்டு மாமரத்துப்பட்டிக்கு கழிவுநீர் கால்வாய் கட்டித்தர அரசு முன்வருமா?

[2003 ஜனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

உசிலம்பட்டி நகராட்சியின் நிதிநிலைமை சரியில்லாத காரணத்தால் உசிலம்பட்டி நகராட்சி 1-வது வார்டு மாமரத்துப்பட்டிக்கு கழிவுநீர் கால்வாய் கட்டித்தர இயலாது.

**59—**

**சாலை வசதி**

**வினா எண் 1177—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சி 11-வது வார்டு வடகாட்டுப்பட்டிக்கு சாலை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

உசிலம்பட்டி நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால், அந்நகராட்சியின் 11-வது வார்டு வடகாட்டுப்பட்டிக்கு சாலை வசதி செய்து கொடுக்க இயலவில்லை.

**60—**

**குடிநீர்க் குழாய்**

**வினா எண் 3340—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட க.புதூர் அருந்ததியர் தெருவில் பொதுமக்களுக்கு போதுமான குடிநீர்க் குழாய் இல்லையென்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு புதிதாக மேலும் குழாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2003 ஜனவரி 29]

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட க.புதூர் அருந்ததியர் தெருவில் மூன்று பொதுக் குழாய்கள் அமைக்கப்பட்டு அங்கு வசிக்கும் மக்களுக்கு போதிய அளவு குடிநீர் சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**61—**

**ஆழ்குழாய்க் கிணறு**

**வினா எண் 3872—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, கீழ்ப்பொய்கை கிராமத்திலுள்ள மயானத்தில் ஆழ்குழாய்க் கிணறு வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் தொகுதி, கீழ்ப்பொய்கை கிராமத்திலுள்ள மயானத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

**62—**

**குடிநீர் விநியோகம்**

**வினா எண் 4300—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சி, ஜலகண்டபுரம் சாலையிலுள்ள மாரியம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள பொது குடிநீர்க் குழாய் பழுதுபட்டு கடந்த 3 வருடங்களாக குடிநீர் விநியோகம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

[2003 ஜனவரி 29

(ஆ) ஆம் எனில், உடன் பழுதுபார்த்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜலகண்டபுரம் சாலையிலுள்ள மாரியம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள பொதுக் குடிநீர் குழாய் பழுது சரி செய்யப்பட்டு தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

**63—**

**குடிதண்ணீர் விநியோகம்**

**வினா எண் 7603—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி நகராட்சியில் குடிதண்ணீர் விநியோக முறையில் உள்ள தவறுகளை அகற்றுவதற்கு அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

கோவில்பட்டி நகராட்சிக்கு 50 கி.மீ. தொலைவிலிருந்து குடிநீர் உந்தப்பட்டு 4 மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து சுமார் 20 கி.மீ. பகிர்மான குழாய் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. இக்குழாய்கள் சராசரியாக 2 கி.மீ. தூரம் செல்வதால் குடிநீர் அழுத்தம் குறைந்து காணப்படுகிறது. எனவே, வீட்டுச் சொந்தக்காரர்கள் குழாய் இணைப்பினை பூமிக்கு கீழ் மாற்றியமைத்துள்ளனர். இதனால் இதர பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. குடிநீரைச் சீராக விநியோகம் செய்ய கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(1) மின்மோட்டார் வைத்து குடிநீர் உறிஞ்சப்படுவது கண்டுபிடிக்கப்பட்டு இதுவரை 60 மின்மோட்டார்கள் பறிமுதல் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட குடிநீர்க் குழாய் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.



2003 ஜனவரி 29]

(2) குடிநீர் குழாய் இணைப்பில் விசைப்பம்பு வைத்து குடிநீர் எடுக்கப்படுவது நகராட்சி ஊழியர் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

(3) ஒருசில வீடுகளில் பூமிக்கு கீழே அமைக்கப்பட்ட வீட்டுக் குழாய் இணைப்புகளை பூமிக்கு மேல் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(4) பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆனதால் அடைப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனை நீக்கிட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**64—**

**கிணற்று நீரை பாதுகாத்தல்**

**வினா எண் 10218—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி பேரூராட்சியில் கோயில் பதாகை கிராமத்திலுள்ள ஐயன்குளப் பகுதி கிணற்று நீரை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி பேரூராட்சியில் உள்ள கோயில் பதாகை கிராமத்தின் ஐயன்குளம் பகுதியில் அமைந்துள்ள கிணற்று நீரை பொதுமக்கள் குடிநீராக பயன்படுத்தி வருகின்றனர். ஆகவே, அப்பகுதியிலுள்ள மழை நீரைச் சேகரித்து கிணற்றின் நீர்மட்டம் குறையாத வகையில் நீர் ஆதாரம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**65—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 10228—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 29

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி பேரூராட்சி, ஆவடி வீட்டுவசதி வாரிய குடியிருப்பில் நிறுத்தப்பட்டுள்ள குடிநீர் விநியோகத்தால் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நீக்கி மீண்டும் குடிநீர் வழங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி பேரூராட்சி ஆவடி வீட்டுவசதி வாரிய குடியிருப்புப்பகுதி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ஆவடி நகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை. இருப்பினும் இப்பகுதியில் நகராட்சி லாரி மூலம் வாரம் இருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இவ்வீட்டுவசதி வாரிய குடியிருப்பினை ஆவடி நகராட்சி வசம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ஒப்படைத்த பின்னர் நகராட்சியால் அடிப்படை வசதிகள் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

**66—**

### திண்காரை சாலை

**வினா எண் 10235—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிக்குட்பட்ட 19-வது வார்டு கௌரிப்பேட்டை பகுதியில் கழிவுநீர் பாதையுடன் கூடிய திண்காரை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது செயல்படத் துவங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிக்குட்பட்ட 19-வது வார்டு கௌரிப்பேட்டை பகுதியில் கழிவுநீர் பாதையுடன் கூடிய திண்காரை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.



2003 ஜனவரி 29]

**67—**

### மின்சார தகனம்

**வினா எண் 10296—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் சுடுகாட்டில் மின்சார தகன கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் சுடுகாட்டில மினசார தகனக் கோரிக்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**68—**

### சத்துணவு மையம்

**வினா எண் 10381—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடவாசல் ஒன்றியம், நெம்மேலி கிராமம் பள்ளிக்கு சத்துணவு மையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குடவாசல் ஒன்றியம், நெம்மேலி ஊராட்சியில், ஒன்றிய துவக்கப் பள்ளியில் சத்துணவு மையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. பள்ளி வேலை நாட்களில் 140 மாணவர்களுக்கும், விடுமுறை நாட்களில் 40 மாணவர்களுக்கும் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

69—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 10838—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், க. உவரி ஊராட்சி, கீழ் உவரியில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், க. உவரி ஊராட்சியைச் சேர்ந்த கீழ் உவரி குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் நிறைவேற்றும் பொருட்டு நீராதாரம் தோற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

70—

### திண்காரை சாலை

**வினா எண் 11918—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட சுண்ணாம்பிக்கல் தெரு, கீழ்புறமுள்ள சந்து ஆகிய இடங்களுக்கு திண்காரை சாலை போடுவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட சுண்ணாம்பிக்கல் தெரு, கீழ்புறமுள்ள சந்து



ஆகிய இடங்களுக்கு திண்காரை சாலை அமைக்க அனுமதி இல்லை. போதுமான நிதி வசதியும் இல்லை. எனவே, இப்பணி செய்ய இயலாது.

71—

### நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12036—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, துப்பாக்குடி பஞ்சாயத்து, துப்பாக்குடி 1-வது வார்டு தெற்குத் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், துப்பாக்குடி பஞ்சாயத்து, துப்பாக்குடி 1-வது வார்டு, தெற்குத் தெரு என்பது, துப்பாக்குடி குடியிருப்பின் பகுதியே ஆகும். இக்குடியிருப்பிற்கு ரூ. 5.00 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் நிறைவேற்ற பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. விரைவில் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

72—

### நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 12053—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டின்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி ஒன்றியம், பாரதி கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், பாரதி நகர் குடியிருப்பிற்கு 2001-2002 நிதியாண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு ஊராட்சியிடம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

73—

**நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 12056—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், தெற்கு மாடத்தூர் ஊராட்சி, இராமநாதபுரம் கிராமத்திற்கு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், தெற்கு மாடத்தூர் ஊராட்சி, இராமநாதபுரம் கிராமத்திற்கு 2001-2002-ல் சிறிய மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு பயனில் உள்ளது. மேலும், ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் கடனா ஆற்று நீர் வழங்கப்படவுள்ளது. எனவே, கூடுதலாக தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.



74—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 12059—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், துப்பாக்குடி ஊராட்சி, இராவுத்தபேரி அருந்ததியர் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், துப்பாக்குடி ஊராட்சி, இராவுத்தபேரி மற்றும் சொக்கநாதன்பட்டி குடியிருப்பிற்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

75—

**நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்**

**வினா எண் 12061—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, வள்ளியம்மாள்புரம் (வடக்கு பகுதிக்கு) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2003 ஜனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கிடாம்பட்டி ஊராட்சி, வள்ளியம்மாள்புரம் (வடக்கு பகுதி) குடியிருப்பிற்கு இதன் அருகில் உள்ள வடமலைப்பட்டி குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. வடமலைப்பட்டி குடிநீர் திட்டம் 2002-2003 ஆம் நிதியாண்டில் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும். இத்திட்டம் செயல்படும்போது வள்ளியம்மாள்புரம் வடக்கு பகுதியும் பயன்பெறும்.

**76—**

**நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 12098—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேரன்மகாதேவி தொகுதி, துப்பாக்குடி பஞ்சாயத்து ஒன்றியம், துப்பாக்குடி ஆடுவெட்டிக் காலனி (தெற்கு)-க்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், துப்பாக்குடி பஞ்சாயத்து, துப்பாக்குடி ஆடுவெட்டி காலனி (தெற்கு) என்பது துப்பாக்குடி குடியிருப்பின் பகுதியே ஆகும். இக்குடியிருப்பிற்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் நிறைவேற்ற பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. விரைவில் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.



2003 ஜனவரி 29]

**77—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 13236—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புளியமரத்துக்கோட்டை ஊராட்சியிலுள்ள சேர்வைக்காரனூர், கரட்டூர், எல்லப்பட்டி, அஞ்சப்பன்பட்டி மற்றும ஆசாரிபுதூர் ஆகிய ஊர்களுக்கு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வசதி ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், ஊராட்சி ஒன்றியம், புளியமரத்துக்கோட்டை ஊராட்சியைச்சேர்ந்த சேர்வைக்காரனூர், கரட்டூர், எல்லப்பட்டி, அஞ்சப்பன்பட்டி மற்றும் ஆசாரிபுதூர் ஆகிய குடியிருப்புகளுக்கு அத்தியாவசியத் தேவைக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில், தகுதி, தேவை மற்றும் நிதி ஆதாரங்களை கருத்திற் கொண்டு புதிய திட்டங்கள் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**78—**

**மழை வெள்ளம்**

**வினா எண் 13052—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி-பண்ருட்டி நகரத்தில் லிங்க் ரோடு பகுதி மக்களுக்கு மாற்று இடம் தரப்பட்ட இரு பக்கங்களிலும் ஓடை தண்ணீர் செல்வதால் மழைக் காலங்களில் வெள்ளம் ஓடையில் வரும்போது இங்கு வாழும் மக்களுக்கு பாதிப்பில்லாத வகையில் ஏற்பாடு செய்து தர இயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகரின் லிங்க் ரோடு பகுதியில் ஒரு பக்கம் மட்டுமே மழைநீர் செல்லக்கூடிய வகையில் ஓடை உள்ளது. நகராட்சியின் நிதி வசதி போதுமானதாக இல்லாததால் அப்பகுதிக்கு தடுப்புச் சுவர் அமைக்க இயலவில்லை.

**79—**

### தினசரி சந்தை

**வினா எண் 15193—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கயத்தாறில் இயங்கிவரும் வாரச் சந்தை தினசரிச் சந்தையாக மாற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஒட்டப்பிடாரம் தொகுதி, கயத்தாறில் இயங்கிவரும் வாரச் சந்தையை தினசரிச் சந்தையாக மாற்றும் திட்டம் எதுவும் இல்லை.

**80—**

### தார்ச் சாலை

**வினா எண் 16719—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, டி. பாளையம் ஆதிதிராவிடர் காலனியிலிருந்து மயானத்திற்கு செல்லும் பாதையை தார்ச் சாலையாக உருவாக்கித் தந்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சியின் நிதி வசதி போதுமானதாக இல்லாததால் பண்ருட்டி தொகுதி டி. பாளையம் ஆதிதிராவிடர் காலனியிலிருந்து மயானத்திற்கு செல்லும் பாதையை தார்ச் சாலையாக அமைக்க நகராட்சியால் இயலவில்லை.

**81—**

### கழிவு நீர் வாய்க்கால்

**வினா எண் 18440—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி நகரத்தில் 32-வது வார்டில் கழிவுநீர் வாய்க்கால் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகரின் 32-வது வார்டில் உள்ள சீரங்குப்பம், இருளங்குப்பம் மற்றும் ஆ. ஆண்டிக்குப்பம் ஆகிய பகுதிகள் கழிவு நீர் கால்வாய் கட்டித்தர இயலாத வண்ணம் அமையப்பெற்றுள்ளன. மேலும், நகராட்சியின் நிதிநிலைமை போதுமானதாக இல்லாததால் மேற்படி பகுதியில் கழிவு நீர் வாய்க்கால் கட்டித்தர நகராட்சியால் இயலவில்லை.

**82—**

### கழிவு நீர் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 20844—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி நகரத்தில் 21-வது வார்டில், ஒரு வழிப்பாதையில் கழிவு நீர் கால்வாய் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

[2003 ஜனவரி 29

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் பண்ருட்டி தொகுதி 21-வது வார்டில் ஒரு வழிப்பாதையில் கழிவு நீர்க் கால்வாய் அமைத்துத் தர நகராட்சியால் இயலவில்லை.

**83—**

**சாலை வசதி**

**வினா எண் 20849—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம் லாரஷப்ஷா தர்க்கா தெரு மற்றும் 28-வது, 5-வது பகுதிகளிலும் (வார்டு) 32-வது பகுதி தெற்கு வடக்கு தெருக்களிலும்' சாலை வசதி அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் பண்ருட்டி நகரம் லாரஷப்ஷா தர்க்கா தெரு 28-வது வார்டு, 5-வது வார்டு பகுதிகளிலும் 32-வது வார்டு தெற்கு வடக்கு தெருக்களிலும் சாலை வசதி அமைத்துத்தர நகராட்சியால் இயலவில்லை.



2003 ஜனவரி 29]

**84—**

**சாலையை செப்பனிடுதல்**

**வினா எண் 20850—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி 19-வது வார்டில் 6-வது தெரு சாலையை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சி 19-வது வார்டு 6-வது தெருவில் உள்ள சாலையின் ஒரு பகுதி சிமெண்ட் சாலையாகவும் மற்றொரு பகுதி தார் சாலையாகவும் எஞ்சிய பகுதி மண் தரையாகவும் உள்ளது. நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் இச்சாலையைச் செப்பனிட இயலவில்லை.

**85—**

**அடிப்படை வசதிகள்**

**வினா எண் 21122—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரில் உள்ள ரகுமானியபுரம் 7 மற்றும் 8-வது தெருக்களில் கழிவு நீர் கால்வாய், குடிநீர் உட்பட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடையநல்லூர் நகராட்சியில் உள்ள ரகுமானியபுரம் 7 மற்றும் 8-வது தெருக்கள் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ளன. ஆகவே மேற்படி தெருக்களுக்கு கழிவுநீர் கால்வாய், குடிநீர் உட்பட அடிப்படை வசதிகள் ஏதும் நகராட்சியால் செய்ய இயலாது.

86—

### மருத்துவர் நியமனம்

**வினா எண் 20888—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, கோவிலூர் ஊராட்சி கால்நடை மருத்துவமனைக்கு மருத்துவர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

வந்தவாசி தொகுதி, ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியத்தில் மேல்சீலம்பாடி கால்நடை கிளை நிலையத்தின் கட்டுப்பாட்டில் கோவிலூர பார்வைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. இப்பார்வை கிளை நிலையத்தின் பணிகளை மேல்சீலம்பாடி கால்நடை கிளை நிலைய கால்நடை ஆய்வாளர் (நிலை 2) கவனித்து வருகிறார். பார்வைக் கிளை நிலையத்தின் பணிகளைக் கவனிக்கத் தனியாக கால்நடை உதவி மருத்துவர் நியமனம் செய்யப்படுவதில்லை.

87—

### குளியல் சோப்பு

**வினா எண் 12462—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம் பட்டியில் கதர் வாரியம் மூலம் குளியல் சோப்பு தயாரிக்கும் ஒரு அலகு அரசு ஏற்படுத்தித் தருமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் குளியல் சோப்பு அலகுகளில் தேவைக்கேற்ப சோப்புகள் உற்பத்தி செய்யப்பட்டு கதரங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தற்போது எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டியில் புதியதாக குளியல் சோப்பு அலகு துவக்குவதற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

88—

### காடு அமைக்கும் திட்டம்

**வினா எண் 16969—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேர்ணாம்பட்டு தொகுதிக்குள்ளிட்ட குண்டலபள்ளி மற்றும் பத்திரபள்ளி ஆகிய இடங்களில் ஜப்பான் காடு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) நடப்பாண்டில் பேர்ணாம்பட்டு தொகுதிக்குட்பட்ட குண்டலப்பள்ளி காப்புக் காட்டில் ஜிட்டப்பள்ளி கிராமம் தேர்வு செய்யப்பட்டு உள்ளூர் கிராம மக்கள் ஒத்துழைப்புடன் கிராம நலப்பணிகளும் காடு வளர்ப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் பத்திரபள்ளி இடத்தில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

(ஆ) எழவில்லை.

[2003 ஜனவரி 29

**89—**

**விடுகள் கட்ட கடன் வசதி**

**வினா எண் 14718—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் வீடுகள் கட்ட கடன் பெறுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

தமிழகத்திலுள்ள கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் மூலம் நிதியுதவி பெற்று, சங்க உறுப்பினர்கள் வீடுகட்டுவதற்கு கடன் வழங்கி வருகின்றன. 2001-2002 இல் நகரம் மற்றும் கிராமப்புறங்களில் நிதி உதவி பெற்றோர் எண்ணிக்கை 19,582 ஆக இருந்தது. 2002-2003 ஆம் ஆண்டில் கடன் பெற உள்ளவர்கள் எண்ணிக்கையை 37,000 ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர வாம்பே திட்டம் மூலமாக கூடுதலாக 13,000 நபர்கள் கடனுதவி பெறுவர்.

**90—**

**குடியிருப்புகள்**

**வினா எண் 20603—திருமதி ஆர். தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி நகரில் வீட்டுவசதித் துறை மூலம் குடியிருப்புகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை.



2003 ஜனவரி 29]

**91—**

**கல்நார் கூரைகள்**

**வினா எண் 20754—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு கல்நார் தகடுகளாலான கூரைகள் அமைக்கும் திட்டம் சேலம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த திட்டத்தினால் எவ்வளவு பேர் பயன் அடைந்துள்ளார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1998-ம் ஆண்டு முதல் 2001-2002 வரையில் ரூபாய் 260.40 இலட்சங்கள் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு 1920 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளார்கள்.

**92—**

**விடுகள் கட்டுதல்**

**வினா எண் 20757—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரத்தில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அந்த வீடுகள் யாருக்கு வழங்கப்பட்டுள்ளன?

[2003 ஜனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சேலம் மாநகரில் 632 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் வெள்ளக்குட்டை ஏரியில் 176 குடியிருப்புகள் முன்னர் அப்பகுதியில் வாழ்ந்த குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 456 குடியிருப்புகள் சேலம் குடிசைப்பகுதியில் பிரபாத் தியேட்டர் பின்புறம் வாழ்ந்த செருப்பு தைக்கும் தொழிலாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**93—**

**அடுக்குமாடி கட்டடம்**

**வினா எண் 20759—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினால் எத்தனை அடுக்குமாடி கட்டடம் விற்பனைக்காக கட்டப்பட்டுள்ளன?

(ஆ) அனைத்து வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) 168 அடுக்குமாடி குடியிருப்புகள்.

(ஆ) 28 குடியிருப்புகள் விற்கப்பட வேண்டி உள்ளன.



2003 ஜனவரி 29]

**94—**

**குடியிருப்பு வீடுகள்**

**வினா எண் 20762—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் உயர்ந்த, நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்காக குடியிருப்பு வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த திட்டம் எப்போது துவங்கப்பட உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**95—**

**கூட்டுக் குடியிருப்புகள்**

**வினா எண் 20959—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசி பகுதியில் கூட்டுக் குடியிருப்புகள் (ஹவுஸிங் யூனிட்) கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 ஜனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**96—**

**திட்டங்கள்**

**வினா எண் 24197—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்பட இருக்கின்ற திட்டங்களின் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

தற்போது எதுவும் இல்லை.

**97—**

**கடன் வசதி**

**வினா எண் 13560—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 ஜனவரி 29]

சேலம் மாவட்டம், எடப்பாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு கடன் வழங்க திட்டம் எதுவும் இல்லை.

**98—**

**மகளிர் கைத்தறி சங்கங்கள்**

**வினா எண் 18815—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பெண் நெசவாளர்களை மட்டும் உறுப்பினராகக் கொண்ட தனி மகளிர் கைத்தறி சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) இவை அனைத்தும் லாபகரமாக இயங்கி வருகின்றனவா?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் பெண் நெசவாளர்களை மட்டும் உறுப்பினராகக் கொண்ட தனி மகளிர் கைத்தறி சங்கங்கள் 37 உள்ளன.

(ஆ) இவற்றில் 15 இலாபத்திலும் 22 நட்டத்திலும் இயங்கி வருகின்றன.

**99—**

**தொழிற் கூடம்**

**வினா எண் 14462—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் மீன்பிடித் துறைமுகத்தில் விசைப்படகு மற்றும் நாட்டுப்படகுகள் செய்யும் தொழிற்கூடம் எந்தெந்த இடத்தில் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டத்தில் மீன்பிடித் துறைமுகத்தில் விசைப்படகு மற்றும் நாட்டுப்படகுகள் செய்யும் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**100—**

**வ.உ.சி. பூங்கா**

**வினா எண் 22684—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு, வ.உ.சி. பூங்கா சுற்றுலாத்தலமாக அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

ஈரோடு, வ.உ.சிதம்பரனார் பூங்கா சுற்றுலாத்தலமாக அமைக்கப்படும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத்தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்குவரும் சுற்றுலாப்பயணிகள் வருகையை கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.



## 2. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபம் மற்றும் தாழ்வாரங்களில் செல்லுலார் ஃபோன் மற்றும் பேஜர் பயன்படுத்தத் தடை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்) நான் அறிவிப்பை முடித்துவிடுகிறேன்.

பாராளுமன்ற நடைமுறைகளைப் பின்பற்றி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபம் மற்றும் அதனையொட்டி இருக்கிற தாழ்வாரங்களில், செல்லுலார் ஃபோன் மற்றும் பேஜர் ஆகிய கருவிகளைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என்றும், இதுகுறித்து உறுப்பினர்கள் தங்களுடைய பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்றும் 24-1-2003-ஆம் நாளிட்ட செய்தித்தாள் மூலம் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், மேற்கூறிய கருவிகளைப் பேரவை வளாகத்தில் சில உறுப்பினர்கள் தொடர்ந்து பயன்படுத்தி வருவதாகத் தெரிகிறது. எனவே, மேற்கூறிய செய்தித்தாளில் தெரிவிக்கப்பட்ட செய்தியை உறுப்பினர்களுக்கு மீண்டும் நினைவூட்டி, பேரவை மண்டபம் மற்றும் அதனையொட்டிய தாழ்வாரங்களில், செல்லுலார் ஃபோன் மற்றும் பேஜர் ஆகிய கருவிகளைப் பயன்படுத்துவதை—அதேபோல், சட்டமன்றத்திற்கு வரக்கூடிய பத்திரிகையாளர்களும், செல்ஃபோன்களைப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. அதைத்—தவிர்க்க வேண்டுமென்று பத்திரிகையாளர்களையும், உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன். சட்டசபைக்கு உள்ளே வருகிறபோது, கொஞ்சம் செல்ஃபோனை, செல்லாத ஃபோனாக ஆக்கிவிடுங்கள்! (சிரிப்பு)

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

## 3. தகவல் கோரல்

### (அ) 28-1-2003-ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகளை நீக்கியது

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன துரைமுருகன்? என்ன? சொல்லுங்கள்.

[2003 ஜனவரி 29

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான தீர்ப்பைத் தங்களிடமிருந்து எதிர்பார்த்து நான் நிற்கிறேன். நேற்றைக்கு நடைபெற்ற விவாதத்தின்போது இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணாமல், நாங்கள் தங்களிடத்திலே எதிர்பார்த்த தீர்ப்பையும் அளிக்காமல், சபையை முன்கூட்டியே நீங்கள் ஒத்திவைத்துவிட்டுப் போய்விட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. தீர்ப்பு ஒன்றுமே கிடையாது. நான் என்ன சொன்னேன் என்றால்; முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். எல்லாப் பிரச்சினைகளும் முடிந்து கொண்டிருந்தன. நீங்கள் பேசுவதற்காக எழுந்தீர்கள். எழுகிறபோது, நான் உங்களிடத்தில் வைத்த கோரிக்கை என்னவென்றால்—'உங்களைப் பேச அனுமதிக்கிறேன்; உங்களுடைய உறுப்பினர்களை அவரவர்களுடைய இருக்கைகளிலே போய் அமரச் சொல்லுங்கள்' என்று கேட்டேன். கடைசி வரைக்கும், அவர்களை அவர்களுடைய இருக்கைகளுக்கு அனுப்புவதற்கு உங்களாலும் முடியவில்லை; என்னாலும் முடியவில்லை. அதோடு நேரமும் முடிந்துவிட்டது. ஆகையால்தான் அவை ஒத்திவைக்கப்பட்டதே தவிர, வேறொன்றும் பிரச்சினை இல்லை. *(குறுக்கீடுகள்)*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுவதற்கு என்னை நீங்கள் அனுமதிக்கிறீர்கள்; உட்காருங்கள் என்று சொன்னதை நான் மறுக்கவில்லை. ஆனால் ஒன்று, ஆளுங்கட்சித் தரப்பில் அமைச்சர்களும், உறுப்பினர்களும், 'கலைஞர் அவர்கள் துரோகம் இழைத்தார்' என்று சொன்ன வார்த்தைகளை நீங்கள் அவைக் குறிப்பிலே ஏற்றிவிட்டு, ஆனால், எங்கள் தரப்பில் திருப்பி நான் சொன்னதை மட்டும், "அவர்கள் துரோகம் இழைத்தார்கள்; அ.தி.மு.க. செய்திருக்கிறது" என்று நான் சொன்ன வார்த்தைகளை சபைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிட்டீர்களே. அது என்ன நியாயம் என்று நான் கேட்டேன். அதற்கு நீங்கள் தீர்ப்பு அளிக்காமல், அவர்களைப் போய் உட்காருங்கள் என்று சொன்னபோதுதான், அவர்கள் உட்காராமல், நின்று கொண்டிருந்தார்கள். எனவே, இப்போது நான் கேட்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எங்கள் தலைவரைப் பார்த்து, 'துரோகம் இழைத்தார்' என்று சொல்வதற்கு, அவர்களுக்கு உரிமை இருக்கிறது; அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், அதை நீங்கள் சபைக் குறிப்பிலே ஏற்றுவதற்கு அனுமதிக்கிறபோது, அதே பாணியிலே திருப்பி நான் பதில் சொல்கிறபோது, அந்தப் பதிலை ஏன் சபைக் குறிப்பிலே ஏற்றாமல் நீக்குகிறீர்கள்? இது நியாயமா என்றுதான் நான் உங்களிடத்திலே கேட்டேன். இப்போதும் அதைத்தான் கேட்கிறேன்.



2003 ஜனவரி 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதும் நான் அதைத்தான் சொல்கிறேன். நேற்று சொன்னதைத்தான் சொல்கிறேன். முறைப்படி உறுப்பினர்கள், அவரவர்களுடைய இருக்கைகளிலே அமர்ந்து முறைப்படி கேள்விகள் எழுப்பப்படுகிறபோதோ, அதைப் பேசுவதற்கு அனுமதி கேட்கப்படுகிறபோதோ அனுமதி கொடுக்கப்படுகிறது. ஆனால், இங்கே வந்து என்னைச் சுற்றி குழப்பம் விளைவித்துக்கொண்டு, உங்களையும் பேசவிடாமல், என்னையும் பேச விடாமல் அவர்கள் தடுக்கிறபோது, நான் என்ன செய்ய முடியும்? 'அவரவர்களுடைய இருக்கைக்கு அனுப்புங்கள், நான் உங்களைப் பேச அனுமதிக்கிறேன்' என்று நான் குறிப்பிட்டேன். கடைசிவரைக்கும் அதைத்தான் நான் வற்புறுத்தினேன். ஆனால், அவர்கள் கடைசிவரைக்கும் இருக்கைக்குப் போகவில்லை. நேரம் முடிந்துவிட்டது. அவை ஒத்திவைக்கப்பட்டது. அதுதான் பிரச்சினை.

**திரு. துரைமுருகன்:** இப்போது நான் உங்களிடத்திலே கேட்பது இதுதான். இப்போது, காவிரிப் பிரச்சினையில்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. காவிரிப் பிரச்சினை என்பதே வேண்டாம். நேற்று பெய்த மழைக்கு இன்றைக்குக் குடை பிடிக்க முடியாது. பிரச்சினை நேற்றோடு முடிந்தது.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன். *(கூச்சல்-குழப்பம்)*

*முற்பகல் 11-05*

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (அ) 28-1-2003-ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகளை நீக்கியது – தொடர்ச்சி

*(தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்ப்பே சொல்கிறேன். நேற்றைய பிரச்சினை நேற்றோடு முடிந்தது. இன்றைக்கு அதை எழுப்ப முடியாது; எழுப்புவதற்கு வாய்ப்புக் கிடையாது; அமருங்கள். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன். *(குறுக்கீடுகள்)*

[2003 ஜனவரி 29

## 4. அறிக்கைகள் அளித்தல்-தொடர்ச்சி

### (அ) பொதுக் கணக்குக் குழு--தொடர்ச்சி

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 121 முதல் 124 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி. (குறுக்கீடுகள்)

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 70 முதல் 72 வரையிலான 3 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 2. அறிவிப்புகள்--தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல், 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள்



2003 ஜனவரி 29] [பேரவைத் தலைவர்]

மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்)

## 3. தகவல் கோரல்--தொடர்ச்சி

### (அ) 28-1-2003-ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகளை நீக்கியது--தொடர்ச்சி

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று, அவர்கள் இருக்கைகளை விட்டு வந்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், தங்கள் இருக்கைகளுக்குச் சென்று அமரும்படி எவ்வளவு கேட்டுக் கொண்டபோதிலும் அவர்கள் அதற்குச் செவி சாய்க்கவில்லை; அவை நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடைபெறவிடாமல் அவர்கள் தடுத்துக்கொண்டே இருந்ததால்தான் பேரவைத் தலைவர் அவர்கள் அவையை ஒத்திவைத்துவிட்டு, நாளை கூடும் என்று அறிவித்துவிட்டுச் சென்றுவிட்டீர்கள்.

இன்றையதினம் மீண்டும் அதே நடவடிக்கைகளில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து அவர்கள் எழுந்து நின்று, சத்தம் போட்டுக் கொண்டு, அவையின் அலுவல்களை நடைபெறவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். நான் அமர்ந்தவுடன், மீண்டும் எழுந்து நிற்பார்களோ, சத்தம் போடுவார்களோ, என்னவோ தெரியாது. ஆகவே, நேற்றையதினம் காவலர்களைக் கூப்பிட்டு, அவர்களை வெளியேற்றும்படிச் செய்திருந்தால், இன்றையதினம் பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாக, 'குண்டுக் கட்டாக தி.மு.க. உறுப்பினர்களைத் தூக்கிச் சென்று காவலர்கள் வெளியேற்றினார்கள்' என்று செய்திகள் வந்திருக்கும். அதைத் தவிர்ப்பதற்காகத்தான் நேற்று நீங்கள் அவையை ஒத்திவைத்திருக்கிறீர்கள். ஆனால் இன்றையதினம், அதே பாணியை எதிர்க்கட்சியினர் கடைப்பிடித்தால், ஒன்று, தாங்கள் அவர்களை வெளிநடப்புச் செய்யும்படிக் கேட்டுக்கொள்ளலாம்; அல்லது அவையின் அலுவல்கள் அமைதியான முறையில் நடைபெற வேண்டுமானால், அவர்களை வெளியேற்றுவதைத் தவிர வேறு வழி இருக்காதுபோல் தெரிகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

[2003 ஜனவரி 29

(தி.மு.க. உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கை அருகில் வந்து நின்று கொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அவை அலுவல்கள் நடைபெறுவதற்கு தயவுசெய்து ஒத்துழையுங்கள். (குறுக்கீடுகள்) நேற்றைய பிரச்சினை நேற்றோடு முடிந்தது. மறுபடியும் அதைக் கிளப்பாதீர்கள். வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--தொடர்ச்சி

### (அ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச் சட்டமுன்வடிவு, 2003--தொடர்ச்சி

**•மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

(தி.மு.க. உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கை அருகில் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.



2003 ஜனவரி 29]

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 2. அறிவிப்புகள்--தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

(தி.மு.க. உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கை அருகில் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)

**•மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2003 ஜனவரி 29

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். *(குறுக்கீடுகள்)*

*(தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகே நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம். திரு. கணேசன். *(குறுக்கீடுகள்)*

## 3. தகவல் கோரல்--தொடர்ச்சி

### (அ) 28-1-2003-ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகளை நீக்கியது--தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்ப்பை நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். இப்போது அவையின் நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று மாண்புமிகு துரைமுருகன் அவர்களையும், மூத்த உறுப்பினர்களையும், மணி போன்றவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால், அவையை விட்டு வெளியேற்ற வேண்டிய நிலைமை இருக்கும் என்று எச்சரிக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11-10*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்றாமல், பேரவைத் தலைவருடைய இருக்கைக்கு அருகில் வந்து, கூச்சலும், குழப்பமும் உருவாக்கிக் கொண்டு அவையை நடத்தவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கின்ற இந்த முறையைக் கண்டிக்கும் வகையில் தி.மு.க.வினுடைய மாண்புமிகு உறுப்பினர்களை அவையை விட்டு



2003 ஜனவரி 29] [திரு. சி. பொன்னையன்]

வெளியேற்றுமாறு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு வழியே இல்லாத காரணத்தால், அவையின் நிகழ்ச்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அவையை விட்டு வெளியேற்ற வேண்டுமென்று காவலர்களுக்கு உத்தரவிடுகின்றேன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.)*

### (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். திரு. ஐ. கணேசன். *(குறுக்கீடு)* திரு. ஜி.கே. மணி, என்ன?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். மிக முக்கியமான பிரச்சினை. இட ஒதுக்கீட்டிற்குச் சோதனை ஏற்பட்டு இருக்கிற நேரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, ஆளுநர் உரை மீதான விவாதத்தில் இதைப் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. இது முக்கியமானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பக்கத்தில் இருக்கிற திரு. கணேசனிடம் சொல்லி, பேசச் சொல்லுங்கள். கணேசன் பேசுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீட்டிற்குச் சோதனை ஏற்பட்டிருக்கிறது. அவசியம் இதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம் நடக்கிறபோது நீங்கள் சொல்ல வேண்டிய கருத்துகளைச் சொல்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. நாட்கள் மிகக் குறைவு, நேரம் மிகக் குறைவு. ஆகவேதான் அவற்றையெல்லாம் எடுத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இல்லை. திரு. கணேசன். *(குறுக்கீடு)*

[2003 ஜனவரி 29

### (ஆ) 28-1-2003 ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகளை நீக்கியது--தொடர்ச்சி

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பிரதான எதிர்க்கட்சியை அவையை விட்டு வெளியேற்றி இருக்கிறீர்கள். அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். உங்களிடத்திலே தீர்ப்புக் கேட்டார்கள். நீங்கள் தீர்ப்பு வழங்கி இருக்கலாம். இருந்தாலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள், இது முடிந்துவிட்ட பிரச்சினை. (குறுக்கீடு) தீர்ப்பே இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தண்டனை கொஞ்சம் அதிகபட்சமான தண்டனை. நீங்கள் இதை மறுபரிசீலனை செய்து (குறுக்கீடு) மறுபரிசீலனை செய்து. அவர்களும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. வர வர எஸ்.ஆர்.பி. அவர்கள் நடுநிலை பிறழ்ந்து நடக்கிறாரோ என்கிற நினைவு எனக்கு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், நேற்று நீங்கள், பேராசிரியர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது எழுந்து, ஆளுநர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு, தமிழ் உரையை அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் போதும் என்று சொன்னீர்கள். நீங்கள் சொன்ன கருத்தையே ஏற்றுக்கொண்டு, நான் அதே கருத்தை அறிவித்தேன். அறிவித்ததற்குப் பிறகு நீங்களும் வெளிநடப்புச் செய்து விட்டீர்கள். அது என்ன முறை? உங்கள் கருத்தை ஏற்றுக்கொண்டதற்காகப் பேரவைத் தலைவருக்குக் கிடைத்த தண்டனையா அது? ஆகவே, எஸ்.ஆர்.பி. அவர்கள் கொஞ்சம் நியாயமாக நடந்துகொள்ள வேண்டும். இந்தச் சூழ்நிலையில் அவையை நடத்துவதற்கு வேறு என்ன வழி? நீங்களே எனக்குச் சொல்லுங்கள். இந்தச் சூழ்நிலையில் என்னைச் சுற்றி நின்று கொண்டு சத்தம் போட்டு, அவை நடவடிக்கைகளைச் சீர்குலைக்கிறபோது, வேறு எந்தவகையில் நான் நடந்துகொள்ள வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம், 'படித்ததாகக் கருதி அது அவைக் குறிப்பில் ஏற்றப்பட்டிருக்கிறது' என்று சொன்னீர்கள். நான் சொன்னது, அன்றையதினமே நீங்கள் அதைச் சொல்லியிருக்கலாம். ஆளுநர்



2003 ஜனவரி 29] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

உரையைத் தமிழில் நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று நீங்கள் சொல்லியிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அது முடிந்து போன பிரச்சினை. அடுத்த ஆண்டு நீங்கள் அந்த முறையைக் கடைப்பிடியுங்கள் என்று சொன்னீர்கள். நான் அதைக் கேட்டுக்கொண்டேன்.

*முற்பகல் 11-15*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஏதோ நிரந்தரமான தீர்வாக நான் சொன்னதாகச் சொல்வது சரியில்லை. நான் அப்படிச் சொல்லவில்லை. அன்றையதினத்திற்குத்தான் சொன்னேனே தவிர, வருங்காலத்திற்கு அது பொருந்தும் என்று நான் நிச்சயமாகச் சொல்லவில்லை. வருங்காலத்திற்கும் நான் இப்படிச் சொன்னேன் என்று காரணம் காட்டி, ஆளுநர் உரையைத் தமிழிலே மீண்டும் வாசிக்க மாட்டேன் என்று பேரவைத் தலைவர் சொன்னால், நான் ஒரு போதும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஆளுநர் உரை தமிழில் நிச்சயமாகப் படிக்கப்பட்டு இருக்க வேண்டும். அதுதான் என்னுடைய கோரிக்கை. ஏனென்று சொன்னால் பாராளுமன்றத்தினுடைய மைய மண்டபத்தில் அப்படி இருக்கிறது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள் இதிலே விவாதம் இல்லை இப்போது. அது நேற்றோடு முடிந்துவிட்டது. நேற்றே தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது; முடிந்துவிட்டது. இப்போது தி.மு.க. உறுப்பினர்கள் அவையினுடைய நிகழ்ச்சிகளுக்குக் குந்தகம் விளைவித்த காரணத்தால், வேறு வழி இல்லாமல்— எச்சரித்ததற்குப் பிறகும், அவர்கள் மீண்டும், மீண்டும் தொடர்ந்து அந்த முறையைப் பின்பற்றிய காரணத்தால், வேறு வழியே இல்லாத காரணத்தால்— வெளியேற்றப்பட்டு இருக்கிறார்கள். நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் என்கிற காரணத்திற்காக வெளியேற்றப்பட்டு இருக்கிறார்கள். இதற்கு மேலே அவை நிகழ்ச்சிகளை நடத்திச் செல்வதற்கு வேறு என்ன வழி?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுடைய தீர்ப்பின்மீது குறை கூறவேண்டும் என்று பேசவில்லை. பிரதான எதிர்க்கட்சியை அவையிலே வைத்துக்கொண்டு பேசுவதுதான் முறையாக இருக்கும். பிரதான எதிர்க்கட்சியை நீங்கள் எடுத்த உடனேயே வெளியேற்றி விடுவது, அவ்வளவு சரியாக இருக்காது. நேற்றைய தினம்...

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் வெளியேற்றவில்லை. எஸ்.ஆர்.பி. அவர்களே, நான் வெளியேற்றவில்லை. வெளியே போகவேண்டுமென்ற சூழ்நிலையினை அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். அதற்கு ஒரு தீர்ப்பை எதிர்பார்த்தார்கள். இன்றையதினம் அதற்கு ஒரு தீர்ப்பை அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். தீர்ப்பு வராத நிலையில், நீங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டுமென்று எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இங்கே வலியுறுத்தினார்கள். அவ்வளவுதானே தவிர, அதற்கு மேலே இல்லை. இதற்கு இறுதியாக நீங்கள் ஒரு தீர்ப்பை வழங்கி இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்களே, தீர்ப்பு வழங்கியாகிவிட்டது. நேற்றைய நிகழ்ச்சி நேற்றே முடிந்தது. நேற்று உங்களைக்கூடப் பேச அனுமதித்தேன். நேற்று உங்களுடைய உறுப்பினர்கள் பேசுவதற்கு விடவில்லை. ஆகவே, நேற்றைய நிகழ்ச்சிகள் முடிந்தன. இனிமேல் அதைக் கிளறாதீர்கள் என்று சொல்லி முடித்தாகிவிட்டது. அதுதான் தீர்ப்பு.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நேற்று அவர்கள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சியை வெளியேற்றிவிட்டு இந்த அவையை நடத்திச் செல்லவேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்குக் கிஞ்சித்தும் கிடையாது. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அவர்களை ஒரு முறை மன்னித்து மீண்டும் இன்று இந்த அவையின் நடவடிக்கைகளில் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வருமாறு அவர்களை அழைக்கிறேன். மீண்டும் வந்து அவையினுடைய நடவடிக்கைகளில் கலந்துகொள்ளுங்கள். அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்காமல், நீங்களே உங்களுடைய கருத்துகளைச் சொல்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அவற்றிற்கு முறை இருக்கிறது. அந்தவகையிலே கலந்துகொள்ளுங்கள் என்று நான் மீண்டும் அவர்களை அழைக்கிறேன். அவர்கள் வந்து கலந்துகொள்ள வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.



2003 ஜனவரி 29]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களே சொல்லி விட்டார்கள். எனவே, பிரதான எதிர்க்கட்சியை நீங்களும் அழைத்து இருக்கிறீர்கள். அந்த வகையிலே என்னுடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்டதற்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே கோரிக்கையை வைப்பதற்குத்தான் நான் எழுந்து நின்று கொண்டு இருந்தேன். பேசுவதற்கு அவகாசம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. கோரிக்கை, மணி கோரிக்கை, பழனிசாமி கோரிக்கை, உட்கார்ந்து இருக்கிற ஹேமசந்திரன் கோரிக்கை, எல்லோருடைய கோரிக்கைகளையும் ஏற்று, நான் பிரதான எதிர்க்கட்சியாக இருப்பவர்களை அழைக்கிறேன். அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காமல் கலந்துகொள்ள வேண்டும் என்று அவர்களை அழைக்கிறேன்; அன்போடு அழைக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மறு பரிசீலனை செய்து மீண்டும் அழைத்ததற்கு முதலமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடந்த விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முற்றுப்புள்ளி வைத்தார்கள். உண்மையிலேயே மகிழ்ச்சி. ஆனால், காவிரி நதி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக ஆளுகிற கட்சியும், எதிர்க் கட்சியும் பேசியது மூலமாக பத்திரிகையில்தான் செய்தி வந்ததே தவிர, தண்ணீர் வந்தபாடில்லை. தேவையில்லாத விவாதத்திற்காக இந்த அவையில் நாம் நீண்ட நேரம் எடுத்துக்கொள்கிறோம். தேவையாக இருந்து இருந்தால், நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் இந்தச் சபையைப் பயன்படுத்தலாம்; விவாதிக்கலாம். நான் இந்த விவாதத்தினாலேயே காவிரிப் பிரச்சினை என்பது காலம் கடந்து இருக்கிறது என்பதைப் பல தடவை இந்த அவையிலே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறேன். நேற்று நடந்த விவாதத்தின் மூலமாக, ** யாருக்கும் எந்தப் பயனும் இல்லாமல் ஒரு விவாதத்தை இந்த அவையில் நடத்த வேண்டியது அவசியம்தானா என்பதைத் தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, போகிற போக்கில் புழுதி வாரித் தூற்றுவதைப்போல, ** என்று எல்லாம் சொல்வது முறையல்ல. நீங்கள் பேசியது அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. திரு. கணேசன் அவர்கள் விவாதத்தைத் தொடங்குவார்கள். (குறுக்கீடு) இல்லை, பழனிசாமி அவர்களே, இந்த விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டாகிவிட்டது. திரு. கணேசன் ஆரம்பியுங்கள். (குறுக்கீடு). திரு. குமாரதாஸ் அவர்கள். (குறுக்கீடு) திரு. குமாரதாஸ், ஒரு கட்சியின் தலைவர்.

*முற்பகல் 11-20*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பெருந்தன்மை இது. இன்றைக்குப் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிறவர்கள் மீண்டும் அவைக்கு வரலாம் என்று உத்தரவு பிறப்பித்தது, அவர்களுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. அதைக் காரணமாகக் காட்டி, இங்கே வந்து மீண்டும் கலாட்டா செய்கின்ற சூழ்நிலை வராமல் இருக்க, இங்கே அவர்களுக்கு வக்காலத்து வாங்கியவர்கள் அதையும் கண்டிக்க, கவனத்துடன் பார்க்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன். (குறுக்கீடுகள்) அவருடைய கருத்தைச் சொல்லிவிட்டார். முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தைச் சொன்னால், வக்காலத்து வாங்குவது என்று சொல்வது...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் யாருக்காவது கூஜா தூக்க வேண்டுமென்றால், எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் எங்களைச் சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. கணேசன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. கணேசன், பேசவேண்டுமா? இல்லை, அடுத்த உறுப்பினரைக் கூப்பிடலாமா?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டாகிய இந்தப் புத்தாண்டிலே முதன் முறையாக என்னைப் பேச அழைத்த தங்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான, நன்றி கலந்த வணக்கத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கச் சொல்லி, தியாகி சங்கரலிங்க நாடார் அவர்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர்த் தியாகம் செய்தார்கள். பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக் கடல், அறிஞர் அண்ணா அவர்கள் முதன்முதலாக ஆட்சிப்பீடம் ஏறியவுடனேயே, Madras State என்று இருந்ததை, 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் செய்தார்கள். அதே வழியிலே வந்த புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், மக்கள் திலகம், கொடை வள்ளல் என்று போற்றப்பட்ட எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு படத்திலே நடிக்கும்போது அற்புதமாக எடுத்துச் சொன்னார்கள்.

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பாடல் உணர்ச்சிபூர்வமாக, உள்ளபூர்வமாக அனைவரையும் கவர்ந்த பாடல். அவர் ஆட்சிக்கு வந்த 1977-லே முதல் முறையாக—இந்தியா சுதந்திரம் அடைந்து, எந்த மாநிலமும் செய்ய முடியாத சாதனையை, முதல் முறையாக-- புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஒரு நடிகராக இருந்தும், அரசியல்வாதிகள் அத்தனை பேருக்கும் பாடம் கற்பிக்கும் வகையிலே, ஆங்கிலத்தில் இருந்த ஆளுநர் உரையைத் தமிழிலே வாசிக்க வைத்தார். அவருடைய பெயரால், பேரறிஞர் அண்ணாவின் பெயரால் ஆட்சி நடத்துகின்ற நாம் இந்த அவையிலே ஆளுநர் உரையைத் தமிழிலே படிக்காதது என்னைப் போன்று உள்ளவர்களுக்கு மிகவும் வேதனை அளிக்கிறது என்று சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் பல மாதங்களுக்கு முன்னால் ஒரு பத்திரிகையிலே செய்தி ஒன்றைப் படித்தேன். இன்னும் 500 ஆண்டுகளிலே அழிந்துபோகும் மொழிகளிலே தமிழ் மொழி ஆறாவது இடத்திலே இருக்கிறது என்று அந்தப் பத்திரிகையிலே எழுதி இருந்தார்கள். என்னுடைய நெஞ்சமெல்லாம் இரத்தக் கண்ணீர் வடித்தது. கல் தோன்றி மண்

[திரு. ஐ. கணேசன்] [2003 ஜனவரி 29

தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி இந்தத் தமிழ் மொழி. இந்தத் தமிழ் மொழி 500 ஆண்டுகளிலே அழிந்து விடுமா என்று ஏங்கிக் கொண்டிருந்தேன். ஆனால், இன்று இந்த நிலையைப் பார்க்கும்போது, எனக்கு அச்ச உணர்வு ஏற்படுகிறது, பய உணர்வு ஏற்படுகிறது என்று சொல்லி, புரட்சித் தலைவர் பெயரால் கேட்கிறேன், அடுத்த முறை, இந்த ஆட்சியிலே நிச்சயமாக கவர்னர் உரை தமிழிலே வாசிக்கப்பட வேண்டும் என்று.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்மீது மிகுந்த பற்றும், பக்தியும், பாசமும் இருப்பதைப்போல் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். அவ்வளவு பக்தியும், பற்றும் இருப்பதால்தான் புரட்சித் தலைவர் தொடங்கிய இயக்கத்தை விட்டுவிட்டு, வேறு கட்சியில் போய்ச் சேர்ந்தாரா? (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 11-25

**திரு. ஐ. கணேசன்:** எனக்கு மைக் கொடுக்கவில்லை, தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் என்னை மாட்டிவிட்டுவிட்டார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் தவறு. என்னை Local—உள்ளூர்ப் பிரச்சினையிலே, கட்சியை விட்டு வெளியேற்றிய பிறகு, தலைமைக் கழகத்திலிருந்து தந்தி அனுப்பப்பட்டது. அப்போது நான் வந்தேன். அண்ணன் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அப்பொழுது நான் வந்தேன். தலைமையிடம் என்னவென்று விசாரணை போடாமல் ஏன் வெளியேற்றினீர்கள் என்று கேட்டேன். அதற்குச் சரியான பதில் இல்லை. மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுங்கள் என்று அப்பொழுது மார்கபந்து அவர்கள் சொன்னார்கள். அப்பொழுதுதான் சொன்னேன், நான் தவறு செய்யவில்லை. தவறே செய்யாமல் என்னை மன்னிப்புக் கடிதம் எழுத வேண்டுமென்று சொல்கிறீர்களே, என் தலை தரையிலே விழுந்தாலும் மன்னிப்புக் கடிதம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று சொன்னேன். அதன் பிறகு, தேர்தல் சின்னம்—இரட்டை இலைச் சின்னத்தை— அண்ணா தி.மு.க.வுக்குக் கொடுக்க வேண்டிய ஃபாரத்தைக் கொடுத்தார்கள். அந்த இடத்திலேயே என்னுடைய கையெழுத்தைப் போட்டுவிட்டு..



2003 ஜனவரி 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், முதலமைச்சர் அவர்கள் நேரடியாகக் கேட்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் எங்கெங்கேயோ சுற்றி வளைத்து வருகிறீர்கள்.

**திரு. ஐ. கணேசன்:** நேரடியாகத்தான் சொல்கிறேன். அந்த நிலம் அங்கேயேதான் இருக்கிறது தலைவர் அவர்களே. உங்களுக்குத் தெரியும். பத்திரம்தான் மாறியிருக்கிறது. நிலம் அங்கேயேதான் இருக்கிறது, பத்திரமாக இருக்கிறது என்று சொல்லி..

• **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பத்திரம்தான் மாறியிருக்கிறது என்றால், புரியாத புதிராக இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** புரிய வைக்கட்டுமா? நேரம் இருக்கிறதா? அது எல்லாம் அவருக்குத் தெரியும். உள்ளம் அங்கேதான் இருக்கிறது. அதுதான் அருமைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், அண்ணா தி.மு. கழகத்திற்கு இரட்டை இலைச் சின்னம் வேண்டுமென்று கடைசி நேரத்திலே கையொப்பம் கேட்ட நேரத்திலேகூட போட்டுவிட்டு வெளியே வந்தவன். பிரதிபலனை எதிர்பார்க்காமல் வந்தவன். புரட்சித் தலைவருக்குப் பிறகு, ஐந்தாண்டு காலம் எந்த அரசியலும் நமக்கு வேண்டாமென்று ஒதுங்கியிருந்தவன். அதன் பிறகுதான் டாக்டர் ராமதாஸ் ஐயா அவர்கள் ஏற்படுத்திய இந்தக் கட்சிக்கு, ஏழை எளிய பாட்டாளி மக்கள் வர்க்கத்தினுடைய குழந்தைகளுக்கு . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கேயிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய சுயசரிதையைச் சொல்ல ஆரம்பித்தால், அதற்கு இந்த அவையின் நேரம் போதாது. ஆகவே, அதையெல்லாம் சொல்வதற்கு இந்த அவை தகுந்த இடம் அல்ல. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த ஒரு திட்டம் என்று சொல்லி, புரட்சித் தலைவர் இயக்கத்தை நடத்தித் கொண்டிருக்கிறவர்கள், புரட்சித் தலைவர் கொண்டு வந்த திட்டத்தையே கைவிட்டு விட்டார்கள் என்று குற்றம் சாட்டி, எங்களை மடக்கப் பார்க்கிறவர்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றிப் பேசுவதற்கு உரிமை இருக்கிறதா என்பதுதான் என்னுடைய கேள்வி. புரட்சித் தலைவர்மீது மிகுந்த பக்தியும், பாசமும், விசுவாசமும், பற்றும் இருப்பதாகக் கூறிக்கொள்பவர்கள், புரட்சித் தலைவர் தொடங்கிய இயக்கத்தை விட்டு ஏன் வெளியே சென்றார்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 ஜனவரி 29

அப்படி வெளியே சென்றவர்களுக்கு, புரட்சித் தலைவர் அவர்களைப் பற்றிப் பேசுவதற்கு உரிமை இல்லை என்பதுதான் என்னுடைய வாதம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெளிவாக, புரியும்படிச் சொல்லிவிட்டேன், நான் வெளியே செல்லவில்லை, வெளியே அனுப்பப்பட்டேன் என்று. அதன் பிறகு, ஐந்தாண்டு காலம் அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்தபோது, புரட்சித் தலைவருக்குப் பிறகு இந்தத் தமிழ்நாட்டில் ஏழை, எளியவர்களைப் பற்றி சிந்திக்கக்கூடிய ஒரே தலைவர் டாக்டர் ஐயா தான் என்பதை உணர்ந்து, நான் அந்த இயக்கத்திலே சேர்ந்தேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசியல் மேடையல்ல. சட்டமன்றம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** சட்டமன்றம் என்று எனக்கும் தெரியும். **

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** **

**திரு. ஐ. கணேசன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், இவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. நீங்கள் தயவுசெய்து ஆளுநர் உரைமீது விவாதத்தைத் தொடங்கி, அதிலே சொல்ல வேண்டிய கருத்துகளைச் சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சோழ நாடு சோறுடைத்தது' என்பார்கள் அன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'சோறுடைத்தது' அல்ல, 'சோறுடைத்து'.

**திரு. ஐ. கணேசன்:** 'சோறுடைத்து' என்று சொல்வார்கள் அன்று. ஆனால் இன்று, அந்த வயல்களெல்லாம் பாளம், பாளமாக வெடித்து, காய்ந்து, கருகி, மோசமான நிலைகளில் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2003 ஜனவரி 29] [திரு. ஐ. கணேசன்]

விவசாயிகள் பயிரை, கண்ணை இமை காப்பது போலக் காத்துக் கொண்டிருப்பார்கள். அந்தப் பயிர் கருகியதைக் காண முடியாமல் அந்த விவசாயி துடிதுடித்துக் கதறி, நெஞ்சு வெடித்துச் சாகிறான். அதுமட்டுமல்ல. *(குறுக்கீடு)* நெஞ்சு வெடித்துச் சாகிறான் என்று சொல்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதுகுறித்து நேற்றே முதலமைச்சர் அவர்கள் உரிய விளக்கங்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். பட்டினிச் சாவு என்று ஏதும் ஏற்படவில்லை. அதேபோல பயிரைப் பார்த்து வயிறு வெடித்து யாரும் சாகவும் இல்லை. அந்த விளக்கத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மீண்டும், மீண்டும் அதற்குள்ளே நீங்கள் நுழையவேண்டாம். சொல்லவேண்டிய வேறு கருத்துகளை நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** சரி. கடன் வாங்கி, நட்ட பயிர் காய்வதைக் கண்டு தூக்கிலே தொங்குகிறான் என்று வைத்துக்கொள்ளலாம். தூக்கிலே தொங்குகிறான். உண்மை நிலை இப்படியெல்லாம் இருக்க, தலைவர் அவர்களே, அந்த விவசாயிகளுடைய நிலைமையைப் புரிந்து, அவர்களுக்கு இந்த அரசு உரிய நிவாரணத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு, பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக உங்கள் மூலமாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சி என்று, ஏன் மணியை மட்டும் பார்க்கிறீர்கள்? *(சிரிப்பு)*

**திரு. ஐ. கணேசன்:** இல்லை. எல்லோரையும்தான். 18, 19 உறுப்பினர்களுக்கும் சேர்த்துத்தான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பொங்கலன்று 17-1-2003-லே ஒரு வார இதழிலே, ஒரு கட்டுரையை நான் படித்தேன். 'ஒரு விவசாயி நெல் விற்கிறான்' என்ற எங்களுடைய கவிஞன் பங்குனி உத்திரனார் எழுதிய கட்டுரை. அதிலே ஒரு வரி. 'அவங்க சாகுபடி செஞ்சாங்க விவசாயி, அவங்க சாகுபடி செஞ்சாங்க. அவங்களை சாகும்படி செய்யப்பட்டது. செய்துவிட்டார்கள்; தண்ணீர் இல்லை, அதனாலேதான்' என்ற வரி என்னை மிகவும் கவர்ந்தது. அதற்காகத்தான் என்ன சொல்வது என்றே தெரியவில்லை. விவசாயி என்ற ஒரு படத்திலே விவசாயியாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நடிக்கும்போது ஒரு பாடலைப் பாடுவார்:

[திரு. ஐ. கணேசன்] [2003 ஜனவரி 29

'விவசாயி, விவசாயி, கடவுள் என்னும் முதலாளி
கண்டெடுத்த தொழிலாளி விவசாயி' என்று.
'கடவுள் என்னும் முதலாளி
கண்டெடுத்த தொழிலாளி இந்த விவசாயி'

என்று அந்த விவசாயியைக் கடவுளாக அறிமுகப்படுத்திய அந்த விவசாயம் இன்று மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. இதை அரசு தயவுகூர்ந்து புரிந்து, அவருக்கு உதவுங்கள். அதுமட்டுமல்ல; அந்த விவசாயி தன்னுடைய வயலிலே எந்த எலியால் பயிர்கள் நாசமாகிறது என்று எண்ணினானோ, அதே எலியைப் பிடித்துச் சாப்பிடக்கூடிய அவல நிலை இருக்கிறது என்று . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள், இல்லாத செய்திகளை எல்லாம் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நடக்காதவற்றையெல்லாம் நடந்தவையாக இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார். எலி சாப்பிட வேண்டிய ஒரு சூழ்நிலை நிச்சயமாக யாருக்கும் தமிழகத்திலே ஏற்படவில்லை. அப்படி ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலையை இந்த அரசு அனுமதிக்கவில்லை. விவசாயிகள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு என்பதை இந்த அரசு நன்றாகவே அறியும்; உணரும். அதற்காகத்தான், விவசாயிகளின் வாட்டத்தைப் போக்க என்னென்ன துரித நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அவற்றையெல்லாம் இந்த அரசு ஒவ்வொன்றாக எடுத்து வருகிறது. ஏற்கெனவே எடுத்த நடவடிக்கைகளை நான் நேற்றே குறிப்பிட்டேன்.

அதோடு, கடந்த 13-ஆம் தேதி நான் டெல்லி சென்று, பிரதமர் அவர்களைச் சந்தித்தபோது, விவசாயிகளின் துயர் துடைக்க, அவர்கள் பெற்றிருக்கின்ற Short Term மற்றும் Medium Term கடன்கள் மீதான வட்டியையும், அசலையும் இந்த ஆண்டுக்கு ரத்துச் செய்யவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறேன். குறுவை மற்றும் சம்பா பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பதற்காக 400 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு உதவி செய்ய வேண்டுமென்றும் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். மேலும், இரண்டு இலட்சம் டன் அரிசி வழங்க வேண்டும் என்றும் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதன் பிறகு, மத்திய அரசு வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட ஒரு குழுவை அனுப்பியிருக்கிறது.



2003 ஜனவரி 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அந்தக் குழுவினர் இப்போது தமிழகம் முழுவதையும் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் குழுவினரை நான் 31-ஆம் தேதி மாலை சந்திக்க உள்ளேன் அப்போது, புதிதாகத் தயார் செய்து கொண்டிருக்கிற ஒரு மகஜரை --Memorandum-- அதாவது கோரிக்கை மனுவை அவர்களிடம் அளிக்க உள்ளேன். அந்தக் கோரிக்கை மனுவில், மத்திய அரசிடம் சில புதிய கோரிக்கைகளை வைக்கப் போகிறோம். அவை என்னென்ன என்பதை 31-ஆம் தேதி எனது பதிலுரையில் தெரிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** விவசாயிகளுடைய வாழ்வுக்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுத்தால், நிச்சயமாக மனப்பூர்வமாக, மனந்திறந்து நாங்கள் பாராட்டுவோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-35*

அதேபோல ஏழைகளுடைய வயிற்றுப் பிரச்சினையைப் பற்றி, நானல்ல, நம்முடைய தலைவர் அவர்களே மிகத் தெளிவாக 40 ஆண்டுகளுக்கு முன்னாலேயே பாடி வைத்திருக்கிறார்கள். 'புகையும் நெருப்பும் இல்லாமல் எரிவதெது? பசித்து வாடும் வயிறுதான் அது' என்று. அப்பேர்ப்பட்ட தங்க வரிகளைக் கொண்ட அந்தப் புண்ணியவானுடைய எண்ணப்படி ஏழையெளியவர்கள் எல்லாம் வாழ்வு பெற வேண்டும்; விவசாயிகள் எல்லாம் இந்தத் தமிழகத்திலே வாழ வேண்டும். அதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக, விவசாயிகள் பெற்ற பயிர்க் கடனை உடனடியாக அசலையும், வட்டியையும் ரத்துச் செய்ய வேண்டும்.

அதேபோல, பட்டுப் போன தென்னை மரங்களுக்கு-- மரம் ஒன்றுக்கு 1,000 ரூபாய்-- நஷ்ட ஈடு வழங்க வேண்டும். சாகுபடி செய்ய முடியாமல் போன விவசாயக் குடும்பங்கள் வாழ ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வழங்க வேண்டும்.

அதேபோல, அதிர்ச்சியில் உயிரிழந்த 13...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாகுபடி செய்ய முடியாமல் போன விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு 5,000 ரூபாய் வழங்க வேண்டும் என்று ஏற்கெனவே பிரதமரிடம் கோரிக்கை வைத்திருக்கிறேன். அதைத்தான் வழங்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 ஜனவரி 29

இவருக்கு, மாண்புமிகு உறுப்பினருக்கு விவசாயிகள்மீது எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பது 3,000 ரூபாய் வழங்க வேண்டும் என்று கேட்பதிலிருந்தே தெரிகிறது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் பேச வேண்டும் என்று வந்தால், புரட்சித் தலைவர் பாடிய பாடல்களை மட்டும் இங்கே பாடினால் போதாது. நன்றாகத் தயார் செய்து கொண்டும் வரவேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சருக்குப் பதில் சொல்ல வேண்டுமென்பதற்காக நான் சொல்லவில்லை. தங்கள் மூலமாக இந்த அரசுக்குச் சொல்ல வேண்டுமென்பதற்காக நான் சொல்கிறேன். ஆளுநர் உரையிலே 8-வது பத்தியிலே, 11-வது பக்கத்திலே கூறியுள்ளபடி, சாகுபடி செய்த பயிர்கள் காய்ந்து, பாதிப்புக்கு உள்ளான விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்றுதான் இருக்கிறது. நான் முதலிலே சொன்னது, பயிரிட முடியாத விவசாயிகளுக்கு—சொன்னதைப் புரிந்துகொள்ள வேண்டும். பயிரிட முடியாத விவசாயிகளுக்கு—3,000 ரூபாயும், பயிரிட்டு, காய்ந்த விவசாயிகளுக்கு 5,000 ரூபாயும் வழங்க வேண்டும். நீங்கள் மத்திய அரசிடம் 5,000 ரூபாய் வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறீர்கள்; ஒத்துக்கொள்கிறோம். மத்திய அரசு குழுக்களை எல்லாம் அனுப்பிப் பார்ப்பதற்கு நீண்ட காலமாகும். அதனால் விரைவிலே, உடனடியாக அந்த விவசாயிகளை வாழ வைக்க ஒரு குடும்பத்திற்கு 5,000 ரூபாய் வழங்க வேண்டுமென்று இந்த நிதி நிலை அறிக்கையைப் பக்கம், பக்கமாகப் பார்த்த பிறகுதான்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதி நிலை அறிக்கை இல்லை, ஆளுநர் உரை.

**திரு. ஐ. கணேசன்:** ஆளுநர் உரையைப் பக்கம், பக்கமாகப் பார்த்த பிறகுதான்—குறித்துவிட்டார் ஐயா—இங்கே பேச வந்திருக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலைமை எல்லாம் மாற வேண்டுமானால், காவிரிப் பிரச்சினையை



2003 ஜனவரி 29] [திரு. ஐ. கணேசன்]

ஒரு சுமுகமான நிலைக்குக் கொண்டு வர நம்முடைய முதல்வர், கர்நாடக முதல்வர் சந்திரபாபு நாயுடுவைச் சந்தித்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கர்நாடக முதல்வர் இல்லை; அவர் ஆந்திராவின் முதல்வர் (சிரிப்பு).

**திரு. ஐ. கணேசன்:** மன்னிக்கவும், கர்நாடக முதல்வர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், glass-ல் இருப்பது பச்சைத் தண்ணீர் தானே! (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, கர்நாடகப் பிரச்சினை சுமுகமாகத் தீர வேண்டுமானால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கர்நாடகப் பிரச்சினை இல்லை; காவிரிப் பிரச்சினை (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** ஐயோ, கொல்லாதீர்கள். காவிரிப் பிரச்சினை சுமுகமாகத் தீர வேண்டுமானால் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அடிங்க, நன்றாக அடியுங்கள், நான் பார்க்காததா 20 வருடமாக? அடியுங்கள். நான் சொல்கிறேன். கர்நாடக காவிரிப் பிரச்சினை சுமுகமாகத் தீரவேண்டுமானால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கர்நாடக காவிரிப் பிரச்சினை இல்லை. தமிழ்நாட்டுக் காவிரி அது. (சிரிப்பு).

**திரு. ஐ. கணேசன்:** சரி, காவிரிப் பிரச்சினை சுமுகமாகத் தீரவேண்டுமானால், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவை நம்முடைய முதல்வர் எப்படிச் சந்தித்து, கிருஷ்ணா தண்ணீரைக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்தாரோ, அதே வழியிலே கர்நாடக முதல்வரையும் நம்முடைய முதல்வர் அவர்கள் சந்தித்து சுமுகமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், நேற்றே இதற்கான விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றே இதற்குப் பதில் சொல்லிவிட்டேன். இருப்பினும், மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் கணேசன் இந்தப்

பிரச்சினையை எழுப்புவதால் மீண்டும் சொல்கிறேன். கர்நாடக முதல்வர் அவர்களை நான் சந்தித்துப் பேச முடியாத ஒரு சூழ்நிலையை, அவர்களது கட்சித் தலைவர், அவர்களுடைய டாக்டர் இராமதாஸ் அவர்கள்தான் ஏற்படுத்திவிட்டார் என்பதை இங்கே நான் சொல்லியே ஆக வேண்டும். 1998 ஆம் ஆண்டில் பி.ஜே.பி. தலைமையில் அமைந்த மத்திய கூட்டணி அரசில் அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகமும் அங்கம் பெற்றது. அப்போது பாட்டாளி மக்கள் கட்சியும் அதில் இடம் பெற்றது. அப்போதுதான், இந்தக் காவிரிப் பிரச்சினைக்காகப் புதிய வரைவுத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்ற செயல் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

Supreme Court ஆணைப்படி, ஒரு செயல் திட்டத்தை வகுத்தாக வேண்டும் என்ற கட்டாயம் அப்போது ஏற்பட்டது. அப்போதுதான் மத்திய அரசினர் இதற்காக, இந்தக் காவிரி நதி நீர் ஆணையம் Cauvery River Authority அமைக்க வேண்டுமென்ற செயல் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதில் எந்தப் பலனும் இருக்காது, தமிழ்நாட்டிற்குத் தீங்குதான் விளையும் என்பதை அப்போதே உணர்ந்ததால் நான் அதைக் கடுமையாக எதிர்த்தேன். அதை எதிர்க்க வேண்டுமென்று, அவர்களுடைய கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்களையும் நான் கேட்டுக்கொண்டேன். ஆனால், டாக்டர் இராமதாஸ் அவர்கள் அதற்குச் செவிசாய்க்கவில்லை. அன்றையதினம் முதலமைச்சராக இருந்த தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியும், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்களும் அதற்கு ஆதரவு கொடுத்ததால்தான், அன்றையதினம் காவிரி நதி நீர் ஆணையம் அமைக்கப்பட்டது. அதன் பிறகு என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். காவிரி நதி நீர் ஆணையம் எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதோ, அந்த நோக்கம் இன்று வரை நிறைவேறவில்லை. காவிரி நடுவர் மன்றம் கொடுத்த இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதுதான் காவிரி நதி நீர் ஆணையத்தின் நோக்கமாகும்; அதனுடைய வேலையாகும். இன்று வரை அதை நிறைவேற்ற முடியவில்லை. இதைப் பற்றி நான் பல முறை பல கருத்துகளைச் சொல்லிவிட்டேன். ஆனால், கடைசியாக, இறுதியாக, உச்சநீதிமன்றம் --Supreme Court-- இதைப் பற்றிப் பேச வேண்டுமானால், காவிரி நதி நீர் ஆணையத்தின் முன்புதான் பேச வேண்டும்; Cauvery River Authority-யிடம்தான் பேச வேண்டும் என்று தீர்ப்பே கூறிவிட்டது. Order



கொடுத்துவிட்டது. அப்படியிருக்கும்போது, நான் தனிப்பட்ட முறையில் கர்நாடக முதலமைச்சரை எப்படிச் சந்திக்க முடியும்?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த காலங்களிலே நடந்த நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டி, ஏதோ காவிரி நீர் பெறாததற்கு பாட்டாளி மக்கள் கட்சியும், எங்களுடைய நிறுவனர் டாக்டர் ஐயா அவர்களும் தடையாக, முட்டுக்கட்டையாக இருந்ததாக ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டை இங்கே சுமத்தியிருக்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டை நான் வன்மையாக மறுக்கிறேன். மறுப்பதற்குக் காரணம், பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தவரையிலே, எங்கள் டாக்டர் ஐயா அவர்களைப் பொறுத்தவரையிலே, தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய உரிய பங்கை முறையாகப் பெற்றாக வேண்டும் என்பதிலே ஆரம்ப காலத்திலிருந்தே உறுதியாக இருந்து கொண்டிருக்கிறோம். அதிலே முதலமைச்சர் அவர்களுக்கு நல்ல ஆலோசனைகளை அறிக்கைகளின் வாயிலாகவும், நேரடியாகவும், இந்த மாமன்றத்தின் வாயிலாகவும் சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்ற செய்தியைச் சொல்லி, ஏதோ ** என்பதைச் சொல்லுகின்ற வகையிலே....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லாததையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் மணி சொல்லிக்கொண்டிருக்கிறார். ** என்ற வார்த்தைகளை நான் பயன்படுத்தவே இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** அந்த Authority வருவதற்குப் பாட்டாளி மக்கள் கட்சிதான் காரணம் என்பதை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, முதலமைச்சர் சொன்னதாகத் தாங்கள் குறிப்பிட்ட அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தவரையிலே, காவிரி நதி நீர் பெறுவதற்கு முதலமைச்சர் எடுக்கக்கூடிய முயற்சிக்கு, நல்ல முயற்சிகளுக்கு எல்லாம் ஆதரவு என்று அறிக்கை விட்டிருக்கிறோம். இந்த மாமன்றத்திலே பேசியிருக்கிறோம். ஆகவே, இப்படித் தவறான குற்றச்சாட்டைச் சுமத்த வேண்டாம் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டைச் சொன்னது பாட்டாளி மக்கள் கட்சியின் உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள். அவர் சொன்னார்; ஆந்திர முதலமைச்சரைச் சந்தித்ததுபோல ஏன் கர்நாடக முதலமைச்சரைச் சந்திக்கக் கூடாது என்று கேட்டார். அதற்குத்தான் சொன்னேன். காவிரிப் பிரச்சினையைப் பற்றிப் பேச வேண்டுமானால் Cauvery River Authority முன்புதான் பேச வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து ஒரு விளக்கத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11-45*

கடைசியாக, c.r.a. மீட்டிங் போடப்பட்டு இருந்த அன்றைக்கு இரண்டு முதலமைச்சர்கள் வராததன் காரணமாக அக்கூட்டம் கூடவில்லை என்றும், அதே நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களும் பிரதமர் முன்னிலையில் பேசி முடித்ததன் விளைவாகத்தான் இப்போது தண்ணீர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பத்திரிகையை நீங்கள் சரியாகப் படிக்கவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம், 13-1-2003 அன்று, கேரள முதலமைச்சரும், பாண்டிச்சேரி முதலமைச்சரும் வராததால் காவிரி நதி நீர் ஆணையக் கூட்டம் நடைபெற முடியவில்லை. அதன் பிறகு, நானும், கர்நாடக முதலமைச்சரும் பிரதமர் அவர்களால் தனித்தனியாக அழைக்கப்பட்டு, தனித்தனியாகத்தான் பிரதமர் அவர்களைச் சந்தித்தோம். அதுவும் ஓர் அதிகாரபூர்வமற்ற, Informal சந்திப்பு என்ற முறையில்தான் நடைபெற்றது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முறைகேடான' என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதாக உத்தரவிட்டிருக்கிறீர்கள். அதிலே முட்டுக்கட்டையாக இருந்தது பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் இராமதாஸ் ஐயா



2003 ஜனவரி 29] [திரு. ஜி.கே. மணி]

அவர்கள் என்று சொன்ன வார்த்தையையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். அது ஒரு குற்றச்சாட்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, அது ஒரு குற்றச்சாட்டு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது குற்றச்சாட்டு இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, அது ஒரு மிகப்பெரிய குற்றச்சாட்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, கர்நாடக முதலமைச்சரை தான் சந்திக்க முடியாமல் அப்போது இருந்த சூழ்நிலைக்கு பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் இராமதாஸ் அவர்கள் காரணமாக இருந்தார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு விளக்கம் சொன்னார்கள் அவர்கள். அதற்கான விளக்கத்தை (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லாத சொற்களை எல்லாம் நான் சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார். இப்போது அவர் சொன்னதெல்லாம் அவருடைய சொந்தக் கருத்து; சொந்த வார்த்தைகள். நான் என்ன சொன்னேன்? அன்றையதினம் 1998-ல் காவிரி நதி நீர் ஆணையம் அமைவதை நான் எதிர்த்தேன். டாக்டர் இராமதாஸ் அவர்கள் ஆதரித்தார். இதை எப்படி நீங்கள் மறுக்க முடியும்?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்னது, ஏதோ காவிரி நீர் தரக்கூடாது என்பதற்கு, முதலமைச்சர் அவர்களுடைய கூற்றுக்கு எதிர்ப்பாக இருந்தது போலச் சொன்னார்கள் என்பதைத்தான் சொல்கிறேன். ஆனால் அதுவல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுமாதிரி சொல்லவில்லை. முதலமைச்சர் அந்த வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. திரு. கணேசன், பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு சுமூகமான உறவு வளரவேண்டுமென்ற நல்ல எண்ணத்தில்தான் இதைச் சொன்னேனே ஒழிய....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன் ஏறத்தாழ 27 மணித்துளிகள் பேசியிருக்கிறீர்கள். மூன்று மணித்துளிகளில் முடித்து விடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** நான் பேசியது 3 மணித்துளிகள்தான் இருக்கும் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிக்கல் வந்துவிட்டால் பிறகு எல்லோரும்தானே பேச வேண்டும்?

**திரு. ஐ. கணேசன்:** நான் சிக்கல் இல்லாமல் இன்னும் கொஞ்சம் பேசுகிறேன். ஒரு நல்ல சூழ்நிலை உருவாக வேண்டுமென்பதற்காகத்தான் அதைச் சொன்னேனேயொழிய, வேறொன்றும் இல்லை. உங்கள் அனைவருக்கும் இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். இன்னும் நான்கைந்து மாதத்திற்கு மழை பெய்யாது. காரணம், பனி இறங்கி விட்டது. அடுத்தது, சித்தரை வரை குடிதண்ணீருக்கே தமிழகம் தவிக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுவிடும். ஆகையினால், இதையெல்லாம் தவிர்க்க அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கையிலே இறங்க வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன். கோபப்படவேண்டாம் என்று சொல்லிக் கொள்கிறேன். தலைவர் அவர்களே, உங்களுக்கு இலக்கியம் தெரியும். எரிகிற விளக்கை நிறுத்துவதற்குக் கூட 'அணை' என்றுதான் சொல்வார்கள். அதேபோல், தமிழகம் என்னும் இந்தப் புகழ்பெற்ற தீபத்தை அண்டை மாநிலத்தவர் எப்படியாவது அணைத்து விடுவார்களோ—அணை கட்டி அணைத்து விடுவார்களோ—என்று அஞ்சுகிறேன். ஆகையினால், அதே வழியிலே தற்போது பவானி ஆற்றின் குறுக்கே அணை கட்டுகிறார்கள். அப்படிக் கட்டினால் —கட்ட முயற்சிக்கிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம். கட்டினால்--கோவை மாவட்டம், ஈரோடு மாவட்டம்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி ஆற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்டுவதைத் தடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே காவிரி நடுவர் மன்றத்திற்கு முன்பு புகார் மனு தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது. இப்படி ஒரு அணையைக் கட்டக்கூடாது என்று ஏற்கெனவே கேரள முதலமைச்சர் அவர்களுக்கு நான் கடிதமும் அனுப்பியுள்ளேன். இன்றையதினம் ஒரு செய்தி வந்திருக்கிறது; மத்திய அரசின் Forest and Environment துறையிலிருந்து கேரள அரசுக்கு இந்த அணை



கட்டும் பணியை உடனடியாக நிறுத்த வேண்டுமென்ற ஆணை சென்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் கூறும் நல்லோர்கள் அத்தனைபேரும் பாராட்ட வேண்டும். ஏனென்றால், குறிப்பாக, ஈரோடு, கோவை மாவட்ட மக்களுடைய பயத்தை இந்த ஒரு சொல் விடுவித்துவிட்டது. அதற்காக நன்றியை உங்கள் மூலமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

அதேபோலத்தான், புதிய வீராணம் திட்டம். அதுவும் இந்த ஆளுநர் உரையிலே இருக்கிறது. தயவுசெய்து ஆளுநர் உரையிலே பேசுவதற்கு அனுமதியுங்கள். நீர் அடிப்படையில் ஆதாரமற்ற, புதிய வீராணம் திட்டம்; காவிரியிலிருந்து தண்ணீர் வந்தால் மட்டும் அங்கே 44,856 ஏக்கர் விளைநிலங்களாக ஆக்கப்படும். அதனுடைய முந்தைய கொள்ளளவு—குறித்துக்கொள்ளுங்கள், 1923-வது ஆண்டு 1,441 மில்லியன் கன அடி. அதேபோல், 1966-னுடைய கொள்ளளவு 1,102 மில்லியன் கன கன அடி. அதேபோல் 1972-ல் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, மில்லி, மில்லி என்பதை அவ்வளவு அழுத்தமாகச் சொல்கிறீர்கள்? (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** உங்களுக்குப் பழக்கமாகத் தெரிகிறது தலைவரே! அடிக்கடி, உங்கள் பூமியிலேயிருந்து எடுத்துவந்த தண்ணீரையே இது என்ன தண்ணீர் என்கிறீர்கள்; மில்லி என்கிறீர்கள். வேண்டாம். மில்லியன் கன அடி; சுருக்கமாக. டைம் ஆகிப்போய் விட்டது என்று வேறு; 2 நிமிடம், 3 நிமிடம் என்று வேறு பயப்படுத்துகிறீர்கள். அப்படியே அதிலே வைத்தீர்கள் என்றால், ஹார்ட் 'டபக்' என்கிறது.

அதேபோல், 1972-லே 980 மில்லியன் கன அடியாகக் குறைந்தது. அதே அளவு, 1982-லே 930 மில்லியன் கன அடியாகக் குறைந்தது. தற்போது அந்த அணையினுடைய — ஏரியினுடைய — அளவு 720 மில்லியன் கன அடியாகத்தான் இருக்கிறது. இது ஒரு போக சாகுபடிக்கே மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறது. ஆகையாலே, அங்கே இருக்கக்கூடிய கிட்டத்தட்ட 44,800 விவசாயிகளையும் வாழ வைக்கக்கூடிய இந்த ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருவது அவ்வளவு சாத்தியக்கூறானது அல்ல.

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வீராணம் திட்டம். அதாவது சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்-1 என்ற திட்டம் சாத்தியமானது அல்ல என்று மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசி இருக்கிறார். பல தவறான தகவல்களையும் இந்த அவைக்குத் தந்திருக்கிறார். இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்குக் குடிநீர் கொண்டு வந்தால், ஏற்கெனவே அந்த நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்றெல்லாம் உண்மைக்கு மாறான சில தகவல்களை இங்கே தெரிவித்தார். ஆகவே, இதற்குச் சரியான விளக்கம் அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்குக் குடிநீர் கொண்டு வருவதால், ஏற்கெனவே பாசனத்திற்கு அந்த நீரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்பதை முதலில் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடலூர் மாவட்டத்திலுள்ள வீராணம் ஏரி விவசாயத் தேவைகளை நிறைவு செய்கின்ற நீர்த்தேக்கமாக அமைந்துள்ளது. கீழ் அணைக்கட்டு மற்றும் வீராணம் ஏரியினை இணைக்கின்ற 22 கிலோ மீட்டர் நீளமுடைய வடவாறு கால்வாய் வழியாக மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து இந்த ஏரிக்கு நீர் கிடைக்கிறது. இந்த ஏரியின் கொள்ளளவு 27.74 மில்லியன் கன மீட்டர். அதாவது, 930 மில்லியன் கன அடி. மற்றும் ஏரியில் முழு அளவிலும் தண்ணீர் இருக்கும்போது அதன் மேற்பரப்பு 20.83 சதுர கிலோ மீட்டர் ஆகும். கீழ்க்கொள்ளிடம் அணைக்கட்டு அமைப்பின் வழியாக நீர் பெறும் அமைப்பில் அமைந்துள்ள இந்த ஏரி 41,856 ஏக்கர் பதிவு செய்யப்பட்ட பாசனப் பரப்பின் விவசாயத்திற்கு உதவுகிறது.

இந்த ஏரிக்கென 427.5 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் தனி நீர்ப்பிடிப்புப் பகுதி இருக்கிறது. இயல்பாக 1,050 மில்லி மீட்டர் மழை பெய்யும் ஆண்டில் வீராணம் ஏரியில் சுமார் 92.79 மில்லியன் கன மீட்டர். அதாவது 3,277 மில்லியன் கன அடி நீர் கிடைக்கிறது. கடந்த காலங்களில் வடவாறு கால்வாய் வழியாக காவிரி ஆற்றுத் தண்ணீர் வராத காலங்களில் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்யக்கூடிய மழையினால் இந்த ஏரி நிரம்பியுள்ளது. இந்த அரசின் முந்தைய



2003 ஜனவரி 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

காலத்தில், திருவாளர்கள் Tata Consultancy Engineers, இந்த ஏரியிலிருந்து கிடைக்கும் நம்பத் தகுந்த குடிநீரை உறுதி செய்வதற்குரிய ஒரு திட்டம் செய்யத்தக்கமைக்கான ஆராய்வு ஒன்றை நடத்தினார்கள். 1965 முதல் 1993 வரையிலான 29 வருடங்களுக்கு மேல் அங்கு பதிவாகி இருந்த விவரக் குறிப்புகளை வைத்து இந்த ஏரியிலிருந்து கிடைக்கக்கூடிய நீரளவை அவர்கள் ஆராய்ந்தார்கள். பின்னர், நூறு வருடங்களுக்கான நிகழ்வினைக் கணக்கில் கொண்டு, விவசாயத்திற்கும், சென்னை நகரின் குடிநீர்த் தேவைக்கும் வீராணம் ஏரியிலிருந்து கிடைக்கும் நீரின் அளவை மதிப்பிட ஒத்த மாதிரியான மாதிரிப் படிவம் ஒன்று அவர்களால் கட்டப்பட்டது. இறுதியாக, திருவாளர்கள் Tata Consultancy Engineers, இந்த அமைப்பில் பின்வரும் மேம்பாட்டுப் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்குக் கருத்துத் தெரிவித்தார்கள்:

*முற்பகல் 11-55*

1. ஏரியின் கரையை 0.6 மீட்டர் அளவுக்கு உயர்த்துவதன் மூலம், அதன் நீர் இருப்புக் கொள்ளளவை 930 மில்லியன் கன அடியிலிருந்து 1,485 மில்லியன் கன அடியாக உயர்த்துவது;

2. கீழ் அணைக்கட்டிலிருந்து வீராணம் ஏரிக்கு நீர் எடுத்துச் செல்லும் வடவாறு கால்வாயின் பக்கவாட்டில் அகவுறை அமைத்து, அதாவது, --lining the canals-- நீர்க் கசிவு இழப்பினைக் குறைப்பது; வீராணத்திலிருந்து சென்னைக்குக் கொண்டு செல்லும் நீரின் அளவு, மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து காவிரி வரையில் திறந்துவிடப்படும் நீரின் அளவில் 1.5 விழுக்காடு ஆகும். இதனால், 1995 ஆம் ஆண்டு உலக வங்கி, அதாவது, World Bank இத்திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்திடப் பரிந்துரை செய்தது. இதன்படி, வீராணம் ஏரி மற்றும் வடவாறு கால்வாய் மேம்பாட்டிற்கு அரசு 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 110.95 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்தது. வீராணம் ஏரியில் தூர் வாருதல் மற்றும் அதன் கரையின் உயரத்தை 0.6 மீட்டர் அடி அதிகப்படுத்துதல் போன்ற பணிகளைச் செய்து, கொள்ளளவை 930 மில்லியன் கன அடியிலிருந்து 1,485 மில்லியன் கன அடி வரை உயர்த்தவும், வடவாறு கால்வாயின் கொள்ளளவை மேம்படுத்தவும் மற்றும் பக்கவாட்டில் அகவுறை அமைத்துக் கால்வாயின் கரையை மேம்படுத்தவும் அரசு ஆணையிட்டது. மேலும், வீராணம் ஏரி மற்றும் வடவாறு கால்வாய் பாசனப் பரப்பில் உள்ள நீர் வழிகளை மேம்படுத்தவும் ஆணையிட்டது. இதுவரை பொதுப் பணித் துறையினரால் செய்யப்பட்ட மேம்பாட்டுப் பணிகளின்

மதிப்பு ரூ. 54 கோடி ஆகும். மேலும், 35 கோடி ரூபாய்க்கான மதிப்பில் மேம்பாட்டுப் பணிகளை ஜூன் 2004-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்சொன்ன பணிகளால் வீராணம் ஏரியின் அளவு 1,485 மில்லியன் கன அடிக்கும், வடவாறு கால்வாயின் நீர்க் கொள்ளளவுத் திறன் வினாடிக்கு 1,485 மில்லியன் கன அடியிலிருந்து 2,300 மில்லியன் கன அடியாகவும் மேம்படுத்தப்பட்டது. இதுவரை நடந்த மேம்பாட்டுப் பணிகள் பாசனப் பரப்பில் சிக்கனமான நீர்ப்பாசனத்தை உறுதி செய்திட உதவியது. மேலும், அக்டோபர் 1994-ல் ஆட்சியில் இருந்தபோது மழை பொழியாத ஆண்டையும், மழை நீரின் அளவு குறையக் கூடிய ஆண்டையும் கணக்கில் கொண்டு சிக்கன முறையில் இயக்குதல், விதிமுறைகளின்படி பாசன நீர், ஆயக்கட்டு நிலங்களுக்கும், குடிநீர், சென்னைப் பெருநகரத்திற்கும் வழங்க முடிவு செய்தது. ஆயக்கட்டு நிலங்களுக்கு அளிக்கப்படும் நீர்ப்பாசன உரிமை பாதிக்கப்படாதவாறு உறுதி செய்யவே இவ்வாறு செய்யப்பட்டது. அதே நேரத்தில் ஏரியிலிருந்து சென்னைப் பெருநகரத்திற்குக் குடிநீர் வழங்குவதற்காக வினாடிக்கு 75 மில்லியன் கன அடி நீர் எடுப்பதன் மூலம், நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் நீர் வழங்குவது இத்திட்டத்தின்படி உறுதியாக்கப்பட்டுள்ளது. மேம்பாட்டுப் பணிகளைச் செய்ததன் மூலம் ஏரியில் கிடைக்கும் நீரின் அளவு இயல்பான மழை பெய்யும் ஆண்டின் முன்பு இருந்த 11.06 டி.எம்.சி. அடியிலிருந்து 14.45 டி.எம்.சி. அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல, மழை குறைவாகப் பெய்யும் ஆண்டு, ஏரியில் கிடைக்கும் நீரின் அளவு, முன்பிருந்த 5.2 டி.எம்.சி. அடியிலிருந்து 8.02 டி.எம்.சி. அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் சென்னை நகருக்கு இயல்பான ஆண்டில் 2.45 டி.எம்.சி. அடி அளவில் நீர் கொண்டு செல்லப்பட்ட பின்னரும், விவசாயத்திற்கு 12 டி.எம்.சி. அடி அளவில், அதாவது கூடுதலாக, முன்பிருந்ததை விட 1 டி.எம்.சி. அடி அளவு நீர் அதிகமாகக் கிடைக்கும். அதைப்போல, குறைவாக மழை பெய்யும் ஆண்டிலும் 1 டி.எம்.சி. அடி நீர் விவசாயத்திற்குக் கூடுதலாகக் கிடைக்கும்.

*நண்பகல் 12-00*

காவிரி தொழில்நுட்ப மையத்தின் தலைவர் மற்றும் நீர் ஆதாரங்களுக்கான தமிழ்நாடு அரசின் ஆலோசகர், மார்ச் மாதம் 2002-ல் மொத்த நிலைமையினைக் கருத்தில் கொண்டு சென்னை





நகரக் குடிநீர்த் தேவைக்கு, தினமும் 180 மில்லியன் லிட்டர் உறுதியளிக்க எந்தவிதக் கடினமும் இல்லை எனத் தன் கருத்தினைத் தெரிவித்துள்ளார். வீராணம் ஏரியின் நீர்மட்டத்தைக் குறைந்தபட்சத் தேவைக்கு வைத்துக்கொண்டு, பாசனத் தேவையினைப் பாதுகாக்க முடியும் என மேலும் கருத்துத் தெரிவித்துள்ளார். சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டத்திற்கான நிதி சாத்தியக்கூறு, சென்னைக் குடிநீர் வாரியத்தாலும் மற்றும் கடன் உதவி அளிக்கும் நிதி நிறுவனங்களாலும்—15 ஆண்டுகளுக்கான நிதித் திட்டம்—தீட்டப்பட்டுள்ளது. சென்னைக் குடிநீர் வாரியத்தால் தீட்டப்பட்ட நிதித் திட்டம், கடன் திருப்பித் தரும் பாதுகாப்பு விகிதம், கடன் முதலீடு விகிதம் மற்றும் முதலீட்டின் பேரில் வரும் பயன் போன்ற சாதகமான நிதிக் குறியீடுகளைத் தெரிவிக்கின்றது. புதிய வீராணம் திட்டத்தின் மூலம் பெறும் ஒரு கிலோ லிட்டருக்கான நீரின் விலை சுமார் 18 ரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது மாற்றுத் திட்டங்களாக உள்ள காவிரி ஆற்றில் ஜேடர்பாளையத்திலிருந்து எடுக்கும் நீரின் விலை மற்றும் உவர்ப்பு நீரை, கடல் நீரைக் குடிநீராக்கும் விலையை விடக் குறைவான விலையே ஆகும்.

மொத்தத்தில் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இப்போது நான் குறிப்பிட்ட இரண்டு பணிகளையும் செய்து முடித்த பிறகே வீராணம் திட்டத்தின் கொள்ளளவு அதிகப்படுத்தப்படும். ஆகவே, வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்குக் குடிநீரை எடுத்துக்கொண்ட பிறகும்கூட, அங்கே பாசனத்திற்கு ஒரு டி.எம்.சி. அடி கூடுதலாகக் கிடைக்குமே தவிர, குறையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த விளக்கத்திலே இருக்கக்கூடிய குறைகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது இந்த வீராணம் அணைக்குத் தண்ணீர் கிடைக்கக்கூடியது .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நீங்கள் பேசும்போது சில கருத்துகளைச் சொல்லலாம். நிறையப் பேர் பேச வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். முக்கியமான பிரச்சினை என்கிற காரணத்தாலே சொல்கிறேன்; இன்று வீராணம் ஏரிக்குத் தண்ணீர் வருவது மேட்டூர் அணையிலிருந்து; மேட்டூர்

அணைக்கு இப்போது கர்நாடக அரசு தண்ணீர் விடவில்லை என்பது மிகப் பெரிய பிரச்சினை. இதனாலே மேட்டூர் அணைக்கே தண்ணீர் இல்லை. தண்ணீர் இல்லாத காரணத்தினாலே வீராணம் ஏரி இப்போது வறண்டு கிடக்கிறது. மேலும் எதிர்காலத்திலே இப்படிப்பட்ட பிரச்சினை உருவாக வாய்ப்பு இருக்கிறது. என்னதான் ஏரியை உயர்த்தினாலும்கூடத் தண்ணீர் வரத்து எங்கே இருந்து வரும் என்பதுதான் கேள்வி.

அதுமட்டுமல்லாமல், அங்கே இலட்சக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. அப்படி இலட்சக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்படக்கூடிய அதே நேரத்தில், ஏரியும் வறண்டு கிடக்கக்கூடிய நிலை; காவிரியிலிருந்து தண்ணீர் வரவேண்டும் என்ற நிலை; அதுமாத்திரம் அல்லாமல், இதற்குச் செலவாகக்கூடியது, அரசினுடைய மொத்த மதிப்பீடு ரூபாய் 720 கோடி என்று சொல்லப்படுகிறது. இந்த 720 கோடி ரூபாயைச் செலவு செய்து, குறைவான அளவு தண்ணீரைப் பெறுவதைவிட, இப்போது தெலுங்கு கங்கைத் திட்டம் என்று சொல்லக்கூடிய, கிருஷ்ணாவிலே இருந்து தண்ணீரைப் பெறுவதற்குக் குறைந்த அளவு தொகையை ஒதுக்கினாலே 15 டி.எம்.சி. தண்ணீர் பெற வாய்ப்பு உள்ளதாகச் சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விவரங்களைச் சரியாகத் தெரிந்துகொள்ளாமல் பேசிக்கொண்டிருக்கிறார். கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், தமிழக அரசு என்னென்ன செலவு செய்ய வேண்டுமோ, அதை ஏற்கெனவே செலவு செய்து முடித்துவிட்டது. இனிமேல் புதிதாக நாம் பணம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆந்திரத் தரப்பில் அவர்கள் என்னென்ன பணிகளைச் செய்து முடிக்க வேண்டுமோ அவர்கள் செய்து முடிப்பார்கள். அதற்காகத்தான் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன. இந்த ஆண்டு ஜூன், ஜூலைக்குள் அவர்கள் பணிகளைச் செய்து முடிப்பார்கள். நாம் நிதி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

அதே சமயத்தில், இப்போது நான் இங்கே தெரிவித்த நீண்ட விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனித்துக் கேட்கவில்லை என்று கருதுகிறேன். ஏற்கெனவே 1965 முதல் 1993 வரை 29 ஆண்டுகளில் அந்த ஏரியின் நீர் வரத்து, மழை விவரம்





எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டுதான், தொழில்நுட்ப வல்லுநர்கள் இந்தத் திட்டம் சாத்தியமானது என்று கூறியிருக்கிறார்கள். மழை பெய்யாத ஆண்டு, அதாவது, காவிரியில் நீர் வராத ஆண்டுகளில்கூட, மழை பெய்து அந்த ஏரி நிரம்பியிருக்கிறது. ஆகவே, இன்றையதினம் இந்த அரசு சந்தித்துக் கொண்டிருக்கின்ற கடுமையான நிதி நெருக்கடியில் ஒரு திட்டம் சாத்தியமானது அல்லவென்றால், 720 கோடி ரூபாயைச் செலவிட்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் பணியை நிச்சயமாக இந்த அரசு மேற்கொள்ளாது. இது சாத்தியமானதுதான்; வெற்றி பெறும். இங்கே சென்னைக்கு வீராணம் ஏரியிலிருந்து குடிநீர் கிடைக்கும். அங்கே ஏற்கெனவே பாசனத்திற்காகத் தண்ணீரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்கள். மாறாக, கூடுதலாகப் பயன் அடைவார்கள் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** சுருக்கமாக முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தத்திலே ஆந்திர அரசுக்கு கிருஷ்ணா திட்டத்திற்காக 520 கோடி ரூபாய் வழங்கப்பட்டுவிட்டது. அந்தப் பணிகள் முற்றுப்பெறாமல் இருப்பது உங்களுக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்திலே, சொல்ல வேண்டிய கருத்துக்கள் எல்லாவற்றையும் சொல்லிவிட்டார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெற்ற முன்னாள் தலைமைப் பொறியாளர் ஒருவர் இந்தத் திட்டம் நிச்சயமாக நிறைவேறாது என்று கருத்துத் தெரிவித்ததோடு, தொழில்நுட்ப ஆதாரத்தோடு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது சொல்லுங்கள். நாளைக்கு நீங்கள் பேசக்கூடிய வாய்ப்பு இருக்கும்போது சொல்லுங்கள். திரு. கணேசன், ஒரு மணித்துளியில் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் இங்கே....

[2003 ஜனவரி 29

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** ஒரே ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே கொடுத்த புள்ளிவிவரம் ஒரு கடுகளவாவது மாறியிருந்தால் அதற்கு முழுப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். இது எப்படி உண்மைக்கு மாறான புள்ளிவிவரம் என்று இந்த அரசு சொன்னது என்று எனக்குத் தெரியவில்லை. 'தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழு, 2001-2002, 12-வது பேரவை, ஏழாவது அறிக்கை, குடிநீர் வழங்கல், பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்: 26-4-2002. சட்டமன்றப் பேரவைச் செயலாளர், சென்னை' என்று நீங்கள் கொடுத்த அதே புத்தகத்திலே (குறுக்கீடு) 2002 — என்று சொல்லி, பக்கம் 12-லே புதிய வீராணம் திட்டத்தினுடைய புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டன. அதிலே, முதலமைச்சர் படித்ததுகூட, 1982-லே 930 மில்லியன் கன அடி தண்ணீர் என்றுதான். நான் சொன்ன அதே குறிப்பைத்தான்; உங்களுடைய அரசின் குறிப்பைத்தான் நான் இங்கே படித்தேனேயொழிய, சொன்னேனேயொழிய, இது உண்மைக்கு மாறானது என்றால், இதிலே எனக்கு என்ன இலாபம் கிடைத்துவிடும்? உண்மைக்கு மாறான தகவலைச் சொல்லவேண்டிய அவசியம் என்ன? நாங்களும் படித்துவிட்டுத்தான் இந்தச் சட்டமன்றத்திற்கு வருகிறோம் என்பதனை மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, ஒரு மணித்துளியிலே முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லுங்கள். அது இல்லையென்று சொன்னீர்களே, இது எப்படி உண்மைக்கு மாறாகப் போகும்? இது நியாயமா? நாங்களும் இருபது வருடங்களாகச் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறோம். எங்களுக்குத் தெரியாதா, எதைப் படித்துவிட்டு வந்து பேசவேண்டும், பேசக்கூடாது என்று? வேண்டாம் தலைவரே, புண்படுத்தவேண்டாம் என்று சொல்லி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவற்றை அறைக்கு வாருங்கள், பேசிக்கொள்ளலாம்.



2003 ஜனவரி 29]

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசிக்கொள்ளலாம். காபி கொடுங்கள். சாலைகள் என்ற தலைப்பிலே, பக்கம் 38—லே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புதுக் கருத்தைச் சொல்லாதீர்கள். முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் நிதி நிலை அறிக்கைதான் (குறுக்கீடு) இன்னும் ஒரு நிமிடத்திலே முடித்து விடுகிறேன் (சிரிப்பு) இவரைப் பார்த்தாலே நிதி நிலை என்று வந்துவிடுகிறது. ஆளுநர் உரை, பக்கம் 38, பத்தி 29 — சாலைகள் சீரமைக்க 2003 ஆம் ஆண்டிலே மார்ச்சுக்கு உள்ளாக ரூபாய் 90 கோடி செலவில் 2500 கிலோ மீட்டர் சாலை செப்பனிடப்படும் என்றும், 2003-2004-வது ஆண்டு 180 கோடியிலே 5000 கிலோ மீட்டர் சாலை செப்பனிடப்படும் என்றும், சீர் செய்யப்படும் என்றும் இந்த நிதி நிலை அறிக்கையிலே — sorry — ஆளுநர் உரையிலே கொடுத்திருக்கிறீர்கள். நான் இதனைப் பாராட்டுகிறேன். ஆனால், பல ஆண்டுகளாகத் தமிழகத்திலே சாலைகள் செப்பனிடப்படாததால் அனைத்துச் சாலைகளும் சீர்கெட்டிருக்கின்றன. இந்தத் தொகை நிச்சயமாகப் போதுமானதாக இல்லை.

**•மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலைகள் அதிகப்படியாகப் பழுதுபட்டிருக்கின்ற நிலையினை இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் ஓர் உண்மையை இங்கே தெளிவாக்குவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில் நெடுஞ்சாலைத் துறையில் 54 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகள் நெடுஞ்சாலைத் துறையின் பொறுப்பிலே இருக்கின்றன. ஒரு சாலை மேம்படுத்தப்பட்டாலோ, புதுப்பிக்கப்பட்டாலோ அல்லது உறுதிப்படுத்தப்பட்டாலோ 5 ஆண்டு காலத்திற்கு அது இருக்கும். அந்த வகையில் ஒவ்வொரு வருடமும் 11 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகள் உறுதி செய்யப்பட வேண்டும்; புதுப்பிக்கப்பட வேண்டும்; மேம்படுத்தப்பட வேண்டும். மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த 1991-96 காலகட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய காலத்தில், அத்தனை சாலைகளும் — கிட்டத்தட்ட 50 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகள் — புதுப்பிக்கப்பட்டன; உறுதி செய்யப்பட்டன; மேம்படுத்தப்பட்டன. ஆனால், அதற்குப் பின்னால் வந்த, 1996-2001

காலகட்டத்தில், திரு. கருணாநிதி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் போடப்பட வேண்டிய சாலைகளின் மொத்த நீளம் 54,000 கிலோ மீட்டர் அளவு. ஆனால், அவர்கள் போட்ட சாலைகளின் மொத்த நீளமே 29,562 கிலோ மீட்டர்தான். ஆக, அவர்கள் போடவேண்டிய சாலையில் 24,438 கிலோ மீட்டர் என்ற அளவிற்குக் குறைபாடு இருக்கின்ற ஒரு சூழ்நிலையில்தான், தற்சமயம் சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. கடந்த ஆட்சியினுடைய நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாகத்தான் அந்தச் சாலைகளில் இந்த அளவிற்குப் பழுது ஏற்பட்டிருக்கிறது என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை எல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கவனமாகக் கருத்தில் எடுத்துக்கொண்டு, இன்றையதினம் தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை சாலைகளையும்—போடப்பட வேண்டிய, புதுப்பிக்கப்பட வேண்டிய, உறுதி செய்யப்பட வேண்டிய, மேம்படுத்தப்பட வேண்டிய அத்தனை சாலைகளையும்— போடுவதற்கு இப்போது திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, பல்வேறு நிதி நிறுவனங்களிலேயிருந்து நிதியைப் பெற்று, அத்தனை சாலைகளையும் போடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 12-10

உதாரணத்திற்குச் சொல்லப்பட வேண்டுமென்றால், உலக வங்கியின் நிதியுதவியுடன் 2,000 கோடி ரூபாய் அளவிற்கு அங்கேயிருந்து நிதியுதவி பெற்றுப் பல்வேறு சாலைகள் போடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டம் 2003 ஆம் ஆண்டு காலத்திலிருந்து தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றபடி இருக்கின்ற அத்தனை சாலைகளையும், அவர்களால் விடப்பட்ட, அந்த இடைப்பட்ட 24,438 கிலோமீட்டர் சாலைகளையும், தொடர்ந்து இருக்கின்ற அத்தனை பழுதுபட்ட சாலைகளையும் பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெற்று உறுதி செய்வதற்கும், மேம்படுத்துவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே ..





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், நிறைவு வாக்கியத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** சரி, சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அதையேதான், அமைச்சர் அவர்கள் சொன்ன அதையேதான் நானும் சொன்னேன். பல ஆண்டுகளாகச் சாலைகள் செப்பனிடப்படாததால், நகரங்களிலேயும், கிராமங்களிலேயும் சாலைகள் மிக மோசமாக இருக்கின்றன. இவ்வளவு நெருக்கடியிலும் இவ்வளவு தொகையை ஒதுக்கியிருக்கிறீர்கள். அதற்கு நன்றி. இது போதுமானதாக இல்லை; இன்னும் கூடுதலாக ஒதுக்குங்கள் என்றுதான் நானும், நல்ல எண்ணத்தில்தான், தலைவர் அவர்களே, சொன்னேனேயொழிய, வேறு இல்லை. உதாரணத்திற்கு ஒன்றே ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, ஓட்டுப்போட்ட ஜனங்களுக்காகச் சொல்ல வேண்டும், இல்லையா? உதாரணத்திற்கு, உலக உத்தமன் மகாத்மா காந்தி உங்களுக்கு மேலே படமாகத் தொங்குகிறார். கிராம ராஜ்ஜியம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, நாடக ஒத்திகையா?

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, இல்லை. எதைச் சொன்னாலும், நிறுத்தினால் என்னதான் பண்ணுவது? அந்த உத்தமன் கண்ட கனவு, கிராம ராஜ்ஜியம். ஒரு வண்டிக்கு அச்சாணி எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம், ஒரு நாட்டிலே இருக்கிற கிராமங்கள். கிராமங்கள் வளர்ந்தால்தான் நாடு வளர முடியும். ஆனால், கிராமங்களில் இன்று சாலைகள் மிக மோசமான நிலையிலே இருக்கின்றன. அப்போது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உரையை முடித்துவிடுங்கள். முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** முடித்துவிடுகிறேன். ஒரே ஒரு நிமிஷத்திலே முடித்துவிடுகிறேன். அப்போது, நகரப் பேருந்துகள் எல்லாம் போய்க் கொண்டிருந்த சாலைகளெல்லாம் இப்போது இரண்டு சக்கர வாகனங்கள் கூடச் செல்ல முடியாத அவல நிலையிலே இருக்கின்றன. உதாரணமாக, என்னுடைய எடப்பாடி தொகுதியிலே எடப்பாடியிலேயிருந்து தாராபுரம்....

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். அதையெல்லாம் தனியாக வைத்துக்கொள்ளலாம், அப்புறம்.

**திரு. ஐ. கணேசன்:** சொல்லிவிட்டு முடித்துவிடுகிறேன். தாராபுரம் வரையுள்ள சாலையைப் பற்றிச் சொல்லிவிட்டு முடித்துவிடுகிறேன். தாராபுரம் வரையிலும் உள்ள சாலை; முதலமைச்சர் கவனத்திற்கு வர வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். நிலைமை இப்படிப் போய்விட்டது; இவ்வளவு தூரம் கெட்டுப் போய்விட்டது; அதைக் கொஞ்சம் சீர் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேனேயொழிய, வேறு எதற்குமே இல்லை. நல்லதற்குத்தான் சொல்லுவேன்.......

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்புகூட 5 ஆண்டு காலம் அவர்தான் அதே தொகுதிக்குச் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார் என்று கருதுகிறேன். அன்றைய முதலமைச்சர் கவனத்திற்கு இதைக் கொண்டு செல்லவில்லையா? சாலைகளைச் செப்பனிடவில்லையா?

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக முதலமைச்சருக்கு நான் சொல்லிக்கொள்வது ஒன்றுதான். நான்கு முறையும் எடப்பாடிதான். வேறு தொகுதி மாற்றுவது என்பதே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி இருந்தும்கூட, தொகுதி இவ்வளவு மோசமாக இருக்கிறதா? (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** ஆமாம். சொல்வது என்னுடைய கடமை. அனைத்தும், அனைத்துத் தொகுதிகளிலும் நிறைவேற்ற முடியாது என்று உங்களுக்குத் தெரியும்; முதல்வருக்கும் தெரியும்; எனக்கும் தெரியும்; இங்கே வந்திருந்த, வந்திருக்கும் பழைய சட்டமன்ற உறுப்பினரான ஞானசேகரனுக்கும், அம்மையாருக்கும் அத்தனை பேருக்கும் தெரியும். இருந்தாலும், நம்முடைய கடமையை நாம் சரியாகச் செய்ய வேண்டும். அரை மணி நேரமாகப் பேசி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உரையை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இன்னும் ஒன்றே ஒன்று.



2003 ஜனவரி 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** என்னுடைய தொகுதியிலே இன்னும் இதேபோலச் சாலைகள் மிக, மிக மோசமாக இருக்கின்றன. சாலைகளைச் செப்பனிட வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு—நீங்கள் வருத்தப்படக் கூடாது, தயவு செய்து தலைவர் அவர்களே—கடையாணியும், காளை மாடும் இல்லாத கட்டை வண்டிப் பயணமாகத்தான் இந்த ஆளுநர் உரை எனக்குத் தெரிகிறது என்று சொல்லி, இவ்வளவு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த தங்களுக்கு நன்றி, நன்றி என்று சொல்லி முடிக்கிறேன்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வினாயகமூர்த்தி, என்ன? சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் திட்டத்தினுடைய சாத்தியக்கூறுகளைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீண்ட விளக்கத்தோடு கருத்துரை வழங்கியிருக்கிறார்கள். அரசு இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கு அடிப்படையாக Tata Consultancy- யினுடைய ஆய்வறிக்கையை எடுத்துக் கொண்டதாக அவர்களுடைய உரையிலே தெரிவிக்கப்பட்டது. Tata Consultancy-யின் ஆய்வறிக்கை 1994 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. அதற்குப் பின்னால், 8 ஆண்டுகளுக்குப் பின்னால், 2002 மார்ச்சிலே அண்ணாமலை சர்வகலாசாலையிலே National Seminar on Water Resources System, Planning and Management என்ற ஒரு கருத்தரங்கம் நடந்திருக்கிறது. அந்தக் கருத்தரங்கத்தினுடைய முடிவாகச் சொல்லப்படுவது, The Veeranam Tank is less capable of serving the drinking water need of Chennai without affecting the Ayacut. என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த ஆய்வறிக்கையையும் அரசு பரிசீலனை செய்திருக்கின்றதா? அதன் பின்னால்தான் வீராணம் திட்டத்தை எடுக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்களா என்ற விவரத்தைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகின்றேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல, இவ்வளவு பெரிய திட்டத்திற்கு இவ்வளவு செலவு செய்யும்போது, அது சாத்தியமா

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 ஜனவரி 29

இல்லையா என்பதை முழுவதுமாக ஆராயாமல் நிச்சயமாக இந்தப் பணியில் இந்த அரசு இறங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே இந்தத் திட்டத்தை அறிவித்து, அப்போது Tata Consultancy Engineers என்ற நிறுவனம் ஒரு சர்வே நடத்தினார்கள் என்பதைக் குறிப்பிட்டேன். அதனால், அதன் பிறகு மீண்டும் மறு ஆய்வு செய்யவே இல்லை என்று பொருள் அல்ல. அண்மையில்கூட தேவையான ஆய்வுகளை நடத்தி, இது முழுவதும் சாத்தியமான திட்டம் என்பதை அறிந்த பின்னர்தான் பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். மீதி விவரங்களை நாளை தெரிவிக்கிறேன். அதாவது, என்னுடைய பதிலுரையில் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

***மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த, தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற, தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர், நாளைய இந்தியத் துணைக் கண்டத்தின் நம்பிக்கை நட்சத்திரம், இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லி, ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது பேச விழைகிறேன். மேதகு ஆளுநர் உரையினை, அவர் வாசிப்பதற்கு முன்னாலே எதிர்க்கட்சியைச் சேர்ந்த அத்தனை தலைவர்களும் வெளிநடப்புச் செய்தார்கள். ஆனால், அந்த ஆளுநர் உரையிலே அவர்கள் வெளிநடப்பு எதற்காகச் செய்தார்கள்? ஆளுநர் உரையை வாசிக்கிற வரை இருந்திருந்தால், அதிலே முத்தான நல்ல பல திட்டங்கள் இருக்கும். அதைத் தெரிந்திருக்கலாம் என்பதை மறந்து, பொறுமையிழந்து, முன்னாடியே வெளியே சென்று விட்டார்கள். அதிலே புரட்சித் தலைவி அவர்கள் நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்து-- காவிரி டெல்டா பகுதி வறட்சியிலே வாடுகிறது; அந்த மாவட்டம் மட்டும் வறட்சியிலே வாடவில்லை; எனவே-- தமிழகத்தைப் பொறுத்தவரையில், 28 மாவட்டங்களையும் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் கொண்டு வந்த பெருமை புரட்சித் தலைவிக்கு உண்டு என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்டிருந்தால் அவர்கள் பாராட்டியிருப்பார்கள்.



2003 ஜனவரி 29] [திரு. அ. அருணாசலம்]

பிற்பகல் *12-20*

இந்த அரசைப் பொறுத்தவரையில், அந்த வறட்சிக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்கட்சியைச் சேர்ந்தவர்கள் நேற்றும் பேசினார்கள்; இன்றும் பேசினார்கள். அதற்குத்தான் புரட்சித் தலைவி அவர்கள் மரியாதைக்குரிய பாரதப் பிரதமரைச் சந்தித்து, இந்த வறட்சி ஆய்வுக்குழு வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அந்தக் குழு நேற்றைக்கு வந்திருக்கிறது. அந்தக் குழுவினுடைய பணிகள் தற்போது நடக்கின்றன என்பதே இதற்கு ஓர் எடுத்துக்காட்டு என்பதை இந்த நேரத்திலே இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரை நிகழ்த்துவதற்கு முன்னாலே, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். அவர்கள் வெளிநடப்புச் செய்வதற்கு முன்னாலே குறிப்பிட்டது என்னவென்றால், காவிரி டெல்டா பகுதியிலே இருக்கிற விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதைத்தான் ஆளுநர் உரையிலே, நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குறிப்பிட்டு, ஒரு ஏக்கருக்கு *5,000* ரூபாய் நிவாரணம் அளிக்க வேண்டுமென்றும், அதைப்போலவே அந்த டெல்டா பகுதியிலுள்ள விவசாயிகள் வாங்கிய கடன்கள் மற்றும் கந்து வட்டிக்காரர்களிடமிருந்து விவசாயிகளைக் காக்கவும் *400* கோடி ரூபாய் வழங்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். இது ஆளுநர் உரையிலே சிறப்புப் பெற்றிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. ஆனால் எதிர்க் கட்சிக்காரர்கள், குற்றம் சாட்ட வேண்டுமென்கிற ஒரே நோக்கத்தில் செயல்படுகிறார்கள். அவர்கள் ஒரே தொலைக்காட்சியைத்தான் பார்க்கிறார்கள். அந்த, அவர்களுடைய தொலைக்காட்சியில்தான் விவசாயி இறந்தார்; பட்டினிச் சாவு என்று சொல்லித் திரும்பத் திரும்பக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பட்டினிச் சாவே இல்லை என்று இங்கே பட்டியலிட்டுச் சொன்னார்கள். அவர்களைக் களங்கப்படுத்த வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் குறிக்கோளாக இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், முன்பு பருவ மழை பொய்த்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தஞ்சைக்குச் சென்று அங்கே

விவசாயிகளினுடைய குறைகளைக் கேட்டு, உடனடியாக 64.18 கோடி ரூபாயை ஒதுக்கி, அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 50,000 மெட்ரிக் டன் அரிசி வழங்கினார்கள் அப்படி வழங்கிய பெருமை புரட்சித் தலைவியின் ஆட்சிக்கு உண்டு என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பசித்தவனுடைய வயிற்றுக்குச் சோறிட வேண்டும். அன்னமிட்டது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதை வரலாறு காட்டிக் கொண்டிருக்கிறது.

காவிரி டெல்டா பகுதியிலே வாழ்கின்ற விவசாயிகளுக்கு தீபாவளிக்குப் பரிசுப் பை கொடுத்தார்கள். 10 இலட்சம் ஏழைக் கூலி விவசாயிகளுக்கு 21 கோடி ரூபாய் அளவிலே பரிசுப் பை வழங்கினார்கள். அதிலே அரிசி, பருப்பு, மிளகாய், இனிப்பாக ஒரு லட்டு மட்டுமல்லாமல் 50 ரூபாய் பணமும் கொடுத்தார்கள். அப்படிப் பணத்தை வழங்கியபோது அதிலேயும் குறை சொன்னார்கள். இப்படியெல்லாம் கணக்கெடுக்கவில்லை; இவர்களுக்கெல்லாம் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். பரிசுப் பை கொடுத்தபோதும் குறை சொன்னார்கள்.

இப்போது ஆளுநர் உரை நிகழ்த்துவதற்கு முன்னால் வெளிநடப்புச் செய்தார்களே! அப்போது ஒன்றைச் சொல்லி இருக்கிறார்கள். உணவிற்குப் பதிலாக, அதாவது சாப்பாடு போடுவதற்குப் பதிலாக, 30 கிலோ அரிசி கொடுங்கள்; ஒரு நாளைக்கு 25 ரூபாய் பணம் கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால், இதற்கு முன்னாலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 10 இலட்சம் விவசாயிகளின் குடும்பங்களுக்கு 21 கோடி ரூபாய் அளவிலே பரிசுப் பை கொடுத்தபோது 50 ரூபாய் பணம் கொடுத்தார்கள். அப்போது அரிசியாக வாங்கிக்கொண்டு போனவர்கள் எல்லாம் ஒழுங்காக வீட்டிலே கொண்டு போய்க் கொடுத்துவிட்டார்கள். தாய்மார்கள் எல்லாம் அந்தப் பணத்தை வீட்டிற்குக் கொண்டு போனார்கள். 50 ரூபாய் பணத்தை வாங்கிய ஏழை விவசாயிகளில் சிலர் — சிலர் பணமாகக் கையில் வாங்கியவுடன், வீட்டிற்குப் போவதற்கு முன்னால் தண்ணியைப் போட்டுக்கொண்டு போய்விட்டார்கள். அதற்காகத்தான் புரட்சித் தலைவி அவர்கள் எதைக் கொடுத்தாலும் நிம்மதி இருக்காது. ஒன்றே ஒன்று; பசித்தவனுக்கு அன்னம்; போதும் என்று சொல்லக்கூடியது ஒன்றே ஒன்று இருக்கிறது என்றால், அது சாப்பாடுதான்.





*பிற்பகல் 12-25*

சாப்பாடு—அன்னம்—போடுகின்ற திட்டத்தை யாராவது கிண்டல் பண்ணினால், சோறு போடுகின்ற திட்டத்தை யாராவது கிண்டல் செய்தால், அவருக்குச் சோறே கிடைக்காது என்பதுதான் வரலாறு. சோறு போடுகிற திட்டம், சாப்பாடு கொடுத்தவுடன் முடிந்து விடுகிறது. ஆனால் அரிசியைக் கொடுத்தால் அவர் ஒழுங்காக அரிசியோடு போகமாட்டார். அரிசியைக் கொடுத்த பிறகு கேட்பார்கள். நீங்கள் அரிசியைக் கொடுத்துவிட்டீர்கள். அதற்குப் பருப்பு வேண்டும். அதற்கு எண்ணெய் வேண்டும். சமைப்பதற்கு இத்தனை பொருட்களும் வேண்டும் என்று கேட்டுக்கொண்டுதான் இருப்பார்கள். ஆனால், சோறு போட்டால் அப்படியல்ல. போதும் என்று சொல்கிற ஒரே ஒரு நிகழ்ச்சி எது என்றால், அது அன்னமிடுவதைத்தான். சாப்பாடா, போதும் என்று கையைக் காட்டுவார்கள். அப்படிப்பட்ட திட்டத்தைத்தான் புரட்சி தலைவி அம்மா அவர்கள் அந்த மதிய உணவுத் திட்டத்தை, அந்த ஏழை விவசாயிகளுக்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.-ஐப் பற்றிக்கூட 16 ஆண்டுகளுக்குப் பின்னாலே, ஏதோ இவர்களுக்கெல்லாம் அக்கறை இருப்பதைப்போல தி.மு.க.காரர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்; இங்கே இருக்கிற பா.ம.க.காரர்கள் பேசுகிறார்கள். அவர் மறைந்து 16 ஆண்டுகள் ஆகிவிட்டன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தபோது, தட்டேந்த வைக்கிற திட்டம், இது பிச்சைக்காரர்கள் திட்டம் என்று சொன்னார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள்கூட அதைக் குறிப்பிட்டுக் காட்டினார்கள். இந்தத் திட்டத்தைக்கூட அப்படிதான் சொல்கிறீர்கள். ஆனால் அந்தத் திட்டத்தை அப்படிச் சொன்னவர்கள், இன்று ஏதோ எம்.ஜி.ஆர்.திட்டத்தை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீக்கிவிட்டதைப்போலப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கருணாநிதி ஆட்சியிலே—கடந்த ஆட்சியிலே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 1991-96-ல் ஆட்சி செய்தபோது, அதற்கு முன்னாலே எம்.ஜி.ஆர், சத்துணவுத் திட்டம் என்று இருந்தது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருவதற்கு முன்னாலே 2 ஆண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தது. அந்த எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டத்தை எடுத்துவிட்டு, முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் என்று கொண்டு வந்தார்கள். இப்பொழுது பேசுகிறார் கருணாநிதி அவர்கள்.

[திரு. அ. அருணாசலம்] [2003 ஜனவரி 29

என்னையெல்லாம் சந்தித்து பழைய முதலமைச்சர் பேசி இருக்கிறார் என்று எம்.ஜி.ஆரைச் சொல்லியிருக்கிறார். நீங்கள் கொண்டுவந்ததை மாற்றித் திரும்பவும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வள்ளலின் வாரிசாகப் பொறுப்பேற்ற பின்னாலேதான், முதலமைச்சர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டுவந்த பெருமை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு; புரட்சித் தலைவிக்கு உண்டு. இதையெல்லாம் மறந்து, ஏதோ தலைவருடைய பெயரை, இவர்கள் காப்பாற்றுபவர்கள் போலப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், ஆலயத்திலே அன்னதானத் திட்டம் பற்றி இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக, 144 திருக்கோயில்களில் தினந்தோறும் வருகிற பக்தர்களுக்கெல்லாம் அன்னத்தை அளித்துக் கொண்டிருக்கிற அன்னம் இட்ட தாய் என்று சொன்னால், அது தமிழகத்திலே இருக்கிற ஒரே முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநிலமும் பின்பற்றாத, நடவடிக்கை எடுக்காத ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதில் முன்னுதாரணமாக இருக்கிறது தமிழகம் என்பதை மறந்துவிடக் கூடாது. அதன் வாயிலாக, இந்தத் திட்டம் இன்னும் தொடர வேண்டும் என்று சொல்லி நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் வணங்குகிற பழமை வாய்ந்த அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் கோயில்; அதை மத்திய அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் வாயிலாக எடுத்துக்கொள்கின்றபொழுது, அதிலே பல கட்சிகள் எல்லாம் அரசியல் இலாபம் தேடப் பார்த்தார்கள். ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் வாயிலாக எடுத்துக் கொள்வதைத் தடுத்து நிறுத்தி, அந்த மக்களுக்கு, அருணாச்சலேஸ்வரர் கோயிலுக்குப் பெருமை சேர்த்தார்கள். அந்தப் பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும்.

அதுமட்டுமல்லாமல், இங்கே சாலையைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால், சாலைப் பணியாளர்கள் பற்றிச் சொல்கிறபோது, இங்கே நேற்றுப் பேசிய மாண்புமிகு எதிர்கட்சியினுடைய உறுப்பினர் பொன்முடி இருப்பார் என்று நினைத்தேன்; இல்லை. சாலைப் பணியாளர்கள் குடும்பத்தோடு சாகிறார்கள் என்று சொன்னார்கள். சாலையே



2003 ஜனவரி 29] [திரு. அ. அருணாசலம்]

சீர்கெட்டுப் போனதற்கு நீங்கள் போட்ட சாலைப் பணியாளர்கள்தான் காரணம் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிக்கிறேன். ஏனென்று சொன்னால், முன்னாளிலே சாலைப் பணியாளர்களை கேங்க் கூலி என்று சொல்வார்கள். கேங்க் கூலி என்று சொன்னால், ஒரு யூனியனுக்கு 4 பேர் மண்வெட்டி வைத்துக் கொண்டிருப்பார்கள் ரோட்டிலே. போகிறவர்கள் எல்லாம் பார்ப்பார்கள்; மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் பார்ப்பார்கள். அந்த கேங்க் கூலி அந்த ரோட்டைச் சீர்செய்வான்; இரண்டு பக்கத்திலும் இருக்கிற மண்ணை, மழை வந்தால், செம்மைப்படுத்துகிற வேலை அவனுக்கு. அவனுடைய உடலிலே துணி இருக்காது; மேலே சட்டை இருக்காது; அவன் உழைப்பாளி; அவனுடைய கையிலே மண்வெட்டி வைத்திருப்பான். நீங்கள் போட்ட சாலைப் பணியாளர் என்ன கேங்க் கூலியா? படித்த பட்டதாரியைப் போட்டிருக்கிறீர்கள். கையிலே ஒரு நோட்டுப் புத்தகம் வைத்துக்கொண்டு, அவன் என்ன பார்க்கிறான் என்றே தெரியவில்லை நீங்கள் போட்ட சாலைப் பணியாளர்கள், அவன் கேங்க் கூலி அல்ல; சாலைப் பணியாளர் என்று மாற்றிவிட்டார்கள். அதுதான் பெயர் மாற்றுவதில் வல்லவர் ஆயிற்றே! சாலைப் பணியாளர்களை அந்தப் பணியைச் செய்ய விடாது செய்ததே கருணாநிதி ஆட்சிதான். ஏனென்றால், சாலைப் பணியே நடக்கவில்லை. சாலைப் பணியாளர்கள் கிடையாது; கேங்க் கூலியே இல்லை. அதனாலேதான் சாலைகள் பழுதாகி சீர்கெட்டுப் போயின. அதற்கு கருணாநிதியினுடைய ஆட்சிதான் காரணம் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-30*

அதேபோல, புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்த கவர்னர் உரையிலே, நிறைய இடத்திலே பாராட்டியிருக்கிறார்கள். சிலர் பாராட்டுகிறார்கள்; அருமை அண்ணன்; நான் பெயரைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள்; நானும் அவரும், அருமை அண்ணன் மாண்புமிகு சபாநாயகர் அவர்களுடைய ரூமில் பேசிக் கொண்டிருந்தோம். "அருமையான ஒரு திட்டம் கவர்னர் உரையிலே இருக்கிறது. 100 ஏக்கருக்கு மேற்பட்ட குளங்கள், குட்டைகள் ஏரிகள் ஆகியவற்றைத் தூர் வாருகின்ற பணியும், அதற்குக் கீழ்ப்பட்ட ஆயக்கட்டினைக் கொண்ட ஏரிகள், குளங்களைத் தூர் வாருகிற பணியும் என்ற ஓர் அருமையான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்" என்று சொன்னார். அறையிலே

பாராட்டிய அருமை எதிர்கட்சி நண்பர்கள் மாமன்றத்திலே பாராட்டினால் நன்றாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இங்கே அதைச் சொல்வீர்கள் என்று அவர் எதிர்பார்த்திருக்கமாட்டார். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** பரவாயில்லை, மறுத்தா இருக்கிறேன்? மறுப்புச் சொல்லவில்லையே? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதும் சொல்கிறேன். அந்தத் திட்டம் நல்ல திட்டம். நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம்தான். ஒரு நீண்ட காலமான திட்டம். வந்த தண்ணீரை, மழைத் தண்ணீரைக்கூட சேமிக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்திலே, இந்த மாதிரியான திட்டங்களை நிறைவேற்றினால்தான் அந்த நீர் ஊற்றுகளையாவது பாதுகாக்க முடியும் என்று சொல்வதிலே தவறு கிடையாது. நான் இப்போது பேசவில்லை; சென்ற ஆண்டு பேசியிருக்கிறேன், அதற்கு முந்தைய ஆண்டும் பேசியிருக்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்திலே எழுத்துபூர்வமாகவும் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் ஒத்துக்கொண்டார். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** அதைப்போல, புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராகி மக்களுடைய துயரைப்போக்கச் சிந்திக்கிறார்கள்; செயல்படுகிறார்கள்; கண் துஞ்சாமல் கடமையாற்றுகிறார்கள்; இது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், . அவர்கள் பாராட்ட மாட்டார்கள். ஆனால், முன்னாள் முதலமைச்சர்; அவர் என்ன செய்கிறார் என்றால், காவிரி பற்றிப் பேசுகிறார்; தொல்காப்பியத்திற்கு உரை எழுதுகிறார். தொல்காப்பியத்திற்கு உரை எழுதுகிறீர்கள்; காவிரி பற்றிப் பேசுகிறீர்கள். நீங்கள் தொல்காப்பியத்திற்கு உரை எழுதி, ஒரு புத்தகம் 500 ரூபாய்க்கு விற்று அன்றைக்கே சேர்ந்தது 8.00 இலட்சம் ரூபாய். வசூல் பண்ணுவதிலே, கருணாநிதி குறியாய் இருக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த மக்களின் பசியைத் தீர்ப்பதிலே



கவனமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தினம் ஒரு போராட்டம்; தினம் ஒரு அறிக்கை என்று மக்களைத் திசை திருப்புகிறார். இந்தச் சித்து வேலையெல்லாம் மக்களிடம் எடுபடாது.

தொகுதிக்கு அமைச்சர் பெருமக்கள் போகிறார்கள்; அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் போகிறார்கள். அவர் ஒரு தொகுதிக்குப் போனால் 50 பேர் வருவார்கள், ஒரு அமைச்சர் போனால் 100 பேர் வருவார்கள். அந்த மக்கள் ஒரு பெட்டிஷன்-ஐக் கொடுத்து, தொகுதியினுடைய அமைச்சரிடம், சட்டமன்ற உறுப்பினரிடம் குறைகளைக் கூறுவதற்கு வந்து நின்றாலே, "அமைச்சரை மறித்து முற்றுகை" இதுதான் இவர்களுடைய டி.வி.-யிலே வருகிற நிகழ்ச்சி; 'அமைச்சரை மறித்தார்கள், முற்றுகையிட்டார்கள்' என்று, இப்படி இல்லாத ஒன்றையெல்லாம் காட்டிக் கொண்டிருப்பது கருணாநிதியின் குடும்பத் தொலைக்காட்சி மட்டும்தான். காவிரிப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, அல்லது எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, உண்மைக்கு மாறான தகவலை, முந்திக் கொண்டு கொடுக்கிறதை வழக்கமாக அந்தத் தனியார் தொலைக்காட்சி பெற்றிருக்கிறது. வேறு எந்தத் தொலைக்காட்சியிலும் பார்த்திருக்க முடியாது. புரட்சித் தலைவி அம்மா அவர்களால் — தமிழ்நாட்டிலே பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம்; 2002-2007—40 ஆயிரம் கோடி ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசு திட்டக் குழுவிடம் ஒப்புதல் பெறுவதற்காகக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-35

அதுமட்டுமல்லாமல், மின்சாரம் என்பது, ஒரு தொழிலைத் தொடங்குவதற்குரிய முக்கியமான ஒன்று. அந்த மின்சாரத்தைத் தமிழகத்திலே எப்படி உருவாக்க முடியும் என்று புரட்சித் தலைவி அவர்கள், இந்த கவர்னர் உரையிலே, கவர்னர் ஆற்றிய உரையிலே, கொண்டு வந்திருக்கிற பெருமை நம்முடைய தமிழ்நாட்டிற்கு உண்டு. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின் உற்பத்தி செய்யும் வகையில், 8,000 கோடி ரூபாய் மூலதனத்தில் தமிழ்நாட்டிலே மின் வாரியத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி, செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், தனியார் துறை மூலமாக 250 மெகாவாட் திறன் கொண்ட புதிய மின் உற்பத்தி நிலையம், 2002 டிசம்பர் மாதம் செயல்படத் தொடங்கியுள்ளது. மேலும், எரிவாயுவை அடிப்படையாகக்

கொண்டு, 100 மெகாவாட் திறனுடைய புதிய மின் உற்பத்தி நிலையம் 2003 பிப்ரவரி மாதத்தில் செயல்பட உள்ளது என்ற மகிழ்ச்சியான தகவலும் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கிறது.

புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆதிதிராவிட மக்களுக்கான திட்டத்தை கவர்னர் உரையிலே; பட்ட மேற்படிப்பு படிக்கிற அந்த மாணவிகளுக்கு, கல்வித் தொகையை முழுவதுமாகக் கொடுத்து, இனாமாகப் படிக்கிற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், மாணவர்கள் கடன் பெற்றால், கல்விக் கடன் பெறுகிறபோது, அந்தக் கல்வி கடனை, மானியமாக, முழுவதும் தள்ளுபடி செய்கிற ஒரு திட்டம்.

அதுமட்டுமல்லாமல், தமிழகத்தைப் பொறுத்தவரையில் பீடித் தொழிலாளர்கள் நலனைக் காக்க வேண்டுமென்று, 10,000 வீடுகளைக் கட்ட வேண்டுமென்று, இந்த கவர்னர் உரையிலே அருமையான திட்டம் இடம் பெற்றிருக்கிறது.

ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரும், மத்தியக் குழுவிலேயிருந்து வந்த World Bank-ஐச் சேர்ந்த உறுப்பினரும் ஒரு பகுதியிலே போய்க் கொண்டிருக்கிறார்கள். போய்க் கொண்டிருக்கிற நேரத்தில், ரோடு ஓரத்தில், பக்கத்திலே தாய்மார்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். இரவு 6 மணி இருக்கும். போகிறபோது, தாய்மார்களெல்லாம் இவர்களைப் பார்த்து எழுந்து நின்றுவிட்டார்கள். உடனே, மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்த்து அந்த உலக வங்கிக்காரர் கேட்டாராம்; "மாவட்ட ஆட்சித் தலைவரே, உங்களுக்கு இவ்வளவு பெருமை இருக்கிறது; எல்லோரும் மரியாதை செலுத்துகிறார்களே" என்று சொன்னார்களாம். அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னாராம் "காலையிலே வேலை செய்துவிட்டு, மாலையிலே வந்து ஒதுங்குவதற்கு இடம் இல்லாமல், ஒதுங்குகிற நேரத்தில், நாம் வண்டியிலே போய்க் கொண்டிருக்கிறோம். ஆகவே, ஒதுங்குவதற்குக்கூட மகளிருக்குக் கழிப்பிடம் இல்லை. அதனாலே அந்த நிலையைப் போக்க வேண்டும். அதற்காகத்தான் நிற்கிறார்கள்" என்று. அந்தக் கழிப்பிடத்தை தமிழகத்திலே கட்டி, அதைச் சிறப்பாகச் செய்து கொண்டு வருகிறார்கள். அதுமட்டுமல்ல. இந்த ஆண்டும் 6,309 மகளிர் சுகாதாரக் கழிப்பிடங்கள் கட்டுகிற அந்தப் பணி தொடரும் என்று ஆளுநர் உரையிலே குறிக்கப்பட்டிருக்கிறது. பெண்களுக்கு மட்டுமா கழிப்பிடம்? ஆண்களுக்கும் வேண்டுமென்று கன்னியாகுமரி மாவட்டத்திலே





கேட்டிருக்கிறார்கள். இப்படி ஆளுநர் உரை பெருமை பெற்ற ஒரு பெட்டகமாக இருக்கிறது. இதை, ஒன்றும் தெரியாதவர்கள் கேலி செய்து கொண்டிருக்கிறார்கள். ஒன்றும் இல்லை என்கிறார்கள். சென்னை மற்றும் திருப்பூரிலே ஆடைகள் பூங்கா Apparels Park — ஒன்று அமைப்பது பற்றி கவர்னர் உரையிலே குறிப்பிடப்பட்டிருப்பது; சிறப்பான ஒரு திட்டமாகும்.

தேயிலை விவசாயிகளைப் பற்றிச் சொன்னால், நீலகிரி மாவட்ட மக்களுக்கு ஒரு பெரிய மகிழ்ச்சியாக இருக்கும். தேயிலை விவசாயிகள் பாதிக்கப்பட்ட நேரத்தில் 'ஊட்டி தேயிலை' என்று கிராம அங்காடியிலே விற்று, அதற்குப் பெருமை சேர்த்து, அந்த 'ஊட்டி தேயிலை' 4,075 மெட்ரிக் டன் அளவையும் தாண்டி, ரூ.30.56 கோடி வருமானத்தையும் ஈட்டியுள்ளது. இது ஊட்டி-நீலகிரி மக்கள் வயிற்றிலே பால் வார்த்ததைப் போல அவர்களுக்கு அமைந்திருக்கிறது.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கஞ்சி ஊற்ற மாட்டார்; சாப்பாடுதான் போடுவார். அவருக்குக் கஞ்சி ஊற்றிப் பழக்கம் இல்லை. புரட்சித் தலைவி அம்மா ஆட்சியிலே உணவு படைத்துத்தான் பழக்கம்.

பிற்பகல் 12-40

அதைப்போலக் கைத்தறி நெசவாளர்கள் துன்பப்படுகின்ற நேரத்தில், அவர்களுடைய கைத்தறித் துணிகளை, வேட்டி-சேலைகளை எல்லாம் வாங்கி, நியாய விலைக் கடைகளில் விற்க வேண்டுமென்று ஒரு திட்டத்தை உருவாக்கி ரூ. 79.84 கோடி அளவிலே கடந்த ஆண்டு அதனை விற்று, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ரூ.27.50 கோடியைக் கடனாக வைத்துவிட்டுச் சென்றதையும் கட்டியது நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே அருமை அண்ணன், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, 2003-04 ஆம் நிதியாண்டில் ரூ. 150 கோடி செலவில் 5 ஆயிரம் கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளைச் சீரமைக்கும் திட்டமும் இந்த கவர்னர் உரையிலே இருக்கிறது. உலக வங்கி நிதியுதவியுடன் 650 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள சுகாதார அமைப்பு மேம்பாட்டுத் திட்டமும் இந்த கவர்னர் உரையில் இடம் பெற்றிருக்கிறது. இப்படி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்த, இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநிலமும் செய்திராத ஒரு பெருமை என்று சொன்னேன்.

[திரு. அ. அருணாசலம்] [2003 ஜனவரி 29

அதைப்போலப் பெண் காவலர்களைக் கொண்ட— இந்தியாவில் யாரும், எந்த மாநிலமும் கொண்டு வராத அளவில் — காவல் நிலையத்தை 1992 ஏப்ரல் 13 ஆம் தேதி அன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திலே தொடங்கி வைத்தார்கள். ஆனால் 1996 வரை 58 காவல் நிலையங்கள்தான். அண்மையிலே தொடங்கிய காவல் நிலையங்கள்; பெண்களுக்கும் உரிமை பெறுகிற வகையில் அவர்களைப் பாதுகாக்கிற வகையில் 146 காவல் நிலையங்களைத் தொடங்கியுள்ளார்கள். அந்த ஒரு பெருமையோடு மட்டுமல்ல.

குறை கேட்காத முதலமைச்சர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள். ஆனால், தினந்தோறும் மக்களைச் சந்தித்து மக்கள் குறையை மட்டும் கேட்பதோடல்லாமல் காவலர்கள் பணியாற்றுகின்ற அந்தத் துறையைச் சேர்ந்தவர்களுடைய குறையைக் கேட்ட பெருமை புரட்சித் தலைவிக்குத்தான் உண்டு (மேசையைத் தட்டும் ஒலி). இந்தியத் துணைக் கண்டத்திலே யாரும் செய்யவில்லை. இப்படி அன்னை தெரசா, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பணியையும், சேவையையும் பாராட்டினார்கள். மற்றவர்கள் பாராட்டவில்லையென்றால் நமக்குக் கவலை இல்லை. பாராட்டியவர்கள் அவர்களோடு நின்றார்களா?

அண்மையிலே நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த, தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியக் குடியரசுத் தலைவர், மரியாதைக்குரிய அப்துல் கலாம் அவர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டத்தின்படி அமைந்த — மகளிர் சுய உதவிக் குழு 20 இலட்சம் பேர்கள் — 1.15 இலட்சம் சுய உதவிக் குழுக்களைப் பார்க்க வேண்டுமென்று ஆவலோடு போய்ப் ப்ார்த்துவிட்டுப் பாராட்டினார்கள். அவ்வாறு பாராட்டிய பெருமை தமிழகத்திற்கு உண்டு என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தந்தை பெரியாரைச் சீர்திருத்தத்திலே மிஞ்சியவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஏனென்று சொன்னால், ஒரு பெண் சைக்கிளில் போகும்போது ஊர் மக்கள் எல்லாம் பார்ப்பார்கள். சைக்கிளிலே போகலாமா பெண்கள் என்று பார்த்த காலம் போய், ஒரு ஆதிதிராவிடப் பெண், ப்ளஸ் 1, ப்ளஸ் 2 படிக்கிற பெண், சைக்கிளிலே, வீதியிலே போகிற ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டு வந்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் , ஒலி) பெரியாரே சிந்திக்காத ஒரு சீர்திருத்தம்; இப்படிப்பட்ட திட்டத்தை எல்லாம் உருவாக்கி, இந்த



2003 ஜனவரி 29] [திரு. அ. அருணாசலம்]

ஆளுநர் உரையிலே அழகாக எல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆளுநர் உரையில் முத்து முத்தான திட்டங்கள், தொலைநோக்குப் பார்வையோடு பொது மக்களும் விவசாயப் பெருங்குடி மக்களும் பாராட்டுகிற வகையிலே அமைந்திருக்கின்றன.

*பிற்பகல் 12-45*

சிறப்பான திட்டத்தைத் தமிழகத்திலே உருவாக்கிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினை இந்திய துணைக் கண்டத்திலே முதல் மாநிலமாக ஆக்குவேன் என்று சொல்லி சூளுரைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அன்னையினுடைய ஆட்சியிலேதான் நம்முடைய ஆளுநர் அவர்களுக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

His Excellency the Governor of Tamil Nadu has praised our Hon. Chief Minister Dr. Puratchi Thalaivi Amma Avargal as follows:—

'I am confident that under the strong and dynamic leadership of the Hon. Chief Minister, this Government would succeed in securing the very best for the people of Tamil Nadu. 'I express my sincere thanks to His Excellency the Governor of Tamil Nadu for having really praised our Hon. Chief Minister Dr. Puratchi Thalaivi Amma Avargal' என்பதை இந்த நேரத்திலே, சொல்லி, கவர்னர் உரை ஒரு சரித்திரப் புகழ்பெற்ற உரையாக இருக்கிறது, ஆகவே, இந்த உரையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், சபாநாயகர் அவர்களுக்கும் நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணடிமை பேசிய பேதையர்கள் மத்தியிலே மண்ணெல்லாம் பெண் பெருமை பேசச் செய்த எங்கள் புரட்சித் தாயே, வான்மழை பொய்த்து இயற்கையே சதி செய்தாலும், மண்ணுயிர் வாடாது மனித குலம் காக்கும் எங்கள் கருணைக் கடலே, எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, கவர்னர் உரை மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேச அனுமதித்த தங்கள் பாதம் பணிந்து நன்றி கூறுகிறேன். அம்மா!

[திருமதி வளர்மதி ஜெபராஜ்] [2003 ஜனவரி 29

கவர்னரின் உரை அம்மாவின் எண்ணங்களை எடுத்துரைக்கின்ற உரை; தமிழக மக்களின் உணர்வுகளை மதிக்கின்ற உரை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கவர்னர் உரையின் மூலமாக, அம்மா அவர்களே, நீங்கள் அனைவருக்கும் உண்ண உணவு அளித்துள்ளீர்கள். உடுக்க மலிவு விலை உடை கொடுத்துள்ளீர்கள். வண்ண வண்ணக் கனவுகளோடு பள்ளிக்குச் செல்லும் எண்ணற்ற மாணவிகளுக்கு சைக்கிள் கொடுத்துள்ளீர்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பிள்ளைக்கு என்னென்ன வேண்டும் என்பது பேணிக் காக்கும் தாய்க்குத்தான் தெரியும். தமிழக மக்களால், 'அம்மா' என்று அழைக்கப்படுகிற எங்கள் அன்புத் தாயே, உங்களுக்கு மட்டும்தான், தமிழக மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று புரியும்; மற்றவர்களுக்குப் புரியாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, தமிழகமே தலைகுனியும் நிலையில்தான் கடந்த ஆட்சியாளர்கள் தமிழகத்தை விட்டுவிட்டுச் சென்றார்கள். அந்த நிலையிலே தமிழகத்து மக்களெல்லாம், களையிழந்த நாட்டிலே முன்போல களை சிறக்க அம்மா அவர்களே, நீங்கள் வரவேண்டும், ஆட்சிப் பீடத்திலே அமர வேண்டும் என்று சொல்லி, உங்களை அமர வைத்திருக்கிறார்கள். நான் எண்ணிப் பார்க்கிறேன். நேற்றையதினம் ஒருவர் உணர்ச்சிமிகப் பேசினார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்; நிதி நிலைமையைப் பற்றி அவர் பேசினார் இன்றைக்கு நிதி நிலைமை இந்த அளவிற்கு மோசமாக ஆவதற்கு யார் காரணமோ, அவர்கள் இன்றைக்குப் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். பாரதிதாசன்

"தன்பெண்டு, தன்பிள்ளை, சோறு, வீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
தெருவோர்க்கும் பயனற்ற சிறிய வீணன்,"

என்று பாடினானே, அதைப்போல, கடந்த ஆட்சிக் காலத்திலே தமிழகத்து முதலமைச்சராக இருந்த முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், தமிழ்நாட்டு மக்களென்றால், அது தன் வீடு மட்டும்தான்; தன் மக்களை மட்டுமே அது குறிக்கும் என்று சொல்லி, தன் பெண்டு, தன் பிள்ளை, வீடு, சம்பாத்தியம், சோறு என்று அவர்



2003 ஜனவரி 29] [திருமதி வளர்மதி ஜெபராஜ்]

மட்டுமே வாழ்ந்த காரணத்தினால், அவர் குடும்பம் மட்டுமே வாழ்ந்த காரணத்தினால், இன்றைக்கு நிதி நிலைமை இவ்வளவு மோசமாகப் போய்விட்டது என்பதை நான் அந்த முன்னாள் அமைச்சருக்கு, பொன்முடிக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் *12-50*

அவர் சொன்னார்; இந்த கவர்னர் உரையிலே ஒன்றுமே இல்லை, தற்புகழ்ச்சிதான் இருக்கின்றன என்று சொன்னார். இரவு நேரத்தில், இருட்டறையில் உட்கார்ந்துகொண்டு, கவர்னர் உரையைப் படித்துப் பார்ப்பவர்களுக்குக் கண் பார்வை எப்படித் தெரியும்? அவர் இரவு நேரத்திலே, இருட்டறையிலே உட்கார்ந்து கொண்டு படித்துப் பார்த்திருக்கின்ற காரணத்தினால், அவருக்கு கவர்னர் உரையில் ஒன்றுமே இல்லை என்பதுபோல் தெரிகிறது.

தொழிலாளர்களைப் பார்த்துப் பேசினார்; 'அவர்களைப் பார்த்தீர்களா, விவசாயிகளைப் பார்த்தீர்களா, நெசவாளர்களைப் பார்த்தீர்களா' என்று. யாரைப் பார்த்து யார் பேசுவது? இந்தத் தமிழகமே இன்றைக்கு உங்களைப் பார்த்து சிரித்துக் கொண்டிருக்கிறது; தி.மு.க.-வைப் பார்த்து. விவசாயிகளைப் பற்றி நீங்கள் பேசுவதா? நெசவாளர்களைப் பற்றி நீங்கள் பேசுவதா? தொழிலாளர்களைப் பற்றி நீங்கள் பேசுவதா? நான் எண்ணிப் பார்க்கிறேன். கடந்த தி.மு.க. ஆட்சியிலே, அரசுக்குத் தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்வதில், தமிழகத்திலுள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட முன்னுரிமையைத் தடை செய்து, வெளி மாநிலங்களிலிருந்து அரசுக்குத் தேவையான பொருட்களை வாங்கி, ஆயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளர்களுடைய வயிற்றில் அடித்த நீங்களா, தொழிலாளர்களைப் பற்றிப் பேசுவது? (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயிகளைப் பற்றிப் பேசுகிறீர்கள். கடந்த கருணாநிதியின் ஆட்சிக் காலத்திலே, நீலகிரி மாவட்டத்திலுள்ள ஊட்டி தோட்ட விவசாயிகள், தோட்டத் தொழிலாளர்கள் என்ன கேட்டார்கள்? சோறு வேண்டுமென்று கேட்டார்களா? 'எங்கள் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கவில்லை' என்று உரிமைக்குப் போராடினார்களே, சாலையை

மறித்துப் போராடிய அந்த விவசாயத் தொழிலாளர்கள்மீது, முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்களுடைய ஆணைப்படி, அன்றைக்கு இருந்த காவல் துறையினர் தடியடி நடத்தினார்களே, இரத்தம் சிந்தச் சிந்த அவர்கள் பதறித் துடித்த அந்தக் காட்சியை, இந்தத் தமிழ்நாடு மறந்துவிட்டதா? நீங்கள் பேசுகிறீர்கள்! 'ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுதது' போல, இன்றைக்கு ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் செய்த பாவத்தைப் போக்கும் முகமாக, அதற்குப் பரிகாரம் செய்யும் முகமாக, எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு, அந்தத் தோட்டத் தொழிலாளர்களை, விவசாயிகளை அழைத்து, இலட்சக்கணக்கான ரூபாயை அள்ளிக் கொடுத்தார்கள். அந்தக் கரம், எங்களுடைய தாயினுடைய கருணைக் கரம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; அவர்களுக்கு நிரந்தரத் தீர்வு தேடும் முகமாக, நீலகிரித் தோட்டத் தொழிலாளர்களுக்கு, விவசாயிகளுக்கு எங்கள் அம்மா அவர்கள், பச்சைத் தேயிலையை அரசே கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகளின் மூலமாக விற்பனை செய்து கொடுக்கும் என்கிற சட்டத்தை, திட்டத்தைக் கொண்டுவந்து, இப்போது அந்த விவசாயிகளுடைய வாழ்விலே ஒளிவிளக்கு ஏற்றி வைத்திருக்கிறார்கள் என்பதை நான் மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நெசவாளர்களைப் பற்றிப் பேசினார் அந்தப் பொன்முடி. நெசவாளர்களைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? நாய்களுக்கும், பன்றிகளுக்கும் கஞ்சித் தொட்டிகளில் கஞ்சி கொடுப்பதைப்போல, அவர்களை, நாய்களாகவும், பன்றிகளாகவும் நீங்கள் கருதிக்கொண்டு கஞ்சித் தொட்டி திறந்தீர்களே! அந்த நெசவாளர்கள், உங்களை விரட்டி, விரட்டி அடித்தார்களே, இந்த நாடு மறந்துவிட்டதா? நீங்கள் கொச்சைப்படுத்தினீர்கள் நெசவாளர்களை; நீங்கள் கேவலப்படுத்தினீர்கள் அந்த நெசவாளர்களை. ஆனால், எங்கள் தாயோ, புரட்சித் தலைவி அம்மா அவர்களோ, ஏழைகள் மட்டும் உடுத்தும் ஆடைகள் அல்ல அந்தக் கைத்தறி ஆடைகள்; நவநாகரிக, கல்லூரி மாணவிகளும் அணியலாம்; அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகளும் அணியலாம் என்று சொல்லி, ஜீன்ஸ் பேன்ட்டில் பவனி வந்த அந்தக் கல்லூரி மாணவிகளையெல்லாம், கைத்தறிப் புடவையிலே இப்போது பவனி வா வைத்திருக்கிறார்களே, கைத்தறித் தொழிலாளர்களுடைய வாழ்விலே,





நெசவாளர்களுடைய வாழ்விலே இன்றைக்கு உயர்வை ஏற்படுத்தி இருக்கிறார்களே, தமிழகத்தினுடைய பெருமையையும், கலாச்சாரத்தையும் பாராட்டி இருக்கிறார்களே, இப்போது அவற்றைச் செய்திருக்கிறார்களே, அதைப் பாராட்ட வேண்டாமா?

இன்னும் நான் சொல்ல வேண்டுமென்றால், சொல்லிக் கொண்டே போகலாம். அந்த அளவிற்கு எங்கள் அம்மா அவர்கள், சீரழிந்து போயுள்ள தமிழகத்தினுடைய நிதி நிலைமையைச் சீர்ப்படுத்துகின்ற அதே நேரத்தில், அந்த மக்களுக்கு, நம்மை நம்பி வாக்களித்த அந்தத் தமிழகத்து மக்களுக்கு என்ன திட்டங்களைச் செய்யலாம் என்பதைச் சிந்தித்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுகள்தான் இந்த கவர்னர் உரையிலே இருக்கின்ற பல்வேறு உதாரணங்கள்.

*பிற்பகல் 12-55*

கவர்னர் உரையிலே இருக்கக்கூடிய ஒவ்வொரு வார்த்தையும் வைர எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான வார்த்தை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்களுடைய தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தினுடைய வளர்ச்சிக்குப் பாடுபட்டுக் கொண்டு வருகின்ற அதேநேரத்தில், ஒரு தேசப் பற்று மிக்க தலைவி என்பதையும் கவர்னர் உரையின் மூலமாக நம்மாலே புரிந்துகொள்ள முடியும். நாட்டின் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க மத்திய அரசு எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் நமது அரசு முழு ஆதரவைத் தொடர்ந்து அளிக்கும் என்கின்ற உறுதிமொழி,

"பாரத பூமி பழம்பெரும் பூமி; நீரதன் புதல்வர்
இந் நினைவகற் றாதீர்"

என்ற மகாகவி பாரதியின் வைர வரிகளை இந்த இந்திய நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் எடுத்துரைக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"நீரின்றி அமையாது உலகு" என்று சொன்னார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். நம்முடைய தமிழகத்திற்கு நியாயமாகவும், சட்டபூர்வமாகவும் கிடைக்க வேண்டிய காவிரி நீரைப் பெற எங்கள்

[திருமதி வளர்மதி ஜெபராஜ்] [2003 ஜனவரி 29

தாய் உச்சநீதிமன்றத்தினுடைய கதவைத் தட்டி நீதி கேட்டதற்குப் பிறகும்கூட, காவிரி நதி நீர் ஆணையத்தினுடைய கதவைத் தட்டி நீதி கேட்டதற்குப் பிறகும்கூட, உச்சநீதிமன்றம் சொன்னால் எனக்கென்ன; காவிரி நதி நீர் ஆணையம் சொன்னால் எனக்கென்ன; யாருடைய தீர்ப்புக்கும் நான் தலை வணங்கமாட்டேன் என்று சொல்லி, ஒரு காட்டுமிராண்டித்தனமான செயலிலே கர்நாடகத்தின் முதலமைச்சர் ஈடுபட்டபோதிலும்கூட, முள்ளை முள்ளால் எடுப்போர்க்கிடையே, முள்ளினைப் பூவினால் எடுத்துக்காட்டும் வகையில் ஆந்திர மாநில முதலமைச்சரைச் சந்தித்து, கர்நாடகத்தினுடைய கிருஷ்ணா தண்ணீர் கொடுக்க மறுத்தால் என்ன, ஆந்திர மாநிலத்து கிருஷ்ணா நீரையே தமிழகத்திற்குக் கொண்டு வருவேன் என்று சொல்லி, எங்கள் தாயே! நீங்கள் எடுத்திருக்கின்ற இந்த முயற்சியை நாடே பாராட்டுகிறது, அம்மா!

கங்கை நதிப்புறத்துக் கோதுமையைக் காவிரிப் புறத்துக்குக் கொண்டுவரக் கனவு கண்டான் பாரதி. கங்கை நதிப்புறத்துக் கோதுமையைக் காவிரிப்புறத்துக்குக் கொண்டுவரக் கனவு கண்டான் பாரதி. ஆனால், எங்கள் தாயே! "கங்கை நீரையே காவிரிக்குக் கொண்டுவர 1984 ஆம் ஆண்டிலேயே — இப்போதல்ல தாயே, 1984 ஆம் ஆண்டிலேயே — அன்றைக்கு நாடாளுமன்ற உறுப்பினராக டெல்லி செங்கோட்டையிலே நீங்கள் கர்ஜித்தீர்களே, சிங்கமாக முழங்கினீர்களே, கங்கையையும், காவிரியையும் இணைக்க வேண்டுமென்று நீங்கள் பேசினீர்களே; அன்றைக்கு நீங்கள் பேசியதைத்தான் 19 ஆண்டுகளுக்குப் பின்னாலே இன்றைக்கு உச்ச நீதிமன்றம் அந்தத் திட்டத்தைக் கையில் எடுத்து இருக்கிறது. உச்ச நீதிமன்றம் அந்தத் திட்டத்தைக் கையில் எடுத்ததற்குப் பிறகுதான், இன்றைக்கு மத்திய சர்க்கார் கையில் எடுத்து இருக்கிறது என்று சொன்னால், அம்மா நீங்கள் மிகச் சிறந்த ராஜதந்திரி மட்டுமல்ல, நீங்கள் மிகச் சிறந்த தீர்க்கதரிசி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இன்றைக்கு இந்திய நாட்டில் உள்ள அத்தனை அரசியல் வல்லுநர்களும் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"பூரண ஞானம் பொழியும் நன்நாட்டில்
பூமியில் நிலத்தடி நீர் குறைவதா?"

என எண்ணிச் சிந்தித்த எங்கள் அன்புத் தாயின் உள்ளத்தில் எழுந்த திட்டம்தான் நிலத்தடி நீர்ச் சேமிப்புத் திட்டம்; மழை நீரைத் தேக்கிட மாபெரும் திட்டம்.



2003 ஜனவரி 29] [திருமதி வளர்மதி ஜெபராஜ்]

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று சொன்னான் பாரதி. அந்த பாரதியினுடைய எண்ணத்தைக் கருத்திலேகொண்டு, நீரின்றி வாடும் விவசாயியின் வாட்டத்தைப் போக்க வேண்டும்; அதே நேரத்தில் விவசாயமும் செழிக்க வேண்டும் என்கின்ற உயரிய எண்ணத்தில், குறைந்த நீரில், குறைந்த செலவில் வணிகப் பயிர்களைப் பயிரிடச் செய்வதற்கும், தோட்டக்கலையை மேம்படுத்துவதற்கும், மூலிகைச் செடிகளைப் பயிரிடச் செய்வதற்கும் திட்டம் தீட்டினீர்கள். விவசாயம் செழிக்க, விவசாயி மகிழ்ந்து சிரிக்க, விவசாயக் குடும்பம் தலைநிமிர்ந்து வாழ, நீங்கள் தீட்டியுள்ள திட்டத்தை விவசாயிகள் பாராட்டுகிறார்கள் அம்மா!

"கிராமங்களே இந்த நாட்டின் முதுகெலும்பு" என்றார் மகாத்மா காந்தி. அந்த காந்தியின் கருத்தினைத் தன்னுடைய எண்ணத்திலே கொண்டு, கிராமங்கள் ஒவ்வொன்றும் தன்னிறைவு பெற, 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் — ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் செலவில் — வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு வேளாண் தொழிற்சாலை அமைப்பதற்காக நீங்கள் திட்டம் தீட்டியுள்ளீர்களே! மகாத்மா காந்தியினுடைய கனவு, உங்களுடைய ஆட்சியில் நிறைவேறிக்கொண்டு வருகிறது என்பதை இன்றைக்குத் தமிழகத்து மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஏழை இளைஞர்களுடைய வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்துகின்ற திட்டம்தான் கிராமங்கள் முன்னேறுகின்ற வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு தொழில் வளத்தை ஏற்படுத்துகின்ற திட்டம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பதற்கேற்ப, கடும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பசிப் பிணியைப் போக்க, அமுதசுரபியைக் கையில் ஏந்திய மணிமேகலையைப்போல, சிறப்பு மதிய உணவுத் திட்டம் கொண்டு வந்துள்ள கருணைத் தாயே! இன்று மட்டும் பாரதி உயிரோடு இருந்திருந்தால் — எந்த பாரதி தெரியுமா?

"தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடு வோம்"

என்று முழங்கினானே அந்த பாரதி உயிரோடு இருந்திருந்தால் என்ன சொல்லி இருப்பான் தெரியுமா?

[திருமதி வளர்மதி ஜெபராஜ்] [2003 ஜனவரி 29

"மதிய உணவு கொண்டுவந்து மக்களைக் காக்கும்
மாண்புமிகு அம்மா அவர்களே! இந்த ஜகத்திற்கெல்லாம்
நீங்கள்தான் தலைமை தாங்க வேண்டும்"

என்று முழங்கி இருப்பான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-00*

அம்மா! கவர்னர் உரையிலே இடம் பெற்றுள்ள திட்டங்கள் ஒன்றா? இரண்டா? சொல்லிக் கொண்டே போகலாம். பல ஆண்டுகளாக ஓடாது நின்ற கண்டதேவி தேரை ஓடவைத்ததன் மூலம் தமிழகத்தின் கண்கண்ட தேவியாகவே நீங்கள் காட்சி அளிக்கிறீர்கள்!

கந்துவட்டிக் கொடுமையினால் கதறித் துடித்த கடைக்கோடி ஏழைகளையும் வாழவைக்க தந்துவிட்டீர்கள் அம்மா, ஒரு புதிய சட்டம்; தமிழகமே தலை வணங்குகிறது.

"காசி நகர்ப் புலவர் பேசும் உரையைக் காஞ்சியில் கேட்க கருவி செய்வதாகப்" பாடினான் பாரதி. ஆனால் நீங்களோ, சென்னையிலே இருந்து சுவிட்சைத் தட்டினால், கன்னியாகுமரியிலே Hall ticket கிடைக்கும் என்கின்ற அறிவியல் நவீனத்தைத் தமிழகத்திற்கு அறிமுகம் செய்துள்ளீர்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, பாழ்பட்டுக் கிடக்கின்ற தரிசு நிலங்களை மேம்படுத்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்; பக்திப் பரவசத்தோடு வருகின்ற பக்தனின் பசியைப் போக்க அன்னதானத் திட்டம். கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கின்ற திட்டங்கள், சாதனைகள் கல்வெட்டிலே பொறிக்க வேண்டிய வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்கள் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்வதிலே பெருமைப்படுகிறேன்.

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமை யைக்கொ ளுத்துவோம்;
வைய வாழ்வு தன்னி லெந்த
வகையி னும்ந மக்குளே
தாத ரென்ற நிலைமை மாறி
ஆண்க ளோடு பெண்களும்



2003 ஜனவரி 29] [திருமதி வளர்மதி ஜெபராஜ்]

சரிநி கர்ச மான மாக
வாழ்வ மிந்த நாட்டிலே!"

என்ற மகாகவி பாரதியினுடைய கவிதையை நெஞ்சினிலே ஏற்றி, தலைமைச் செயலாளராய்ப் பெண், மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவராய்ப் பெண், வஃபு வாரியத் தலைவராய்ப் பெண், சிறுபான்மை வகுப்பினர் நல ஆணையத் தலைவராய்ப் பெண் என எங்கும் பெண்கள், எதிலும் பெண்கள் எனப் பெண் சமுதாயத்தைத் தலைநிமிரச் செய்திட்ட தன்னிகரில்லா முதல்வரே, பெண் சமுதாயமே உங்களை வாழ்த்துகிறது அம்மா!

ஒரு நாளைக்கு 24 மணி நேரத்தில் 20 மணி நேரத்தை இந்தத் தமிழ்நாட்டு மக்களுக்காகவே ஒதுக்கி, ஓய்வின்றி, உறக்கமின்றி, இந்த நாட்டு மக்களுக்காகப் பாடுபட்டுக் கொண்டு வருகின்ற எங்கள் அன்புத் தாயே! ஒரேயொரு நிமிடம் என் தொகுதி மக்களுக்காக ஒதுக்கும்படித் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அம்மா! வைகை நதியைச் சுத்தப்படுத்தி, அகலப்படுத்தும் பணியினை மேற்கொண்டுள்ளதால், ஆற்றங்கரையோரம் பல்லாண்டுகாலமாக வாழ்ந்து வந்த மக்கள் வீடு இழந்து உள்ளார்கள். அவர்களுக்குப் புறநகர்ப் பகுதியில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் சொன்னார்கள். அந்த மக்களுடைய கோரிக்கைக்கு ஏற்ப மாநகரில் ஏதாவது ஒரு பகுதியில் அல்லது குடிசை மாற்று வாரியத்தின்கீழ் அந்த மக்களுக்கு வீடு கட்டித் தரவேண்டுமென்று அம்மாவின் பாதம் பணிந்து பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மலர்களுக்குப் பெயர் பெற்றது மதுரை மாவட்டம். அந்த மாநகரை, 'மதுரை மாநகர்' என்று சொல்கிற அதே நேரத்தில் 'கோயில் மாநகரம்' என்றும் போற்றுகிறோம்; புகழ்கிறோம். அந்தக் கோயில் மாநகரில், அந்தப் பழமைவாய்ந்த மதுரை மாநகரில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதற்கான எந்த அம்சங்களும் இல்லை. எனவே, மலருக்குப் பெயர் பெற்ற அந்த மதுரை மாவட்டத்தில் சென்ட் தொழிற்சாலை அமைப்பதற்கு, ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் முகமாக, அம்மா அவர்கள் கருணைகாட்ட வேண்டுமென்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அரசு இராஜாஜி மருத்துவமனை, தென் மாவட்ட மக்களுக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதமாகும். அங்கே தினமும் ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் நல்லமுறையிலே சிகிச்சை பெற்றுக் கொண்டு வருகிறார்கள். நம்முடைய Health Minister அவர்கள்கூட மதுரை வந்தபோது, பல்வேறு கோரிக்கைகளை நாங்கள் வைத்தபோது சொன்னார்கள்; 'கவலைப்படாதீர்கள்; சென்னை அரசு மருத்துவ மனைக்கு என்னென்ன கருவிகள் எல்லாம் வருகின்றனவோ அவற்றிலே முக்கியமான கருவிகளை எல்லாம் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கும், அம்மா அவர்கள் கொடுக்க உத்தரவு போட்டிருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். தொகுதி மக்களின் சார்பாக என் தாய்க்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அம்மா! அங்கே அண்ணா பேருந்து நிலையம் பயனற்றுக் கிடக்கிறது. பத்திரிகைகளிலே எல்லாம்கூட அந்தப் பேருந்து நிலைய இடத்தை இராஜாஜி மருத்துவமனையின் இதய நோய்ப் பிரிவுக்குப் பயன்படுத்தலாம் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். 4,000 பேர் அங்கே உயிருக்குப் போராடுகின்றமுகமாக, அறுவை சிகிச்சைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். வாரத்திற்கு 3 பேர், 4 பேருக்குத்தான் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையிலே சிகிச்சை தரக்கூடிய வசதி இருக்கிறது. கருணை உள்ளம் கொண்ட எங்கள் அன்புத் தாயே! அந்த அண்ணா பேருந்து நிலைய இடத்தை, அரசு இராஜாஜி மருத்துவமனைக்காக வாங்கி — உலக வங்கியிலேயிருந்து 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக நான் கேள்விப்படுகிறேன்; அது உண்மை என்றால் — இதய நோய்க்கு என்று தனிப் பிரிவை அமைத்து, தென் மாவட்ட மக்களுடைய எண்ணத்தை, அம்மா அவர்கள் பூர்த்தி செய்ய வேண்டுமாய் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அம்மா! அரக்கர் குலம் அழித்து, அறம் காக்கும் எங்கள் அன்புத் தாயே! தூய உள்ளம், அன்பு உள்ளம், பெரிய உள்ளம், தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் கொண்ட எங்கள் அன்பு அம்மா! குள்ள நரிகள் ஊளையிட்டாலும், ஓநாய்கள் காரணமில்லாமல் ஓலமிட்டாலும், உங்களது மக்கள் பணி என்றும் மக்கள் மனதில் நிற்கும் எனக் கூறி, இந்த அவையில் மீண்டும் பேச வாய்ப்பு அளித்த என் தாயின் பாதம் பணிந்து மீண்டும் நன்றி கூறி, கவர்னர் உரை,





வைர எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்றுச் சிறப்புமிக்க உரை எனக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நீண்டகாலக் கோரிக்கையை இப்போது நிறைவேற்றுகிறேன். திரு. அப்பாவு, 5 மணித்துளிகள்தான். (குறுக்கீடு) இல்லை, இல்லை, அடுத்து வரும். (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது) திரு. அப்பாவுக்கு அடுத்தது சி.பி.எம். தான்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புத்தாண்டில் என்னைப் பேச அனுமதித்த உங்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அது மட்டுமல்ல. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நல்ல வேளையிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், 1984 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகப் பெரிய மதக் கலவரம் ஏற்பட்டபோது அதைத் தூண்டி விடுவதற்கு பல பேர் முயற்சி செய்தபோது, எங்கள் சமுதாயத்தில் சாமித்தோப்பிலே பிறந்து, மக்களுக்காக சமாதானத்தையும், அன்பையும் பொழிந்து வந்த அன்பிற்குரிய பூஜித குரு பால பிரஜாதிபதி அடிகளார் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் — 1984 ஆம் ஆண்டிலிருந்து கொடுக்க வேண்டிய— அந்த குரு பற்றி யாருமே கண்டுகொள்ளாமல் இருந்த நிலையில் தமிழக முதல்வர் அவரைக் கண்டு, கௌரவிக்க வேண்டியவரை தமிழகத்தின் மத நல்லிணக்கத்திற்கு ஒரு தகுதியான நபராகிய அவரை — பால பிரஜாதிபதி அடிகளார் அவர்களைத் தேர்ந்தெடுத்து குடியரசு தினத்தன்று அவருக்கு மத நல்லிணக்க குரு என்பதைக் கொடுத்து கௌரவித்தமைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த நல்ல வேளையிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உரிமையை அவர்கள் பெறுவதற்கு வர முடியாத ஒரு நிலை; சாமித்தோப்பிலே ஐயா வைகுண்டசாமி அவர்களுடைய திருவிழாக் கொடியேறிவிட்ட காரணத்தினாலே அவர்கள் வர முடியவில்லை. அவர்களுடைய புதல்வியை அனுப்பி வைத்தார்கள். நம்முடைய பால பிரஜாதிபதி அடிகளார் அவர்கள் 1,000 வேன்களிலே தொண்டர்களை, பக்தர்களை

[திரு. மு. அப்பாவு] [2003 ஜனவரி 29

அழைத்து வந்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லவும் அவர்கள் தயாராக இருக்கின்றார்கள். தாங்கள் திருநெல்வேலிக்கு வரும்போது, அதற்கான அனுமதியும்தரக் கேட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கு அனுமதியும், அந்தத் தேதியையும் அறிவிக்க வேண்டும். நீங்கள் திருநெல்வேலிக்கு வந்தால், அவர்கள் அங்கு வந்து நன்றி சொல்லத் தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்த நல்ல சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கவர்னர் உரையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து, இதிலே சில கருத்துகளைக் கூற இருக்கின்றேன்.

தமிழகத்தில் வறண்ட நிலை தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றது. நாளுக்கு நாள் மழையினுடைய அளவு குறைந்து கொண்டே இருக்கிறது. இதற்கு, ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றவர்களைச் சில பேர் குறை சொன்னாலும் இருக்கின்ற நிதி நிலையை வைத்து, அவர்களுக்கு என்ன செய்யலாம் என்ற திட்டத்தைத் தீட்டி, வாழ வசதி இல்லாத விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்குகின்ற திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அதற்கு ஒருபுறம் விவசாயிகளின்மீது பரிவோடு நடந்து கொண்டதற்கு நன்றியைத் தெரிவித்தாலும், இந்த நாட்டிற்கே உணவு அளித்தவர்கள் விவசாயிகள்; சில விவசாயிகள் ஏழ்மை நிலையில் இருந்தாலும்கூட, ஏழ்மை நிலையில் இருந்து உணவிற்கே வழி இல்லாமல் இருந்தாலும்கூட, தட்டை எடுத்துச் செல்வதற்குத் தயக்கத்தோடு இருக்கிறார்கள். அதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். மாற்று ஏற்பாடாக, மாதத்திற்கு ஒரு முறை இந்த சமைத்துப் போடுகின்ற அரிசியையாவது தகுதியானவர்களுக்குக் கொடுத்தால் ஓரளவுக்கு அவர்கள் மன நிறைவை அடைவார்கள் என்பதை என்னுடைய கருத்தாக மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தொடர்ந்து மழை பெய்ய வேண்டும். ஒவ்வொரு நாளும் மழையினுடைய அளவு குறைந்து கொண்டே இருக்கிறது. அமெரிக்காவினுடைய 'நாசா' விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் ஓர் ஆய்வில் கூறி இருக்கின்றார்கள். மதுரைக்குத் தெற்கே, இன்னும் சில ஆண்டுகளில் தார்ப் பாலைவனம் போன்று ஆகிவிடும்; அந்த



2003 ஜனவரி 29] [திரு. மு. அப்பாவு]

அளவுக்கு மழை குறைந்து விடும் என்று சொல்கின்றார்கள். மாண்புமிகு நம்முடைய முதல்வர் அவர்கள், 1984 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திலே கங்கை-காவிரியை இணைக்க வேண்டுமென்று குரல் கொடுத்து இருக்கின்றீர்கள். இப்போது மாண்புமிகு பாரதப் பிரதமரைச் சந்தித்து, கங்கை-காவிரியோடு மட்டும் அல்ல; தென் மாவட்டத்திற்கும் வர வேண்டுமென்று கோரிக்கை வைத்து இருக்கின்றீர்கள். நானும் உங்களுடைய கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் வண்ணம் கங்கை-காவிரியோடு மட்டும் நின்றுவிடாமல், அதற்கு தெற்கே இருக்கின்ற வைகை, தாமிரபரணி, நம்பியாறு, அனுமான் நதி, பழைய ஆறு என குமரிக் கடல் வரை தொட வேண்டும். கங்கை-குமரி இணைப்பாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமருக்கு அறிவித்து, இந்த கங்கை நீர் காவிரியோடு நின்றுவிடாமல் இந்த வறண்ட தென் பகுதிக்கும் வருவதற்கு இந்தத் திட்டத்தைச் சேர்த்து மதிப்பீடு தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறுகின்றேன். இந்தக் கருத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒருவரால்தான் மத்திய அரசிடம் வாதாடி, போராடிப் பெற்றுத் தரமுடியும் என்ற எண்ணத்தில் நான் சொல்கிறேன். இதை எனக்குப் பெற்றுத் தரவேண்டுமென்று இந்த நல்ல வேளையிலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

விவசாயிகள் வறட்சியில் இருக்கின்றார்கள். ஆகவே, அவர்கள் பெற்ற கடன்களுக்குள்ள வட்டியை முழுமையாகத் தள்ள வேண்டும். ஏற்கெனவே கடந்தகால ஆட்சியில் விவசாயிகளுடைய கடன்களை ரத்து செய்வதற்கு நபார்டு வங்கி இடம் தராது என்று சொன்னபோதுகூட, 'நபார்டு வங்கி இல்லை; யார் தடுத்தாலும் விவசாயிகளுக்கு உதவி செய்வேன்' (மேசையைத் தட்டும் ஒலி) என்று ரூபாய் 300 கோடிக்கு மேலே விவசாயிகளுடைய கடன்களைத் தள்ளுபடி செய்தவர்கள் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில், தற்போதும் மிகப் பெரிய கஷ்டத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்கு நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. அப்பாவு] [2003 ஜனவரி 29

காவிரி டெல்டா பகுதியிலே மழை, கடந்த ஆறு மாதங்களாக இல்லாததால்தான் தண்ணீர் குறைந்துவிட்டது. ஆனால், என்னுடைய திருநெல்வேலி மாவட்டத்தில், இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியிலோ 13 ஆண்டுகளாக மழை பெய்யாமல் இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் வாங்கிய கடன்களைப் பொறுத்தவரையில், வட்டியை முழுமையாகத் தள்ளுபடி செய்தால், சில பேர் அவர்களுடைய கடன்களை அடைப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அதையும் மனதில் வைத்துச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே இருக்கின்ற சட்டமன்ற வளாகத்தை மகாபலிபுரம் அருகே ஒரு நல்ல இடத்தில் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரும்பி, அதற்கான ஏற்பாடுகள் செய்வதை நான் பத்திரிகை மூலம் பார்த்தேன். நம்முடைய சட்டமன்ற வளாகம் இருக்கின்ற இடத்திலே இராணுவ அதிகாரிகள் குடியிருப்புகள் இருக்கின்றன. அவர்கள் சுற்றி இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் வேறோர் இடத்தைக் கொடுத்து தூரமாகக் கொண்டுபோய் ஒதுக்கிவிட்டு, இந்த வளாகத்தினையே நம்முடைய சட்டமன்றத்திற்குப் பயன்படுத்தினால் நன்றாக இருக்கும். இராணுவ அதிகாரிகள் இங்கே இருக்க வேண்டிய அவசியமே இல்லை. இங்கே ஒன்றும் பிரச்சினையே இல்லை. கன்டோன்மெண்ட் என்று சொல்லி ஓர் இடத்திலே — கன்டோன்மெண்ட்டுக்கு என்று தனியாக ஓர் இடத்தை வாங்கி அங்கே — அவர்களுக்குக் குடியிருப்புக் கட்டிக் கொடுத்துவிட்டு, இந்த இடம் அவ்வளவையும் இராணுவ அமைச்சகத்திடமிருந்து வாங்கி --அவர்கள் குடியிருக்கத்தான் செய்கிறார்கள்; வேறு ஒன்றும் விசேஷமாக இங்கே இல்லை. இந்தப் பகுதியிலே நீங்கள் இருக்கும்போது பெரிய பாதுகாப்பும் தேவையுமில்லை. ஆகவே, அந்த அடிப்படையில் அவர்களுக்கு மாற்றிடம் கொடுத்துவிட்டு — இந்த இடத்திலேயே சட்டமன்ற வளாகத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளியிலே போகும்போது எச்சரிக்கையாகப் போங்கள்.

**திரு. மு. அப்பாவு:** இராணுவம் ஒன்றும் செய்யாது. அதேபோன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1991 முதல் 1996 வரை ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது தமிழகத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி



2003 ஜனவரி 29] [திரு. மு. அப்பாவு]

முடித்தவர்களை 8,000 பணியிடங்களில் தேர்வு செய்யும்போது, மாநில அளவில் அவர்களுடைய பதிவு மூப்பு அடிப்படையில் தேர்வு செய்தார்கள், மாநில அளவில் அவர்கள் படித்ததை வைத்து (மணியடிக்கப்பெற்றது) ஆனால் அதற்குப் பின்னால் கடந்த ஆட்சியில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்பாவு, சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** முடித்து விடுகிறேன். கடந்தகால ஆட்சியில், மாவட்ட அளவிலே பதிவு மூப்பு அடிப்படையிலே தேர்வு செய்ததன் காரணமாக எங்களுடைய தென் மாவட்டங்களான, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில், 1987 ஆம் ஆண்டு இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள் இன்று வரை பணியில் அமர்த்தப்படாமல் இருக்கின்றார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தங்களுடைய ஆட்சிக் காலத்தில் இருந்தது போன்று, மாநில அளவில் அந்த பதிவு மூப்பு அடிப்படையில் பணியிடம் வழங்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று குளங்கள் எல்லாம் தூர் வாரப்படாமல் இருக்கின்றன. இந்தக் கருத்தை ஏற்கெனவே நான் சொல்லியிருக்கின்றேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுப்பணித் துறையின் மூலம் 5 ஜே.சி.பி. வாங்கிக் கொடுத்தால், விவசாயிகளே அதற்கு டீசல் போட்டு அந்தக் குளத்தைத் தூர் வாரி எடுத்துக்கொள்வார்கள். 10 இலட்சம், 20 இலட்சம் என்று செலவு பண்ணினால்கூட, ஒரு குளத்திலே குறைந்த அளவுதான் பணி நடைபெறுகிறது. ஆகவே, பொதுப்பணித் துறைக்கு என்று தனியாக 5 ஜே.சி.பி. ஒவ்வொரு மாவட்டத்திலும் வாங்கிக் கொடுத்தால், டீசல் போட்டுக்கூட நம்முடைய விவசாயிகள் வேலை செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்த நல்ல வேளையிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கூடங்குளம் அணு மின் நிலையத் திட்டம் தொடங்கும்போது, அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புத் தருவதாக உறுதி அளித்தார்கள். இராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மகேந்திரகிரி ISRO திரவ இயக்கத் திட்டத்தில் கேரளாவிலிருந்து பணிபுரிய வருகின்றவர்களுக்கு அவர்கள் பெற்ற மதிப்பெண்ணில் 20 மதிப்பெண்கள் குறைவாக எடுத்தால்கூட,

நம்முடைய மதிப்பெண்ணுக்குத் தகுதி உள்ளவர்கள் என்று ஒரு வரையறை செய்துள்ளார்கள். அதேபோன்று கூடங்குளம் அணு மின் நிலையத்திலே பணிக்கு ஆட்களைச் சேர்க்கும்போது, நிலம் கொடுத்தவர்களுக்கு, அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியில் உரையை முடியுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** 20 மதிப்பெண்கள் கேரள அரசுக்குக் கொடுப்பது போன்று நமக்கும் கொடுத்து, அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டுமென்றும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு, நல்ல முடிவைத் தரவேண்டுமென்றும் இந்த நல்ல வேளையிலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

அதுபோன்று என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலுள்ள நம்பியாற்றில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மணல் எடுப்பதற்குத் தற்காலிகமாக அனுமதி கொடுத்திருந்தார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், தற்போது மணல் எடுக்க வேண்டாமென்றும், மிகவும் வறண்ட பகுதியென்றும், 160 கிராமங்களுக்கு அந்த நம்பியாற்றிலிருந்துதான் குடிநீர் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்றும் தெரிவித்திருந்தேன். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தகவல் கொடுத்து வறண்ட பகுதியான இராதாபுரம், நாங்குனேரி பகுதிகளில் செல்கிற நம்பியாற்றில் ஒருபோதும் மணல் எடுக்க வேண்டாமென்று தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் திசையன்விளை ஆரம்ப சுகாதார நிலையத்தை முழு நேர மருத்துவமனையாக்க வேண்டுமென்று ஏற்கெனவே மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சரிடம் கொடுத்து இருந்தேன். அது முழு நேர மருத்துவமனையாகச் செயல்படுகிறது. அதை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடற்கரைக் கிராமங்களான கூத்தக்குளி, பெருமணல், தோமையார்புரம், இடிம்பகரை, உவரி, கூட்டப்பாறை, கூடுதாழை





மற்றும் பெரியதாழை ஆகிய பகுதிகளில் தூண்டில் வளைவு கட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மதிப்பீடு தயாரிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மத்திய அரசுக்கு நிதிக்காகச் சென்றிருக்கிறது. விரைவிலேயே அந்த நிதியைப் பெற்று, மீனவர்களுக்கு தூண்டில் வளைவு கட்டித் தரவேண்டும். அதேபோன்று கேரளாவிலே மீனவர்களுக்கு, Out-board engine வைத்திருக்கிறவர்களுக்கு மாதத்திற்கு 400 லிட்டர் மண்ணெண்ணெய் ரேஷன் விலையில் வழங்கி வருகிறார்கள். அதேபோன்று தமிழக அரசும் இங்குள்ள மீனவர்களுக்கு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை நேரில் சந்தித்தபோது, கனிவோடு ஏற்று, அதற்கான விண்ணப்பம் வைத்திருக்கிறீர்களா என்று கேட்டீர்கள். அதனைத் தங்களிடம் தந்திருக்கிறேன். இப்போது ஞாபகப்படுத்துகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள், கேரளாவில் வழங்குவதைப் போன்று 400 லிட்டர் மண்ணெண்ணெய்யை இங்குள்ள மீனவர்களுக்கு ரேஷன் விலையில் வழங்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரே ஒரு விஷயம். Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று கருதியிருந்தேன். இன்றையதினமும் நேற்றும், பேசாதவர்களை முன்னதாகப் பேச அழைப்பீர்கள் என்று எதிர்பார்த்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றைய பட்டியல்தான் தொடர்கிறது. நேற்றைய பட்டியலில் எஞ்சியுள்ளவர்களுடைய பெயர்களை, தொடர்ந்து நான் வாசித்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள்தான் பேசுகிறார்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முக்கியமான ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதை எடுத்துக்கொள்ளவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்படியெல்லாம் குறுக்கிட்டுப் பேசக் கூடாது. உட்காருங்கள். திரு. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

[2003 ஜனவரி 29

**திரு. வை. சிவபுண்ணியம்:** சொல்ல வேண்டிய கருத்தை அந்த நேரத்தில் சொல்ல வாய்ப்புக் கொடுக்காமல் இருந்தால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பேசிய பிறகு — நேற்றைய பட்டியல்தான் தொடர்கிறது. (குறுக்கீடு) நீங்கள் இப்படி இடையிலேயெல்லாம் கட்டளையிட முடியாது. (குறுக்கீடு) நீங்கள் இடையிலே இப்படியெல்லாம் கட்டளையிட முடியாது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** **

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய பட்டியலில் விடுபட்டவர்கள்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுவதற்குத் தடை ஒன்றும் கிடையாது. (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், கொஞ்சம் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் விருப்பம்போல் பேசக் கூடாது. நீங்கள் இப்போது பேசியதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. நீங்கள் முறைகேடாக, இப்படிப் பேசக் கூடாது. (குறுக்கீடு) திரு. பழனிசாமி, நேற்றைய பட்டியல்தான் இன்றும் தொடர்கிறது. நேற்று திரு. சிவசாமி முடித்ததற்குப் பிறகு, விடுபட்டவர்கள் பெயர் தொடர்கிறது. அந்தப் பட்டியல்படிதான் வாசித்துக் கொண்டிருக்கிறேன். திரு. மகேந்திரன், பேசுங்கள். (குறுக்கீடு) வரிசைப்படி உங்களுக்குப் பேச வாய்ப்பு வருகிறது. நிச்சயமாக வரும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுப் பேசாதவர்கள் தற்போது பேச அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பட்டியலில் இவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, முறைப்படி பேச அனுமதிக்கப்படுகிறது. திரு. மகேந்திரனுக்கு அடுத்து சி.பி.ஐ. வருகிறது. (குறுக்கீடு) பிற்பகலில் நீங்கள் பேசுகிறீர்கள். உங்களுக்குப் பேச வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விகிதாச்சாரப்படி பேச வேண்டுமென்று உங்களுக்கு அனுமதி கொடுப்பதாக இருந்தால், பல

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2003 ஜனவரி 29] [பேரவைத் தலைவர்]

பிரச்சினைகளில் நீங்கள் பேசவே முடியாது. இருந்தாலும், உங்களுக்குத் தொடர்ந்து வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. நேற்றைய பட்டியல் தொடர்கிறது. இன்று பிற்பகலில் நீங்கள் பேசுகிறீர்கள். (குறுக்கீடு) இன்றைக்குப் பிற்பகல் நீங்கள் பேசுகிறீர்கள். உங்கள் பெயர் வரும். நிச்சயமாக நீங்கள் பேசுகிறீர்கள்.

*பிற்பகல் 1-20*

**திரு. வை. சிவபுண்ணியம்:** எழுத்துமூலமாகக் கொடுத்திருந்தேன். அதை எடுத்துக்கொள்ள மறுக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் உங்கள் விருப்பத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) உங்கள் விருப்பத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாது. (மணியடிக்கப் பெற்றது) இல்லை, இல்லை. அதையெல்லாம் எடுக்க முடியாது. உங்கள் விருப்பப்படியெல்லாம் எடுக்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுகின்ற வாய்ப்புக் கிடைக்கும்போது தாராளமாகப் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள், பேசுகிறபோது பேசுங்கள். இன்றைக்குப் பிற்பகலில் உங்களுக்கு வாய்ப்பு வருகிறபோது நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுகின்ற வாய்ப்பு வரும்போது பேசுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. (குறுக்கீடு) மதியம் வருகிறபோது, உங்களுடைய வாய்ப்பு வருகிறபோது சிவபுண்ணியம் தாராளமாகப் பேசட்டும். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி வாய்க்கு வந்தபடி சட்டமன்றத்திலே பேசிக்கொண்டிருப்பது முறையல்ல. நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. மகேந்திரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சி.பி.எம். உறுப்பினர் திரு. மகேந்திரன் பேசியதற்குப் பிறகு மாண்புமிகு சிவபுண்ணியம் பேசலாம்.

**திரு. ஜி. பழனிசாமி:** எங்களுக்குப் பேசுவதற்கு உரிமையைக் கொடுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய உரிமைதான். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பேசியதற்குப் பிறகு நீங்கள் பேசலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் நிச்சயமாகப் பேசலாம். (குறுக்கீடுகள்) திரு. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. உட்காருங்கள். உட்காருங்கள். திரு. மகேந்திரன் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. திரு. ஹேமச்சந்திரன். உங்களுடைய உறுப்பினர் விட்டுக் கொடுத்தால், சிவபுண்ணியம் இப்போது பேசலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். ஹேமச்சந்திரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் விட்டுக் கொடுத்தால் இப்போது சிவபுண்ணியத்தைப் பேச அழைக்கிறேன். மதியம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பேசலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இங்கு ஒரு முறை இருக்கிறது. எதிர்க்கட்சியில் ஒரு ஆள் பேசினால், ஆளும் கட்சியிலே ஒரு ஆள் பேசுவார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உறுப்பினர்கள் நேருக்கு நேர் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி, உறுப்பினர்கள் நேருக்கு நேர் பேசக்கூடாது.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** வேண்டுமென்றே கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் மிரட்டுகிறார்கள். அதற்கெல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தவர் பயப்பட மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஹேமச்சந்திரன் அவர்களை ஒரு விளக்கம் கேட்கிறேன். உங்களுடைய உறுப்பினர் விட்டுக் கொடுத்தால் சிவபுண்ணியம் பேசலாம். மதியம் உங்கள் உறுப்பினர் பேசலாம். விட்டுக் கொடுக்கிறீர்களா?



2003 ஜனவரி 29]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, ஒரு ஆளும் கட்சி உறுப்பினர் பேசியதற்குப் பிறகு இங்கே ஒருவரைக் கூப்பிடுவதற்குப் பதிலாக, மீண்டும் ஆளும் கட்சி உறுப்பினரையே நீங்கள் கூப்பிட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி முடியாது. ஏனென்றால், விகிதாச்சார அடிப்படையிலே பேசுவதற்கு அனுமதித்தால் பல பிரச்சினைகளில் நீங்கள் பேசவே முடியாது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பேசுகிற வாய்ப்பே வராது. பெருந்தன்மையோடுதான் உங்களைப் பேச அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** உங்கள் அதிகாரத்தில் நாங்கள் தலையிடவில்லை. சட்டமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்காததால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23 ஆம் தேதி இந்த அவையிலே மேதகு ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் உரை என்பது எதிர்வரக்கூடிய ஆண்டுகளிலே இந்த ஆட்சி எப்படிப்பட்ட கொள்கைகளை, நடைமுறைகளை இந்த மாநிலத்திலே அமலாக்குகிறது என்பதைத்தான், மாநில அரசு தயாரித்துக் கொடுக்கக்கூடிய உரையைத்தான்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன் அவர்கள், ஒரு நிமிடம். அதாவது, சட்டமன்றக் கூட்டத்திலே கலந்துகொள்ளக்கூடிய உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் இங்கே கருத்துகளைச். சொல்லலாம்; அது வேறு. இவர் வெளியிலே போய், கொஞ்ச நேரத்திற்கு முன்னால் பழனிசாமி, நிருபர்களைக் கூப்பிட்டு ஆளும் கட்சியைப் பற்றி, அரசாங்கத்தைப் பற்றி, பேரவைத் தலைவரைப் பற்றிக் குறை சொல்லி பத்திரிகைகளுக்கு, டி.வி.-க்குப்

பேட்டி கொடுக்கிறார். இது நல்ல முறையல்ல. எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், பேசுகிற வாய்ப்புக் கிடைக்கும்போது இங்கே பேசலாம்; எடுத்துச் சொல்லலாம்; அது வேறு. வெளியிலே ஒவ்வொரு நாளும் இப்படித் தொலைக்காட்சிகளுக்குப் பேட்டி கொடுப்பது, தொலைக்காட்சிகளிலே போய்ச் சொல்வது, அதுவும் சட்டமன்றக் கூட்டம் நடந்துகொண்டிருக்கிற நேரத்தில், பழனிசாமி அவர்கள், ஒரு பத்து மணித் துளிகளுக்கு முன்னால் வெளியிலே சென்று தொலைக்காட்சிக்குப் பேட்டிக் கொடுக்கிறார். ஆகவே, இவை எல்லாம் சரியான முறையல்ல; இவை எல்லாம் உரிய ஜனநாயக முறையல்ல. இதை நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களுக்குக் கொஞ்சம் நினைவுபடுத்த விரும்புகிறேன். திரு. மகேந்திரன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.வி.யில் பேட்டி கொடுக்க வேண்டாம் என்று சொல்லக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேட்டி கொடுக்கவே வேண்டாம் என்று சொல்லவில்லை. சட்டமன்றக் கூட்டம் நடக்கிறது. பழனிசாமி வெளிநடப்புப் பண்ணிவிட்டும் போகவில்லை. இங்கேதான் இருக்கிறார். இங்கே இருக்கிற பழனிசாமி சட்டமன்றக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறபோது, இப்படி உறுப்பினர்களும் இங்கே இருக்கிறபோது, அவர் வெளியிலே போய்ப் பேட்டி கொடுப்பது என்பது சட்டமன்றத்தை மதிக்கிற முறையா?

*பிற்பகல் 1-25*

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையிலே, இன்றைக்கு உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக்காட்டியதைப்போல, காவிரி டெல்டா பகுதி, பாசனப் பகுதி சம்பந்தமான விவரங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. காவிரி டெல்டா பகுதியிலே இலட்சக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள நடப்பு நெற்பயிர் நம் கண்களுக்கு எதிரிலேயே வாடி, கருகி வருகிற அவலமான நிலைமை உருவாகியுள்ளது என்று மேதகு ஆளுநர் அவர்கள் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு குறுவைச் சாகுபடியாக இருந்தாலும் சரி, இப்போது நடைபெறுகிற சம்பா சாகுபடியாக இருந்தாலும் சரி, இந்த இரண்டு மகசூல்களும் டெல்டா மாவட்டங்களிலே இருக்கக்கூடிய



விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை என்பது மட்டும் அல்ல; கடந்த ஆண்டு ஜனவரி மாதம் பெய்த கடுமையான மழையின் காரணமாக சம்பா சாகுபடியை எடுக்கமுடியாத நிலைமையிலே, 3 மகசூல் கிடைக்காத நிலையில்தான் இப்போது டெல்டா மாவட்டங்களிலே வாழக்கூடிய விவசாயிகளும், அந்த விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களும் இருக்கக்கூடிய நிலையில் இப்போது தமிழக சட்டப் பேரவையிலே ஆளுநர் அவர்களது உரையில் சென்னை மாவட்டத்தைத் தவிர, இதர 28 மாவட்டங்களும் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. 28 மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் நேற்றையதினம் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் 'எதிர்க்கட்சிகள் எல்லாம் சாவு எங்கே நடைபெறுகிறது என்று பார்த்துக்கொண்டு அலைகின்றன, ஒரு வகையான அரசியலை நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறார்கள்' என்று பேரவையிலே சுட்டிக்காட்டினார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள்கூட 12 என்று ஒரு எண்ணிக்கையைச் சொன்னபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 12 அல்ல, 13 என்று சொன்னார்கள். ** தமிழகத்திலே நிகழ்ந்துகொண்டு இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்போது பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. பட்டினிச் சாவு, தற்கொலை என்பனவற்றுக்கு எல்லாம் ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். ஏதாவது இருந்தால் நீங்கள் ஆதாரபூர்வமாகச் சொல்லலாம், அது வேறு. ஆனால் ஒட்டுமொத்தமாக இப்படிப் பேசுவது என்பது முறையல்ல. இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பட்டினிச் சாவு என்பது இந்த அவையில் இடம்பெறக் கூடாத ஒரு வார்த்தையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, பட்டினிச் சாவு என்பது இடம் பெறலாம். ஆனால், இயற்கையாக நிகழ்ந்த மரணத்தைக்கூடப் பட்டினிச் சாவு என்று முத்திரை குத்துவது சரியல்ல.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரபூர்வமான தனது அறிவிப்பை அரசு ஏற்கெனவே அறிவித்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், அரசு அதிகாரிகள் முறைப்படி விசாரணை நடத்தி, விசாரணையின் அடிப்படையிலான ஆதாரத்தை அவையிலே தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரமின்றி ஏதோ சொல்வதற்காக அப்படிக் கூறுவது கூடாது.

**திரு. கே. மகேந்திரன்:** ஆட்சியாளர்கள் கொடுக்கக்கூடிய அறிக்கையை மட்டுமே ஆதாரமாக எடுத்துக்கொள்ள முடியாது. ஏற்கெனவே கடந்த காலத்தில் பல வழக்குகளில் சாட்சியம் அளித்த அரசு அதிகாரிகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன், அரசு கொடுப்பதே ஆதாரம் இல்லை என்றால், பிறகு யார் கொடுப்பது ஆதாரம்?

**திரு. கே. மகேந்திரன்:** நான் கேட்க விரும்புவது, எங்களுக்கு ஒரு விளக்கம் தேவை. இரு தினங்களுக்கு முன்பாக பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. ** நான் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. அவரிடம் கேட்கும்போது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவையில் இல்லாதவர்களைப் பற்றிப் பேசக்கூடாது. திரு. மகேந்திரன் அவர்கள் சட்டமன்ற முறைகளை, மாபுகளை, விதிகளைக் கொஞ்சம் தெரிந்து பேச வேண்டும். அவையில் இல்லாதவர்களைப் பற்றி எல்லாம் இப்படிப் பேசக்கூடாது. நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்து; பட்டினிச்சாவு என்று நீங்கள் ஒரு பெயரைக் குறிப்பிடுகிறபோது, நேற்றே முதலமைச்சர் அவர்கள் அந்த ஆதிச்சநல்லூர் பிரகாஷ் என்பவரைப்பற்றி ஒரு விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். ஆக, உங்களுடைய கையிலே ஒரு ஆதாரம் இருக்குமானால், அந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு நீங்கள் பேசுவதைப் பற்றி எந்தக் கவலையும் இல்லை. ஆதாரத்தை என்னிடத்திலே கொடுத்துவிட்டு, என்னிடத்திலே அதை நீங்கள் சமர்ப்பித்துவிட்டுப் பேசினால் பாவாயில்லை. நீங்கள் பொத்தாம் பொதுவாக எல்லாவற்றுக்கும் பட்டினிச் சாவு — இயற்கை மரணத்தை எல்லாம் பட்டினிச்சாவு — என்று முத்திரை குத்துவது என்பது மலிவான அரசியல் நடத்துவதற்குத்தான் இலாயக்கே தவிர, அது சரியான முறை அல்ல. சட்டமன்ற முறையும் கிடையாது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





பிற்பகல் 1-30

பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தைத் தருவதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். அதாவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற விவரம் என்றார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளே, 'அரசினுடைய நிர்ப்பந்தம் காரணமாக நாங்கள் அப்படி statement கொடுத்தோம், இப்போது நாங்கள் உண்மையைச் சொல்கிறோம்' என்று சொல்கிற நோத்திலே, அரசினுடைய நிர்ப்பந்தத்திற்குப் பணிந்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்கூடக் கணக்குகளைக் கொடுக்கலாம் அல்லவா? ஆகவே, நாங்கள்....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியினுடைய அணுகுமுறை மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சியிலே இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். அதிகாரிகளை நீங்கள் நம்ப வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரையே நம்பவில்லையென்றால், அராஜகத்தைத்தான் நம்ப வேண்டிய நிலை நாட்டிலே உருவாகிவிடும். மாண்புமிகு உறுப்பினர் அவ்வாறு கூறுவது முறையல்ல.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன் அவர்கள், மதியம் அவை கூடியதற்குப் பிறகு உங்களுடைய பேச்சைத் தொடருங்கள். முதல்வர் அவர்கள் ஒரு அறிக்கையைச் சட்டமன்றத்திற்குத் தருகிறார்கள்.

[2003 ஜனவரி 29

## 7. தற்கொலை செய்துகொண்ட திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சண்முகத்தின் தற்கொலைக் குறிப்பு தொடர்பான காவல் துறையினரின் விசாரணை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் இந்த அவையில் ஒரு புகார் கூறினார்கள். அதை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றார். அதற்கு அரசிடமிருந்து பதில் உண்டா என்று கேட்டார். அதற்கு பதில் உண்டு, அந்தப் பதிலைப் பெற்ற பிறகு நான் தெரிவிக்கிறேன் என்று சொல்லியிருந்தேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Point of order.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இதில் என்ன Point of Order?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இதுசம்பந்தமாக நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம். அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறோம். அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டால் எங்களுடைய கருத்துகளைச் சொல்லலாம். இப்படி ஓர் அறிக்கையை முதலமைச்சர் கொடுப்பதை நான் மறுக்கவில்லை. முதலமைச்சர் படித்ததற்குப் பிறகு நாங்கள் பேச முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சிவபுண்ணியம் மத்தியானம் பேசுகிறார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சிவபுண்ணியம் கூறிய புகாரைப் பற்றிய உண்மை விவரம் என்ன என்று காவல் துறையினரிடம் நான் அறிக்கை கேட்டிருந்தேன். அந்த அறிக்கை இப்போதுதான் என்னிடம் கொடுக்கப்பட்டது. அதனால், இந்த அறிக்கை என் கைக்கு வந்த உடனேயே, நான் அதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்கிறபோது குறுக்கிட்டுக் கேட்பது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** He is not available in the House.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரம் இப்போதுதான் என் கைக்கு வந்தது. நான் அதைப் படித்து முடிப்பதற்குள் திரு. சிவபுண்ணியம் வெளிநடப்புச் செய்துவிட்டார். அதற்கு நான் எப்படிப் பொறுப்பேற்க முடியும்.

**திரு. சி. ஞானசேகரன்:** You must give an opportunity to the concerned member also,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பில்லை என்பதைப் போன்ற கருத்துச் சொல்லப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் கிடைத்த அறிக்கையை உடனடியாகச் சட்டமன்றத்திற்குத் தருகிறார்கள். இதில் என்ன தவறு? ஆகவே, முதலமைச்சர் அவர்கள், அரசின் சார்பாக அறிக்கையை அளிக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கை இந்த அவையில் நான் அமர்ந்திருக்கும்போது சில நிமிடங்களுக்கு முன்புதான் என்னிடம் தரப்பட்டது. திரு. சிவபுண்ணியம் பேசிக்கொண்டிருந்தபோது நான் இதை வாசித்துக்கொண்டிருந்தேன். என்ன வந்திருக்கிறது என்றுகூடப் படிக்காமல் நான் இந்த அவைக்குத் தெரிவிக்க முடியுமா? நான் வாசித்து முடிப்பதற்குள் அவர் வெளிநடப்புச் செய்துவிட்டார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** You can speak later.

**திரு. சி. ஞானசேகரன்:** Opportunity should be given to the concerned Member.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** Opportunity தருகிறேன் என்று Speaker சொல்லியிருக்கிறார்.

திருவாரூர் மாவட்டம், பெருகவாழ்ந்தான் காவல் சரகம், பழையகோட்டை கிராமத்தைச் சேர்ந்த செல்லையாவின் மகன் சண்முகம், கடந்த 7-1-2003 அன்று அதிகாலையில் தன் வீட்டின் பின்புறத்தில் உள்ள வேப்ப மரத்தில் தூக்குப் போட்டுக்கொண்டு, தற்கொலை செய்துகொண்டார். அவர் விட்டுச் சென்ற தற்கொலைக் குறிப்பு முருகையன் என்பவரால் மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. சிவபுண்ணியத்திடம் கொடுக்கப்பட்டது.

இவரது மாணம் குறித்து கிராம நிர்வாக அலுவலர் புகாரின் பேரில் பெருகவாழ்ந்தான் காவல் நிலையத்தில் குற்ற எண் 7/2003-ல், குற்றவியல் சட்ட நடைமுறைப் பிரிவு 174-ன்கீழ் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டு, காவல் துறையினரால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மன்னார்குடி அரசு மருத்துவமனையில் தக்க பிரேதப் பரிசோதனை செய்து முடிக்கப்பட்ட பிறகு, கடந்த 7-1-2003 அன்று இரவு 8-40 மணிக்கு, இறந்து போன சண்முகத்தின் உடல் எரிக்கப்பட்டது.

*பிற்பகல் 1-35*

இறந்துபோன சண்முகம் மூச்சுத் திணறி இறந்ததாகத் தெரிகின்றது என்று பிரேதப் பரிசோதனை நடத்திய மருத்துவ அதிகாரி கருத்துத் தெரிவித்துள்ளார். கடந்த 6-1-2003 அன்று இரவு 12 மணி வரை சண்முகம் விழித்திருந்துள்ளார் என்று தெரிய வருகிறது. 7-1-2003 அன்று காலை 6 மணிக்கு, தன் வீட்டின் பின்புறத்தில் உள்ள வேப்ப மரத்தில் அவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார். அண்டை வீட்டுக்காரர்கள் அவரது உடலைக் கீழே இறக்கி, தூக்குப் போட்டுக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட கயிற்றை எரித்து விட்டார்கள் என்றும் தெரிய வருகிறது. இறந்து போன சண்முகத்தின் சட்டைப் பையில் ஒரு தற்கொலைக் குறிப்பு இருந்துள்ளதாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. பயிர் பாதிக்கப்பட்டதன் காரணமாகவும், வறுமை மற்றும் பட்டினி, கடன் ஆகியவை காரணமாகவும், அவர் தற்கொலை செய்து கொண்டதாக அக்குறிப்பில் எழுதப்பட்டிருந்ததாகத் தெரிய வந்துள்ளது. இந்தத் தற்கொலைக் குறிப்பு பழையகோட்டையைச் சேர்ந்த முருகையன் என்பவரால் மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. சிவபுண்ணியத்திடம் பின்னர் கொடுக்கப்பட்டுள்ளது. திரு. சிவபுண்ணியம் அவர்களும் அதன் நகலைப் பத்திரிகைகளுக்கு



வழங்கியதோடு, திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மற்றவர்களுக்கும் நகல்களை அனுப்பி வைத்துள்ளார்கள்.

காவல் துறையினர் விசாரணை நடத்தியபோது இந்தத் தற்கொலைக் குறிப்பின் நகல், அதாவது ஜெராக்ஸ் காப்பி மட்டும் கட்சி அலுவலகம் மூலம் கொடுக்கப்பட்டது. இறந்து போன சண்முகத்தின் வீட்டிலிருந்து அவருடைய கையெழுத்துகள் அடங்கிய ஆவணங்களைப் கைப்பற்றி, அவர் விட்டுச் சென்ற தற்கொலைக் குறிப்பில் இருந்த கையெழுத்தோடு ஒப்பிட்டுப்பார்த்து உறுதிப்படுத்திக்கொள்வதற்காக, அந்தத் தற்கொலைக் குறிப்பின் மூலப் பிரதி, அதாவது, ஒரிஜினல் குறிப்பு காவல் துறை அதிகாரிகளுக்கு அவசரமாகத் தேவைப்பட்டது. எனவே, அதனைச் சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் காவல் துறை அதிகாரிகள், அதாவது, பெருகவாழ்ந்தான் காவல் துறை ஆய்வாளர் சாமிநாதன், மன்னார்குடி காவல் துறை ஆய்வாளர் ஐயனார் மற்றும் திருத்துறைப்பூண்டி காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் என். மூர்த்தி ஆகியோர் 9-1-2003 அன்று தாங்கள் ஏற்கெனவே மேற்கொண்டிருந்த அவசரப் பணியான, விவசாயிகள் மறியல் தொடர்பான பாதுகாப்புப் பணியை முடித்துவிட்டு, இரவு 10-40 மணியளவில், மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்களின் வீட்டுக்குச் சென்றுள்ளனர். அப்போது சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவபுண்ணியம், தனது வீட்டின் வெளிப்புற கேட் அருகே வந்து, 'உங்களுக்கு என்ன வேண்டும்'? என்று விசாரணைக்கு வந்திருந்த காவல் துறை அதிகாரிகளைப் பார்த்து அதட்டிக் கேட்டுள்ளதாகத் தெரிகிறது. தற்கொலை செய்து கொண்ட சண்முகம் எழுதி வைத்த குறிப்பின் மூலப் பிரதியைக் கொடுக்குமாறு அவர்கள் கேட்டுக்கொண்டபோது, அந்தக் குறிப்பு தன்னிடம் இல்லையென்று திரு. சிவபுண்ணியம் காவல் துறை அதிகாரிகளிடம் பதிலளித்துள்ளார். காவல் துறை அதிகாரிகள் வாய்மொழியாய்க் கேட்டதற்கு திரு. சிவபுண்ணியம் அந்தக் குறிப்பைக் கொடுக்காததால், எழுத்து மூலம் குறிப்பைக் கேட்டு வேண்டுகோள் அளித்து, அதற்கு அவருடைய ஒப்புதலை, அதாவது acknowledgement-ஐக் கேட்டபோது, அவர் தன்னிடம் அக்குறிப்பு இல்லையென்று கோபமாக மறுத்துள்ளார். இந்தப் பட்டினிச்சாவு சம்பவத்தைச் சந்தடியின்றி காவல் துறையினர் மூடிமறைக்கப் பார்க்கிறார்கள் என்றும், தனக்குக் களங்கம் ஏற்படுத்தவே காவல் துறையினர் ஆதாரம் தேடுகின்றனர் என்றும் திரு. சிவபுண்ணியம்

அப்போது காவல் துறை அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். அதன் பின்னர், காவல் துறையினர் திரும்பி விட்டனர். ஆனால், காவல் துறையினர், சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவபுண்ணியத்தின் வீட்டைச் சேதப்படுத்தி, அவரைத் தாக்கினார்கள் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர், அடுத்த நாளான *10-1-2003* அன்று வதந்திகளைப் பரப்பி, அன்றையதினம் முற்பகலிலிருந்தே, திருத்துறைப்பூண்டி மற்றும் மன்னார்குடி ஆகிய இடங்களிலும், அதனைச் சுற்றியுள்ள பதினெட்டு இடங்களிலும் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

*10-1-2003* அன்று திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவரை திரு. சிவபுண்ணியம் சந்தித்தபோது, காவல் துறைக்கு எதிராக அத்தகைய குற்றச்சாட்டு எதுவும் அவரால் கூறப்படவில்லை. காவல் துறையினர் இரவு நேரத்தில் அவரது வீட்டுக்கு அதிகார தோரணையோடும், அச்சுறுத்தும் வண்ணமும், விசாரணை நடத்த வந்தனர் என்று, அவர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தெரிவித்துள்ளார். மேலும், *10-1-2003* அன்று திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் காவல் துறைக் கண்காணிப்பாளர் முன்னிலையில், மன்னார்குடியில் திரு. சிவபுண்ணியம் அவர்களிடம் காவல் துறையினர் மேற்கொண்ட விசாரணையை அடுத்து ஏற்பட்ட பதற்றத்தைத் தணிக்கும் வகையில் திரு. சிவபுண்ணியம் மற்றும் மறியலில் ஈடுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தி, அங்கு அமைதியான சூழ்நிலை மீண்டும் நிலவ தக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

உண்மை நிலை இவ்வாறிருக்க, திரு. சிவபுண்ணியம் அவர்களின் வீடு காவல் துறையினரின் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டும், அவாது இல்லத்தில் காவல் துறையினரின் அத்துமீறல் நடந்தது என்ற குற்றச்சாட்டும் முற்றிலும் தவறானவை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-40*

மேலும், காவல் துறை விசாரணைக்கு ஒத்துழைப்புத் தர மறுத்ததோடு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் காவல் துறைமீது தவறான குற்றம் சுமத்தியிருப்பது வருந்தத்தக்கது. இருப்பினும், திரு. சிவபுண்ணியம் அவர்கள் தனது இல்லத்தில் காவல் துறையினர் இரவு நேரத்தில் அத்துமீறி நடந்ததாகக் குற்றச்சாட்டுக் கூறியுள்ள நிலையில், இதுகுறித்துக்



காவல் துறை சார்ந்த ஒரு விசாரணைக்கு, அதாவது Departmental Enquiry மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது என்றும், அந்த விசாரணை தற்போது நடைபெற்று வருகின்றது என்றும், இந்த விசாரணை முடிவின் அடிப்படையில் அரசு தக்க மேல் நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் ஒரு விஷயம் குறிப்பிடப்படவில்லை. பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கிற செய்தி; அன்று மறியல் போராட்டம் முடிந்து, சிவபுண்ணியம் உட்பட உள்ளவர்கள் ஒரு மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த நேரத்திலே, காவல்துறை அதிகாரி அவரை அணுகி, அந்தக் கடிதம் கேட்கப்பட்ட நேரத்திலே, அவர், 'அந்தக் கடிதம் என்னிடம் இல்லை. எங்களுடைய மாநிலச் செயலாளர் திரு. நல்லகண்ணு அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது' என்று சொல்லியிருக்கிறார். இப்படிச் சொன்னதற்குப் பிறகு, இரவு பத்தே முக்கால் மணிக்கு அவர் வீட்டிலே போய் இந்த மாதிரி செய்ய வேண்டிய அவசியம் என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சம்பந்தப்பட்ட சிவபுண்ணியமே எங்கேயும் போய்விடவில்லை; இங்கேதான் இருக்கிறார். மதியம் சட்டமன்றம் கூடுகிற நேரத்திலே, அவர் பேசுகிற நேரத்திலே விளக்கம் சொல்லலாம்.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை *4-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1-41* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2003 ஜனவரி 29

*பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி. திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் காலையிலே குறிப்பிட்டதுபோல, நிகழ்ந்திருக்கக்கூடிய மரணங்களைப் பொறுத்தவரையில், எங்களது தரப்பிலே நாங்கள், வறுமையின் காரணமாக, நெற்பயிர் கருகியதன் காரணமாக விவசாயிகள் அதிர்ச்சியினால் உயிரிழந்து இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சுமத்துகிறோம். அப்படிப்பட்ட மரணங்கள், இந்தக் காரணங்களால் நடைபெறவில்லை என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையை அறிவதற்கு இந்த மாமன்றத்திலே இருக்கக்கூடிய அனைத்து கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய குழுவைச் சம்பந்தப்பட்ட டெல்டா மாவட்டங்களுக்கு அனுப்பி, உண்மை நிலையைக் கண்டறிந்து, இந்த அவையிலே ஒரு அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டுமென்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று இன்றைக்கு இந்த ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டி இருக்கக்கூடிய பல்வேறு விவரங்களில், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை, நீர் ஆதாரம் குறைவாக இருக்கக்கூடிய மாநிலமாக நம்முடைய மாநிலம் இருக்கிறது என்ற விவரம் சொல்லப்பட்டிருக்கிறது. நீர் ஆதாரம் குறைவாக இருக்கக்கூடிய சூழ்நிலையில், கடந்த ஓராண்டு காலமாக சென்னை மாவட்டம் தவிர இதர மாவட்டங்கள் எல்லாம் வறட்சியினுடைய பிடியிலே சிக்கித் தவித்துக்கொண்டு இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், தமிழகத்திலே நீண்ட நெடுங்காலமாக நம்முடைய மாநில விவசாயிகள் பெற்று வந்த இலவச மின்சாரம் ரத்து செய்யப்படும் என்ற அச்சம் இப்போது விவசாயிகள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் இருக்கக்கூடிய மாநிலங்களில் நம்முடைய மாநிலத்தில் மட்டுந்தான் இலவச மின்சாரம் என்பது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்ற பெயரிலே கடந்த கால ஆட்சியிலே அந்த ஒப்பந்தம்



2003 ஜனவரி 29] [திரு. கே. மகேந்திரன்]

ஏற்பட்டிருந்தாலும்கூட; இப்போது தமிழகத்தின் விவசாயிகள் சந்திக்கக்கூடிய இந்தப் பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டு, விவசாயிகள் அனுபவித்துக்கொண்டு இருக்கக்கூடிய இலவச மின்சாரம் தொடர்ச்சியாக விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு இந்த ஆட்சி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அதேபோன்று, ஆளுநரது அறிக்கையிலே சில விவரங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. குறிப்பாக 21-வது பக்கத்திலே 17-வது பாராவில் "நமது மாநிலத்தினுடைய நிதி நிலைமையைச் சீரமைக்கவும், நம்பகத்தன்மையை நிலைநாட்ட வேண்டுமென்ற நோக்கத்திலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிச் சீர்திருத்த நடவடிக்கைகளை மிகக் துணிச்சலுடன் எடுத்துள்ளார்கள். இந்த மாநில அரசு நிலைகுலைந்து போகாமல் இருப்பதை உறுதி செய்ய இந்த நிதிச் சீர்திருத்தங்கள் அவசியமானதேயாகும். நாம் நலமுடன் இருக்கவேண்டுமாயின், இத்தகைய கசப்பான மருந்துகளை உட்கொண்டுதான் ஆகவேண்டியுள்ளது" என்ற விவரம் ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. நிதி நிலைமையைச் சீராக்கி இருக்கிறோம் என்ற பெயரிலே கசப்பு மருந்துகளைச் சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும்: உட்கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது என்ற விவரம் சொல்லப்பட்டிருக்கிறது ஆளுநர் உரையிலே, மைய அரசு நமக்கு வழங்கவேண்டிய நிதி ஈவு 2,964 கோடி ரூபாய்; 2005-ஆம் ஆண்டு வரை கிடைக்க வேண்டிய அந்த ஈவு கிடைக்கவில்லை என்ற புள்ளிவிவரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் கடந்த ஆண்டிற்கு முந்தைய ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் தேதி பல்வேறு கட்டணங்கள் தமிழ்கத்திலே உயர்த்தப்பட்டன. கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரிலேகூட மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அந்தக் கட்டண உயர்வுகளினால் ஒரு பகுதிதான் அரசிற்கு வருவாய் என்பது ஏற்பட்டிருக்கிறது; மீதிப்பகுதி போக்குவரத்துத் துறை உட்பட பல்வேறு துறைகளுக்கு, நிதியாக வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

அதேபோன்று கடந்த ஆண்டு பட்ஜெட்டிலே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்மொழிந்த அந்த பட்ஜெட்டிலே 690 கோடி ரூபாய்க்கான பற்றாக்குறை விடப்பட்டது. புதிதாக 630 கோடி ரூபாய்க்குப் புதிய வரி விதிப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இப்படி இரண்டையும் சேர்த்துப் பார்க்கும்போது 5 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக, சாதாரண, ஏழையெளிய உழைப்பாளி மக்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், தொழிலாளர்களுக்கு எதிரான இந்த

[திரு. கே. மகேந்திரன்] [2003 ஜனவரி 29

நிதிச் சீர்திருத்த நடவடிக்கைகள் முழுவதுமே சாதாரண மக்களைப் பாதிக்கக்கூடிய நடவடிக்கைகளாகத்தான் இருந்துகொண்டிருக்கின்றன. அதனுடைய ஒரு பகுதியாகத்தான் இன்றைக்கு மாநிலம் முழுவதும் வறட்சி என்பது நிலவிக்கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், தமிழக சட்டப் பேரவையில் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், ரேசன் அரிசி விலை உயர்த்தப்படாது என்று கொடுத்த வாக்குறுதியை மீறி 10 கிலோ அரிசி என்பது 6 ரூபாய்க்கு இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

நாங்கள் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இன்றைக்கு மாநிலம் முழுவதும் கடுமையான வறட்சி என்பது நிலவிக்கொண்டிருக்கக்கூடிய காலகட்டத்தில், ரேசன் அரிசியை வாங்கிப் பயன்படுத்தக்கூடிய மக்களெல்லாம் வறட்சியின் பிடியிலே சிக்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில் ரேசன் அரிசியினுடைய விலை உயர்வை இந்த அரசு உடனடியாக ரத்து செய்யவேண்டும் என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

பிற்பகல் 4-35

இப்படிப்பட்ட நிதி நெருக்கடி என்பது தொடர்ச்சியாக நீடித்துக் கொண்டு இருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில், நிர்வாக நகரம் மகாபலிபுரத்திலே துவக்குவதற்காக மலேசிய அரசோடு 3,000 கோடி ரூபாய்க்கான ஒரு ஒப்பந்தம் போடப்பட்டிருப்பதாக ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலேசிய அரசோடு போடப்பட்டிருக்கிற ஒப்பந்தம் ஒரு Feasibility Report கொடுப்பதற்காக; அதாவது சாத்தியக்கூறு குறித்த அறிக்கை பெறுவதற்காகவும், மேலும் Project Report—செயல் திட்டம். இது குறித்து ஒரு Report அறிக்கை — பெறுவதற்காகவும்தான். புதிய நிர்வாக நகரம் என்பது உடனடியாக எழுப்பக்கூடியது அல்ல, உடனடியாக நிறைவேறக்கூடிய திட்டமும் அல்ல; அதற்கு இரண்டாயிரம் கோடி ரூபாய், மூவாயிரம் கோடி ரூபாய் என்று நாம் சரியாகக் கணக்கிடவும் முடியாது. ஆகவே, அப்படி ஒரு புதிய நிர்வாக நகரம் கட்டுவதென்றால், அதற்குப் பதினைந்து ஆண்டு காலம் ஆகலாம்; இருபது ஆண்டு காலமும் ஆகலாம். இப்போது அதற்காகத் தமிழக அரசு எந்த நிதி ஒதுக்கீட்டையும் செய்யவில்லை, அதற்காக ஒரு பைசா கூடச் செலவு செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 ஜனவரி 29]

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறிய இந்தக் கருத்துகளை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். காரணம் என்னவென்றால், நிதி நெருக்கடி கடுமையாக இருக்கக்கூடிய காலகட்டத்தில் புதிய நிர்வாக நகரம் என்று பத்திரிகைகளில் வரக்கூடிய செய்திகள் எல்லாம் மக்கள் மத்தியிலே வேறுவிதமான தாக்கங்களை ஏற்படுத்திக்கொண்டு இருக்கக்கூடிய காரணத்தினால்தான் நாங்கள் இதைச் சுட்டிக்காட்டுகிறோம். அப்படிப்பட்ட புதிய நிர்வாக நகரத்திற்கு நிதி என்பதை ஒதுக்காமல் 10 ஆண்டுகளோ, 15 ஆண்டுகளுக்குப் பின்போ, தேவை ஏற்படும்போது, நிதி நிலைமை என்பது சீராகும்போது அப்படிப்பட்ட நிர்வாக நகரங்கள் வருவதிலே எங்களுக்கு ஒன்றும் மாறுபட்ட அபிப்பிராயம் என்பது கிடையாது. ஆனால் இன்றைக்கு அப்படிப்பட்ட ஒரு செயல்முறைத் திட்டம் வகுக்கப்பட்டு இருப்பதைக் கூட மாநில அரசு கைவிட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டி இருக்கக்கூடிய இன்னொரு அம்சம் என்பது திருவல்லிக்கேணி பகுதியிலிருந்து திருவான்மியூர் வரை இருக்கக்கூடிய மெரினா கடற்கரைப் பகுதிக்காகவும் மலேசிய அரசோடு ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. புதிய சில திட்டங்கள் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கையில் — எங்களைப் பொறுத்தவரையில் அந்தப் பகுதியிலேயே வாழக்கூடிய 17 மீனவர் குப்பங்கள் அந்தப் பகுதியிலே இருந்துகொண்டிருக்கின்றன. இப்பொழுது மீனவ மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கக்கூடிய அச்சம் — ஒரு வேளை இல்லையென்றால் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் மீனவர்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கக்கூடிய அச்சம் — என்பது, திருவல்லிக்கேணியிலிருந்து திருவான்மியூர் வரை இருக்கக்கூடிய 17 மீனவர் குப்பங்கள் என்பவை கோவளம் பகுதிக்கு அப்புறப்படுத்தப்படுவதாக வந்திருக்கக்கூடிய தகவல் அடிப்படையிலே....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் போன்ற எதிர்க்கட்சியினருடைய வளமான கற்பனை. அத்தகைய எந்த ஒரு திட்டத்தையும் இந்த அரசு அறிவிக்கவில்லை. மெரினா கடற்கரையை அழகுபடுத்தப் போகிறோம் என்று சொன்னோம். இது குற்றமா? உலகத்திலேயே இரண்டாவது நீளமான கடற்கரை நம்முடைய மெரினா கடற்கரை. பெரிய அளவில் சுற்றுலாப் பயணிகள். அதிலும்,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 ஜனவரி 29

வெளிநாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் இங்கே வரவேண்டும் என்பதற்காக, இந்தக் கடற்கரையை அழகுபடுத்தப்போகிறோம் என்று சொன்னோம். அவ்வளவுதான்; அதற்கும் ஒரு சாத்தியக்கூறு Report கொடுப்பதற்காகத்தான் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. மற்றபடி, அங்கே இருக்கின்ற குப்பங்களில் வாழ்கின்ற மீனவ மக்களுக்கு அத்தகைய அச்சம் வந்ததாக எங்களுக்குத் தெரியவில்லை. அத்தகைய அச்சங்களை நீங்கள்தான் ஏற்படுத்துகிறீர்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக் கடலோர மீனவர் பாதுகாப்புக் குழு என்ற ஓர் அமைப்பு அங்கே இருக்கக்கூடிய மீனவர்களால் உருவாக்கப்பட்டு, அப்படிப்பட்ட அச்சத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மெரினா கடற்கரை அழகுபடுத்தப்பட வேண்டும் என்று 1985 ஆம் ஆண்டு அன்றைய தமிழகத்தினுடைய முதல்வராக இருந்த மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு முயற்சியை மேற்கொண்டபோது ஏற்பட்ட சூழ்நிலைகளையெல்லாம் இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். 1989 ஆம் ஆண்டு துப்பாக்கிப் பிரயோகம் உட்பட நடந்து, 6 மீனவர்களுடைய உயிர்கள் அன்றைக்குப் பறிக்கப்பட்டு, மெரினா கடற்கரையை அழகுபடுத்துகிறோம் என்ற பெயரிலே கட்டுமரங்கள் அப்புறப்படுத்தப்பட்டன. திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தலையிட்டு, கட்டுமரங்களைத் திருப்பிக் கொடுத்த வரலாறு என்பது தமிழகத்திலே இருக்கிறது. அப்படிப்பட்ட வரலாறுகளை இந்த மாமன்றம் புரிந்துகொண்டு, அங்கே இருக்கக்கூடிய மீனவர்களுடைய வாழ்க்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற வேண்டுகோளை உங்கள் முன்னால் நான் முன்வைக்கிறேன்.

அதுபோன்று இன்றைக்குக் கடுமையான வறட்சி, தமிழகத்திலேயே முன்னுக்கு வந்திருக்கக்கூடிய சூழ்நிலை; டெல்டா மாவட்ட விவசாயிகளைப் பாதுகாப்பதற்கும், சம்பாச் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ஐயாயிரம் ரூபாவும், கொடுப்பதற்காகவும் மத்திய அரசிடம் நானூறு கோடி ரூபாய் கடன் உதவி கோரப்பட்டிருக்கிறது.



2003 ஜனவரி 29] [திரு. கே. மகேந்திரன்]

பிற்பகல் 4-40

அதேபோன்று food for work என்ற உணவுக்கான வேலைத் திட்டத்திற்கு இரண்டு இலட்சம் டன் அரிசி மத்திய அரசிடம் கோரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நம்முடைய மாநில அரசு, நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய நியாயமான ஈவு கிடைக்காதபோது, மூன்றாயிரம் கோடி ரூபாயை lump sum-ஆக மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை மைய அரசுக்கு நாம் வைத்தபோது. இதுவரை அந்தக் கோரிக்கை நிறைவேறியதாக எங்களுக்குத் தெரியவில்லை. அப்படி ஏதாவது மைய அரசிடமிருந்து நம்முடைய மாநில அரசுக்கு நிதி என்பது வந்திருந்தால் நீங்கள் சுட்டிக்காட்ட வேண்டும். 400 கோடி ரூபாயை நாம் மைய அரசிடம் . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு நிதியுதவி மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டிருந்தால் அதை இரகசியமாக வைத்திருக்க முடியுமா? அதுமட்டுமின்றி, அப்படி ஒரு பேருதவியை மத்திய அரசு எங்களுக்குச் செய்திருந்தால் இந்த ஆளுநரின் உரையில் நிதி நெருக்கடி, கஷ்டம் என்றெல்லாம் குறிப்பிட்டிருப்போமா?

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அப்படி மைய அரசு நாம் ஏற்கெனவே கேட்ட நிதியைக்கூட கொடுக்காத சூழ்நிலையில், இப்போது நாம் கேட்டிருக்கக்கூடிய இந்த 400 கோடி ரூபாயையும் மத்திய அரசு கொடுக்கும் என்பதை எல்லாம் நாம் நினைக்க முடியாது. அவர்களிடமிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான ஈவைப் பெறுவதற்கு நாம் ஒரு கடுமையான போராட்டத்தை அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு, இணைந்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் கோருகின்ற உதவி, இப்போது வறட்சி நிவாரணப் பணிகளுக்காக, இந்த உதவி கிடைக்காது என்பது போன்ற கருத்துகளை இங்கே தெரிவிப்பது நல்லதல்ல என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 13 ஆம் தேதி நான் டெல்லியில் பிரதமரைச் சந்தித்துத் தமிழகத்திற்கு வறட்சி நிவாரண உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, ஒரு வறட்சி நிவாரணக் குழுவைப்

பிரதமர் அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் தற்போது தமிழகத்திலே உள்ள அனைத்து மாவட்டங்களையும் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாளை மறுநாள் அவர்கள் இங்கே திரும்பியவுடன், நான் அவர்களைச் சந்தித்து பல புதிய கோரிக்கைகளை வைக்க உள்ளேன். ஆகவே, இந்த நிலையில் நாம் என்ன கோரிக்கை வைக்கிறோமோ, அதில் 100 சதவீதம் கிடைக்காவிட்டாலும், ஓரளவுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது. ஆகவே, அதற்குக் குந்தகம் ஏற்படுத்துகின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரளவு நிதி கிடைத்து, அந்த நிதி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்குக் கிடைத்தால் எங்களுக்கு சந்தோஷம். அப்படிப்பட்ட நிதி வரும்வரை, தற்போது வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு உடனடி நிவாரணத்தை நம்முடைய தமிழக அரசு உடனடியாக வழங்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்த மதிய உணவுத் திட்டம், அதனுடைய புள்ளிவிவரங்கள் பற்றி எல்லாம் நேற்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களால் இந்த அவையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்த மதிய உணவு பற்றி ஏற்கெனவே பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியது போல, மதிய உணவு வாங்குவதற்குத் தட்டு எடுத்து சத்துணவுக் கூடங்களுக்கு வருவதிலே விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய தயக்கத்தைக் கணக்கிலே கொண்டு, அந்த விவசாயிகளுக்கு இந்த அரசு, மதிய உணவுக்காகச் செலவு செய்யக்கூடிய பணத்திலே, கூடுதலாக ஒரு நிதியை ஒதுக்கி விவசாயிகளுக்கு தினமும் ஒரு கிலோ அரிசியும் 25 ரூபாய் பணமும் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்,

இந்த கவர்னர் உரையில் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய ஒரு விஷயத்தில், நேற்றையதினம் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய





மாண்புமிகு உறுப்பினர் விஜயபாஸ்கர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்; புதுக்கோட்டை மாவட்டத்தில் செயற்கை வைரம் பட்டை தீட்டக்கூடிய தொழிலில், அந்நியச் சந்தைகளோடு போட்டி போட முடியாத காரணத்தால், அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான பெண்கள் தொழில் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தைச் சொன்னார்கள்.

அதேபோன்று, தமிழகத்தில் இருக்கக்கூடிய பாரம்பரிய மிக்க தொழில்கள் பல்வேறு மாவட்டங்களில்—புதுக்கோட்டையிலே பாதித்திருப்பதுபோல—மத்திய அரசு கடைப்பிடிக்கக்கூடிய தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற அந்தக் கொள்கைகளின் விளைவாக அழிந்து கொண்டிருக்கின்றன. அதன் விளைவாக, பயங்கரவாதம், தீவிரவாதம் போன்ற நடவடிக்கைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்ற விவரங்கள் இங்கே நமக்கு எல்லாம் தெரியும். தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டத்தில் கடந்த மாதம் நம்முடைய மாநில முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு பேசும்போது, ‘பயங்கரவாதமும், தீவிரவாதமும் தமிழகத்திலே தலைதூக்குவதற்கு அடிப்படையான காரணம் வேலையில்லாத் திண்டாட்டம்’ என்று கூறியிருப்பதாகப் பத்திரிகையிலே செய்தி வந்தது.

பிற்பகல் 4-45

இன்றைக்குத் தமிழகத்திலே 50 இலட்சம் இளைஞர்கள் படித்து முடித்துவிட்டு, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலைக்காக பதிவுச் செய்து காத்திருக்கிறார்கள். அந்த இளைஞர்களுக்கு வேலை கொடுப்பதற்கான நடவடிக்கைகளை நம்முடைய அரசு மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, கவர்னர் அவர்களால் கடந்த 23ஆம் தேதி நிகழ்த்தப்பட்ட இந்த உரை என்பது, தன்னைத்தானே பாராட்டிக்கொள்ளக்கூடிய உரையாகவும், ஏமாற்றம் அளிக்கக்கூடிய உரையாகவும் இருக்கிறது என்பதைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரையின் மீது ஒருசில கருத்துகளைச் சொல்ல விழைகிறேன். குறிப்பாக, நமது மாநிலத்தில் 28 மாவட்டங்களை வறட்சிப் பிரசேதங்களாக அறிவித்து, அதற்கான நிவாரணப் பணிகளைத

தொடங்குவதற்காக, மத்திய அரசிடம் நிதி, தேவையான உணவுப் பொருட்கள் கேட்பதைப்போல, இருக்கின்ற பயிர்களைப் பாதுகாப்பதற்குரிய முறையில் 18 டி.எம்.சி. தண்ணீர் தேவை என்ற அந்தக் கருத்தையும் ஆளுநர் அறிக்கையின் மூலமாக வலியுறுத்தியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அதே நேரத்தில், தமிழகத்தில் வரலாறு காணாத அளவில் வறட்சி நிலை தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது என்பது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பாகக் காவிரிப் பிரச்சினை; நான் பிரச்சினைக்கு உள்ளே செல்லமாட்டேன். தண்ணீர் இல்லாததன் காரணத்தால், குறிப்பாக காவிரி டெல்டா பகுதிப் பாசன விவசாயமே மிகப் பெரிய கேள்விக்குறியாக மாற்றப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி விவசாயிகள் மிகப் பெரிய அல்லலுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். அதையும் நமது அரசு பல வகைகளிலே இந்த அறிக்கையின் மூலமாக ஏற்று, அதற்குரிய நிவாரணப் பணிகளைத் தொடங்குவதற்கு முன்முயற்சி எடுக்கப்படும் என்ற நம்பிக்கையூட்டி இருக்கிறது. ஆகவே, தமிழகத்தில் நிலவுகிற வறட்சி நிலைமை, அதனால் ஏற்பட்டிருக்கிற பாதிப்பு, அதன் மூலமாக ஏற்பட்டிருக்கின்ற இழப்பு இவற்றையெல்லாம் அரசு ஏற்றுக்கொண்டு சுட்டிக்காட்டி இருக்கின்றபோது, இப்படிக் கடுமையான வறட்சி நிலவுகின்ற இந்த மாநிலத்தில், இதனால் பாதிக்கப்படுகின்ற விவசாயிகளுடைய நிலைகளை, அந்த வறட்சியின் மூலமாகப் பாதிக்கப்பட்டு மாணமுற்று இருக்கக்கூடிய விவசாயிகளுடைய இறப்பை ஏற்றுக்கொள்ள மறுப்பது ஏன் என்பதுதான் இன்றைக்குக் கேள்விக்குறியாக இருக்கிறது. ஆகவே, இந்த இறப்பு என்பதை என்னைப் பொறுத்தவரையில், நான் அரசியல் ஆக்க விரும்பவில்லை. என்னுடைய சொந்த பாதிப்பு என்ற நிலையிலிருந்து, ஒரு விவசாயி என்ற நிலையிலிருந்து, அந்த மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற நிலையிலிருந்து நான் சொல்கிறேன்.

குறிப்பாக, வறட்சியால் பட்டினிச்சாவு என்று சொல்கின்றபோது, அதைப் பற்றியே ஒரு விளக்கம் தரவேண்டிய அவசியம் இருப்பதாக நான் கருதுகின்றேன். பட்டினிச்சாவு என்று சொன்னாலே, அது ஏதோ அரசுக்கு எதிராகவோ, அல்லது ஆட்சிக்கு எதிராகவோ அல்லது அரசியலாக்க முயற்சி நடப்பதாகவோ இங்கே குறிப்பிட்டு, நம்முடைய முதலமைச்சர்கூடச் சொன்னார்கள். ஆனால், நான் அந்தக் கருத்தில் சொல்லவில்லை. ஒருவன் பட்டினியால் சாகின்றான் என்று சொல்கிறபோது, 3 மாதம், 4 மாதம் விவசாயத் தொழிலாளிக்கு வேலையில்லை என்பதை நாமே ஏற்றுக்கொண்டு இருக்கிறோம்;





அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறோம். ஒரு வேளை உணவு என்பதே அரிதாக இருக்கிறது விவசாயத் தொழிலாளிக்கு. வேலையில்லாமல் இருக்கின்ற விவசாயத் தொழிலாளிக்கு அந்த நிலை ஏற்படுகின்றபோது, அதேபோல பயிர் வைக்கின்ற விவசாயி, அவருடைய பயிர் கருகி அழிந்துபோய்விட்ட நிலையில் மறு உற்பத்தி செய்ய இயலாத இக்கட்டான நிலையில் இருக்கின்றபோது, அவனும் இப்படி இக்கட்டான நிலைக்கு ஆளாகின்றான் என்ற யதார்த்தமான உண்மை நிலையை ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி. இந்த நிலையை ஆழமாகப் பரிசீலித்துப் பார்த்தால் இப்படி நிகழ்வுகள் ஏற்படுவதற்குரிய சந்தர்ப்பமும், சூழ்நிலையும் இருக்கிறது என்பதுதான் யதார்த்தமான உண்மை. ஆகவே, இதைத்தான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக இன்னொன்று; ஆதிச்சபுரம் பிரகாஷ் பட்டினியால் இறந்தான் என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள்; இது அவருடைய தொகுதியிலே. இங்கே அதை அவன் வயிற்று வலியால் இறந்தான் என்று சொன்னார்கள். நான் பணிவோடு முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். வயிற்று வலியால் இறந்தான் என்று சொல்வதற்குரிய ஆதாரம் என்ன? அவனுடைய பிரேதப் பரிசோதனையே நடைபெறாமல் அந்தப் பிணம் புதைக்கப்பட்டுவிட்டது. அப்படிக் கொண்டுபோய்ப் புதைத்ததற்குப் பின்னாலே அதைப் பற்றிய கருத்துகள் அங்கு வெகுவாகப் பரவி, அதன் மீது இயக்கங்கள், போராட்டங்கள் எல்லாம் நடத்திப் பார்த்தார்கள். ஆகவே, அப்படி ஒரு பிரேதப் பரிசோதனையே செய்யாமல், உடனடியாக அவன் வயிற்று வலியால் இறந்தான் என்று அன்றே அறிவிக்கப்பட்டது. அந்த மாவட்ட ஆட்சியர் மூலமாக அந்த அறிவிப்பைச் செய்தார்கள். எங்களுக்கு அதிலே வருத்தம். நாங்கள் அதை மறுத்துச் சொன்னோம். கேட்டுப் பார்த்தோம். போராடிப் பார்த்தோம். அதற்குரிய தீர்வு கிடைக்கவில்லை. ஆகவே, இந்த சண்முகத்தினுடைய *இறப்பைப் பொறுத்த வரையிலும் அவர் எழுத்து பூர்வமாகவே கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதம் முதன் முதலாக எனது கையில் கிடைத்தது. கிடைத்த உடனேயே முதலமைச்சர் அவர்கள் (மணியடிக்கப் பெற்றது).

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், சண்முகத்தினுடைய ** என்பதை சண்முகத்தினுடைய இறப்பு என்று மாற்றிக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போஸ்ட் மார்ட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பொதுவாகவே, medico legal cases—எம்.எல்.சி. கேஸைத்தான் போஸ்ட்மார்ட்டம் செய்வார்களே தவிர, non-medico legal case-ஐப் போஸ்ட்மார்ட்டம் செய்யமாட்டார்கள்.

*பிற்பகல் 1-50*

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், இப்படி ஒரு நிகழ்வு நடைபெறுகிறபோது, இந்தக் காரணத்தினால் இறந்தார் என்று உறுதியாக அந்த மக்கள் சொல்கிறபோது, அதற்குப் பின்னால் அந்த போஸ்ட்மார்ட்டம் செய்து இல்லையா, உண்டா என்று உறுதிப்படுத்த வேண்டுமா, இல்லையா? அதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே, அது செய்யப்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. சண்முகத்தினுடைய கடிதத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முதன்முதலாக நான் Fax செய்தேன். என்னுடைய கையில் சண்முகம் — இறந்த, தற்கொலை செய்துகொண்ட அந்த சண்முகம் கைப்பட — எழுதிய கடிதம் கிடைத்த மாத்திரத்திலேயே, முதலாவதாக எனக்கு உதித்தது, சிந்தையில் உதித்தது, முதலாவதாக நமது மாநில முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்ப வேண்டும் என்பதே. அடுத்த 10-வது நிமிடத்திற்குள்ளாகவே நான் அவர்களுக்கு அந்தக் கடிதத்தை Fax செய்தேன். இதிலே அரசியல் பண்ண வேண்டுமென்ற விருப்பம் இல்லை. இதை நான் செய்ததற்குக் காரணம், முதலமைச்சருக்கு அதைத் தெரிவிப்பதன் மூலமாக அந்தச் சாவின் மீது, உடனடியாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும்; இப்படிப்பட்ட நிகழ்வுகள் ஏற்படா வண்ணம் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான். தமிழகத்திலே இப்படித் தொடருமானால் இது ஒரு பிரச்சினையாக ஆக்கப்படும் என்பதை நான் உணர்ந்தேன். ஆனால், அந்த நிலைமையிலே நான் நம்முடைய சபாநாயகர் அவர்களுக்கும் இந்தக் கடிதத்தைப் பற்றியும், இப்படிப்பட்ட ஒரு நிகழ்வு நடைபெற்றிருப்பதைப் பற்றியும் தெரிவித்திருந்தேன். அதேபோல

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2003 ஜனவரி 29] [திரு. வை. சிவபுண்ணியம்]

உடனடியாக நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர், எஸ்.பி., ஆர்.டி.ஓ., தாசில்தார், எல்லோருக்குமே இந்தக் கடிதத்தை நான் கொடுத்திருக்கிறேன். இப்போது அவர்கள் எப்படிச் சொல்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், எல்லோரிடத்திலேயும் கொடுத்து, அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்கிறபோது, மாவட்ட அதிகாரிகளோ, நிர்வாகமோ விரைவான நடவடிக்கை எடுத்து அந்த இடத்திற்குச் சென்று, அவர்களுடைய பிரேதத்தை எடுத்து வந்து பரிசோதனை செய்வதற்குரிய முயற்சிகள் நடைபெறவில்லை. மாலை 6 மணிக்குமேல்தான் அவருடைய உடலை எடுத்து வந்து பிரேதப் பரிசோதனை செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. பின்னர் காலை 5.30 மணிக்குள்ளாக திரும்பவும் பிரேதப் பரிசோதனை நடந்தது. அவ்வளவு காலதாமதம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

இந்தக் கடிதம் வெளிவந்ததற்குப் பின்னாலே, நாங்கள் பத்திரிகைகளுக்கும், தொலைக்காட்சிகளுக்கும் கொடுத்தோம். எங்களுடைய மாநிலச் செயலாளர், மரியாதைக்குரிய நல்லகண்ணு அவர்களுக்கும் அனுப்பி வைத்தோம். அவர்களும் இங்கே நிருபர்களிடத்திலே, இப்படியொரு நிகழ்வு நடைபெற்றிருக்கிறது என்பதை வெளிப்படுத்தினார்கள். இப்படி வெளிப்படுத்தியதனுடைய; விளைவு ஒரு குற்றமா? அந்தக் கடிதம் எழுதி வைக்கப்பட்டது. அப்போது, அந்தக் கடிதத்தின் மீது நம்முடைய அரசாங்கத்தினுடைய நிலைப்பாடு என்ன என்பது என்னுடைய கேள்வி. அவர் எழுதி வைத்திருந்த கடிதம் உண்மையா, இல்லையா....

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணைக்குரிய—போலீஸ் வழக்கிற்குச் சம்பந்தப்பட்ட விசாரணைக்குரிய--அந்தக் கடிதத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் காவல் துறையிடம் ஒப்படைக்காதது ஏன்? அதற்கு மாறாக, சென்னையிலே இருக்கிற அவருடைய மாநிலச் செயலாளரிடம் கொடுத்ததனுடைய மர்மம் என்ன? அதனுடைய அவசியம் என்ன? காவல் துறையினருக்கு முறையாக அந்தக் கடிதம் கொடுக்கப்பட்டிருக்குமேயானால் அதனுடைய உண்மை வெளிவந்திருக்கும். ஏன் அதைச் சட்டமன்ற உறுப்பினர் செய்யத் தவறினார் என்பதற்கு அவர் விளக்கம் சொல்ல வேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே மர்மமே ஒன்றும் இல்லை. நான் கடிதம் வந்த

[திரு. வை. சிவபுண்ணியம்] [2003 ஜனவரி 29

உடனேயே, அரசினுடைய முதலமைச்சருக்குத்தான் முதலில் சொன்னேன் என்றுதான் சொன்னேன். இந்தக் கடிதத்தை ஏன் அரசு கேட்கவில்லை. ஏன் காவல் துறை கேட்கவில்லை என்பதுதான் எனக்கு இருக்கிற ஆதங்கமே. காவல் துறையினர் 3 தினங்கள் கழித்துத்தான் அந்தக் கடிதத்தைப் பற்றியே அக்கறைப்பட்டார்களேயொழிய, ஏன் அந்தக் கடிதத்தை என்னிடமிருந்து பெறுவதற்கு முயற்சியை காவல் துறை எடுக்கவில்லை? அந்த மாவட்ட நிர்வாகம் ஏன் ...

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** காவல் துறையினர் அந்தக் கடிதத்தைப் பெற வந்ததைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. காவல் துறையினர் (குறுக்கீடு) என்னுடைய (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்து, காவல் துறை கேட்டுத்தான் மாண்புமிகு உறுப்பினர் கொடுத்திருக்க வேண்டுமென்பது இல்லை. கேட்பதற்கு முன்னாலேயே அதைக் காவல் துறையினரிடம் அவர் ஒப்படைத்திருக்க வேண்டும். அதுதான் முறையும்கூட. காரணம்; இறந்துபோன, தற்கொலை செய்துகொண்ட ஒருவருடைய கையால் எழுதப்பட்டது என்பது வெளி வந்த செய்தி. எனவே, நான் சொல்வது, சட்டப்படி தற்கொலை செய்வது ஒரு குற்றம். ஆக, தற்கொலை செய்தவர், இறந்துவிட்டவரானாலும், அவர் ஒரு குற்றவாளி. சட்டத்தின் முன்னாலே குற்றவாளிகளுடைய confession ஏற்றுக் கொள்ளப்பட முடியாது. எனவே, அந்தக் கடிதத்தைக்கூட, அவர் எப்படி எழுதியிருந்தாலும்கூட, அதிலே இருக்கிற வாசகம், சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. எனவே, நான் சொல்வது, காவல் துறையினர்தான் அதைக் கேட்டுப் பெற்றிருக்க வேண்டுமென்பது அல்ல. இவரே முன் வந்து அதைக் காவல் துறையினரிடம் ஒப்படைத்து இருக்க வேண்டும்; அதை விசாரணைக்கு உட்படுத்தியிருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் சற்றுப் பொறுமையைக் கடைப்பிடித்திருந்தால், அவர் இந்த அவையில் இருக்கிறபோதே இது சம்பந்தப்பட்ட அறிக்கையை நான் இங்கே வாசித்திருப்பேன். ஆனால், நான் இந்த அறிக்கையை வாசிப்பதற்குள் அவர் வெளிநடப்புச் செய்துவிட்டார்.



2003 ஜனவரி 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

காலையில் தெளிவான ஓர் அறிக்கையை நான் இந்த அவைக்கு வாசித்துத் தெரிவித்திருக்கிறேன். காவல் துறையினர் அந்தத் தற்கொலை குறித்து, அதாவது இறந்து போனவர் எழுதி வைத்ததாகக் கூறப்படுகின்ற கடிதம், அவர் எழுதியதுதானா என்பதை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக ஒரிஜினல் கடிதத்தைக் கேட்டு, திரு. சிவபுண்ணியம் அவர்களின் இல்லத்திற்குச் சென்றபோது அவர் ஏன் அதைக் கொடுக்க மறுத்தார்?

பிற்பகல் 4-55

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த இடத்தைத்தான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தயவுசெய்து ஒரு நிமிடம் இடைவெளி விட்டுவிட்டால், நான் சொல்கிறேன். அதிலே தவறு என்மீது இருக்கிறது என்று நீங்கள் சொன்னால், நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இந்தக் கடிதத்தைப் பொறுத்தவரையிலும், அனைத்து அதிகாரிகளுக்கும், காவல் துறை மாவட்டக் கண்காணிப்பாளர் உட்பட அனைவருக்கும் கையில் கொடுக்கப்பட்டுவிட்டது நகல். இதில் இருக்கின்ற ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, சிவபுண்ணியம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஜெராக்ஸ் நகல்களைக் கொடுத்தார் என்பதை நான் வாசித்த அறிக்கையிலேயே தெரிவித்துவிட்டேன். அவர் இதை வைத்து அரசியல் நடத்த விரும்பவில்லை என்று சொல்கிறார். ஆனால், முதலில் எல்லாப் பத்திரிகைகளுக்கும் அந்தக் கடிதத்தின், ஜெராக்ஸ் நகல்களை அனுப்பிவிட்டு, அதன் பின்னர்தான் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் காவல் துறையினருக்கும் கொடுத்திருக்கிறார். அது உண்மையிலேயே திரு. சண்முகம் எழுதிய கடிதம்தானா என்பதைக் காவல் துறையினர் ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? ஜெராக்ஸ் நகல்களை வைத்துக் கொண்டு எப்படி ஆராய்ச்சி நடத்த முடியும்? அதனால்தான் மாண்புமிகு உறுப்பினர் இல்லத்திற்குச் சென்று ஒரிஜினல் கடிதத்தைத் தாருங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அதை ஏன் கொடுக்க அவர் மறுத்திருக்கிறார்?

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரிஜினல் கடிதத்தை அன்று மாலை 6 மணிக்கே அந்த டி.எஸ்.பி. என்னிடத்திலே வந்து கேட்டார். என்னிடத்தில் அப்போது கடிதம் இல்லை என்பதை நான் தெரிவித்துவிட்டேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கடிதத்தைத் தாருங்கள் என்று காவல் துறையினர் எத்தனை மணிக்குக் கேட்டால் என்ன? காவல் துறையினர் கேட்கும்போது நீங்கள் கொடுக்க வேண்டியதுதானே?

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, நீங்கள் ஒரு நிமிடம் விட்டால் நான் சொல்கிறேனே! இது என்ன? இப்படிச் சொன்னால் ரொம்ப சிரமங்கள் இருக்கின்றன. நான் என்ன சொல்கிறேன் என்றால், அன்றைக்கு 6 மணிக்கு என்னிடத்திலே அந்தக் கடிதம் கேட்கப்பட்டது. 'என்னிடத்தில் இல்லை, என்னுடைய மாவட்டச் செயலாளரிடத்தில் ஒப்படைத்து விட்டேன்' என்று சொன்னேன். அவருடைய தொலைபேசி எண்ணை அவர் கேட்டுப் பெற்றுக் கொண்டார். அடுத்த 1/2 மணி நேரத்திற்குள்ளாக அவரிடத்திலே அந்த டி.எஸ்.பி. தொடர்பு கொண்டு பேசிவிட்டார். 'ஆமாம், என்னிடத்தில் இருக்கிறது' என்பதை என்னுடைய மாவட்டச் செயலாளர் ஒப்புக்கொண்டு, 'மாநிலச் செயலாளர் நல்லகண்ணுவிடம் ஒரு பொது நல வழக்குப் போடுவதற்காக நான் சென்னைக்கு அனுப்பி இருக்கிறேன் விரைவாகப் பெற்றுத் தருகிறேன்' என்று 7 மணிக்குள்ளாக அந்த டி.எஸ்.பி.யிடம் ஒப்புக்கொண்டு விட்டார். ஒப்புக் கொண்டதற்குப் பின்னாலே, இரவு 12 மணிக்கு, என்னிடத்திலே, இல்லாத ஒன்றை ஏன் அவர் கேட்க வந்தார் என்பதுதான் இதிலே இருக்கிற பிரச்சினை?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இது மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் தருகின்ற version, இதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. காவல் துறையினர் கொடுத்த தகவல்களை நான் இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறேன். எங்களைப் பொறுத்தவரை இதைத்தான் நாங்கள் நம்புகிறோம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்வதை நான் மறுக்கவில்லை. சண்முகம் அவர்கள் தூக்கு மாட்டித் தற்கொலை செய்து கொண்டார். அவர் எழுதி வைத்த கடிதத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் காவல் துறை அதிகாரிகளுக்கும் கொடுத்திருக்கிறார். Post-mortem நடந்திருக்கிறது Post-Mortem நடக்கிறபோதுகூட காவல் துறையினர் பிரேதத்தைக் கைப்பற்றி ஒரு விசாரணை நடத்தி, ஒரு கமிட்டி போட்டு, அதற்குப் பின்னாலேதான் கொண்டுபோய் மருத்துவமனையிலே



Post-mortem நடக்கிறது. அப்போதாவது அந்த ஒரிஜினல் கடிதம் எங்கேயிருக்கிறது என்று அந்தக் காவல் துறை வாங்கி இருக்கக் கூடாதா? இரவு 12 மணிக்குத்தான் போக வேண்டுமா? சட்டமன்ற உறுப்பினருக்கு அலுவலகம் இல்லையா? அங்கெல்லாம் வாங்கக் கூடாதா? நாங்கள் இந்த அரசின்மீது நம்பிக்கை வைத்துக் கொடுத்தோம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9-1-2003 அன்று, தாங்கள் ஏற்கெனவே மேற்கொண்டு இருந்த அவசரப் பணியான, விவசாயிகள் மறியல் தொடர்பான பாதுகாப்புப் பணியினை முடித்துவிட்டு இரவு 10-40 மணி அளவில் காவல் துறையினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் இல்லத்திற்குச் சென்றிருக்கிறார்கள் என்று ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல்—அந்தக் கடிதத்தை ஒப்படைக்கவில்லை. ஒப்படைக்கவில்லை என்று சொல்கிறபோது—அந்தக் கடிதம் என்னிடம் இருந்ததை மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைத்து விட்டதையும், மாநிலச் செயலாளர் அவர்களுக்கு அனுப்பிவிட்டதையும் தெரிந்துகொண்ட அந்தக் காவல் துறை அதிகாரி அதை உறுதி செய்து கொள்வதற்காக சென்னைக்கு என்னுடைய அலுவலகத்திற்கும் தொலைபேசியிலே பேசி உறுதி செய்வதற்கும் முயற்சி எடுத்தார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினர் என்னிடம் தந்த அறிக்கையை நான் காலையிலே இந்த அவையில் வாசித்தேன். மாறுபட்ட சில தகவல்களை மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் இங்கே தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குத்தான் காவல் துறையினரின் Departmental enquiry-க்கு ஏற்கெனவே உத்தரவிடப்பட்டிருக்கிறது என்று ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன். இந்த விசாரணையில் எல்லா உண்மைகளும் வெளிவரும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவம் நடந்ததற்குப் பின்னாலே மறுநாள் மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறைக் கண்காணிப்பாளர், ஆர்.டி.ஓ., தாசில்தார் உள்ளிட்ட மற்றும் சர்வ கட்சிகளும் கொண்ட ஒரு சமாதானக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் மாவட்ட

ஆட்சியரும், காவல் துறை மாவட்டக் கண்காணிப்பாளரும் எழுத்துபூர்வமாகக் கையெழுத்திட்டுக் கொடுத்தார்கள். இந்த டி.எஸ்.பி. நடந்துகொண்டது தவறு, இதற்காகப் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கிறோம். அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கிறோம் என்று எழுத்துபூர்வமாக என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-00*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவையெல்லாம் இப்போது தேவையற்ற விவாதம். Departmental enquiry-க்கு, விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த விசாரணை முடிந்த பிறகு, அதன் அறிக்கை கிடைத்த பிறகு, தேவையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்று ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவையில் இல்லையென்றால், அதற்கு நான் பொறுப்பல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் அதாவது, இது சம்பந்தமாக துறை விசாரணை நடைபெறுகிறது; அந்த விசாரணை அறிக்கை வந்ததற்குப் பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள், அதனாலே, தயவுசெய்து அடுத்த பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எனக்கு சம்பந்தப்பட்ட விஷயம் என்கிற காரணத்தினாலே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஓர் உறுப்பினர் என்கிற முறையில் இந்த அவையிலே எனக்கு ஏற்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினையின்மீது ஒரு தீர்வு காண வேண்டும் என்பதற்கான முயற்சியாகத்தான் இதை எடுத்தேனே தவிர, இதன்மீது நம்முடைய அரசு என்ன நிலை கொண்டிருக்கிறது என்பதே என்னுடைய கேள்வி. 12 மணிக்கு என்னுடைய வீட்டிற்கு வந்து இந்தக் காரியத்தை, அதாவது என்னிடத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உறுப்பினர்மீது இருக்கிற அக்கறையின் காரணமாகத்தான் துறை விசாரணைக்கு முதலமைச்சர் அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள். ஆகவே, விசாரணை அறிக்கை வரட்டும்.





***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் காவல் துறைமீது தொடர்ந்து குறையைச் சொல்கிறார்கள். இதில் ஒரு உண்மை என்னவென்றால், இது ஒரு criminal offence. Suicide— தானா என்பது சந்தேகம் எனும் நிலையில் இது ஒரு criminal offence. அப்படி ஒரு criminal offence-ஆக இருக்குமா என்று இருக்கின்றபோது, அந்த இறந்து போனவரிடமிருந்து — தற்கொலை செய்து கொண்டவரிடமிருந்து — எடுக்கப்பட்ட கடிதம் ஒரு முக்கியமான தடயம். அந்தக் கடிதம் அவரே எழுதியதா? அல்லது அந்தக் கடிதத்தை எழுதுவதற்கு அவர் தூண்டப்பட்டாரா? அந்த signature, forged Sigature-ஆ? அல்லவா? எந்தத் தூண்டுதலில் அவர் எழுதியிருக்கிறார்? இதையெல்லாம் காவல் துறை கண்டறிய வேண்டும். இறந்து போனவருடைய, தற்கொலை செய்து கொண்டார் எனக் கூறப்படுபவரின் பாக்கெட்டிலிருந்து கடிதத்தை எடுத்ததே ஒரு கிரிமினல் குற்றமாகும். அத்தகைய குற்றத்திற்கு மாண்புமிகு உறுப்பினரோ, பிறரோ உள்ளாகிவிட்டனரோ என்ற நிலை (மேசையைத் தட்டும் ஒலி) உருவாகிறது. இது முக்கியமான ஒன்று. எதற்காக அந்தக் கடிதத்தை அவருடைய மாவட்டத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்? மாநிலத் தலைவருக்கு நீங்கள் எதற்காக அனுப்ப வேண்டும்? அந்தக் கடிதம் காவல் துறைக்குச் சென்று அடைய வேண்டிய ஒன்று. ஒரு பிரேதத்தைக் கைப்பற்றுகிறபோது தடயங்களைக் காவல் துறை கைப்பற்றியாக வேண்டும். தடயங்களை நீங்கள் ஏன் மறைத்தீர்கள்? தடயத்தை ஏன் எடுத்துச் சென்று விட்டீர்கள்? தடயத்தை ஏன் தர மாட்டேன் என்று சொன்னீர்கள்? அப்படி ஒரு கேள்வி எழுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி ஒரு கேள்வி எழுகிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை. நான் பணிவோடு கேட்டுக்கொள்வது, விஷயத்தைப் புரிந்துகொள்ளாமல் . . .

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு . . .

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் (குறுக்கீடு) இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லிவிடட்டும்.

[2003 ஜனவரி 29

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லிவிடட்டும்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** ஒரேயொரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கடிதம் உறுப்பினருக்குக் கிடைத்தவுடன், தற்கொலை செய்து கொண்டவருடைய கடிதம் உங்கள் கைக்கு வந்து சேர்ந்தவுடன்,--மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி நீங்கள். உங்களுக்குத் தற்கொலை செய்து கொண்டவரிடமிருந்து அந்தத் தடயம் கடிதம் கிடைக்கிறது. — உடனே காவல் துறையிடம்தான் நீங்கள் கொடுத்திருக்க வேண்டும், நடவடிக்கை எடுப்பதற்கு. ஏன் கொடுக்கவில்லை? *(மேசையைத் தட்டும் ஒலி).*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

Attempt to commit suicide is an offence. Suicide itself is not an offence, as you said.

**HON. THIRU S. SEMMALAI:** No, No.

**THIRU S.R. BALASUBRAMONIYAN:** He said, suicide is a criminal offence. Any attempt to commit suicide is an offence. எந்த மரணம் சம்பவித்தாலும் ஒரு விசாரணை நடத்தப்படும், நான் இல்லையென்று சொல்லவில்லை. Inquest நடக்கும். அதுதான் சரியான முறை. இல்லையென்று நான் சொல்லவில்லை. Inquest நடக்க வேண்டும். அதுதான் சரி. இல்லையென்று சொல்லவில்லை. நீங்கள் விசாரணை நடத்துகிறீர்கள். உங்கள் கையில் அந்தக் கடிதம் கிடைக்கவில்லை என்று சொன்னால், கடிதத்தினைத் தேடிப் போவதில் தவறில்லை. இரவு 10-45-க்கு அவர் 12-00 மணி என்கிறார். நீங்கள் 10-45 என்கிறீர்கள். இரண்டையும் விட்டுவிடலாம். இரண்டுக்கும் நடுவில் ஒரு நேரத்தை வைத்துக்கொள்ளலாம். 10-45-க்கும் 12-00 மணிக்கும் வீட்டிற்கு உள்ளே நுழைந்து மிரட்ட வேண்டிய அவசியம் கிடையாது. அதுதான் இப்போது முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள்.



2003 ஜனவரி 29]

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சிவபுண்ணியம் அவர்கள், அந்தக் கடிதம் என்னிடம் இல்லை; மாவட்ட செயலாளரிடம் கொடுத்து விட்டேன் என்று சொன்ன பிறகு, காவல் துறையினர், மாவட்டச் செயலாளரை அணுகிக் கேட்டபோது, மாவட்டச் செயலாளர், அந்தக் கடிதம் சிவபுண்ணியம் எனக்குக் கொடுத்தது; எனவே நான் உங்களிடம் கொடுக்க மாட்டேன்; சிவபுண்ணியத்திடம் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்; நீங்கள் அவரிடம் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்ன பிறகுதான் காவல் துறையினர் இவரிடம் வந்து கேட்டார்களே தவிர...*(குறுக்கீடு)* கற்பனை அல்ல. கற்பனை அல்ல. இது கற்பனையே கிடையாது. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இது கற்பனை.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** நீங்கள் சொல்வது மட்டும் உண்மையா? *(குறுக்கீடு)* இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** நீங்கள் சொல்வது மட்டும் உண்மையா? காவல் துறையினர், மாவட்டச் செயலாளரைக் கேட்டபோது, நான் உங்களிடம் தர மாட்டேன்; இந்தக் கடிதம் சிவபுண்ணியம் எனக்குக் கொடுத்தது; நான் அவரிடம் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்; அவரிடம் நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னதால், காவல் துறையினர் மீண்டும் சிவபுண்ணியம் அவர்களிடம் கேட்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டார்களே தவிர, வேறு காரணமே அல்ல.

பிற்பகல் 5-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் ஒட்டுமொத்தமாக நான் சொல்லிவிடுகிறேன். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். *(குறுக்கீடு)* இல்லை, இல்லை. நான் சொல்லி விடுகிறேன். இது தொடர்பாகத் துறை விசாரணை நடைபெறுகிறது. அந்த விசாரணை அறிக்கை வரட்டும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து விட்டார்கள். மேற்கொண்டு அதிலேயே பிரச்சினையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. அந்த விசாரணை அறிக்கை வந்ததற்குப் பிறகு மற்றவற்றைப் பேசிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் திசை திருப்ப வேண்டும் என்பதற்காகவே, எப்படித் தவறான தகவல்களை இந்த அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு நான் இப்பொழுது ஒரு விளக்கம் தர`விரும்புகிறேன். சற்று முன்பு அவர் பேசுகிறபொழுது, பிரகாஷ் என்ற ஒரு சிறுவன் பட்டினியால் செத்தான் என்று, உறுதிபட அவர் இங்கே தெரிவித்தார். பிரகாஷுக்கு 7 வயது. இந்த பிரகாஷ், மன்னார்குடியில் அரசு மருத்துவமனையில் 28-8-2002 அன்று வயிற்று வலி என்று சொல்லி அனுமதிக்கப்பட்டான். அப்பொழுது டாக்டர் அசோகன் என்ற மெடிக்கல் ஆபீசர் அனுமதித்தார். டாக்டர்களுக்கோ, அந்த மருத்துவமனையில் இருக்கின்ற அதிகாரிகளுக்கோ, யாருக்கும் தெரிவிக்காமல், இந்த பிரகாஷுடைய தந்தை சந்திரசேகரன் 29-8-2002 அன்று, அதாவது, அடுத்த நாள் காலையில் யாருக்கும் தெரியாமல் அந்தப் பையனை தனது இல்லத்திற்கே அழைத்துச் சென்றுவிட்டார். அன்று மாலையே பிரகாஷ் என்ற அந்தச் சிறுவன் இறந்து விட்டான். யாருக்கும் தெரிவிக்காமல் உடல் அடக்கத்தை அன்றைக்கே முடித்துவிட்டார்கள். 31-8-2002, அதாவது 2 நாட்கள் கழித்து, சந்திரசேகரனுடைய மற்ற 2 குழந்தைகள் ஜீவா, ஜீவிதா என்பவர்கள் வயிற்றுக் கோளாறுக்காக அதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று, அவர்கள் நல்ல நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, நான் கேட்கிறேன். ஒரே குடும்பத்தில் இருக்கின்ற 3 பிள்ளைகளுக்கு வயிற்றுக் கோளாறு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது ஒரு பிள்ளை இறந்துவிட்டால், அந்த ஒரு பிள்ளை மட்டும் பட்டினியால் செத்துவிட்டானா? இது நடைபெறக்கூடிய ஒரு விஷயமா? ஒரே குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகளும், ஒரு ஆண் குழந்தையும் இருக்கின்றபோது, மற்ற இரண்டு குழந்தைகள் நன்றாக இருக்கிறார்கள். ஒரு பையன் மட்டும் பட்டினியால் செத்தான் என்று சொன்னால் எப்படி நம்ப முடியும்? இதை நான் ஏற்கெனவே மறுத்து இருக்கிறேன். இப்பொழுதும் மறுக்கிறேன். பிரகாஷ் என்ற சிறுவன் உடல் நலக்குறைவினால்தான் இறந்தானேதவிர, நிச்சயமாக அது பட்டினிச் சாவு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப நான் பேசிக்கொண்டே இருக்கவேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டுவிட்டேன். குறிப்பாக, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு செய்தியைச் சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. சிவபுண்ணியம், எல்லாவற்றுக்கும் சேர்த்துத்தான் சொல்லியிருக்கிறார்கள். துறை விசாரணை முடியட்டும். அதனால் இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு, அடுத்த பிரச்சினைக்கு வாருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதாவது, கடிதம் என்னிடத்தில்தான் இருக்கிறது என்று மாவட்டச் செயலாளர் சொன்னதாகவும், ஆகவேதான், காவல் துறை அதிகாரிகள் திரும்ப வந்ததாகவும் (குறுக்கீடு). நான் என்ன சொல்கிறேன் என்றால்... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** நீங்கள் சொல்வது உண்மை. நாங்கள் சொல்வது தவறா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சம்பந்தமான துறை விசாரணை நடைபெறுகிறது என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து விட்டார்கள். அந்த விசாரணை பற்றிய அறிக்கை வரட்டும். பிறகு பேசிக் கொள்ளலாம். அடுத்த பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடிதம் சம்பந்தமாகவும், அந்தப் பிரச்சினை சம்பந்தமாகவும், நிர்வாக ரீதியாக எடுக்கிற எல்லா நடவடிக்கைகளையும் ஏற்றுக் கொள்கிறோம்; சரியானது. பிரச்சினை ஒரே ஒரு விஷயம்தான். ஒரு சட்டமன்ற உறுப்பினருடைய வீட்டிற்கு—அது என்ன விஷயமாக வேண்டுமானாலும் இருக்கலாம்—அவரிடம் 11 மணிக்கு நள்ளிரவில் போய் காவல் துறை அதிகாரிகள் இதுமாதிரி நடந்துகொண்ட நடவடிக்கை என்பது, தமிழ்நாடு முழுவதிலும் இருக்கக்கூடிய மொத்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய கௌரவப் பிரச்சினை. பிரச்சினைக்குரிய விசாரணைக்குத் தடையே கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினையே அதைப் பொறுத்துத்தான். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு அதிலே அநீதி இழைக்கப்பட்டதா? அவர் தேவையில்லாமல் தொந்தரவுக்கு ஆளானாரா என்பதைப் பற்றிய விசாரணைதான் நடைபெறுகிறது. அதற்குப் பிறகு முடிவு செய்யலாம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அப்படியானால், கர்நாடக மாநிலத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டார். இது தொடர்பாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருணாகரன், அதற்கும், இதற்கும் சம்பந்தமில்லை.

[2003 ஜனவரி 29

*பிற்பகல் 5-10*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே வாசித்த அறிக்கையில் தெரிவித்ததைப்போல, சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகள் மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியத்தின் இல்லத்திற்குச் சென்று, கேட் அருகே நின்று, கதவைத் தட்டி, அவர் வெளியே வந்து என்ன வேண்டும் என்று கேட்ட பிறகு, 'அந்த ஒரிஜினல் கடிதத்தைத் தாருங்கள்' என்று சொல்லிவிட்டு, வாக்குவாதம் நடைபெற்றபிறகு, இவர் வாய்க்கு வந்தபடி அவர்களைத் திட்டிய பிறகு, அவர்கள் சென்று விட்டார்களேதவிர. அவர்கள் உள்ளே செல்லவும் இல்லை, அவருடைய இல்லத்தைச் சேதப்படுத்தவும் இல்லை, அவரைத் தொடவும் இல்லை, எந்த அத்துமீறலும் நடைபெறவில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவரின்கீழ்ப் பணியாற்றுகிற ஓர் உறுப்பினரைப் பாதுகாப்பதைவிட, காவல் துறையினரைப் பாதுகாப்பதிலே எவ்வளவு அக்கறையாகச் செயல்படுகிறார் என்பதைத்தவிர, வேறு ஒன்றும் இதிலே இல்லை. அடுத்து நான் சொல்ல விரும்புவது.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்கே உள்நோக்கம் கற்பிப்பது நியாயம் அல்ல; ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் எப்போதும் நடுநிலையோடு நடந்துகொள்பவள். காவல் துறையினரே தவறு செய்தால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க நான் தயங்கியதில்லை. ஒரு டி.ஜி.பி.-யையே நான் சஸ்பெண்ட் செய்திருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).* எத்தனையோ காவல் துறையினரைப் பணி நீக்கம் செய்திருக்கிறேன். என்னுடைய கட்சிக்காரர்களையே, தவறு செய்திருக்கிறார்கள் என்று தெரிந்தால், கைது செய்ய வைத்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரும், அந்த மாவட்டத்தினுடைய காவல் துறைக் கண்காணிப்பாளரும், அந்த அதிகாரி நடந்துகொண்ட முறை தவறான முறைதான் என்று சொல்லி அவர்களாகவே எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகும், அந்த அதிகாரி தவறு



2003 ஜனவரி 29] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

செய்யவில்லை, அந்த அதிகாரி சரியாகத்தான் நடந்துகொண்டார் என்று சொல்வதை நிச்சயமாக ஏற்றுக் கொள்வதற்கு இல்லை. உறுப்பினர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை தங்களுக்கு உண்டு. அதேபோல உறுப்பினர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் உண்டு. உறுப்பினர்கள் சார்பாகத்தான், உறுப்பினர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டிய மகத்தான கடமை அவருக்கு இருக்கிறது. அதை மறுக்கக்கூடாது. அதேபோல, விசாரணை நடைபெறுகிறது என்று சொல்கிறீர்கள். விசாரணை நடைபெறுகின்ற காரணத்தாலே சட்டசபையிலே பேசக்கூடாது என்று சொன்னால், சட்டசபையிலே இருக்கக்கூடிய உறுப்பினர்களுடைய உரிமைகள் என்ன ஆவது என்பதுதான் இங்கே எழுகின்ற கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசவேண்டிய அளவிற்குப் பேசியாகி விட்டது. அடுத்த பிரச்சினைக்கு வாருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையைப் பற்றி இங்கே பேசக்கூடாது என்று யாரும் சொல்லவில்லை. ஆனால், அவர்கள் மனம் போன போக்கில் கருத்துச் சொல்லும்போது, அதற்கு நாங்கள் பதில் சொல்லக்கூடாது என்று நீங்கள் மட்டும் சொல்லலாமா? ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன்; Departmental Enquiry நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் பின்னர், அறிக்கை கிடைத்த பிறகு, தேவையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும். என்னுடைய கடமை என்ன என்பதை நான் நன்றாக உணர்கிறேன். யாரைப் பாதுகாக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும். இந்த மாநிலத்திலுள்ள அனைவரையும் பாதுகாக்க வேண்டும். அதுதான் என்னுடைய கடமை. *(மேசையைத் தட்டும் ஒலி)* எனக்கு என்னுடைய கடமையைப் பற்றி யாரும் பாடம் சொல்லித் தரவேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, எங்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை இருக்கிறது என்பது எனக்குத் தெரியும் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாண்பினை நிச்சயமாக நீங்கள் பாதுகாத்து ஆகவேண்டும். காரணம், நள்ளிரவில்கூட, எம்.எல்.ஏ.-வினுடைய வீட்டிற்குச் சென்று, காவல் துறை அச்சுறுத்த முடியும் என்கின்ற நிலைமை தமிழ்நாட்டில் நிச்சயமாக ஒருபோதும் இருக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய கோரிக்கையாக இருக்கிறது.

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், 1/2 மணி நேரத்திற்கு மேலாகி விட்டது. இன்னும் ஏழெட்டுப் பேர் பேசவேண்டும். நீங்கள் வேறு பிரச்சினையைப் பற்றிப் பேசி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதன்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிற அடிப்படையிலே உரிய முயற்சி எடுத்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய அழுத்தமான கருத்து.

இதிலே குறிப்பாக, அந்தத் தஞ்சை மாவட்டம், டெல்டா பகுதியிலே இருக்கிற அந்தப் பிரச்சினைகள்மீது வந்திருக்கிற இந்த இழப்புகள் காரணமாக பல்வேறு குடும்பங்கள் அல்லலுக்கு ஆளாக்கப்பட்டு இருக்கின்றன. அவர்களைப் பாதுகாப்பதற்குரிய முயற்சி எடுக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம்.

இப்போது மத்திய குழு பார்வையிட வந்திருக்கிறது. அவர்கள் இப்போது ஆய்வு செய்ததற்குப் பின்னாலே, ஓர் அறிக்கையைத் தயாரிக்கவிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையைக் கொடுப்பதாக இங்கே சொல்லி இருக்கிறார்கள். இந்த மாவட்டத்தில், குறிப்பாக, காவிரி டெல்டா பகுதியிலே ஏற்பட்டு இருக்கிற இந்த இழப்புகள், இந்த பாதிப்புகள், அதன்மீது இப்படிப்பட்ட மரணங்கள்கூட சம்பவிப்பதற்கான சூழ்நிலைகள் ஏற்பட்டு விட்டன என்பதைக்கூட, நம்முடைய மாநிலத்தின் நலன் கருதி, மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தி, இதற்கு உரிய முறையிலே என்ன செய்யலாம் என்பதைக்கூடப் பரிசீலிப்பதற்கான வாய்ப்பாக இதைச் செய்யவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, மத்திய அரசாங்கத்திடம் 400 கோடி ரூபாய் கேட்டிருப்பதாக, இந்த அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இழப்பு என்பது, கிட்டத்தட்ட 5000 கோடி ரூபாய்....(குறுக்கீடு).

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, வெறும் 400 கோடி ரூபாய் கேட்கப்படவில்லை. வெவ்வேறு இனங்களின்கீழ், வெவ்வேறு தலைப்புகளின்கீழ், பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறோம். இந்த விவரங்களையெல்லாம் 31ஆம் தேதி என்னுடைய பதிலுரையிலே தெரிவிக்க உள்ளேன். ஏற்கெனவே கேட்டதுபோக, நாளை மறுநாள் இந்த வறட்சி நிவாரணக் குழுவினரிடம் புதிய கோரிக்கைகளை வைக்க உள்ளேன். அந்த கோரிக்கைகளின் விவாங்களையும் நான் இந்த அவையில் தெரிவிப்பேன்.



2003 ஜனவரி 29]

பிற்பகல் 5-15

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மதிய உணவுத் திட்டத்தைப் பற்றி இங்கே நிரம்பக் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். நான் திட்டமே வேண்டாம் என்று வாதிட வரவில்லை. குறிப்பாக, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலே மிகப் பெரிய சிக்கலும், பிரச்சினையும் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கணக்கைச் சொன்னார்கள். 9 இலட்சம் பேர் வரையிலும் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்; மேலும், 12 இலட்சம் பேர் வரையிலும் வந்துவிடும் என்று நேற்றையதினம் சொன்னார்கள். 31 ஆம் தேதிக்குள்ளாக 12 இலட்சத்தைத் தாண்டிவிடும் என்றுகூடச் சொன்னார்கள். இப்பொழுது பதிவு செய்யப்படுகிற எண்ணிக்கைக்கு ஏற்ப...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுவரை இந்தத் திட்டத்தின்கீழ் 11,33,688 பேர் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் 9,12,409 பேர், அதாவது 80 சதவிகிதம் பேர் பயன்பெற்று வருகிறார்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்ளே, தமிழகம் முழுவதிலும் கிட்டத்தட்ட 12 இலட்சம் பேர் பயன்பெறுகிறார்கள். சென்ற முறை காவிரி டெல்டா பாசனப் பகுதி விவசாயிகளுக்கு என்று, தீபாவளி சமயத்திலே நமது மாநில அரசாங்கத்தின் சார்பில் நிவாரணம் வழங்கப்பட்டது. பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. அரிசி போன்ற மற்ற பொருட்களெல்லாம் வழங்கப்பட்டன. அதிலும், கிட்டத்தட்ட 10 இலட்சம் பேருக்கு வழங்கியிருக்கிறீர்கள். ஆக, ஒரு குறிப்பிட்ட ஐந்தாறு மாவட்டங்களுக்குள்ளாக இருக்கிற எண்ணிக்கையில் 10 இலட்சம் பேருக்கு வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில், தமிழ்நாடு முழுவதிலும் மொத்தமாக 12 இலட்சம் பேருக்கு மட்டுமே உணவு வழங்குவது என்பது, ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் என்ற கணக்கின் அடிப்படையிலே பார்த்தால், ஒத்துவராத கணக்காக இருக்கிறது. பதிவு செயப்பட்டவர்கள் (குறுக்கீடு) நான் ஒரேயொரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். நான் குற்றம் சாட்டவில்லை. தயவுசெய்து... (குறுக்கீடு) இல்லை, இல்லை, ஒரேயொரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, சிவபுண்ணியம் இரண்டு மணித் துளிகளுக்குள் பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிய உணவுத் திட்டம் என்பது, முடியாதவர்களுக்கானது: ஆக, வறட்சியால் பாதிக்கப்பட்டவர்கள், முடியாதவர்கள், வேலைவாய்ப்பு இல்லாமல், அவர்களாகவே விரும்பி வந்து சாப்பிடுவதற்கு அறிவிக்கப்பட்டிருக்கிற ஒரு மனிதாபிமானத் திட்டம். அந்த மனிதாபிமானத் திட்டத்தில் நீங்கள் உள் நோக்கம் காண்பது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** உள்நோக்கம் கற்பிக்க....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதிய உணவுத் திட்டத்தோடு கூடவே, food for work programme— வேலைக்கு உணவுத் திட்டமும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, உடலில் வலு இருப்பவர்கள் இந்த வேலைக்குச் செல்கிறார்கள். அதற்கான ரொக்கத்தையும், அரிசியையும், அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள். வேலை செய்ய முடியாதவர்கள்தான் இந்த மையங்களில் வந்து பதிவு செய்து கொண்டு, உணவைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணிக்கை குறைவா, கூடுதலா என்பதை விட, இந்த எண்ணிக்கை பதிவு செய்வதற்குரிய காரணமே, பின்னால் நடைபெற இருக்கிற நிவாரணப் பணிகளிலே பெயர்கள் விடுபட்டுப் போய்விடும்; நிவாரணம் கிடைக்காது என்ற காரணத்தின் கட்டாயத்தினால்கூட இந்த எண்ணிக்கை பதிவு செய்யப்படுகிறது என்பதுதான் கிராமப்புறங்களிலே இருக்கிற யதார்த்தமான நிலையாக இருக்கிறது. குறிப்பாக, சத்துணவு மையங்களிலே சமையல் பணிகளிலே ஈடுபடுகிறபோது, குறைந்தபட்சம் 20 பிள்ளைகள் அல்லது 25 பிள்ளைகளுக்கு மட்டும்தான் அவர்களாலே உணவு சமைக்க முடிகிறது. ஆனால், அதே மையங்களிலே 100 பேர், 150 பேர், 200 பேர் என்ற அளவில் சமையல் செய்வதற்கான முயற்சி எடுக்கிறபோது, அதற்குத் தேவையான பாத்திரங்களோ, அல்லது வேறுவிதமான பொருட்களோ கிடைப்பதிலே மிகப் பெரிய சிக்கல் இருக்கிறது. 100 பேருக்கு 35 ரூபாய் என்ற அளவிலே நாம் வழங்குகிறோம். அதிலே காய்கறி வாங்க வேண்டும், அதிலே எண்ணெய் வாங்கிக் கொள்ள வேண்டும், அதிலே விறகு வாங்க வேண்டுமென்று பிரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.





100 பேருக்கு 35 ரூபாயிலே காய்கறி, எண்ணெய், விறகு இவற்றையெல்லாமே உள்ளடக்கி, சமையல் செய்து, அவர்கள் சாப்பிடுவதற்கான வாய்ப்பை இதில் ஏற்படுத்த முடியுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே, அதுகூடப் போதுமானதாக இல்லாத காரணத்தினாலே பெயரளவுக்குச் செய்யப்படுகிறது. அதை வாங்குவதும் பெயரளவிற்கு நடைபெறுகிறது. பட்டியலிலே இடம் பெற வேண்டும் என்ற காரணத்தினாலேயே, அதைச் சாப்பிடுவதிலும் கூட பல்வேறு பிரச்சினைகளும், சிக்கல்களும் இருக்கின்றன என்பதுதான் யதார்த்தமான உண்மை. ஆகவேதான், இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நாங்கள் அன்போடு கேட்டுக்கொள்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, இந்தத் திட்டத்தை நாங்கள் அறிவித்திருக்கிறோம்; இதில் ஏதாவது நல்ல கருத்துகள், அல்லது மாற்றுத் திட்டங்களைப் பற்றிச் சொன்னால், இந்த அரசு ஏற்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் காரணத்தினாலேதான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆகவே, இந்தத் திட்டத்தைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்பது என்னுடைய பணிவான கருத்து. ஆகவே, இது நடைமுறை சாத்தியம் இல்லாத ஒரு செயல்பாடாக இருக்கிறது. அது சிரமத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. மாற்றுத் திட்டமாக, அந்த ஏழைகளுக்கு அரிசியை வழங்குவதற்கான முயற்சியை அரசு எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்ததாக, அப்புறம் பேசிக் கொள்ளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்துவிடுகிறேன். ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். பவானி ஆற்றுப் பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, மத்திய அரசின் சார்பிலே அதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதாக செய்தியைச் சொன்னார்கள். மகிழ்ச்சி. ஆனால், அந்தத் தடை என்பது நிரந்தரமாக ஆவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நம்முடைய தமிழ்நாடு அரசு சிந்தித்துத் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்குத் தேவையான அளவு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதை என்னுடைய பணிவான கருத்தாக நான் சொல்லிக் கொள்கிறேன்.

அதைப்போலவே, வீராணம் திட்டத்தைப் பற்றியும் நீண்ட அறிக்கையைக் கொடுத்திருக்கிறீர்கள். எது எப்படியிருந்தாலும், பல ஆண்டு காலமாக ஆய்வு ரீதியாகச் சொல்லப்பட்டிருக்கிற கருத்தின்

அடிப்படையில் அந்தப் பகுதியினுடைய ஆயக்கட்டுகள் எப்படியும் பாதிக்கப்பட்டுவிடும் என்ற மிகப் பெரிய அச்சமும், சந்தேகமும் இருக்கிறது. ஆகவே, மேட்டூர் அணையை நம்பியிருப்பது வீராணம்; அதன் மூலமாகத் தண்ணீர் பெற்றால் அந்தப் பகுதியும் வறண்டு போய் விடும். விவசாயிகள் மேலும் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்ச நிலை இருக்கின்ற காரணத்தினாலே, நம்முடைய அரசு அதைப் பரிசீலிக்க வேண்டும் என்பதை மட்டும் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது எங்களுடைய பகுதிகளிலே, ஒரு பகுதியில் கொஞ்சம் அறுவடை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மீதம் இருக்கிற பகுதியில் அதனைக் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் கொள்முதல் நிலையங்களை விரைவாகத் திறந்து, அதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த வறட்சியைப் பற்றி ஒரு வெள்ளை அறிக்கையை நம்முடைய அரசு வைக்க....

பிற்பகல் *5-20*

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், விவசாயப் பெருங்குடி மக்களுக்காக, அப்படிப்பட்ட கொள்முதல் நிலையங்களை உடனடியாகத் திறக்க வேண்டுமென்று இரண்டு தினங்களுக்கு முன்னாலேயே ஆணை பிறப்பித்து விட்டார்கள். அது, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டு விட்டது என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அரசுக்கும் நன்றி. விரைவாகத் திறக்க வேண்டுமென்றுதான் சொன்னேன். திறப்பதற்குரிய முயற்சி இருக்கிறது என்பதை...

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** முயற்சியே கிடையாது. ஆணையே இடப்பட்டுவிட்டது. நாளை முதலேகூட, வாங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறையே சொல்லிப் பழக்கப்பட்டவர்களுக்கு, பாராட்ட வாய் வர மாட்டேன் என்கிறது.





**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் மனம் திறந்து நன்றியைத்தான் தெரிவித்தேன். பாராட்ட வேண்டிய விஷயங்களிலே, கண்டிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டும். மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நாங்கள் நடக்க மாட்டோம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர், நீங்கள் தெரிந்து வைத்திருப்பீர்கள். ஆகவே, நல்லதை நாங்கள் ஆதரிப்போம். விமர்சனம் செய்ய வேண்டிய விஷயங்களை மட்டும்தான் நாங்கள் விமர்சிப்போம் என்று சொல்லி, நன்றி கூறி முடிக்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ஏ. ஹக்கீம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு அனுமதியளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றைக்கே பேசுவதாக என்னுடைய பெயர் குறிக்கப்பட்டது. அது தொடர்ந்து, இன்றைக்குக் காலையாகி, காலையிலிருந்தே பெயர் தள்ளப்பட்டு, மாலையாகிவிட்டது. நல்லவேளை கலகக்காரர்கள் மாலையிலே வராத காரணத்தினால் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அது என்னவென்றே தெரியவில்லை. வந்ததிலிருந்தே நானும் பார்த்துக் கொண்டேயிருக்கிறேன். வருகிறபோதே விவகாரம் பண்ண வேண்டுமென்ற நோக்கத்தோடு, வக்கிரத்தோடேயே வருகிறார்கள். நுழைந்த உடனேயே பொறுக்க முடியாமல் அனலில்பட்ட புழுவாகத் துடிக்கிறார்கள். அதிலேயும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவைப் பார்த்தால், அவர்களுக்கு எப்படித்தான் இருக்குமோ தெரியவில்லை. வெந்தபுண்ணிலே தேள்கொட்டிய மாதிரி வலிக்கும் போல் இருக்கிறது. பதறுகிறார்கள்; குழம்புகிறார்கள்; புலம்புகிறார்கள். பேச ஆரம்பித்த உடனேயே, 'சாவிலும் தமிழ் மணந்து சாகவேண்டும்' அப்படித்தான் தி.மு.க. பேச்சையே ஆரம்பிக்கிறது. சட்டசபையிலே பேசுகிற தொடக்கமே, சாவா; எடுத்த எடுப்பிலேயே? 'வாழ்ந்தால் தமிழோடு வாழ்வோம். வீழ்ந்தால் தமிழோடு வீழ்வோம்' அப்படி என்று சொல்லேன். எடுத்த எடுப்பிலேயே 'சாவிலும்' அதுதான் முடிந்து போய் விட்டதே. இனி எங்கே பிழைத்து நீங்கள் வெளியே வர? இனிமேல் எங்கே நீங்கள் இங்கு வந்து பார்க்க? திரும்பத் திரும்ப அதைச் சொல்கிறபோது, உங்கள் தலைவர் பயப்படுகிறார். அதற்காகத்தான் இதை எல்லாம் இங்கே சொல்லவேண்டிய அவசியம் இருக்கிறது.

தமிழைப் பாதுகாக்கிறார்களாம். சன் டிவி. கேடிவி—இதுவெல்லாம் யாருக்கு சொந்தமான டிவி.? தமிழர்களைப் பாதுகாக்கிற தமிழ் இனமானம் பேசுகின்ற தோழர்கள், அவர்கள் தலைவர்களைப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வி. சன் டிவி.—ஏன் அதைச் சூரியன் டிவி. என்று வையேன். பயம் இல்லாமல் மறைக்காமல் சொல்கிறேன். அம்மா அவர்கள் தவறாக நினைக்கக்கூடாது. ஜெயா டிவி.—'ஜெயம்' ஒரு தமிழ்ப்பெயர். நாங்கள் வைத்து நடத்துகிறோம் என்று சொல்லி, அவர்கள் காட்டிக் கொண்டிருக்கின்றபோது, மாமாவும், மருமகனும், கே.டிவி, சன் டிவி. என்றெல்லாம் வைத்து நடத்தி தமிழ், தமிழ்ப்பாசம், தமிழ் இனமான உணர்வு; ஆகையினாலே, தமிழிலே கவர்னர் உரையாற்ற வேண்டும்; ஆசைப்பட்டுக் கேட்கிறார்கள். அல்லது கவர்னர் உரை தமிழிலே படிக்கப்பட வேண்டும்; ரொம்ப சந்தோஷம்.

*பிற்பகல் 5-25*

கவர்னர் உரையே வேண்டாம் என்று போனதற்குப்பிறகு, இந்தக் கதை எதற்கு? (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தமிழிலே படித்தால் என்ன? தெலுங்கிலே படித்தால் என்ன? மலையாளத்திலே படித்தால் என்ன? நான் கல்யாணமே பண்ணமாட்டேன் என்று சொன்னதற்குப்பிறகு, குழந்தை எப்படிப் பெறவேண்டும்; அதை எப்படி வளர்க்க வேண்டும்; தொட்டில் எப்படிப் போட வேண்டும் என்று, உனக்கு எதற்கு இந்த வேலை? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையால் அவர்களை நாங்கள் பணிவோடு கேட்டோம்.

அதிலே பாருங்கள், கலகம் பண்ணிக்கொண்டே இருக்கிறார்கள்; சத்தம் போட்டுக்கொண்டே இருக்கிறார்கள்; பேசவே விடமாட்டேன் என்கிறார்கள். பின்னாலே புதிதாக வந்த எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு வழியே இல்லாமல் பண்ணுகிறார்கள். எனது முன்னாள்-நான் சார்ந்திருந்த 36 ஆண்டுகள் கஷ்டப்பட்டு வளர்த்த கட்சி, அந்தக்—காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் பெருமக்கள், உட்கார்ந்து கொண்டு, 'போனவர்களைத் திரும்பக் கூப்பிடுங்கள்' என்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது என்ன பாசம்? இது என்ன பாசம் என்று கேட்கிறேன். போன கலகக்காரர்களை, அக்கிரமக்காரர்களை, வக்கிரம் பிடித்தவர்களைத் திரும்ப அழையுங்கள் என்று எதற்காகக் கூப்பிடுகிறார்கள்? எதற்காகக் கூப்பிடுகிறார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாம் சாத்தான்குளம் effect எல்லாம்





ஓட்டு; ஓட்டு- ஓட்டு அங்கே போய் விடக் கூடாது. (சிரிப்பு) அதற்காகத்தான், இப்போது சாத்தான்குளத்தை மனதிலே வைத்துக்கொண்டு, வாருங்கள், வாருங்கள் என்று அவர்கள் இதைச் சொல்கிறார்கள் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்-குழப்பம்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடியட்டும், திரு. ஞானசேகரன், அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், அவர் பேசி முடிக்கட்டும்; உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) பேசி முடிக்கட்டும், உங்களைக் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) அவர் பேசி முடித்தவுடன் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) அவர் பேசி முடித்தவுடன் உங்களை அழைக்கிறேன்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமாகக் கலகம் பண்ண வருகிறவர்களுடைய குறையைப் போக்குவதற்காக, அவர்கள் இல்லாத காரணத்தினால், இவர்கள் இப்போது; அது வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், நான் 36 வருடங்கள்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடிக்கட்டும் அவர். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள், உட்காருங்கள். அவர் பேசி முடித்தவுடனே உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள், (குறுக்கீடு) அவர் பேசி முடித்தவுடனே நீங்கள் சொல்லுங்கள். நடவடிக்கை எடுப்போம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு அடுத்தபடியாக, ஆளுநர் உரையின் மீது தெரிவிக்கப்பட்ட சில கருத்துகளில், நான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு என்னுடைய மனம் கனிந்த நன்றியைத் தெரிவிக்க வேண்டும். மீண்டும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினுடைய அற்புதமான கருத்தினை நீங்கள் தந்திருக்கிறீர்கள். அதை விரைவாக, வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், காவிரிப்பிரச்சினையில் கஷ்டம், கஷ்டம் என்று வருகிறபோதும், வறட்சி என்று சொல்லப்படுகிறபோதும், நீங்கள் இந்த முயற்சிகளை

மேற்கொள்வதற்காக, ஒரு பெரிய போர்க்களத்தைச் சந்தித்து வருகிறீர்கள் என்பதையெல்லாம் நாங்கள் பார்த்துப் பாராட்ட வேண்டும்; வாழ்த்துக் கூறவேண்டும் என்ற அடிப்படையில் மாத்திரமல்ல; தமிழகத்து மக்கள் ஏக்கத்தோடு, இவையெல்லாம் நிறைவேற்றப்படும் என்று நம்பிக்கையோடு உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு காலத்திலே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 'நாடோடி மன்னன்' திரைப்படத்திலே பாடிக்கொண்டு வருவார், பானுமதி அவர்களோடு.

"சும்மாக் கெடந்த நெலத்தக் கொத்தி,<br>
சோம்பல் இல்லாம ஏர் நடத்தி<br>
கம்மாக் கரையில் உழுது வச்சி<br>
கரும்புக் கொல்லையில் வாய்க்காலிட்டு<br>
சம்பாப் பயிரை பறிச்சு நட்டு<br>
தகுந்த முறையில் தண்ணீர்விட்டு,<br>
நெல்லு வெளஞ்சிருக்கு, வரப்பும் உள்ள மறஞ்சிருக்கு, அட<br>
காடு வெளஞ்சென்ன மச்சான்<br>
நமக்குக் கையும் காலுந்தானே மிச்சம்"

என்று விளைந்த காலத்திலேயே, கூலித் தொழிலாளிக்குக் கையும் காலுந்தானே மிச்சம். அம்மா அதற்குப் பின்னாலே வந்ததனாலே கொஞ்சம் பேர் வருத்தப்பட்டுப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதனாலே சொல்கிறேன். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் அந்தக் காலத்தில் பாடிய அந்தப் பாட்டை, புரட்சித் தலைவர் அப்போது பாடுகிறபோது--44 ஆண்டுகளுக்கு முன்னாலே நான் கூறுகிறேன்--

"மண்ணைப் பொளந்து சொரங்கம் வச்சி,<br>
பொன்னை எடுக்கக் கனிகள் வெட்டி<br>
மதிலும் வச்சி மாளிகை கட்டி<br>
கடலில் மூழ்கி முத்தை எடுக்கும்<br>
தொழிலாளர் வாழ்க்கையில் அவர்<br>
பட்ட துயர் மாறும் ரொம்பக்<br>
கிட்ட நெருங்குது நேரம்"





என்பது புரட்சித் தலைவர் பாடிய அந்தப் பாட்டின் நினைவுகள்; அவர் ஆட்சியிலே இருந்தார்; எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றினார்; அற்புதமான பணிகளைச் செய்தார். விட்டுப் போனவை, கெட்டுப்போனவை என்று கொஞ்சம் இருந்திருந்தாலும், இன்றைக்கு அவற்றைப் புனிதமாக நிறைவேற்றுகிற இடத்தில் புரட்சித் தலைவி செய்து முடிப்பார் என்ற அழுத்தமான நம்பிக்கையும், ஆசையும், பாசமும் (மேசையைத் தட்டும் ஒலி) நிறைய மக்களுக்கு இருக்கிறது. அதன் அடிப்படையிலேதான் இன்றைக்குக் கேட்கிறோம்.

ஆனால் நான் படித்த காலத்திலிருந்து சில விஷயங்களை நான் மனதிலே வைத்திருக்கிறேன்.

"காவிரி பாயும் கன்னித் தமிழ்நாடு<br>
கலைகளுக் கெல்லாம் தாய்வீடு";<br>
"காவிரி தென்பெண்ணை பாலாறு—புகழ்<br>
கண்டதோர் வைகை பொருணை நதி என<br>
மேவிய ஆறு பல ஓடத் திரு<br>
மேனி செழித்த தமிழ்நாடு"

எனக் கவிஞர் பாட்டு எழுதினார்.

*பிற்பகல் 5-30*

சரித்திரம் பாடும் காவேரி இளம் தளிர்க்கொடி போலே ஓடுகிறாள்; சங்கம் வளர்த்த மதுரையிலே, எங்கள் தமிழ்க்கொடி தமிழிசை பாடுகிறாள்;

[திரு. எம்.ஏ. ஹக்கீம்] [2003 ஜனவரி 29

விழிகளைப் போலே, குமரியின் மேலே மீன்மகள் துள்ளி ஆடுகிறாள்;
விளைகின்ற செல்வம் திசை எங்கும் எல்லோரும் தாய் நாடே,
தாய் நாடே, எங்கள் தமிழகப் பொன் நாடே.

இது எங்கே போச்சு? என்ன ஆச்சு? காவிரி என்ன ஆச்சு என்பதைப் பற்றி எல்லாம் இங்கே பேசுகிறபோது, எல்லோரும் விவாதித்துக்கொண்டு இருந்தபோது, நான் உட்கார்ந்து அமைதியாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே இருந்தேன்.

காவிரியைக் கொண்டு போய்ச் சிக்கலில் மாட்டிவிட்டவர் சபைக்கே வாராமல், இருக்கிற ஆட்களைப் பூராவும் அனுப்பி அவர்களைச் சிக்க வைத்து விட்டு, பிரச்சினையையே திசைமாற்றி விட்டு, பத்திரிகைகளுக்குச் செய்தியைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறார். அதைப் பத்திரிகைக்கார நண்பர்களும் சேர்த்து '7 கட்சி வெளிநடப்பு; 7 கட்சி வெளிநடப்பு' என்று எழுதுகிறார்கள். 7 கட்சியை, நான் நேற்றிலிருந்து எண்ணிக்கொண்டே இருக்கிறேன்.— எந்தெந்தக் கட்சி என்று, திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் 5 தானே வருகிறது? ஏழு, ஏழு என்கிறார்களே (குறுக்கீடு) நாங்கள் வெளிநடப்பு எல்லாம் பண்ண மாட்டோம்; நாங்கள் அம்மாவுக்குப் பக்கத்தில் இருக்கிற ஆட்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் பண்ணவே மாட்டோம். எங்களை உள்ளே போகச் சொல்லி, சட்டசபைக்கு எங்களை எல்லாம் மக்கள் அனுப்பி இருக்கிறார்கள். எந்த நேரமும் வெளியே போகச் சொல்வதற்காகவா அனுப்பி இருக்கிறார்கள்? ஆகையினாலே, இன்றைக்குச் சொல்வேன். பத்திரிகைகாரர்களும் சேர்த்து ஏழு, ஏழு என்று எழுதிக்கொண்டே இருக்கிறார்கள். பெரிது, பெரிதாகப் போடுகிறார்கள் அதை. நான் பத்திரிகைகளை வாங்கிப் பார்த்து, ஏழு எது. ஏழு எது என்று கவனித்தேன். தி.மு.க.வில் நின்று ஜெயித்த ஒரு கட்சி அது அங்கீகரிக்கப்பட்ட கட்சியல்ல, சட்டசபையில், அதேமாதிரியாக இன்னொரு அமைப்பு; அதுவும் அங்கீகாரம் பெற்றதல்ல; கட்சியல்ல; ஆனால் போடுகிறார்கள். நாங்கள் இன்றைக்கு தமிழ் மாநில காமராஜ் காங்கிரஸ்; இதேமாதிரி அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் சார்பில் (குறுக்கீடுகள்) இதுதானே அங்கீகரிக்கப்பட்ட கட்சி? (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order . . . மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order . . .



2003 ஜனவரி 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் ஒன்றும் தவறாகப் பேசவில்லை; தவறாகப் பேசவில்லை; உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** Please hear my point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், என்ன, சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹக்கீம் அவர்கள், அங்கீகரிக்கப்பட்ட கட்சி என்று சொல்கிறார். இப்போது எலக்ஷன் கமிஷனிலிருந்து வந்திருக்கக் கூடிய கடிதத்தில்கூட, அது ஒரு registered party என்றுதான் வந்திருக்கிறதேயொழிய, அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக அதை ஏற்றுக்கொள்ள முடியாது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** சும்மா இருங்க சார்; உங்களைவிட மேல் அதிகாரிகள் நிறையப் பேர் எங்களுக்கும் உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹக்கீம், பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** It is not a recognized party. As per the Election Commission, it is only a registered Party.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், ஹக்கீம் பல ஆண்டுகாலம் பேசிப் பேசி உங்கள் கட்சியை வளர்த்தவர்; அது அவருடைய பாணி. அவருக்கென்று தனி பாணி உண்டு; அந்த பாணியை அவர் உங்களோடு இருந்தபோது நீங்கள் கேட்டு ரசித்தீர்கள்; இப்போது ஏன் ரசிக்க மறுக்கிறீர்கள்?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அதை எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொண்டதே இல்லை.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** நான் சுற்றாத சுற்றா? நான் போகாத ஊரா? சுகவாசியாக இருந்து விட்டுப் பல பேர் நான் பார்க்காத கூட்டங்களா? சுகவாசியாக இருந்து விட்டுப் பல பேர் பதவியை அடைந்துவிட்டபோது, நான் தெருத் தெருவாகச் சென்று கட்சிக்காக உழைத்தவன்; பேசியவன்; நாடு முழுக்கச் சுற்றி வந்தவன்,

பொறுக்க முடியவில்லை என்று சொன்னால், கொஞ்சம் சகிப்புத் தன்மையைக் கற்றுக்கொண்டு, பேரவைத் தலைவர் சொன்ன மாதிரி, அமைதியாக, அடக்கமாக இருக்கப் பாருங்கள். என்னைக் கிளறிவிடாதீர்கள். ரொம்ப சிக்கலை அனுபவிக்க வேண்டிய அவசியம் வந்துவிடும். *(குறுக்கீடு)*

அதேமாதிரி, காவிரியைச் சிக்க வைத்தவர் வரவில்லை. ஆனால் பசி, தொழிலாளர், உரிமைகள், மக்கள் வாழ்வு, பட்டினி என்று பதறுகிறார்கள்; ரொம்பவும் துடிக்கிறார்கள். நான் நினைத்துப் பார்க்கிறேன். மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினையில் கூலி உயர்வு கேட்டு வந்தவர்களுடைய கதி என்ன ஆனது என்று யோசித்துப் பார்க்கிறேன். பசிக்கிறது என்று சொன்ன மாத்திரத்திலேயே, மதிய உணவுத் திட்டத்தை அறிவித்து 'இலட்சக் கணக்கான மக்களுக்குச் சோறு போடு' *(மேசையைத் தட்டும் ஒலி)* 'என்ன நட்டம் வந்தாலும், எவ்வளவு பணம் செலவானாலும் அந்த மக்களையும் பசி இல்லாமல், பட்டினி இல்லாமல் காப்பாற்று' என்று உத்தரவிட்ட புரட்சித் தலைவியை மாசுபடுத்த வேண்டுமென்று *(மேசையைத் தட்டும் ஒலி)* திட்டமிட்ட சதியில் இந்த வேலையைச் செய்கிறவர்களை நான் நினைவுபடுத்திக் கேட்கிறேன்; 'கூலி உயர்வு கேட்டான் அத்தான்; குண்டடிபட்டுச் செத்தான்; குங்குமத்தை அழித்து விட்டார்கள்; கோட்டையிலே அமரவிடலாமா? என்று கேட்டு, கதை-வசனம் எழுதியவர் ஆட்சியில் கூலி உயர்வு கேட்டு வந்தான் மாஞ்சோலை தோட்டத் தொழிலாளி. குண்டாந்தடியால் அடித்தான். சுட்டான், செத்தான் அவன் மாத்திரமா செத்தான்? சாக்காட்டின் அடிவாரத்திலே அவளைச் சந்தித்தேன். பூக்காட்டில் புறங்காணும் பூங்குழலாள் போய்விட்டாள். ஐயகோ, செத்தாள். அவளும் செத்தாள். அவளும் செத்தாள். அவனும் செத்தான். சாகடித்தவர் சட்டசபைக்கே வருவது இல்லை. வருகிறவர்கள் சட்ட சபையை நடக்க விடாமல் கலாட்டா, *(குறுக்கீடு)*

பிற்பகல் *5-35*

தாமிரபரணி பற்றிச் சொல்கிறேன். வரிசையாக வருகிறேன். எங்கள் தலைவர், துணைத் தலைவர் அதற்கு முதலிலே நான் எண்ணிக்கையை விட்டுவிடுவேனோ என்று பயப்படுகிறார். ஆக, 17 பேரைப் பிணமாக்கி விட்டதற்குப் பிறகுதான், பிணமாவதற்கு முன்னர், அவர்கள் கஷ்டப்பட்டு, அடிபட்டு, உதைபட்டு வந்த அந்தத் தொழிலாளர்கள் கை நீட்டிக் கேட்டார்கள். எதைக் கொடுத்தார்? முன்னாள்



முதலமைச்சர் எதைக் கொடுத்தார்? அடி, உதை, வலிக்கிறது என்று சொன்னார்கள். வலிக்கிறதா, வலி தெரியாமல் ஆக்க வேண்டுமென்றால் கொன்றுவிடுங்கள்; கொல்லச் சொன்னார் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள்; கொன்றார்கள். இவர்கள் பெரிய நியாயத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். அந்த மாஞ்சோலைத் தொழிலாளர்களுக்கு நியாயம் கேட்டு ஊர்வலத்தில் போனவர், இப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முக்கியத் தலைவராக இருப்பவர், இங்கே அமர வேண்டியவர், இன்றைக்கு வரவில்லை. அவரையும் சேர்த்து அடித்தார்கள். அந்தப் பாவத்தை மறக்காமல்தான் இப்போது அந்த தி.மு.க.-வோடு ஒட்டிப் போகிறீர்கள். அடிவிழும், பார்த்துக் கொள்ளுங்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவேதான் கவனமாகச் செல்ல வேண்டுமென்ற அடிப்படையிலே இதையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

அதே நேரத்தில் நான் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களையும் பணிவோடு விரும்பிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நீர்வள ஆதாரம், மழை நீர்ப் பாதுகாப்பு, இவ்வளவையும், நீங்கள் பத்திரமாகச் சேமித்து மக்களுக்குப் பாதுகாத்துத் தர வேண்டுமென்று நினைக்கிறபோது, நிறைய ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் ஆக்கிரமிக்கப்பட்டு, கட்டடங்கள் கட்டப்படுகின்றன. அதைத் தடுக்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். தாயே! பல நேரங்களில் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சாலைகள் அமைக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மின்சார வசதியையும் சேர்த்துச் செய்து கொடுக்கிறார்கள். இதையெல்லாம் தடுக்க வேண்டும்.

மதுரையிலிருந்து என்னுடைய சொந்த ஊரான திருமங்கலத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், போகிற பாதையில் இரு பக்கங்களிலும் கண்மாய்கள் ஆக்கிரமிப்பு; ஏரி மற்றும் குளங்களில் கட்டடங்கள். மேற்கொண்டு வராமல் தடுக்கப்பட வேண்டும். இதே மாதிரிதான் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் இவ்வேலைகள் இப்படி நடக்கும் என்று சொன்னால், பெரிய பாதிப்பை உண்டாக்கும். ஆகையால், இந்தப் பாதுகாப்பைக் கருதி, அதற்குச் செய்ய வேண்டுமென்ற அந்தக் கடமையைச் செய்வதில் அரசு உத்தரவை, அரசு அதிகாரிகளுக்குக் கடுமையான உத்தரவை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தர வேண்டும். அந்தக் கட்டளையை காலா காலத்தில் விரைவாகப் பிறப்பிக்க வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

காலையிலே பேசுகிறபோது இன்னும் சில விஷயங்கள், நானும் மறக்காமல் சொல்கிறேன். என்னுடைய மரியாதைக்குரிய சகோதரி,

[திரு. எம்.ஏ. ஹக்கீம்] [2003 ஜனவரி 29

மேற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சொன்னார்; அதோடு இணைத்து, அந்தக் கோரிக்கையை வைத்துப் பேச வேண்டிய அவசியம் இருக்கிறது. மதுரை மாநகரத்தின் இன்றைய நிலைமை மிகவும் கஷ்டமான நிலைமை. நான் ஏற்கெனவே அம்மா அவர்களிடத்தில் முதன்முதலாகக் கன்னிப்பேச்சுப் பேசுகிறபோதே சொன்னேன். இந்த மதச் சார்பற்ற கட்சியின் இலக்கணமாக மூன்று பேரை வெற்றி பெற வைத்தபோது, இதோ என் அருகில் அமர்ந்திருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் என்னுடைய அருமைக்குரிய நன்மாறன், சகோதரி வளர்மதி ஜெபராஜ் ஆகியோருக்கு ஓர் அற்புதமான இலக்கணமாக வெற்றியை அங்குத் தேடித் தந்தது மதுரை மாநகரம். இப்போது கார்ப்பரேஷனில் நிதி கிடையாது; பணம் கிடையாது. அங்கே கார்ப்பரேஷனில் ஏகப்பட்ட சண்டைகள், சச்சரவுகள் அதை நிறைவேற்றித் தருகிற இடத்தில் அது இல்லை. ஆனால் மாநகரம் பாழ்பட்டுப்போய் விடக் கூடாது. அன்னை மீனாட்சியின் ஆலயம் நிறைந்திருக்கிற இடம். மீனாட்சியின் சகோதரர் கூடல் அழகர் பெருமாள் கோயில் நிறைந்து வீற்றிருக்கிற இடம். அந்த இடத்தில் இலட்சக்கணக்கான பக்தர்கள், மக்கள் வந்து போய்க் கொண்டு இருக்கிறார்கள். ஆகையினால்தான், அந்த மாநகரம் பாதுகாக்கப்பட வேண்டும்; தேவையான அளவிற்கு அந்த மாநகரத்தில் சாலைகள் அமைக்கப்பட வேண்டும். குடிநீர்ப் பற்றாக்குறை முழுமையாக, அறவே நீக்கப்பட வேண்டும்.

அதே மாதிரியாகத்தான் இராஜாஜி மருத்துவமனை குறித்து காலையில் சகோதரி பேசுகிறபோது சொன்னார்; அது மதுரைக்கு மாத்திரமல்ல, 15, 20 மாவட்டங்கள், சுற்றி வருகிற இடங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடிய இடம். சென்னைக்கு அடுத்தபடியாக மிகப் பெரிய அரசியல் தலைநகரம். அதற்கு ஏராளமான கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இதை வெறும் M.L.A. Fund மூலமாக மாத்திரம் செய்ய முடியவில்லை அம்மா! M.L.A. Fund என்று நான் சொல்லிக்கொண்டு வருகிறபோது அம்மா அவர்கள் இரக்கத்தோடு, கருணையோடு பரிசீலிக்க நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். உங்களுடைய கருணை மிகுந்த பார்வை, இரக்கம் எங்களுக்குக் காட்டப்பட வேண்டும். செலவழிப்பதற்கு வேறு வழி இல்லாமல், முக்கியமான பல திட்டங்களை நிறைவேற்றித் தருகிற இடத்திலே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செய்ய வேண்டி இருக்கிற காரணத்தால், ரூபாய் 82 இலட்சம் காணவில்லை; ஒரு கோடியாகக் கேட்கவில்லை; 99 இலட்ச ரூபாய் தர வேண்டுமென்று



2003 ஜனவரி 29] [திரு. எம்.ஏ. ஹக்கீம்]

பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு) காரணம், அம்மாவிற்கு ரொம்பப் பிடித்த நெம்பர் என்று சொல்லி, ஒன்றுக்கு இரண்டாகச் சொல்லி, அதையும் நிறைவேற்றித் தர வேண்டும். அந்த fund மூலமாக எங்களுக்கு நிறைய அந்த வேலைகளைச் செய்வதற்கு வழி கிடைக்கிறது.

*பிற்பகல் 5-40*

மதுரையில் கிருதுமால் நதி என்று ஒரு நதி, அது நதி என்று இருந்ததாக இலக்கியத்தில் சொல்கிறார்கள். ஆனால் அங்கு அது கூவமாக மாறிக் கொண்டு இருக்கிறது. அதை ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்கு எங்களுடைய பணத்தைச் செலவழிக்க முடியவில்லை என்பதற்காக அதை இந்த அவையில் பேச வேண்டி இருக்கிறது. அதற்கு அரசே பொறுப்பெடுத்துக் கொண்டு ஆவன செய்ய வேண்டும். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மதுரைக்குப் பல தடவை வருகிறார்கள். ஒரே ஒரு தடவை, 1/4 மணி நேரம் ஒதுக்கித் தந்தால் அந்த ஆற்றை நான் காட்டுகிறேன். அது சாக்கடையாக மாறி, மதுரையை பாழ்படுத்திக்கொண்டு வருகிறது. ஒருமுறை பார்த்தால், நீங்கள் அம்மாவிடத்திலே சொல்லி முழுவதுமாகச் சீர் செய்வதற்கு வழி பிறக்கும் என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன்.

அதேபோன்று இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படுகிற விஷயத்தில் ஒன்று சொல்கிறேன். அதைப் போலச் சொன்னார்கள். கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைப் பற்றிச் சொல்கிறபோது, அதற்கும், இதற்கும் Cauvery River Authority-ஐயும் கிருஷ்ணா நீரையும் சேர்த்து compare பண்ணிப் பேசாதீர்கள் என்று அம்மா திரும்பத் திரும்பத் தெளிவாகச் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். ஆனால், திரும்பத் திரும்ப பேசும்போது இரண்டையும் குழப்பிக் குழப்பி இங்கே திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள்—அது என்ன என்று கேட்டீர்கள் என்றால்— மக்களிடம் விவகாரம் பண்ணிவிட வேண்டும் என்பதற்காகச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். நமது முதலமைச்சர், ஆந்திர முதலமைச்சரைப் பார்த்தது, பேசியது, கிருஷ்ணா நதித் தண்ணீர் சம்பந்தப்பட்டது. காவிரி நதியைப் பொறுத்தமட்டில், பிரதமரிடத்திலேதான் பேசி ஆக வேண்டும். அல்லது அந்த River Authority-யில் உட்கார்ந்துதான் பேச வேண்டும். தனிப்பட்ட முறையில் கர்நாடக முதலமைச்சரைப் பார்த்துப்பேச முடியாது. கர்நாடக முதலமைச்சரைத் தனிப்பட்ட முறையில் கேட்டுக் கொண்டு தண்ணீர் வாங்கித் தர வேண்டிய கடமைப்பட்ட கட்சி, அவர்களுடன் சேர்ந்து

வெளிநடப்புச் செய்கிறது. அதுதான் எனக்குப் புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதை அம்மா கேட்க வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் ரொம்ப பரிதாபத்திற்குரிய நிலையில் தமிழ்நாட்டில் இருக்கிறது. காங்கிரஸ் கட்சியை வளர்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தால் நாம் கேட்க வேண்டாமா? கிருஷ்ணாவிடம் அவர்கள் என்ன சொல்வார்களோ தெரியவில்லை. அவர் என்ன நினைக்கிறார் என்றால், தமிழ்நாட்டிலே காங்கிரசே இல்லை. நாம் ஏன் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறாரோ (மேசையைத் தட்டும் ஒலி) என்னவோ, அதுவும் தெரியவில்லை. அவராகத் தர வேண்டும். பெரிய மனிதன்.. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Order.. விளக்கம் கொடுக்க அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) சரி சொல்லி விடுங்கள். சொல்லி விடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** I will give an answer.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம், என்ன? சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் என்பவர், பொதுவாகத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை மக்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்று பதவியை வகித்துக்கொண்டு இருப்பவர். இவர்கள்தான் பேச்சுவார்த்தைக்கு ஒரு அத்தாரிட்டியோடு போகக் கூடியவர்கள். அங்கே இருக்கக்கூடிய ஒரு முதல்வர், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர் ஆண்டு கொண்டு இருக்கிறார் என்ற காரணத்தினாலேயே இந்தக் கட்சி போய்க் கேட்டால் எல்லாமே வந்து விடாது. முதலமைச்சருக்கு என்று ஒரு தனிப் பொறுப்பு இருக்கிற காரணத்தினால், அவர்கள்தான் அதற்குப் பேச்சுவார்த்தை நடத்தி அதற்கு ஒரு அக்ரிமெண்ட் போட்டு அதைத்தான் செயல்படுத்த வேண்டுமே ஒழிய தனிப்பட்ட முறையில் ஏற்கெனவே சந்தித்துக் கேட்டு ஆகிவிட்டது. அவர் உதவுவதற்காகச் சொல்லியும் ஆகி விட்டது. ஆனால், முதலமைச்சர் அவருடைய கடமையைச் செய்ய வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் என்னுடைய கேள்வி. (குறுக்கீடு)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஆட்சி செய்து கொண்டு இருக்கிறபோது, இந்த மாநிலத்திலே காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்கள். நாங்களும் இருக்கிறோம். கொஞ்சம்





தண்ணீரைத் திறந்து விடப்பா என்று சொல்லக் கூடிய மனோபக்குவம் இல்லாத ** விட்டார்களே என்பதுதான் என்னுடைய வேதனையாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

**திரு. சி. ஞானசேகரன்:** அவர் சொல்வதை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது நீக்கப்படுகிறது.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** டாக்டர் கொஞ்சம் அமைதியாக இருக்கட்டும். நான் பார்த்துக் கொள்கிறேன். (சிரிப்பு) ஆகையினால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொன்னேன். என்றால், இவர்கள் டெல்லியில் சொல்லி வாங்கிக் கொடுத்து இருக்கலாம். அதனால் சொன்னேன். ஏனென்றால், நாம் வட்டார கமிட்டி போடுவதற்குக் கூட டெல்லிக்குப் போகும்போது, தண்ணீர் வாங்கித் தருவதற்கு டெல்லிக்குப் போவதில் தப்பு இல்லை அல்லவா? அதற்காகச் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 5-45*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே மாதிரியான அப்படிப்பட்ட பிரச்சினைகள் வந்தபோது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், கொஞ்சம் அனுசரித்துப் பேச வேண்டும், அனுசரித்துப் பேச வேண்டும்; அந்த அம்மா அனுசரிக்காததனால்தான் இவ்வளவு சிக்கல் வருகிறது என்றெல்லாம் சட்டசபைக்கு வந்து பேச வேண்டிய தலைவர்கள் தெரு முனையில் நின்று கொண்டு, பத்திரிகையிலே கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே, தன்னாலே, இரண்டு மகன்களுக்கும் நடக்கின்ற சண்டையிலே, மகன்களைச் சேர்க்க முடியவில்லை; குடும்பத்திற்குள் உள்ள பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. ஒரு மகன் மெட்ராசிலே மேயராக இருந்தவர் இப்போது வெறும் எம்.எல்.ஏ. பதவி போதும் என்று இந்த மகன் பண்ணும் தகராறும், மதுரையிலே ஒரு மகன் பண்ணுகின்ற தகராறும், பெரிய ஐயா, உட்கார்ந்து கொண்டிருக்கிறவர், இரண்டு மகன்களுக்கும் உள்ள சண்டையைத் தீர்த்து, கட்சிப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார். அவர் சொல்கிறார். அம்மா வந்து அட்ஜஸ்ட் பண்ணி, கர்நாடக முதலமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று. ஆனால்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[திரு. எம்.ஏ. ஹக்கீம்] [2003 ஜனவரி 29

இங்கே வந்து உருப்படியான திட்டங்களை, யோசனைகளைச் சொல்வதற்கு முடியாத ஒரு நிலையில், வெளியே இருந்து கொண்டு, எதையாவது எழுதி, ஏதாவது குழப்பம் பண்ணிக் கொண்டு, எப்படியாவது பிழைப்பை நடத்திக் காலத்தைக் கழித்துக் கொள்ளலாம் என்று அவர்கள் அரசியல் பண்ணிக் கொண்டிருக்கக்கூடிய காலகட்டத்தில், கண்ணியத்தோடும், நேர்மையோடும், மிகுந்த நிதானத்தோடும், பொறுமையோடும், மிகுந்த சகிப்புத் தன்மையோடும், இந்த அரசாங்கத்தை, 6 கோடி மக்களைத் தன் பிள்ளைகளாக நான் பாதுகாக்கின்றேன் என்று இங்கே சொன்னீர்களே (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் தாயே, தமிழகத்தின் அரசியல் சக்கரம் சுற்றிக் கொண்டிருக்கிறது; அதை நாங்கள் பற்றிக் கொண்டிருக்கிறோம். அந்த நம்பிக்கையின் எதிரொலியாகத்தான் இன்றைக்கு இந்த வேண்டுகோள்களை எல்லாம் உங்கள் மத்தியில் வைத்து. அவை எல்லாம் நிறைவேறும் என்ற நம்பிக்கையில் உங்களோடு, உங்களுடைய தலைமையை ஏற்றுக் கொண்டிருக்கிற இலட்சோப இலட்சம், கோடிக்கணக்கான தோழர்கள் மத்தியில் நிலவுகின்ற அதே மன உணர்வில், அதே நம்பிக்கையில் எங்களுடைய எண்ணங்களையும், கருத்துகளையும் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். யாரையும் புண்படுத்த வேண்டுமென்றோ, அல்லது எவரையும் கொச்சைப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்திலோ இவற்றைத் தெரிவிக்கவில்லை. நன்றி உணர்வோடு இன்றைக்கு அதைச் சொல்லிக் கொண்டிருக்கின்றேன்.

கட்சிகள் எப்படி, ஆட்கள் எப்படி, என்ன பலம், என்ன மரியாதை இருக்கிறதென்பதை எல்லாம் நான் பார்த்தவன். மதுரையிலே இந்த வெற்றியைப் பெற்றுவிட்டு, சட்டமன்ற உறுப்பினராக இன்றைக்கு என்னால் வர முடிந்தது என்றால், அதற்கு முழுக்க, முழுக்க உழைத்தவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அம்மா அவர்களின் ஆசீர்வாததையும், வாழ்த்துகளையும் ஒருபோதும் நன்றி மறந்தவனாக இருந்துகொண்டு பார்க்க நான் விரும்பாத காரணத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் இன்றைக்கு மனதிலே தாங்கி வைத்துக்கொண்டுதான் பேசிக் கொண்டிருக்கிறோம். வெற்றி பெறுகிற வரை அம்மா; வெற்றி பெற்று வந்துவிட்ட பிறகு, 'நீ யார்; நான் யார்? வா பார்ப்போம்' என்று சொல்லக்கூடிய வாயும், நாக்கும், வார்த்தையும் எங்களுக்கு வராது என்பதற்காகத்தான், (மேசையைத் தட்டும் ஒலி) அதை அவர்கள் எந்தக் கோணத்திலே இருப்பவர்கள் எப்படிப் பார்த்தாலும் சரி.



2003 ஜனவரி 29] [திரு. எம்.ஏ. ஹக்கீம்]

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில், மக்களைப் பொறுத்தமட்டில், மதுரையைப் பொறுத்தமட்டில், சில விஷயங்களை மறக்காமல் நினைத்து வைத்துக் கேட்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் மீண்டும் அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மதுரை உயர் நீதிமன்றக் கிளை விரைவில் முழுமை பெற்று, திறக்கப்படுவதற்கு உண்டான ஏற்பாட்டினைச் செய்து, அதை எங்களுக்கு நிறைவேற்றித் தர வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

தலைவர் அவர்களே, நான் முடித்து விடுகிறேன். நான் மரியாதையாக உங்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டவன். உங்களுக்கு வாக்களித்தவன். உணர்வுகளை மதிக்கிறவன் என்ற அடிப்படையில் உயர் நீதிமன்றக் கிளையை விரைவிலே திறப்பதற்குண்டான ஏற்பாட்டைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையில் Accident cases நிறைய நடத்துகிறார்கள் அம்மா. நான் 30 வருடங்களாகக் கட்சிக்காக உழைத்த காலத்திலும், வக்கீலாக இருந்து கொண்டிருந்தவன். Accident cases, M.A. C.O.P. Cases நிறைய வருகின்றன, ஆயிரக் கணக்கில். ஆனால், Judges இல்லை. மாவட்ட நீதிமன்றங்களிலே நிறையப் பற்றாக்குறைகள் இருக்கின்றன. ஆட்கள் இல்லை. அவை எல்லாம் விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஏனென்று சொன்னால், வழக்குகள் விரைவாகத் தீர்க்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில், ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி, சட்ட ரீதியான காரணங்களைச் சொல்லி..

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடுமையான நிதி நெருக்கடி இருந்த சூழ்நிலையிலும்கூட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 130 கோடி ரூபாய் அளவுக்கு இருந்த நிதி ஒதுக்கீட்டை இப்போது உயர்த்தி, ஏறக்குறைய 170 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் அளவுக்கு ஒரே ஆண்டிலே நீதித் துறைக்கு அதிகரித்து ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டிருக்கிறார்கள். இப்போதுகூட 21 Sub-Judges-ஐ நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நியமித்திருக்கிறார்கள். எனவே, எந்த, எந்த இடங்களிலே எல்லாம் நீதிபதி பணியிடங்கள் காலியாக இருக்கின்றனவோ, உயர் நீதிமன்றத்தினுடைய கருத்தினைப் பெற்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 ஜனவரி 29

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனம் கனிந்த நன்றி.

அதே மாதிரி திருமங்கலத்திற்கு ஒரு Sub-court வேண்டியிருக்கிறது; பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதி. அவருடைய தொகுதி என்று சொல்கிறபோது, அவர் பேசமுடியாத இடத்தில் இருக்கிறார். அவர் என்னை வழிமொழிவார் என்று நான் நம்புகிறேன். ஏனென்று சொன்னால், அது அவருடைய தொகுதி என்பதால் மாத்திரமல்ல, வளர்ந்து வரக்கூடிய நகரம்; ஒரு பெரிய நகரம். அரசியலில் முக்கியமானவர்கள் எல்லாம் அங்கே இருந்து வெளியே வந்து சர்ச்சைக்குரியவர்களாகவும் சண்டைக்குரியவர்களாகவும் இருக்கின்றார்கள். சமாதானத்திற்குரியவர்களாகவும் இருக்கின்றார்கள். இப்படி எத்தனையோ வழிகளில் இன்றைக்கு அந்த நகரம் பிரசித்தி பெற்றுக் கொண்டிருக்கிற காலகட்டத்தில் அது அவசியம் தேவைப்படுகிறது. அதையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே சொன்னது போல...

*பிற்பகல் 5-50*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Sub Court ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றால், Recurring Expenditure—தொடர் செலவினம்-- அரசுக்கு 25 இலட்சம் ரூபாய், தொடராச் செலவினம் 10 இலட்சம் ரூபாய் தேவை. அதேபோன்று பல்வேறு மாவட்டங்களில் Sub-Courts ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற கருத்துரு சட்டமன்ற உறுப்பினர்கள், Bar Council மற்றும் பொது மக்களால் கேட்கப்படுகின்றன. எனவே அதைத் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டுமென்கிற கருத்தின் அடிப்படையில் சொல்கிறேன். Constitution of Courts and Construction of Courts; அதாவது Construction of Courts-ஐப் பொறுத்தவரையில், 140 கோடிக்கு ஒரே Phase-ல் தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை கோர்ட்டுகளையும் ரிப்பேர் செய்யவும், புதிய கட்டடங்கள் கட்டவும் கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நேற்றைக்குக்கூட என்னுடைய பதிலுரையில் சொல்லியிருக்கிறேன். இதுவரையில் எந்தத் தகவலும் இல்லை. இரண்டு நினைவூட்டுக் கடிதங்களும் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதேமாதிரி Constitution of new Courts புதியதாக கோர்ட் அமைப்பதற்கும் மத்திய அரசின் நிதி உதவி தேவை. எனவே, அதிலும் நாங்கள் ஆர்வமாக இருக்கிறோம். உறுப்பினர்களின் கருத்துகளும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 ஜனவரி 29]

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி. ஒரேயொரு நிமிடத்தில் பேச்சை முடித்துவிடுகிறேன். என்னுடைய பணிவான வேண்டுகோள்; 11-வது நிதிக் குழுவின் அறிக்கையில், 5000 கோடி — 3000 கோடி ரூபாய்க்கு மேல் — நமக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. பரிந்துரை செய்யப்பட்ட இடத்திலேயும் கஷ்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் தாண்டி நிதி நிலைமையைச் சரிக்கட்டி, தமிழகத்தை அழைத்துச் செல்ல வேண்டுமென்ற பொறுப்பு; ஒரு பக்கத்திலே கடுமையான வறட்சி; இன்னொரு பக்கத்திலே மழை இல்லை; வராது, வரவே வராது என்றெல்லாம், சில பேர் சாபம் போட்ட மாதிரியெல்லாம் பேசுகிறார்கள். அதுவெல்லாம் தேவையில்லை. கடவுளைப் பிரார்த்திக்கலாம். அல்லாவை வேண்டுகிறேன். இயேசுவை வேண்டுங்கள். அதேபோல மதுரை மீனாட்சியை வணங்குங்கள். முருகனை வேண்டுங்கள். எல்லோரும் இறைவனைப் பிரார்த்திப்போம். நல்ல மழை பொழியட்டும். நல்லபடியாக மழை பெய்யட்டும். வறட்சி நீங்கட்டும், நல்ல வாழ்வு கிடைக்கட்டும், என்ற நல்ல மன நம்பிக்கையோடு நம்முடைய பயணத்தைச் செலுத்துவோம்.

இந்த மதிய உணவுத் திட்டத்தில், 10 இலட்சம், 8 இலட்சம், 7 இலட்சம் என்ற அந்தக் கணக்கின் அடிப்படையில் அல்ல தாயே! எத்தனை இலட்சம் பேர் வந்தாலும் போடுவதற்கு உங்களுக்கு மனம் இருக்கிறது. அந்தப் பசியை ஆற்றுவதற்கு உங்களுக்கு நல்ல பலம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மனமும், பலமும் இருக்கிற வரை தமிழகத்திலே எந்த ஏழையும் பசித்துக் கிடக்கமாட்டான் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. எப்படியாவது பணத்தைத் தேடிக் கண்டுபிடித்து நிதி நிலைமையைச் சரிக்கட்ட முடியும் என்கிற கெட்டிக்காரத் தனத்தோடு நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய இந்த வழிநடைப் பயணத்தில் எத்தனை இடையூறுகள் வந்தாலும், அடித்து நொறுக்கித் தூளாக்கிவிட்டு, புரட்சித் தலைவர் சொன்ன மாதிரி,

வெற்றி மீது வெற்றி வந்து உங்களைச் சேரும்,
அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் இந்த நாட்டு மக்களைச் சேரும்'. (மேசையைத் தட்டும் ஒலி)
எதற்கும் அஞ்சவேண்டுமென்ற அவசியமில்லை.
'நெஞ்சமுண்டு, நேர்மையுண்டு, ஓடு ராஜா!
நேரம் வரும் காத்திருந்து பாரு ராஜா'

என்று சொன்னாரே, அதைப்போல, நிச்சயமாக உங்களுக்கு நல்ல நெஞ்சமுண்டு; நல்ல எண்ணம் உண்டு; நல்ல வளமான குணம்

[திரு. எம்.ஏ. ஹக்கீம்] [2003 ஜனவரி 29

உண்டு. செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணங்கள் இருக்கின்றன பாருங்கள், அது நிச்சயமாக வெற்றிகரமாக நிறைவேற்றித் தரும். அப்படிப்பட்ட ஓர் அற்புதமான உரையை, அந்த உணர்வை, ஆளுநர் அவர்கள் மூலமாகத் தமிழகத்தில் அரசின் சார்பில் மக்களுக்குத் தெரிவித்திருக்கிறீர்கள்.

ஒருவர் சங்கடப்பட்டுச் சொல்லியிருக்கிறார். கவிஞர் முதலமைச்சரைப் பார்த்துப் பாடுவது போல இருக்கிறது; அவர் உலக மகாக் கவிஞர். அவருக்கு அது பிடிக்காது. இந்தக் கவிஞர்கள் அல்ல. கவர்னர் பாராட்டினார் என்பதல்ல; கவிஞர்கள் அல்ல; எழுதத் தெரிந்தவன், பேசத் தெரிந்தவன், உணர்வு கொண்டு எதையும் வெளியிடத் தெரிந்தவன், இந்த மண்ணில் இன்றைக்குப் பூத்துக் குலுங்கி வெளியே வருகிற மழலையாக இருந்தாலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களைப் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கையில் அந்த மழலை கூட நாளை பூத்து, நம்பிக்கையோடு இந்த மண்ணில் சிரித்து, வெளியே வரும், குளித்து வெளியே வரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஓர் அற்புதமான ஆளுநர் உரை என்று, முழுமையாக இந்த நாட்டு மக்கள் எதிர்பார்க்கக்கூடிய எல்லாவற்றையும் நிறைவேற்றித் தருகிறோம் என்று சொல்கிற இடத்தில் இல்லையென்றாலும், அன்றாடத் தேவைகளை, அத்தியாவசியத்தை, மக்கள் எண்ணுகிற எண்ணத்தை நிறைவேற்றித் தர முடியும் என்ற நம்பிக்கையோடு நீங்கள் வெற்றிப் பயணத்தைத் தொடருங்கள்.

இந்த கவர்னர் உரையை அளித்தமைக்காக அவருக்கும், என்னுடைய மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்து, உங்களுக்கும் எனது மனங்கனிந்த பாராட்டுகளைத் தெரிவித்து, எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்குத் துணையிருப்பார்; தைரியமாகச் சொல்கிறோம், உடன் வருகிறோம். வெற்றிக் கனி உங்களுக்கு உண்டு. எப்பொழுதுமே தட்டிக் கொண்டேயிருக்கும். இயேசு பெருமான் சொன்னதைப் போல,

'கேளுங்கள் கொடுக்கப்படும்;
தட்டுங்கள் திறக்கப்படும்'.
புரட்சித் தலைவியிடத்திலே கேளுங்கள்; கொடுப்பார்.
தமிழகத்து மக்கள் தட்டுகிறார்கள், கொடுத்துக் கொண்டே இருப்பார்;
திறந்து கொண்டே இருக்கும், நல்ல வாழ்வு பிறக்கும்

என்று சொல்லி, இந்த வாய்ப்பினைத் தந்தமைக்குப் பேரவைத் தலைவருக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, அமைகிறேன், நன்றி, வணக்கம்.



2003 ஜனவரி 29]

பிற்பகல் 5-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சக்திவேல் முருகன். (குறுக்கீடு) சொல்லுங்கள். சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் தாங்கள் பிரதான எதிர்க் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தை வெளியேற்றியபோது, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருக்கிற எங்கள் தலைவர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், அவர்களை மீண்டும் அவைக்கு அழைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்தார்கள். பொதுவாக, சட்டமன்ற மரபுகளிலேயே ஒரு எதிர்க் கட்சியை சபாநாயகர் வெளியேற்றுகிறபோது, மற்ற எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிறவர்கள், அவர்களுக்கும் ஒரு வாய்ப்புத் தாருங்கள் என்று கேட்பது ஒரு மரபாக, நாடாளுமன்றத்திலும் சரி, சட்டமன்றத்திலும் சரி, இருந்துகொண்டிருக்கிறது. அந்த வகையில் அந்தக் கோரிக்கையை வைத்தோமேயொழிய, அதற்காக, சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களையும், அதேபோல காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களையும் மாண்புமிகு உறுப்பினர் ஹக்கீம் அவர்கள் கலகக்காரர்கள் என்று இங்கே சபைக் குறிப்பில் ஏற்றியிருப்பதைத் தாங்கள் நீக்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கையை முதலிலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அதிலே ஏன் இப்படி இவர்கள் கோருகிறார்கள் என்று சொன்னால், சாத்தான்குளம் effect என்று ஒன்றைச் சொன்னார்கள். எங்களுடைய கோரிக்கை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஒவ்வொன்றுக்கும் நீங்கள் பதில் சொல்ல முடியாது. திரு. சக்திவேல் முருகன், நீங்கள் பேசுங்கள்.

• **திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவிக்கின்ற விவாதத்தில் எனக்குப் பேசுகின்ற வாய்ப்பளித்த தங்களுக்கும், எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது பணிவான நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் பல்வேறு நல்ல அம்சங்கள்; தேசப் பற்றுடன் இந்த அரசு ராணுவத்தில் உயிர் நீத்த வீரர் குடும்பங்களுக்கு நிதி உதவி செய்தல்; சட்டம்-ஒழுங்கு சீராக்கப்பட்டு, சிறுபான்மைச் சமய விழாக்கள், கண்டதேவி தேரோட்டம் போன்ற நெடுநாளாக நடைபெறாத

[திரு. எம். சக்திவேல் முருகன்] [2003 ஜனவரி 29

தேரோட்டங்களும் அமைதியாக நடைபெற்றன. ஏழை மக்களிடமிருந்து கந்துவட்டி முறையை ஒழித்து, ஏழை மக்களைக் காப்பாற்றியது போன்ற பல்வேறு நல்ல அம்சங்கள், எண்ணற்ற அம்சங்கள் ஆளுநர் உரையில் இடம் பெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், மேதகு ஆளுநர் உரையின்போது தி.மு.க. எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்தார்கள். சில கோரிக்கைகளைப் படித்தார்கள். ஆனால், எங்கள் கேள்வி என்னவென்றால், ஆளுநர் உரையின்மீது பேசுகின்ற வாய்ப்பு மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்களுக்கு இருந்தும், அப்போது பேசாமல், முன்கூட்டியே வாசித்து வெளிநடப்புச் செய்தார்கள். ஏனென்று சொன்னால், அவர்கள் இருந்து ஆளுநர் உரை நிகழ்த்திவிட்டால் இந்த அரசு பற்றி நாம் பேப்பரில் எழுதி வைத்ததை வாசிக்க முடியாது, ஏனெனில் எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றுகின்ற அம்மா அவர்களின் அரசில், ஆளுநர் உரை என்பது எல்லா அம்சங்களும் இடம் பெறுகின்ற ஆளுநர் உரையாக இருக்கும் என்று அவர்களுக்கு முன்பே தெரியும். எனவேதான், தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பாடுபடுவது போல ஒரு மாயையை உருவாக்கவும், மலிவான அரசியல் விளம்பரம் தேடவும்தான் முன்கூட்டியே வெளிநடப்புச் செய்தார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

நேற்று எங்கள் கட்சி உறுப்பினர் மாண்புமிகு அண்ணன் திருப்பூர் சிவசாமி அவர்கள் காவிரிப் பிரச்சினை பற்றிப் பேசும்போது மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள்—இப்போது அவையில் இல்லாவிட்டாலும் அவர்கள்—குறுக்கிட்டு 'அது பெரிய விவகாரம்; அதைப் பற்றி எல்லாம் உங்களுக்கு தெரியாது' என்றார்கள். காவிரிப் பிரச்சினை பற்றி இந்த அவையில் பல்வேறு கருத்துகளை எங்கள் இதயதெய்வம் முதல்வர் அம்மா அவர்கள் தெளிவுபட, புள்ளிவிவரங்களுடன் கூறினார்கள். எனவே, அந்தப் புள்ளிவிவரங்களுக்குள் நான் செல்ல விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கருத்தாக ஒரே ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறோம். எங்களுக்குக் காவிரிப் பிரச்சினை பற்றி, பெரிய விவகாரம், எங்களுக்குத் தெரியாது என்று சொல்லும் நேற்று வெளிநடப்புச் செய்த மரியாதைக்குரிய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களிடமும், இன்று காலையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் கணேசன் அவர்களிடமும், பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.



2003 ஜனவரி 29] [திரு. எம். சக்திவேல் முருகன்]

கர்நாடகத்தில் ஆளும் காங்கிரஸ் அரசு ஆட்சியைத் தக்கவைப்பதற்காக காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பைக்கூடப் பொருட்படுத்தாமல் அங்குள்ள விவசாயிகள் சொல்வதைக் கேட்டு அவர்களுக்குப் பாதிப்பு வராமல் நடக்கிறார்கள். அங்கே எதிர்க்கட்சியாக இருக்கிற கர்நாடக பி.ஜே.பி.-யும் ஆளும் கட்சியாக ஆட்சியைப் பிடிக்கவேண்டுமென்ற எண்ணத்தில், அவர்களும், அங்குள்ள விவசாயிகள் சொல்படிதான் கேட்டு, கருத்துச் சொல்கிறார்கள். இரண்டு தரப்புமே தண்ணீர் தரக்கூடாது என்பதில் ஒரே கருத்தாக இருக்கும்போது பேச்சு-வார்த்தையால் முடியும், பேசுங்கள் என்று கூறுவது நடைமுறைக்கு சாத்தியம் ஆகுமா? அதே சமயம், தமிழகத்தைப் பொறுத்தமட்டில் அம்மா அவர்களின் அரசு, ஆளும் கட்சியாக இருந்தபோதும், காவிரிப் பிரச்சினையில் தொடர்ந்து போராடியது.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

இதய தெய்வம் அம்மா அவர்களே காவிரிப் பிரச்சினைக்காக உண்ணாவிரதம் இருந்தார்கள். எதிர்க்கட்சியாகத் தமிழகத்தில் இருந்தபோதும் காவிரிப் பிரச்சினை தீரவேண்டுமென்பதற்காக காவிரிப் பிரச்சினையில் மத்திய அரசின் மெத்தனப் போக்கைக் கண்டித்து, மத்திய அரசில் அங்கம் வகித்த நேரத்தில் பதவி சுகத்தை எதிர்பாராமல் மத்திய அமைச்சரவையிலிருந்து எங்கள் கட்சி விலகியது. எனவே, எதிர்க் கட்சியாக இருந்தபோதும், ஆளும் கட்சியாக இருந்தபோதும், மத்தியில் அங்கம் வகித்தபோதும், காவிரிக்காக அம்மா அவர்கள் போராடினார்கள். ஆனால் தி.மு.க.வைப் பொறுத்தமட்டில், சென்ற ஆட்சியின்போது காவிரிப் பிரச்சினைக்காக ஒரு முடிவும் கிடைக்கப் பாடுபடவில்லை. தற்போது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அம்மா அவர்கள் போராடினார்கள் என்பதுடன் விட்டுவிடுங்கள். குற்றச்சாட்டு வேண்டாம், அவர்கள் மேலே.

*பிற்பகல் 6-00*

**திரு. எம். சக்திவேல் முருகன்:** இல்லை, வேறு ஒன்றுமில்லை. ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்க விரும்புகிறேன். உண்மையிலேயே காவிரிப் பிரச்சினையில் அவர்களுக்கு அக்கறை இருக்குமானால், எங்களுக்கு உறவு வேறு, நட்பு வேறு என்று சொல்லும் அவர்கள், மத்திய அரசிடம் ஒரு முறையாவது குறைந்தபட்சம்-- நீங்கள் பதவிகூட

[திரு. எம். சக்திவேல் முருகன்] [2003 ஜனவரி 29

விலக வேண்டாம்—பதவி விலகிவிடுவோம் என்று சொல்வதற்காவது அவர்கள் தயாரா என்ற ஒரே ஒரு கேள்வியை மட்டும் நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

அவர்கள் அரசியலோடு மட்டும் நிற்காமல், நடிகர் சங்கத்திற்குள்கூட நுழைந்து அவர்களைக்கூடப் பிரித்துவிட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன்.

அதோடுமட்டும் அல்லாமல், நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள்—இப்போது அவையில் இல்லையென்றாலும்—பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆளுநர் உரை, ஆளுநர் உரையாக இல்லாமல் இந்த அரசைப் பாராட்டுகிற பாராட்டுப் பத்திரமாக உள்ளதாகக் கூறினார்கள். எதற்காக மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அரசைப் பாராட்டுகிறார்? அம்மாவின் அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது, தமிழ்நாடு துறைகள் இருந்த சூழ்நிலை என்ன? ஒவ்வொரு துறையும் கோமா ஸ்டேஜில் உள்ள நோயாளி போல நலிவடைந்தும் கஜானா காலியான சூழ்நிலையிலும் அம்மாவின் அரசு, மிகப் பெரிய பிரச்சினைகளை எதிர்நோக்கும் சவாலோடு பதவி ஏற்றது. ஒவ்வொரு துறையிலும் அம்மாவின் அரசு எதிர்நீச்சல் போட்டு, நலிந்த துறைகளைத் தட்டி எழுப்பி, தலைநிமிரச் செய்து யாரும் எதிர்பார்க்காத அளவிற்கு, தமிழகத்தின் நிதி நெருக்கடியைச் சமாளித்து, அம்மாவின் அரசு செயல்படுகிற விதத்தை மனசாட்சி உள்ளவர்கள் யாரும் நிச்சயம் பாராட்டாமல் இருக்கமுடியாது. மேதகு ஆளுநர் அவர்கள் அம்மா அரசைப் பாராட்டுகிறார் என்று சொன்னால், இவருக்கு ஏன் பொறுக்கமுடியவில்லை'.

மேலும், அவர் குற்றம் சாட்டுகிற நேரத்தில் ஒன்றைச் சொன்னார், இன்னொரு கருத்தையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அம்மா அரசு அதிக சாதனைகள் புரிந்துள்ளது. அதனால் மேதகு ஆளுநர் அவர்கள் மனம் திறந்து பாராட்டிப் பல முறை பேசியுள்ளார்கள். சென்ற அரசு எப்படிப்பட்ட அரசு என்பதை மக்கள் புரிந்துதான், ஜனநாயகத்தின் மூலம் அவர்களைத் தூக்கி எறிந்து அம்மா ஆட்சியை ஏற்படுத்தினார்கள். இது இன்று மட்டும் நடப்பதுபோல், நேற்று மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள், பழைய ஆளுநர் உரைகளை எல்லாம் கையிலே வைத்துக் கொண்டு ஆவேசப்பட்டுப் பேசினார். நாங்களும் பழைய ஆளுநர் உரைகளையும், சட்டமன்ற நடவடிக்கைகளையும் புரட்டிப் பார்க்கும்போது, முந்தைய ஆட்சியிலுள்ள ஆளுநர் உரையில் முன்னாள் மேதகு ஆளுநர் திரு. கிருஷ்ணகாந்த்



2003 ஜனவரி 29] [திரு. எம். சக்திவேல் முருகன்]

அவர்கள் 22-1-1997-ல் படிக்கும்போது 5 இடங்களில் அப்போதைய தி.மு.க. அரசைப் பாராட்டியுள்ளார்கள். 1-3-2000-ல் அப்போதைய கவர்னர் மரியாதைக்குரிய செல்வி பாத்திமா பீவி அம்மையார் அவர்கள் 5 முறை பாராட்டியுள்ளார்கள். ஆனால், அதே கவர்னர் 19-1-2001-ல் 2 இடங்களில் மட்டும்தான் பாராட்டியுள்ளார்கள். அப்போதைய கவர்னருக்கு ஒரு வருடத்தில், பாராட்டுவது 5 தடவையிலிருந்து இரண்டாகக் குறையக் காரணம் என்ன என்று இங்கே, அவையில் உள்ள அரசியல் தெரிந்த அனைவருக்கும் தெரியும். மக்கள் விரோத ஆட்சியையே அப்போதைய ஆளுநர் அவர்கள் பாராட்டலாம். இப்போது நடக்கும் உண்மையான மக்கள் ஆட்சியை ஆளுநர் அவர்கள் பாராட்டக்கூடாதா என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்க விரும்புகிறேன். பல்வேறு சூழல்களுக்கு மத்தியில் அதிகம் சாதனை செய்த ஒரே அரசு அம்மாவின் அரசு என்பதால்தான் மேதகு ஆளுநர் அவர்கள் அதிக தடவை பாராட்டியுள்ளார்கள் என நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காவிரிப் பிரச்சினையில் இவர்களுக்கு உண்மையிலேயே அக்கறை இல்லை. 'பேசுங்கள், பேசுங்கள், பேச்சு வார்த்தை நடத்துங்கள்' என்று திசை திருப்பப் பார்க்கிறார்கள். இப்படியே பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்று காலம் கடத்தப் போய்த்தான், நேற்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கூறியது போல, முன்பு கர்நாடக காவிரிப் பாசனப் பரப்பளவு சுமார் 3 இலட்சம் ஏக்கர் அளவில் இருந்தது. இன்று பல மடங்காகப் பெருகி சுமார் 18 இலட்சம் ஏக்கருக்கு மேல் உயர்ந்துள்ளது. இங்கு என்னவென்றால், இருப்பதற்கும் பயிர் செய்யத் தண்ணீர் கிடைக்கவில்லை; பயிர் செய்கின்ற பரப்பிற்கும்கூட முழுவதும் தண்ணீர் கொடுக்க முடியவில்லை.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், உச்ச நீதிமன்றம் மூலமாகவும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை 13-1-2003 அன்று சந்தித்து எடுத்துரைத்ததன் விளைவாகவும், கர்நாடக அரசு சிறிதளவு தண்ணீர்தான் கொடுத்துள்ளது. அதுவும், சம்பாப் பயிருக்கு ஒரு தடவை பாசனம் கொடுக்க முடியாத அளவிற்கு சூழ்நிலை உள்ளது. இதனால் காவிரி டெல்டா பாசனப் பகுதி பாதித்து விடக்கூடாது என்பதற்காக இதய தெய்வம் அம்மா அரசு பல்வேறு நடவடிக்கைகளைப் போர்க்கால அடிப்படையில் எடுத்து வருவதை யாரும் மறுக்க முடியாது.

[திரு. எம். சக்திவேல் முருகன்] [2003 ஜனவரி 29

காவிரி நதி நீர்ப் பிரச்சினையில், அம்மா அவர்கள் அரசு தொடர்ந்து பாடுபடுவதோடு, அம்மா அவர்கள் ஜூன் 2002-ல், தஞ்சை டெல்டா மாவட்டத்திற்கும் சென்று பார்வையிட்டு ரூ.164.18 கோடி செலவில் நிவாரணப் பணிகள் செய்ய அம்மா அவர்கள் உத்தரவிட்டதோடு மட்டுமல்லாமல், மேலும் அப்பகுதியில் உள்ள நிலமற்ற வேளாண் மக்களுக்கு ரூ.21 கோடி செலவில் தீபாவளிப் பரிசுப் பைகள் வழங்கியும், மக்களின் இதயத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்த, அம்மா அரசு நடவடிக்கை எடுத்ததை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பாரதியார் அன்றே ஒரு கவிதை பாடினார்;

"இனியொரு விதி செய்வோம்-அதை
எந்த நாளும் காப்போம்.
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்"

என்றுதான் பாரதியார் அவர்கள் பாடினார்கள். வறுமையில் வாடுகின்ற சிறு மற்றும் குறு நில விவசாயிகளுக்கும், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும், அம்மா அவர்கள் துணிச்சலாகத் தொடங்கி உள்ள இலவச மதிய உணவுத் திட்டம் மேதகு ஆளுநர் அவர்களின் பாராட்டுதலைப் பெற்றதோடு, பசிப்பிணியற்ற தமிழ்நாட்டை உருவாக்கி மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள ஒரு மாநிலம் இது என்பதற்கு இதைவிடச் சிறந்த எடுத்துக்காட்டு வேறு எதுவும் இருக்க முடியாது என்று கூறியுள்ளார்கள்.

*பிற்பகல் 6-05*

பசிப்பிணியின் கொடுமைக்கு யாரும் ஆளாகக் கூடாது என்பதற்காக அம்மா அவர்கள் கொண்டு வந்தது அற்புதமான திட்டம்தான். அந்த பாரதி வரிகள்கூட 'தனி ஒருவனுக்கு உணவு' என்றுதான் வருகிறது. அரிசி என்று வரவில்லை. எனவே, உணவு வழங்கும் திட்டத்தை எதிர்க்கட்சியான தி.மு.க. குறை கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். அவர்களுக்கு வேறு ஒன்றும் இல்லை. காவிரிப் பிரச்சினையால் ஏற்பட்ட வறட்சியை வைத்து அரசியல் செய்ய நினைத்து, கற்பனைக் கோட்டையில் இருந்தார்கள். அம்மாவின் அரசும், அம்மாவும் அதைத் தவிடுபொடியாக்கினார்கள். இப்பொழுது உணவு வழங்குவதற்குப் பதில் அரிசியாக மாற்றிக் கொடுங்கள் என்கிறார்கள். அரிசியாகக்



2003 ஜனவரி 29] [திரு. எம். சக்திவேல் முருகன்]

கொடுக்கும்போது, அதிலாவது ஏதாவது அரசியல் ஆதாயம் தேட முயற்சி செய்யலாமா என யோசித்துக் கூறுகிறார்கள். அதைத் தெரிந்துதான், யாரும் குறை சொல்ல முடியாத அளவிற்கு அம்மா அவர்கள் ஆழ்ந்து யோசித்து, இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.

இந்த உணவை உண்ணும் மக்கள், தமிழக முதல்வர் அம்மா அவர்களை வாயார, நெஞ்சார வாழ்த்துகிறார்கள். பாரதியார் பாடல்களுக்கு மட்டும் உயிரோட்டம் கொடுப்பதற்கு முன்பாக, திருக் கோயில்களில் அன்னதானத் திட்டம் மூலம், பெரிய புராண நூலுக்கும் அம்மா அவர்கள் உயிரோட்டம் கொடுத்துள்ளார்கள்.

'மண்ணினிற் பிறந்தார் வெறும் பயன் மதி சூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்'

எனும் பெரிய புராணம் வாக்கிற்கேற்ப, அம்மா அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்கள் பசியாறும் வகையில் இலவசமாக 144 கோயில்களில் மதிய உணவு வழங்கும் திருக்கோயில் அன்னதானத் திட்டத்தை இந்தியாவிற்கே முன்னோடியாக 23-3-2002-ல் தொடங்கி, எல்லோராலும் ஏற்றுப் பாராட்டப்படுகின்ற அம்மாவின் அரசு பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிட்டதை வரவேற்கிறேன்.

அன்றே பாரதி பாடினார்.

பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்தவந்தோம்
எட்டு மறிவினி லாணுக்கிங் கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி என்று சொன்ன

பாரதி கண்ட புதுமைப் பெண்களை உண்மையிலே உருவாக்கிக் கொண்டிருப்பது அம்மாவின் அரசுதான். பாரதி மட்டும் இருந்திருந்தால் மிகவும் மகிழ்ந்திருப்பார். காரணம் "கரண்டி பிடித்த காலம் மலை ஏறி, பெண்கள் இன்று Gun-துப்பாக்கி—பிடிக்கும் காலம் வந்துள்ளது". இன்று காவல் துறையில் மகளிர் அதிரடிப் படையை அமைத்துள்ளார்கள். அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் 109என்பதுடன், நேற்று முன்தினம் 37 மகளிர் காவல் நிலையங்களை ஆரம்பித்து, மொத்தம் 146 மகளிர் காவல் நிலையங்களை அமைத்து, அதன்மூலம் மகளிருக்கு சமூக நீதி கிடைக்கச் செய்துள்ளார்கள்.

[திரு. எம். சக்திவேல் முருகன்] [2003 ஜனவரி 29

பல்வேறு தலைமைப் பொறுப்புகளில் இதுவரை எந்த அரசும் செய்திராத அளவில் ஒரே சமயத்தில், தலைமைச் செயலாளர், மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர், வஃக்ப் வாரியத் தலைவர், சிறுபான்மை வகுப்பினர் நல ஆணையத் தலைவர் ஆகிய முக்கியப் பதவிகளில் பெண்களை நியமித்து, திருக்கோயில் நிர்வாக அலுவலர்களாகப் பெண்கள் நியமிக்கப்பட்டதோடு, 20 இலட்சம் மகளிர் பங்குகொள்ளும் சுய உதவிக் குழுக்களுக்கு உதவிகள் வழங்கி, பெண்கள் முன்னேற்றத்திற்கும், பாராளுமன்றத்தில், சட்டமன்றத்தில் 33 சதவிகிதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கிட மத்திய அரசை வலியுறுத்தியும், இபபடிப் பெண்களுக்கு அதிக அதிகாரம் கிடைத்திடப் பாடுபடும் உண்மையான தாய்மார்களின் அரசாக அம்மா அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது.

கங்கை-காவிரி இணைப்புக்கு முதல் குரல் கொடுத்தவர்கள் அம்மா அவர்கள்.

மன்னு மிமயமலை யெங்கள் மலையே
மாநில மீதது போற்பிறி திலையே
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே என்னும்,

முறுக்கு மீசை, முண்டாசுக் கவிஞர் பாரதியாரின் வரிகளை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். 'கங்கை ஆறு எங்கள் ஆறு' என்று இந்தியாவில் இமயமலையில் ஓடும் ஆற்றை பாரதியார் பாடினார். அதை நமது ஆறாகப் பயன்படுத்த வேண்டும் என்று எண்ணி, அம்மா அவர்கள் 1984-ல் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தபொழுது கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்ற உன்னதக் கோரிக்கையை வைத்து வலியுறுத்தினார்கள். தொடர்ந்து, கடந்த ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற 50-வது தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும் பாரதப் பிரதமர் அவர்களிடம் பத்தாவது திட்ட காலத்தில் மகாநதி, காவிரி நதி இணைக்கும் பணியையும், எங்கள் தென் தீபகற்பப் பகுதியில் மேற்கு நோக்கிப் பாயும் பம்பா, அச்சன்கோவில் நதியை வைப்பாறு நதியுடன் இணைக்கும் பணியையும் மத்திய அரசிடம் வலியுறுத்திக் கொண்டிருப்பதை வரவேற்கின்ற நேரத்தில், அதற்குச் செவி சாய்க்கின்ற வகையில் நதிகள் இணைப்புப் பணிக் குழுவை மத்திய அரசு அறிவித்துள்ளதை அம்மாவின் அரசு வரவேற்கின்றது



2003 ஜனவரி 29] [திரு. எம். சக்திவேல் முருகன்]

என்று அறிவித்திருப்பது, அம்மாவின் அரசு தொலைநோக்குச் சிந்தனையுடனும், ராஜதந்திரத்துடனும் அம்மா அவர்கள் 20 ஆண்டு காலமாக முன் வைத்த கோரிக்கைக்கு முதல் வெற்றி கிடைத்துள்ளதை ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டியுள்ளதை வரவேற்கிறேன்.

மழை நீர்ச் சேகரிப்பு; ஏரிகள் தூர் வாருதல் பணி; மாண்புமிகு அம்மாவின் அரசு நீர்ப் பற்றாக்குறையைப் போக்க மழை நீர்ச் சேமிப்புத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில், வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் கோடை காலத்தில் போர்க்கால அடிப்படையில் நூறு ஏக்கருக்கும் குறைவான பாசன நிலங்கள் உள்ள குளங்கள், ஏரிகள், நீர்வரத்துக் கால்வாய்கள் ஆகியவற்றைத் தூர் வாரி, நூறு ஏக்கருக்கும் அதிகமான பாசனம் கொண்ட ஏரிகளைத் தூர் வாரி, ஏரிகளின் கொள்ளளவை உயர்த்தும் திட்டம் தொடங்கப்பட உள்ளது. ரூ.2900 கோடி மதிப்பீட்டில் உள்ள நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டம்-2 தொடங்குவதற்கு உலக வங்கியிடம் கேட்டுள்ளதாக மேதகு ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளதை நான் மனதார வரவேற்கிறேன்.

பீடித் தொழிலாளர் வாழ்வில் ஏற்றம்; வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் அம்மாவின் அரசு ரூ.40 கோடி செலவில் பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு 10,000 வீடுகள் கட்டித் தர அறிவித்திருப்பது; எங்கள் தென் மாவட்டப் பெண்களின் மீது, குடிசைத் தொழிலாகப் பீடி சுற்றும் பெண்களின் குடும்பத்தின்மீது அக்கறை உள்ளது அம்மாவின் அரசு எனக் குறிப்பிட்டுள்ளதை வரவேற்கிறேன்.

தொழில் வளர்ச்சி; உற்பத்தித் துறையில் நீடித்த வளர்ச்சி பெற சிறப்புப் பொருளாதார மண்டலம் Special Economic Zone ஒன்று உருவாகும் நிலையில் உள்ளது. இதன் மூலம் எண்ணூர், சென்னை, தூத்துக்குடி போன்ற பகுதிகளில் தொழில் பிரிவுக்குத் தனி ஊக்கம் அளிக்கும் வகையிலும், சென்னை மற்றும் திருப்பூரில் ஆடைப் பூங்காக்கள் அமைப்பதன் மூலமாகவும் இம்மாநிலத்தில் துணித் தொழில் பெரும் ஊக்கம் அடையும் என்று மேதகு ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளதை, தொழிலாளர் வர்க்கத்தில் நானும் ஒருவன் என்ற முறையில் அம்மாவின் அரசிற்கு, பேரவைத் தலைவர் மூலமாக வணங்கி, எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். இதன் மூலம் நலிந்து கிடக்கும் Textile Industry மேலும் வளரும் வாய்ப்புள்ளது. தொழிலாளர்களுக்கு இது மிகவும் உதவியாக அமையும்.

*பிற்பகல் 6-10*

தமிழ்நாட்டில் கைத்தறித் துறையை நலிந்து கிடந்த நெருக்கடியிலிருந்து மாற்றி, மறு வாழ்வு அமைத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை வணங்குகிறேன். அம்மாவின் புதிய திட்டத்தின்கீழ் தற்பொழுது எங்கு பார்த்தாலும் கல்லூரி மாணவ, மாணவிகள், அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ள புதிய கைத்தறி ரகத் துணிகளை அணிகிறார்கள். இத்திட்டத்திற்கு அமோக வரவேற்பு ஏற்பட்டுள்ளது. கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்க வேண்டிய வட்டி நிலுவைத் தொகையான ரூ.27.50 கோடியை 1998 டிசம்பர் திங்களிலிருந்து வழங்க வேண்டியதை, அம்மாவின் அரசு கொடுத்து, கைத்தறி நெசவாளர், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அம்மாவின் அரசு எடுத்த முயற்சியின் மூலம் இன்று காப்பாற்றப்பட்டுள்ளன. பழைய இருப்புத் துணிகள் எல்லாம் விற்பனை செய்யப்பட்டுள்ளன. விற்பனை வாய்ப்புகளுக்கு ஏற்ற நவீனமயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவித்திருப்பது கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கையில் இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது என்பதைத் தெள்ளத் தெளிவாக்குகிறது.

இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். இந்த அரசு விவசாயிகளின் காவலர்களாக இருக்கிறது. கைத்தறி நெசவாளர்களுக்குக் காவலர்களாக இருக்கிறது. தொழிலாளர்களுக்குக் காவலர்களாக இருக்கிறது. இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். நேரம் இல்லை என்பதால், நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் ஒன்றிரண்டு, நான்கு, ஐந்து கோரிக்கைகளை மட்டும் வைத்து விடைபெறலாம் என்று நினைக்கிறேன். ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டா? நான்கு, ஐந்தா?

**திரு. எம். சக்திவேல் முருகன்:** ஒரு நிமிஷம். நீண்ட நாளைய கோரிக்கையான எனது அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள சிவந்திபுரம் ஊராட்சியில் உள்ள வீடுகளுக்கும், வயல்களுக்கும் சர்வே செய்யப்பட்டும்கூட இன்று வரை பட்டா வழங்காமல் இருப்பதை அம்மா அரசு வழங்குவதற்கு நான் பேரவைத் தலைவர் வாயிலாக வேண்டுகிறேன். காரணம், நான் இரண்டு முறை சட்டசபையில் பேசியும், சட்டமன்ற உறுப்பினர் அம்மாவிடம் இந்தக் கோரிக்கை வைக்கவில்லை என்று அங்கே மீட்டிங்கிலே பேசும்போது அங்கே உள்ளவர்கள் என்னைச் சொல்லுகிறார்கள் அம்மா! எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர்



வாயிலாக நான் அன்போடு கேட்டுக் கொள்வது, இது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை என்று சொன்னாலும்கூட, நான் இரண்டு முறை சட்டசபையில் பேசியிருக்கிறேன். இது என்னுடைய தொகுதியினுடைய ஜீவாதார பிரச்சினை. அவர்கள் —எதிர்க்கட்சியினர்—கூட ஒரு மீட்டிங்கிலே பேசியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் இந்தப் பட்டாவுக்கு செவிசாய்க்கமாட்டேன் என்கிறார் என்று பேசுகிறார்கள். எனவே, அம்மா அவர்கள் இந்தப் பட்டா வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பொதுக் கூட்டத்திலே பேசுவது இல்லையா? நீங்கள் பொதுக்கூட்டத்திலே திரும்ப பதில் சொல்லுங்கள். *(சிரிப்பு)*

**திரு. எம். சக்திவேல் முருகன்:** எனது தொகுதி மக்களின் முக்கியப் பிரச்சினையான பாபநாசம்-திருவனந்தபுரம் மலைவழிச் சாலைக்கு மீண்டும் உயிர் கொடுத்து நிறைவேற்றித் தரவும் பணிவுடன் வேண்டுகிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள ஜீவாதாரப் பிரச்சினையான ராம நதி, கடனா நதி என்ற இரண்டு அணைகளும் 1992-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் தூர்ந்து போயின. அந்த இரண்டு அணைகளும், மீண்டும் ஏற்கெனவே முன்பு இருந்த பழைய கொள்ளவுக்கு வருகின்ற வண்ணம் அவற்றைத் தூர் வாரியும், மதகுகளைச் சீர்செய்தும் ஆவன செய்ய வேண்டுமென்று நான் பேரவைத் தலைவர் வாயிலாக அம்மாவைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

தாமிரபரணி ஆற்றின் அருகில் நாங்கள் இருந்தும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத அம்பாசமுத்திரம் பேரூராட்சிக்கும் தெற்கு பாப்பான் குளம், அயன் சிங்கம்பட்டி, சிவந்திபுரம் ஊராட்சிக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைத்திட ஆவன செய்ய வேண்டுமென்றும் அம்பாசமுத்திரம், திருமூலநாதர் கோயில், காசிநாதர் கோயில், ஊர்க்காடு கோடீஸ்வரர் கோயில், பாபநாசம் கோயில், ஆழ்வார்குறிச்சி சிவசைலநாதர் கோயில், மன்னார்கோவில், வெங்கடேஸ்வரர் கோயில் ஆகிய பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்கு அம்மாவின் ஆட்சியில்தான் கும்பாபிஷேகம் நடைபெற வேண்டுமென்றும் அங்கேயுள்ள மக்களும் விரும்புகிறார்கள்; நாங்களும் விரும்புகிறோம். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, மேற்படி கோயில்களுக்கு கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு நீங்கள் எங்களுக்கு உதவ வேண்டுமென்று அம்மாவிடம் பணிவுடன் வேண்டுகிறேன். விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் தமிழ்நாட்டிலேயே 365 நாட்களும் தண்ணீர் விழும் ஒரே அருவியாக

[திரு. எம். சக்திவேல் முருகன்] [2003 ஜனவரி 29

உள்ள அகஸ்தியர் அருவியை மணிமுத்தாறு பேரூராட்சி, மணிமுத்தாறு அருவியைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ப்படுத்தி, சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியும், தெப்பம் ஓடிக்கொண்டிருக்கும் பாபநாசம், ஆழ்வார்குறிச்சி, பிரம்மதேசம் தெப்பக் குளங்களைச் சீரமைக்க வேண்டியும் நான் பேரவைத் தலைவர் மூலம் அம்மாவைப் பணிவுடன் வேண்டி, கடைசியில், பல்வேறு வகைகளில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் வலுவான, செயல்துடிப்பு மிக்க தலைமையின்கீழ் தமிழ்நாட்டு மக்களுக்கு அனைத்து நன்மைகளும் கிடைக்குமென்று மேதகு ஆளுநர் அவர்கள் நம்புவதாகக் குறிப்பிட்டுள்ள அந்த ஒரு வாசகத்தைத் திருவாசகமாக எண்ணி, ஆளுநர் உரையில் உள்ள அனைத்து அம்சங்களையும் வரவேற்று, பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே உரையாற்றுவதற்கு அரிய வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அருகிலே இருக்கிற அன்புத் தொல்லைகளை எல்லாம் மீறி, சிறிது நேரம் உரையாற்றி விடுவேன் என்ற நம்பிக்கையோடு நான் உரையாற்ற விழைகிறேன். *(சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே உரையாற்றுவதற்கு முன்னாலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே என்னுடைய தொகுதியின் சார்பாக ஒன்றிரண்டு கோரிக்கைகளை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே இருக்கிற நாகுடி துணை மின் நிலையத்தை— இப்போது 63 கே.வி.-ஆக இருக்கிற துணை மின் நிலையத்தை 110 கே.வி.-ஆக upgrade செய்ய --தரம் உயர்த்தித் தர வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-15*

அதைப்போல, என்னுடைய தொகுதியிலே இயங்குகிற புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையை முழுமையாக இயக்கித் தரவேண்டும் எனப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2003 ஜனவரி 29] [திரு. ப. அரசன்]

என்னுடைய தொகுதியிலே 80 சதவிகிதம் விவசாயிகள் ஏரிப் பாசனத்தை நம்பி விவசாயம் செய்கிறவர்கள். இந்த ஆண்டு என்னுடைய பகுதியிலே சிறிதளவு மழை அதிகமாக இருந்தும்கூட, ஏரிகள் ஆழப்படுத்தப்படாததன் காரணமாக, ஏரிகள் தூர் வாரப்படாததன் காரணமாக, முழுமையான நீர்க் கொள்ளளவு இல்லாத காரணத்தாலே, என்னுடைய பகுதியிலே இருக்கிற விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, ஏரிகளை ஆழப்படுத்தியும் கரைகளைப் பலப்படுத்தியும் தரவேண்டும் என மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, அறந்தாங்கியில் ஒரு Sub-Court தொடங்கித் தரவேண்டும். இருக்கிற நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்டித் தரவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுகொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஜெகதப்பட்டினத்திலேயிருந்து நான்கு விசைப் படகுகளிலே மீன் பிடிக்கச் சென்ற 14 மீனவர்களை ஒரு மாத காலமாகக் காணவில்லை; இலங்கையிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்கள் தாயகம் திரும்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொண்டு, ஆளுநர் உரையின்மீது பேசத் தொடங்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, இப்போதுதான் தொடங்குகிறீர்களா? *(சிரிப்பு)*

**திரு. ப. அரசன்:** ஆளுநர் உரையிலே பேசுவதற்குத் தொடங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சனையிலே நம்முடைய அரசு மிகத் தாமதமாகத் தன்னுடைய பணியைத் தொடங்கியது என்று சொல்வதற்காக, நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன்.

1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில், மேட்டூர் அணையும், அதைப்போல, கர்நாடகத்திலே இருக்கிற கிருஷ்ணராஜசாகர் அணையும் ஜனவரி 28 ஆம் தேதி மூடப்பட்டுவிட வேண்டும். அதற்குப் பின்னாலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன், இந்தப் பிரச்சினை காவிரிப் பிரச்சினை என்பது நீதிமன்றத்திலே இருக்கிறது. நடுவர் மன்றத்திலே இருக்கிறது. நம்முடைய நியாயத்திற்காக உரிமைக்காக நாம் வாதாடிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. ப. அரசன்:** இப்போது நான் அந்த இடத்திற்கு வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. வாதாடிக் கொண்டிருக்கிற நேரம்; ஆகவே, இதிலே சிக்கலை உண்டாக்காமல் வேறு பிரச்சினை ஏதாவது இருந்தால் பேசுங்கள்.

**திரு. ப. அரசன்:** இல்லை. சிக்கல் இல்லாமலேயே நான் பேசுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்ல வருகிறேன் என்று சொன்னால், பிப்ரவரி மாதத்தில், மார்ச் மாதத்தில், ஏபால் மாதத்தில், கர்நாடகத்திலே 90 நாட்களில் விளைகிற குறுவைப் பயிரைப் பயிர் செய்கிறபோது நமக்குக் கிடைக்க வேண்டிய நீரை அவர்கள் பயன்படுத்தி விட்டார்கள். அந்த நேரத்திலே நம்முடைய அரசு விழிப்போடு செயலாற்றவில்லை. அப்போது கொஞ்சம் தாமதமாகச் செயலாற்றி...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசுதான் மிகவும் விழிப்புணர்வோடு இருந்து உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை ஆணித்தரமாகச் சொல்கிறேன்.

மே 2001-ல் இந்த அரசு பொறுப்பேற்றது. உடனடியாக ஜூன் மாதத்திலேயே நமது உரிமையைப் பெறுவதற்காக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளோம் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். அதன் பிறகு, படிப்படியாகப் பல்வேறு நிகழ்வுகள் நடத்திருக்கின்றன. அவற்றையெல்லாம் நினைவுகூர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொல்ல வந்தேன். பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதத்திலே நமக்குத் தரப்பட வேண்டிய தண்ணீரை கர்நாடக அரசு பயன்படுத்திவிட்டது. அப்படிப் பயன்படுத்தியதை நாம் தடுக்கவில்லை என்பதுதான். அதிலே கொஞ்சம் தாமதமாக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-ல் மே மாதத்தில்தான் தேர்தல் நடைபெற்றது. மே மாதத்தில்தான் இந்த அரசு பொறுப்பேற்றது. ஒரு மாதத்திற்குள்ளாகவே உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துவிட்டோம். இதைவிட விரைவாக எப்படிச் செயல்பட முடியும் என்று எனக்குத் தெரியவில்லை.



**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். நான் இந்த ஆண்டைச் சொல்கிறேன். இந்த ஆண்டிலே ஜனவரி 28-ஆம் தேதிக்குப் பிறகு, கர்நாடகத்திலே இருக்கிற கிருஷ்ணராஜசாகர் அணையிலேயிருந்து...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டவுடனேயே, நீண்ட நாள் பிரச்சினையாகக் காவிரிப் பிரச்சினை இங்கே இருப்பதைக் கருத்திலே கொண்டு, கர்நாடகா நமக்குத் தரவேண்டிய நீர்-- காவிரி நடுவர் மன்றத்திலேயிருந்து, இடைக்காலத் தீர்ப்பாக 205 டி.எம்.சி. நீர் தரப்பட வேண்டும் என்று வந்து, அந்த நீர் கால நேரத்திலே வந்து சேரவில்லை; காவிரி நதி நீர் ஆணையமும் அந்த நீரைப் பெற்றுத் தருவதற்குரிய ஆணையை உரிய நேரத்திலே பிறப்பிக்கவில்லை என்பதால், உரிய காலத்திலே, மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஒரு மாதத்திற்குள்ளாகவே உச்ச நீதிமன்றத்திற்கு இந்தப் பிரச்சினையை எடுத்துச் சென்றிருக்கிறார்களே; அது நாட்டு மக்களுக்கு நன்றாகவே தெரியும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 6-20*

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பாசன விவசாயிகள் இப்போது பல்வேறு முறையிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; மூன்று விதமாகப் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒன்று, விவசாயம் செய்து, அது கருகிப் போய்விட்டது. அந்த வகையிலே விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டாவது, பயிரே செய்யாமல்--பயிரே செய்ய முடியாமல்—தண்ணீர் தேவையான நேரத்திலே கிடைக்காமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மூன்றாவதாக, விவசாயப் பெருமக்கள், தங்களுடைய நெல் விளைந்துவிடும் என்று இருக்கிற நிலைமையில், இப்போது கடைசி நேரத்திலே தண்ணீர் இல்லாமல் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆக, மூன்றுவிதமாகப் பாதிக்கப்பட்டிருக்கிற அந்த டெல்டா பாசன விவசாயிகளுக்கு நம்முடைய ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருப்பதைப் போல, ஒவ்வொரு விவசாயிக்கும் ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபாய் தருவதற்கு மத்திய அரசுக்குச் சொல்லியிருக்கிறோம்

என்று சொல்லியிருப்பதைப் போல, இந்த அரசு அந்த மூன்றுவிதமான விவசாயிகளையும் சரியான முறையிலே கணக்கெடுத்து, அவர்களுக்கு நிவாரணம் தர வேண்டுமென நான் இந்த நேரத்திலே பணிவன்போடு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, கடுமையான வறட்சி தமிழகத்திலே நிலவிக் கொண்டிருக்கிறது. இலவச மதிய உணவெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்போது குடும்ப அட்டைக்குக் கொடுக்கிற அரிசியில், அந்தக் குடும்ப அட்டைதாரர்களுக்கு நான்கைந்து மாத காலத்திற்கு, 10 கிலோ அரிசியை 3 ரூபாய் 50 பைசா விலையிலேயே கொடுப்பதற்குத் தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். 10 கிலோ இல்லை என்றாலும், 5 கிலோ அரிசியையாவது, 3 ரூபாய் 50 பைசாவுக்குக் கொடுக்க வேண்டும். ஏற்கெனவே 20 கிலோ வாங்கி கொண்டிருக்கிறார்கள். 10 கிலோ அரிசியை 3 ரூபாய் 50 பைசா என்கிற விலையிலேயும், 10 கிலோ அரிசியை 6 ரூபாய் என்கிற விலையிலேயும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் 10 கிலோ அல்லது 5 கிலோ அரிசியாவது 3 ரூபாய் 50 பைசா அளவிலே கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலே நம்முடைய விவசாயிகள் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் விவசாயம் செய்கிறார்கள் என்பதை இந்த அரசு மிக நன்றாக அறியும். அப்படி இருக்கின்ற சூழ்நிலையிலே, சென்ற இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னாலேகூட புதுக்கோட்டை மாவட்டத்தில் மின்சாரத் தட்டுப்பாடு; விவசாயிகளுக்கு 8 மணி நேரம், 10 மணி நேரம்கூட மின்சாரம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன். எதிர்வரும் காலங்களில் மின்சாரம் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுடைய குறையைத் தீர்க்கின்ற வகையிலே, ஆழ்குழாய்க் கிணற்றை நம்பி, மின்சாரத்தை நம்பி விவசாயம் செய்கிற அந்த விவசாயிகளுக்கு 15 மணி நேரம், சரியான அளவிலே திட்டமிட்டு, காலையிலே 6 மணியிலே இருந்து 10 மணி வரைக்கும் அல்லது மதியம் 12 மணி வரைக்கும் அல்லது மாலை 6 மணியிலிருந்து விடியற்காலை வரை என்று, சரியான அறிவிப்போடு மின்சாரம்



தருவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் சமீப காலங்களில் கல்விக் கட்டணங்கள் எல்லாம் உயர்ந்திருக்கின்றன. ஓர் அரசினர் தொழில்நுட்பப் பயிலகத்திலே 200 ரூபாய் கட்டணம் கட்டிய ஒரு மாணவன் இன்றைக்கு 650 ரூபாய் கட்டுகிற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தக் கட்டண உயர்வு எப்படி வந்தது என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்த்து—ஏழை மாணவர்கள் படிக்கிறார்கள், கிராமப்புறங்களிலே இருந்து வந்து படிக்கிறார்கள். எனவே—தொழில்நுட்பக் கல்வி பயில்கிற அந்த மாணவர்களுடைய கல்விக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இன்றைக்கு பத்திரிகைகளிலே எல்லாம் வருகிறது; ஒற்றைச் சாளர முறை ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்று வருகிறது. நம்முடைய சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தர் இன்றைக்கு ஓர் அறிக்கையிலே தெளிவுபடுத்தியிருக்கிறார். இரண்டு, மூன்று நாட்களுக்குள் ஒரு சரியான தீர்வு ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன், ஒற்றைச் சாளர முறை மீண்டும் வரவேண்டும். அதிலே இட ஒதுக்கீடு வரவேண்டும். அதுமட்டுமல்ல; ஏற்கெனவே தமிழக அரசு அறிவித்த 25 சதவிகித கிராமப்புற மாணவர்களுக்கான இட ஒதுக்கீடும் வரவேண்டுமென நான் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன். அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில்...

பிற்பகல் 6-25

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே வைக்கும் கோரிக்கைகளைப் பார்க்கும்போது, உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளை அவர் படித்துத் தெரிந்துகொள்வதேயில்லை என்பது தெளிவாகிறது.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேண்டுகோளாகத்தான் சொன்னேன். படித்துவிட்டுத்தான் — அவருடைய அறிக்கையை—பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தருடைய அறிக்கையைப் படித்துவிட்டுத்தான் நான் இதைச்

சொல்கிறேன். ஒரு வேளை அந்த அறிக்கைகூட எனக்கு நம்பிக்கை தராதோ என்கிற அளவிலேதான், நான் இதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வறட்சியின் காரணமாக, தமிழகத்திலே குடிநீர்ப் பிரச்சினை வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, நம்முடைய தமிழக அரசு விரைந்து செயல்பட்டு, முறையாகத் திட்டமிட்டு, எந்தெந்தப் பகுதி எப்படிப் பாதிக்கப்படும் என்பதையெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக ஆய்ந்து, விரைந்து செயல்பட்டு குடிநீர்ப் பிரச்சினை ஏற்படாத அளவிற்குப் போர்க்கால அடிப்படையிலே பணியாற்ற வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன், இன்னும் ஒரு நிமிஷத்திலே உரையை முடியுங்கள்.

**திரு. ப. அரசன்:** ஒரு நிமிஷம் போதாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இன்னும் 5 பேர் பேச வேண்டும்.

**திரு. ப. அரசன்:** ஐந்து நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேண்டாம். ஒரு நிமிடத்திலே உரையை முடியுங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையோடு நிறையத் தர வேண்டும். ஏனென்று சொன்னால், வேலைவாய்ப்பை அளிக்கிறபொழுது நம்முடைய விவசாயப் பெருமக்கள், பாட்டாளிகள், தொழிலாளிகள், வேலையின் மூலமாக ஒரு நாளைக்கு 50, 60 ரூபாய் சம்பாதிக்கிற நிலைமை உருவாகும். அப்படி உருவாகிறபோது, அவர்கள் அரிசியைப் பெற்று வாழ்க்கையை நடத்துவதற்கான சூழ்நிலை உருவாகும். ஆகவே, 4 மாத காலத்திற்கு அதாவது மார்ச், ஏப்ரல், மே, ஜூன் மாதங்களுக்கு — ஏன் என்றால் ஜூனிலேதான் தென்மேற்குப் பருவ மழை, மற்ற பருவ மழைகளெல்லாம் தொடங்கும். அதுவரையிலும் உள்ள அந்த 4 மாத காலத்திற்கு— வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் நல்ல வேலைவாய்ப்பைத் தருவதற்கான முயற்சிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டும்.





**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணப் பணிகளுக்கும், விவசாயிகளுக்கு உதவி செய்வதற்கும், வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கும் நானும், இந்த அரசும் கருணையோடு தாராளமாக நிறையத் தர வேண்டுமென்று விரும்புகிறோம். எங்களைக் கேட்பதைவிட, அவர் சார்ந்திருக்கின்ற பி.ஜே.பி. ஆளுகின்ற மத்திய அரசு தாராள மனதோடு தமிழகத்திற்கு நிறைய அரிசி ஒதுக்கீடு செய்ய வேண்டும்; நிதி உதவியை அளிக்க வேண்டுமென்று அங்கே டெல்லியிலே போய் அவர் வாதிட்டால் நலமாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) பி.ஜே.பியைச் சேர்ந்த, தமிழகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள்கூட — மத்திய அமைச்சர்கள் — இந்தக் கோரிக்கையை டெல்லியிலே பிரதமரிடம் வைத்தால் நமக்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்வதைப்போல, நான் இன்னும் அந்த இயக்கத்திலே அவ்வளவு செல்வாக்குப் பெறவில்லை. (சிரிப்பு) இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்கிற கோரிக்கையை, எனக்குத் தெரிந்த மத்திய அமைச்சர்களிடத்திலும், எனக்குத் தெரிந்த பாராளுமன்ற உறுப்பினர்களிடத்திலேயும் சொல்லி, மத்திய அரசாங்கத்தை நிச்சயமாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்வேன் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, எங்களுடைய தளி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அவருடைய தொகுதியிலே யானைகள் அடிக்கடி மனிதர்களை மிதித்துக் கொன்றுவிடுவதாகவும், யானைகள் மனிதர்களைக் காயப்படுத்திவிடுவதாகவும் சொல்கிறார்கள். 7 பேர் இறந்து போயிருக்கிறார்கள். அதற்காக மத்திய அரசுகூட 10 இலட்சம் ரூபாய் பணம் ஒதுக்கியிருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, யானையால் மிதிபட்டு இறந்தவர்களுக்கு, ஒரு நபருக்கு 5 இலட்சம் ரூபாய் நிவாரணம் தர வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். அதைப்போல, காயம் பட்டவர்களுக்கு ஒருவருக்கு 50,000 ரூபாய் தர வேண்டுமென்றும் அவர்கள் கேட்கிறார்கள். அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு, யானையால் கொல்லப்பட்டவர்களுக்கும், யானையால் காயம்பட்டவர்களுக்கும் —

தளி தொகுதியில் இருக்கிற அவர்களுக்கு—உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, இந்த அரிய வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நீலகிரி மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக, கடந்த மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்பாக மாநில அரசு 21 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்தது. அந்த ஒதுக்கீடு செய்த தொகையில், 21 கோடி ரூபாய் மாநில அரசு ஒதுக்கிய நிதித் தொகையில் சிறிய பாலங்கள், ரோடுகள் போடப்படும் என்று மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், கடந்த 10 நாட்களுக்கு முன்பாக, ஏற்கெனவே ஒதுக்கீடு செய்த 21 கோடி ரூபாய் நிதியை வேறு மாவட்டங்களுக்குச் செலவிடுவதற்காக மாநில அரசு திரும்பப் பெறப் போகிறது என்ற ஓர் அச்ச உணர்வு நீலகிரி மாவட்ட மக்களிடத்திலே இருக்கின்றது. இந்த அச்ச உணர்வைப் போக்கி, ஏற்கெனவே ஒதுக்கீடு செய்த தொகையில் நீலகிரி மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, நீலகிரி மாவட்டத்தில் கடந்த நான்கு, ஐந்து ஆண்டு காலமாக, தேயிலைக்கு உரிய விலை கிடைக்கவில்லை.

பிற்பகல் 6-30

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இந்த மாவட்டத்தில் 65,000 சிறிய தேயிலை விவசாயிகள் இருக்கின்றார்கள். 1 கிலோ தேயிலை 6 ஆண்டு காலத்திற்கு முன்பு 18 ரூபாய்க்கு விற்றது. ஆனால் இப்போது 1 கிலோ தேயிலை 5 ரூபாய்க்கு மட்டுமே விற்றுக் கொண்டிருக்கிறது. பிறருக்கு உணவு அளித்த நீலகிரி மாவட்டத் தேயிலை விவசாயிகள் வேலை தேடி பிற மாவட்டங்களுக்குச் சென்று கொண்டிருக்கின்றார்கள். மாநில அரசானது தேயிலை விலையை உயர்த்துவதற்காக 'ஊட்டி டீ'யை அறிமுகப்படுத்தியது. ஆனால், ஊட்டி டீயை அறிமுகப்படுத்திய பிறகும்கூடத் தேயிலை விலை உயரவில்லை. ஹிந்துஸ்தான் லீவர் போன்ற பெரிய வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்துக் கொண்டு,





சிறிய விவசாயிகளுக்கு விலை கிடைக்காமல் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த சிண்டிகேட்டை உடைக்க மாநில அரசு ஒரு திட்டத்தை ஏற்கெனவே அறிவித்தது. ஏல மையத்திலே சிறு விவசாயிகளுக்கு பிரதிநிதித்துவம் இல்லை. அந்த விவசாயிகளுக்கு, மாநில அரசினுடைய பிரதிநிதித்துவம் இல்லை. மாநில அரசு அதிகாரி ஏல மையத்திலே கலந்துகொள்கின்ற ஒரு சூழ்நிலை உருவாக்கப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையிலேகூட இங்கே சொல்லப்பட்டது. ஆனால், இதுவரை விவசாயப் பிரதிநிதியும் இடம் பெறவில்லை. மாநில அரசின் பிரதிநிதியும் இடம் பெறவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலை விவசாயிகளுடைய நலனைக் காக்க வேண்டுமென்ற நோக்கோடு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு, அதற்காகத் தனியாக ஒரு கொள்முதல் அமைப்பும் உருவாக்க ஆணையிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அதிலே சிறு விவசாயிகளும், அதே நேரத்தில், அரசு அதிகாரிகளும் இடம் பெறுகின்ற நிலை உருவாக்கப்பட்டு இருக்கின்றது. புரோக்கர்கள் கையிலே சிக்கி சிறு விவசாயிகள் தத்தளிக்கின்ற நிலையை மாற்றி சிறு விவசாயிகளுக்குத் தேயிலைக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கோடு இந்த நடவடிக்கை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே எடுத்திருக்கிறார்கள். மைய அரசுக்கு, அனுமதிக்காக அது அனுப்பப்பட்டிருக்கிறது. மைய அரசினுடைய அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. விரைவில் கிடைக்க நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் அந்தப் புது அமைப்பு, கொள்முதல் அமைப்பு மாநில அரசினுடைய பொறுப்பில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்காததைக் கருத்திற்கொண்டு, மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். இலங்கை போன்ற நாடுகளிலிருந்து தேயிலை இறக்குமதி செய்யப்படுகிறது. அப்படி இறக்குமதி செய்கின்ற தேயிலைக்கு நீங்கள் 150 சதவிகிதம் இறக்குமதி வரி விதித்தால், நிச்சயமாக ஓரளவிற்கு நியாயமான விலை கிடைக்க வாய்ப்புகள் இருக்கின்றன.

நீலகிரி மாவட்டத் தேயிலை விவசாயிகளின் பிரச்சினைகளைக் கண்டறிவதற்காக மிஸ்ரா கமிட்டி அமைக்கப்பட்டு, அதனுடைய அறிக்கையும் மாநில அரசிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இதுவரை அந்த கமிட்டியின் அறிக்கையை மாநில அரசு வெளியிடாமல் இருக்கிறது. இதற்கிடையே அந்த மிஸ்ரா கமிட்டி அறிக்கையை உடனடியாக வெளியிட மாநில அரசு முன்வர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-35*

கடந்த 3 மாத காலமாக மத்திய அரசு டீ போர்டிலே ஒரு நல்ல நடவடிக்கையை எடுத்தது. அவர்கள் Tea Marketing Control Order என்று ஓர் உத்தரவினைப் பிறப்பித்தார்கள். அந்த உத்தரவைப் பிறப்பித்த பிறகு, தேயிலை வியாபாரிகள் அவர்களுக்கு கொள்ளை இலாபம் வரவில்லை என்று சொல்லி ஏல மையத்திலே தேயிலையை ஏலம் எடுக்காமல், ஸ்டிரைக் செய்து கொண்டு இருக்கிறார்கள். அது மட்டுமல்ல. ஹிந்துஸ்தான் லீவர் போன்ற பெரிய வியாபாரிகள் சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். நேற்றையதினம் Tea Marketing Control Order-க்கு சென்னை உயர் நீதிமன்றத்திலே தடையாணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. மாநில அரசு இந்தத் தடையாணையை நீக்குவதற்கு உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நீலகிரி மாவட்டத்தில் கட்டடம் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென்று சொன்னால், 3 துறைகளிடம் அனுமதி வாங்க வேண்டியிருக்கிறது. உள்ளாட்சி நிருவாகத்தின் அனுமதி வாங்க வேண்டும்; இரண்டாவது, வனத் துறையிடம் அனுமதி வாங்க வேண்டும்; மூன்றாவதாக, கனிம நிறுவனத்திடம் அனுமதி வாங்க வேண்டும். இப்படி ஒரு கட்டடம் கட்டுவதற்கு 3 துறைகளிடம் அனுமதி பெறுகின்ற ஒரு சூழ்நிலை வருகின்றபோது, யாருமே கட்டடம் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதைப் போக்கி, ஒரு நிறுவனத்திடம் மட்டும் — ஒரு துறையிடமிருந்து மட்டும் — அனுமதி பெற்று, கட்டடங்கள் கட்ட வேண்டுமென உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





நீலகிரி மாவட்டத்தில் கடந்த 3 மாத காலமாக, பொதுப் பணித் துறை மூலமாகக் கட்டடங்கள் கட்டப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால், எம்.எல்.ஏ. நிதியிலிருந்து கூட ஒரு மகளிர் சுகாதார வளாகம் கட்ட 2.25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. அதே தொகையைத்தான் மலைப் பகுதிக்கும் நீங்கள் ஒதுக்குகிறீர்கள். மலைப் பகுதிக்கு ஒதுக்குகின்றபோது 30 சதவீதம் அல்லது 40 சதவீதம் கூடுதலாக நிதியை ஒதுக்க வேண்டும். 3 மாதமாக பொதுப் பணித் துறை கான்டிராக்டர்கள் கட்டடமே கட்டவில்லை; கட்ட மாட்டோம் என்று தீர்மானம் போட்டு, எந்தக் கட்டடமும் கட்டப்படாமல் அப்படியே இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதற்கும் பொருந்தக்கூடிய ஓர் ஆணையை அரசு போட்டிருக்கிறது. உதாரணமாக, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி வந்த பின்னால், 200 ரூபாயாக, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இருந்த சிமெண்ட் விலை 110, 120 ரூபாய் என்ற நிலைக்குக் குறைந்தது. அப்படி சிமெண்ட் விலை குறைந்தும்கூட, இரும்பு விலை குறைந்தும்கூட, ஒப்பந்தக்காரர்கள் எல்லாம் estimate cost-ஐக் குறைக்காமல் இருந்தார்கள். அதையெல்லாம் கருத்தில்கொண்டு, actual cost-based estimate இருக்க வேண்டும் என்றுதான் அந்த வரையறை கொண்டு வரப்பட்டது. ஆனால், நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், தரைப் பகுதியிலிருந்து மலைப் பகுதிக்கு எடுத்துச் செல்கிற போக்குவரத்துச் செலவு அதிகமாக இருக்கிறது என்ற ஒரு கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். பொதுப் பணித் துறையும் தெரிவித்திருக்கிறது. அதை ஆய்ந்து, மலைப் பகுதிக்கு அதிலிருந்து விதிவிலக்கைக் கொடுப்பதா அல்லது அதை எப்படிக் குறைப்பது என்று அரசு விரைவிலே ஒரு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மணலானாலும், செங்கல் ஆனாலும், எந்த ஒரு raw material ஆனாலும் சமவெளிப் பிரதேசத்திலிருந்து வர வேண்டியிருக்கிறது. ஆகவே, இதுவரைக்கும் 27 சதவிகிதம் அதிகமாகச் செலவுகள் எல்லாம் உயர்ந்து அங்கே ஒப்பந்தக்காரர்களால் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கடந்த

[திரு. எச்.எம். ராஜு] [2003 ஜனவரி 29

முறைகூட நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்திலே சொன்னேன். சுகாதார வளாகம் கட்டுவதற்கு ரூ.2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் ஆகிறது; சமவெளிப் பிரதேசத்திலே ரூ.2 இலட்சம்தான் ஆகிறது. அதனால் அங்கே 24 வளாகங்கள் கட்ட நிதியொதுக்கம் செய்யப்பட்டதில் 19 வளாகங்கள்தான் கட்ட முடிந்தது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே சொன்னபோது, மீதமுள்ள 5 வளாகங்களையும், ஏதாவது ஒரு நிதியிலிருந்து கட்டிக் கொடுக்கச் சொல்வதாகச் சொன்னார்கள். எனவே, நீலகிரி மலைப் பிரதேசத்திற்கு இந்த raw materials எல்லாம் சமவெளிப் பிரதேசத்திலிருந்து வர வேண்டியிருக்கிற காரணத்தால் செலவு அதிகமாகிறது. தயவுசெய்து அதற்கு நீங்கள் ஒரு ஏற்பாட்டைச் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர், இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 6-40

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்ப் பகுதியிலே இருக்கின்ற estimate cost-ஐ விட மலைப் பகுதியிலே இருக்கின்ற estimate cost கூடுதலாக இருக்கிறது. அதை நிதி அமைச்சர் அவர்களும் புரிந்துகொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டுவதற்குக்கூட அங்கே இருக்கின்ற ஒப்பந்ததாரர்கள் முன்வரவில்லை. காரணம், கீழே இருக்கின்ற அதே தொகையை மலைப் பகுதிக்கும் நீங்கள் ஒதுக்குகின்றீர்கள். இப்பொழுது ஊட்டி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகமும், குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகமும் கூட இன்னும் கட்டப்படாமலேயே இருக்கின்றன. இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. ஆனால், நீங்கள் ஒதுக்குகின்ற தொகை போதுமானதாக இல்லை என்று சொல்லி பொதுப் பணித் துறை ஒப்பந்ததாரர்கள் வேலையை எடுக்க முன்வராத காரணத்தினால், நீங்கள் அந்த மலைப் பகுதிக்குக் கூடுதலாக நிதி ஒதுக்குவதற்கு உத்தரவிட வேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குன்னூர் அரசினர் மருத்துவமனையில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாகவே ரத்த வங்கியை ஆரம்பிப்பதற்கு எல்லா வசதிகளும் செய்யப்பட்டு, இதுவரை அந்த ரத்த வங்கி செயல்படாமல் இருக்கிறது. கட்டடம் கட்டப்பட்டு விட்டது; உரிய கருவிகளை வாங்கி வைத்தாகிவிட்டது. ஆனால், அந்த ரத்த வங்கியைச் செயல்படுத்துவதற்கு . . .



2003 ஜனவரி 29]

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் சொன்னதைப்போல, குன்னூர் அரசு மருத்துவமனையில் தொடங்கப்பட இருக்கிற ரத்த வங்கி முழுமை பெற்றுவிட்டது. அனைத்து உபகரணங்களும் வாங்கிக் கொடுக்கப்பட்டுவிட்டன. கட்டுமானப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. இருந்தாலும், ரத்த வங்கிக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று சொன்னால், நம்முடைய மாநில மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை அதிகாரியும், மத்திய அரசு மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை அதிகாரியும் ஆக 2 துறையினரும் சேர்ந்து ஓர் ஆய்வு நடத்த வேண்டும். அந்த ஆய்வுக்காகத் தேதி கேட்டிருக்கிறோம். மாநில அரசைப் பொறுத்தவரையில், எங்களுடைய துறை அதிகாரி ஆய்வு செய்வதற்குத் தயாராக இருக்கிறார். இருந்தாலும், joint inspection என்ற அந்த முறையில் மத்திய மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையைச் சேர்ந்த இயக்குநரிடமிருந்து தேதி கேட்டிருக்கிறோம். எனவே, அந்தத் தேதி நிர்ணயிக்கப்பட்டவுடன் inspection முடிந்து, நிச்சயமாக அந்த ரத்த வங்கி விரைவிலே திறக்கப்பட இருக்கிறது. மாண்புமிகு கந்தசாமி அவர்கள் என்னிடம் நேரிலே பல முறை அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். கந்தசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும் இந்த மன்றத்திலேயே Call attention Notice ஆகவும் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அந்தப் பணி விரைவிலே முடிக்கப்பட்டுவிடும் என்ற அந்த உறுதியை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குன்னூர் அரசினர் மருத்துவமனை கடந்த காலத்தில் சரியாகச் செயல்படவில்லை என்று பல முறை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றேன். அதற்கு உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன். கடந்த வெள்ளிக்கிழமையன்று கொளக்கொம்பையைச் சார்ந்த ஒரு பெண்; குழந்தை பெற்ற 12 மணி நேரத்தில் குழந்தைக்கும், தாய்க்கும் உடல்நிலை கெட்டுவிட்டது. உடனே அந்தப் பச்சிளம் குழந்தையையும், அந்தத் தாயையும் குன்னூர் அரசினர் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். கொண்டு சென்றபோது அவருக்கு O.P. சீட்டே கொடுக்கவில்லை. பகல் முழுவதும் ஏறத்தாழ 8 மணி நேரம் அந்தக் குழந்தையும், தாயும் ...... (மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

[2003 ஜனவரி 29

**திரு. கா. கந்தசாமி:** வெயிலிலே இருந்து, சிகிச்சையே அளிக்கவில்லை. O.P. சீட் இல்லாததால் டாக்டர்கள் சிகிச்சை அளிக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். அந்தக் குழந்தை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இறந்துவிட்டது. எனக்குத் தகவல் கிடைத்தவுடன், நான் சம்பந்தப்பட்ட டாக்டரிடம் விசாரித்தேன், ஏன் அந்தக் குழந்தைக்கும், தாய்க்கும் நீங்கள் சிகிச்சை அளிக்க மறுத்தீர்கள் என்று சொல்லி. அந்தக் குழந்தை illegal-ஆகப் பிறந்தது என்று அந்த டாக்டர் சொன்னார். குழந்தை எப்படிப் பிறந்தாலும்கூட, ஒரு டாக்டர் என்ற முறையில் மருத்துவமனைக்கு வந்தால், சிகிச்சை அளிக்க வேண்டியது அந்த டாக்டருடைய கடமை. எனவே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், சிகிச்சை அளிக்காமல் இருந்த அந்த டாக்டர் மீதும் O.P. சீட்டு கொடுக்காமல் இருந்தப் பணியாளர் மீதும் உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-45*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது குன்னூர் அரசு மருத்துவமனையிலே நடந்த ஒரு சம்பவத்தை இங்கே சொல்கிறார்கள். இதுகுறித்து இதுவரை என்னுடைய கவனத்திற்கோ, அரசினுடைய கவனத்திற்கோ வரவில்லை. முதன்முதலாக மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் இந்த மன்றத்திலே அதை எழுப்பியிருக்கிறார்கள். அவரே சொல்லியிருக்கிறார், அந்தக் குழந்தை மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை என்று. எனவே, அனுமதிக்கப்படாமல் இறந்துவிட்டதா அல்லது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பிறகு இறந்திருக்கிறதா என்ற அந்த விவரங்கள் குறித்தும், அந்தக் குழந்தையை மருத்துவமனையில் சேர்ப்பதற்கு மறுத்த அந்த மருத்துவ ஊழியர் பெயரையும், அதற்கு சிகிச்சை அளிக்க மறுத்த அந்த மருத்துவருடைய பெயரையும் எங்களுக்குப் புகாராக எழுதிக் கொடுப்பார்களேயானால், இந்த அரசு மனிதாபிமானமற்ற முறையில் நடந்துகொண்ட அவர்கள்மீது விசாரணை செய்து உரிய நடவடிக்கையை நிச்சயமாக எடுக்கும் என்ற அந்த உறுதியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கந்தசாமி இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.



2003 ஜனவரி 29]

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பற்றி இங்கே ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. நமது நிதியமைச்சர் அவர்கள், இந்தத் திட்டம் எவ்வாறு செயல்படும் என்பதைப் பற்றிச் சென்ற நிதிநிலை அறிக்கையிலேகூடச் சொன்னார்கள். ஆனால், இந்தத் திட்டம் சொல்வதற்கு நன்றாக இருக்குமே தவிர, நடைமுறைக்கு ஒத்து வராது. அவர்கள் சொன்னார்கள்; எந்தெந்த வட்டாரங்களிலே, என்னென்ன விவசாயப் பொருட்கள் கிடைக்கின்றனவோ, அவற்றைப் பயன்படுத்தி ஆங்காங்கே தொழில்களைத் தொடங்க முடியும் என்று அவர்கள் சொன்னார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஆனால், ஒரு நல்ல திட்டமான அந்தத் திட்டம் சரியாகச் செயல்படுவதற்கு வாய்ப்பில்லை. ஏனென்று சொன்னால், விவசாயப் பொருட்களை வைத்து தொழில்களைச் செய்கின்றபோது ஒரு பொருளை உற்பத்தி செய்கின்றபோது, அதை விற்பதற்கு வாய்ப்புகள் இல்லை. சர்வதேச மார்க்கெட்டிங் காரணமாக இன்றைக்கு உலக நாடுகளிலிருந்து PEPSI, COCA COLA போன்ற பொருட்கள் இங்கே வந்து, இங்கேயிருக்கின்ற சிறு தொழில்களை அழித்துக் கொண்டிருக்கின்றன. நமது நிதியமைச்சர் அவர்கள் 20 வருட காலத்திற்கு முன்பு போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தார்கள். அவர்கள் அடிக்கடி ஒன்றைச் சொன்னார்கள். பனைமரத்துப்பட்டி பகுதியிலே மல்லிகை நிறையக் கிடைக்கிறது. அதனை வைத்துக்கூட ... (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் தொகுதிக்கு வருகிறார். அப்போது அவரிடம் பேசிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. கா. கந்தசாமி:** ஒரேயொரு நிமிடம். பனைமரத்துப்பட்டி பகுதியில் மல்லிகை நிறையக் கிடைக்கிறது. அதை வைத்து மல்லிகைத் தைலம் தயாரிக்கப்படும் என்று அவர்கள் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலேகூடச் சொன்னார்கள். ஆனால், அது நடைமுறைக்கு வரவில்லை. எனவே, ஆங்காங்கே ஒவ்வொரு வட்டாரத்திலும் 1.00 கோடி ரூபாய் அளவிற்கு, 385 வட்டாரங்களிலும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் வெற்றி பெறும் என்று நான் நிச்சயமாக நம்பவில்லை. இதைப்பற்றி நீங்கள் சரியாக ஆராய்ந்து, இந்தத் திட்டம் வெற்றி பெறுமா என்பதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[2003 ஜனவரி 29

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம், அவர்களுடைய உணர்வுகள் தவறானவை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 20 ஆண்டுகளுக்கு முன்னால் மைய அரசு மேற்கொண்ட பொருளாதார அணுகுமுறை வேறாக இருந்தது. The Government of India was giving in those days importance only to the secondary sector in the economy.

அந்தத் தொழில் துறைக்கு மட்டும் அதாவது பெருந் தொழில்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்துத்தான். அப்போது ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மைய அரசினுடைய நிதி ஒதுக்கீடு அதற்கு இல்லை. ஆனால், தற்போது மைய அரசு, நடக்கின்ற இந்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கு Primary sector என்று சொல்லக்கூடிய விவசாயம் மற்றும் விவசாயத்தை ஒட்டிய தொழில்களுக்கு முக்கியத்துவத்தைத் தர நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதற்குக் காரணமே, பொருளாதாரத்தினுடைய உய்விற்கு primary sector-க்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டுமென்று மைய அரசு முடிவெடுத்ததுதான். அதன்படி அதிகப்படியான நிதியை அதற்கு ஒதுக்கியிருக்கிறது. அந்த அடிப்படையில் 60-லிருந்து 70 சதவிகிதம் மக்கள் வாழ்கிற கிராமப்புறத்தின் பொருளாதாரத்தை உயர்நிலைக்குக் கொண்டு வருகிறபோதுதான் unemployment problem will be solved; வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கிவிடும்; People living below poverty line அதாவது வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே வாழ்கிற மக்களுடைய நிலையில் முன்னேற்றம் ஏற்படும். இது மைய அரசினுடைய கொள்கை. மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவி அவர்களுடைய கொள்கை.

*பிற்பகல் 6-50*

அந்த அடிப்படையில்தான் விவசாயத்தை ஒட்டிய தொழில்கள், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் கொண்டுவரப்பட வேண்டும்; அப்போது அந்தத் தொழிற்சாலையிலே வேலை கிட்டுகிறது என்பது மட்டும் அல்ல; அந்தத் தொழிற்சாலைக்குப் பயன்படுத்துகிற மூலப் பொருட்கள், விவசாயத்தை ஒட்டிய பொருட்களாக இருக்கிறபோது, விவசாயிக்கும், விவசாயத் தொழிலாளிக்கும் வேலை கிடைக்கிறது. கிராமப்புற வருமானம் பெருகுகிறது. இந்த நோக்கத்தின் அடிப்படையில், இது அகில இந்தியாவிலேயே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டிய அணுகுமுறை. முன்னோடித் திட்டமாக தமிழகத்திலே இதைக் கொண்டு வந்திருக்கிறோம். 258 பஞ்சாயத்து யூனியன்களில் இதுகாறும் இதற்கான செயற்குறிப்புகள், திட்டங்கள், பொது



2003 ஜனவரி 29] [திரு. சி. பொன்னையன்]

மக்களிடமிருந்து, தனியார் துறையிடமிருந்து பெறப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இதை ஆளுநர் உரையிலே 258 செயற்குறிப்புகள் என்று சொல்கிறோம். நூற்றுக்கணக்கான மனுக்கள் வந்திருக்கின்றன. அவற்றை ஆய்ந்து, viability of the prcject என்ன என்பதைக் கண்டறிந்து, 258 தொழில்கள் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக ஒன்றே ஒன்று. புதிய கல்லூரி ஆரம்பிக்கின்றபோது, தனியாராக இருந்தாலும் சரி, அரசாக இருந்தாலும் சரி, 10 ஏக்கர் நிலம் வேண்டுமென்று நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். கீழ்ப் பகுதிகளில் 10 ஏக்கர் நிலம் கையகப்படுத்துவதிலே சிரமம் இருக்காது. ஆனால், நீலகிரி மாவட்டத்தில் கல்லூரி ஆரம்பிக்கின்றபோது, 10 ஏக்கர் நிலம் வாங்குவது என்பது கஷ்டமான காரியம். எனவே, நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், 10 ஏக்கருக்குப் பதிலாக, 3 அல்லது 4 ஏக்கர் வாங்கினால் போதும் என்று நீங்கள் தனியாக ஓர் உத்தரவைப் பிறப்பித்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. முருகவேல் ராஜன்.

***திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டிற்கான ஆளுநர் அவர்களின் உரையின்மீது நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தின்மீது உழைக்கும் மக்களின் பேரியக்கமாக இருக்கிற பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எனது கருத்துகளைப் பதிவு செய்ய வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என் பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே, மீண்டும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக இந்த அவையிலே கருத்துப் போர் நடத்துவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்காக, ஒடுக்கப்பட்ட தமிழ் இனத்தின் உயர்வுக்காக அனுதினமும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிற தமிழ் இனப் போராளி, ஏழையெளிய பாட்டாளி மக்களின் பங்காளனாக, நாளைய எதிர்காலத்தின் விடிவெள்ளியாக இருக்கிற மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்களுக்கும், பேரவையிலே உரை நிகழ்த்துவதற்கு வாய்ப்பளித்தமைக்காக கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர், தியாகச் செம்மல், தலைவர் ஜி.கே. மணி அவர்களுக்கும் என் நன்றியை நான் இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. க. முருகவேல் ராஜன்] [2003 ஜனவரி 29

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை என்பது, ஒரு அசாதாரணமான சூழ்நிலையிலே இங்கே நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு மாநிலங்களிலே தமிழ்நாட்டிற்கு மட்டும் 2003 ஆம் ஆண்டு என்பது, ஒரு வித்தியாசமான, நெருக்கடியான நிகழ்வு கொண்ட ஆண்டாகத் தொடங்கியிருக்கிறது. எப்படியென்று சொன்னால், வேலை இழந்த ஆயிரக்கணக்கான சாலைப் பணியாளர்கள், உரிமைக்காகவும், இழந்த சலுகைகளுக்காகவும் போராடும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மூடப்பட்டுக் கிடக்கும் கதவுகள் திறக்காதா என எண்ணிக் காத்திருக்கும் ஆயிரக்கணக்கான பஞ்சாலைத் தொழிலாளர்கள், வாழ்விழந்த நெசவாளர்கள், வறட்சியிலும், வறுமையிலும் போராடும் தமிழகத்து விவசாயிகள், வேலைவாய்ப்பைத் தேடி அலைந்து கொண்டிருக்கும் எண்ணற்ற இளைஞர்கள் போன்றவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு தருமா; இல்லையேல், குறைந்தபட்சம் பிரச்சினைகளுக்கு ஒரு சுமூகமான முடிவையாவது தருமா இந்த ஆளுநர் உரை என்று தமிழ்நாட்டு மக்களால் மிகவும் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட இந்த ஆளுநர் உரை எதிர்பார்ப்புகளுக்கு மாறாக, வழக்கம்போல் ஆளுங்கட்சி எழுதித் தருகிற ஒரு ஊதுகுழல் அறிக்கையாகவே அமைந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 6-55*

ஒருசில பாராட்டக்கூடிய அம்சங்களைத் தவிர பெரும்பாலும் ஆளுங்கட்சியைப் பாராட்டும் வகையிலே அமைந்த புகழ் உரையாகவே இந்த ஆளுநர் உரை அமைந்திருப்பது, தமிழ்நாட்டு மக்களுக்கு மிகப் பெரும் ஏமாற்றத்தை அளித்திருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து போய் இன்றைக்கு காமராஜ் காங்கிரஸ் என்ற இயக்கம், இங்கே பதிவு செய்யப்பட்ட இயக்கமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தக் கட்சியின் சார்பாகப் பேசிய எனது அருமைக்குரிய மூத்த உறுப்பினர் — வயதிலே மூத்தவர் என்னோடு மதுரைக்கு வருகிறபோது, இரயிலிலே எப்பொழுதும் கலகலப்பாகப் பேசுகிற, இரயில் பெட்டியில் கலகலப்பூட்டுகிற எங்கள் அண்ணன்— ஹக்கீம் அவர்கள், இரயில் பெட்டியைப் போலவே இன்றைக்கு சட்டசபையிலும் கலகலப்பூட்டியிருக்கிறார்கள். அந்த வகையிலே அவருக்கு நான் நன்றி சொல்கிறேன். ஆனால், நான் சொல்வேன். எங்களிடம் சன் டி.வி.யும் கிடையாது. ஜெயா டி.வி.யும் கிடையாது. பாட்டாளி வர்க்கத்திற்காக நாங்கள் பாடுபட்டுக் கொண்டிருப்பவர்கள்; செய்தியைச் சொல்வதற்குக்கூட ஒரு நல்ல



2003 ஜனவரி 29] [திரு. க. முருகவேல் ராஜன்]

பத்திரிகை இல்லாத நிலைமையில் இருக்கிற உழைக்கும் மக்களுக்காக உழைக்கிற கட்சி பாட்டாளி மக்கள் கட்சி. எங்கள் சார்பாக, அதிலும்கூடத் தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும். ஆரம்பக் கல்வியிலிருந்து ஆராய்ச்சிக் கல்வி வரைக்கும் தமிழையே நாம் பயன்படுத்த வேண்டும் என்று, ஒரு மொழிக் கொள்கைக்காக ஓயாது பாடுபட்டுக் கொண்டிருக்கிற மக்கள் காவலரின் தொண்டர்களாகிய எங்களுக்கு தமிழ் மொழிக்கு ஏற்பட்டிருக்கின்ற குந்தகத்தைப் பற்றிக் கூறுவதற்கு உரிமை இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, இந்த ஆளுநர் உரை மூன்றாவது உரை. முதல் உரையிலே மாண்புமிகு ஆளுநராக இருந்த பாத்திமா பீவி அவர்கள் ஆற்றிய அந்த உரையிலே 34-வது ஷரத்து, சென்ற ஆண்டு வாசிக்கப்பட்ட இரண்டாவது ஆளுநர் உரையில் 44-வது ஷரத்தும் என்ன சொல்கின்றன என்றால், இந்த ஆட்சி — அறிஞர் அண்ணாவின் பேரில் நடத்தப்படுகிற இந்த ஆட்சி — அறிஞர் அண்ணா அவர்கள் எந்தக் கொள்கைக்காக தன் உயிர் மூச்சு இருக்கும் வரை பாடுபட்டாரோ, அந்த இரு மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு முனைப்புக் கொண்டிருக்கிறது என்றும், அன்றாட நிர்வாகத்திலே தமிழ் மொழியினுடைய பயன்பாட்டை உறுதி செய்வதிலே இந்த அரசு அக்கறையோடு இருக்கிறது என்றும் ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதைச் சொல்லும்போது, நான் பழைய செய்திகளைச் சொல்வதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. வரலாறுகளைத் திருப்பிப் பார்க்காமல், வாழ்ந்த தலைவர்களின் வழியிலே நடக்காமல், ஒரு புதிய அத்தியாயத்தை, ஒரு புதிய சமூகத்தை நாம் படைக்க முடியாது. அறிஞர் அண்ணா அவர்கள் இரு மொழிக் கொள்கைக்காக இறுதி வரை போராடினார்கள். 1977-லிருந்து, இன்றைக்கு வரை எண்ணிப் பார்த்தால், கிட்டத்தட்ட 25 ஆண்டுகள்--கால் நூற்றாண்டு-- கடந்திருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், கால் நூற்றாண்டு காலமாக ஒரு பெரிய மரபை இங்கே உருவாக்கி வைத்திருக்கிறார்கள். இதைச் சொன்னால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லக்கூடும்; ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்கிறார்கள், எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே குற்றம் சாட்டுகிறார்கள், ஆளுநர் உரை தமிழிலேதான் படிக்கப்பட வேண்டுமென்று எந்த சட்ட ஷரத்துகளும் இல்லை. அப்படியிருக்கிறபோது, இதை உறுதிப்படுத்தக்கூடாது . . . .

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது முடிந்து போன விவகாரம். முதலமைச்சர் சொன்னார். சபாநாயகரும் அதற்குத் தீர்ப்பு சொல்லிவிட்டார்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கினாலும் பரவாயில்லை. இந்த அவைக்காவது தெரிய வேண்டும். நாட்டு மக்களுக்குத் தெரியவில்லையென்றாலும் பரவாயில்லை. ஏனென்றால், செத்தாலும் தமிழ் மொழிக்காகச் சாகவேண்டும் என்று சொல்கிற மாபெரும் தமிழ் மன்னர்கள் வழியிலே வந்த நாங்கள் இந்தச் செய்தியைச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்ல்ல, இல்லை. எல்லோரும் தமிழ் மறவர்களிலிருந்துதான் வந்தவர்கள்; நீங்கள் மட்டும் அல்ல.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் நீக்குவதாக இருந்தால் நீக்கிக் கொள்ளுங்கள். இப்படிக் குறுக்கீடுகள் செய்து என்னுடைய நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இப்போது வாசிக்கப்பட்டிருக்கிற இந்த ஆளுநர் உரையிலேகூட, இந்த அரசு தமிழ் மொழி, கலைப் பண்பாடுகளைப் பாதுகாப்பதற்காக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த ஆளுநர் உரை படிக்கப்படும்போது, பேரவைத் தலைவர் இருக்கையிலே இருந்தவர் சாதாரணப்பட்டவர் அல்ல. மொழிப் போர் வீரர்; நாவுக்கரசர். தமிழ்த் தாயினுடைய செல்லப் பிள்ளை. முத்தமிழ் அறிஞர். ** ஆதங்கமாக இருக்கிறது. (குறுக்கீடு) ஆதங்கமாக இருக்கிறது. எனவே, நாங்கள் சொல்ல விரும்புவது என்னவென்றால், இனி வருங்காலங்களிலாவது அந்த மரபைக் கடைப்பிடிக்கிற வகையிலே மாமன்றம் நடந்துகொள்ள வேண்டுமென்றும், அதற்கு ஆளுங்கட்சியினர் வழிவகை காண வேண்டுமென்று எங்களுடைய...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நேற்றே முதலிலே அதற்குத் தீர்ப்புச் சொல்லி முடிக்கப்பட்டுவிட்டது. திரும்ப அந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்து, பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2003 ஜனவரி 29]

*பிற்பகல் 7-00*

**திரு. க. முருகவேல் ராஜன்:** நேற்றே ஒரு தீர்ப்புச் சொல்லப்பட்டது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆளுநர் உரையைப் பற்றிய இந்தக் கருத்து திரும்ப வேண்டாம்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** தீர்ப்புத் தரப்பட்ட பிறகுதான் பல விஷயங்களும் பேசப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்திற்கு அன்றைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆதரவு அளித்தபோது, National Agenda-வில் தமிழ், ஆட்சிமொழியாக ஆக்கப்பட வேண்டுமென்ற ஒரு கருத்தை வைத்தார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம்; இன்றைக்கும் மத்திய அரசிலே அதற்கு ஆதரவு இருக்கிறது; அன்றைக்கும் குஜ்ரால் அரசுக்கு ஆதரவு கொடுத்தபோது, National Agenda-விலே தமிழை, இந்திய ஆட்சிமொழியாக ஆக்க வேண்டுமென்ற கருத்தை வைத்தார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழ் வழி நடக்கின்ற இந்த அரசின்மீது குறை சொல்ல வேண்டாம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை, ** என்ற ஒரு கருத்தைச் சொன்னார்; அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று நான் ஒரு கோரிக்கை வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ** என்ற அந்த ஒரு குறிப்பு இடம் பெற்றிருந்தால், அது நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் ஒன்றும் மாறாகப் பேசவில்லை. அதை நீக்க வேண்டிய அவசியம் இல்லை.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் புறம்பாகச் சொல்லியிருந்தால் . . .

**திரு. ஜி.கே. மணி:** ஆட்சியிலிருந்து என்று சொல்லவில்லை. (குறுக்கீடு) அப்படி அவர் சொல்லவில்லை; அந்த மாதிரி சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினரே சொல்லிவிட்டார் . . . (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார், நீக்குவதாக இருந்தால், நீக்குங்கள் என்று.

**திரு. க. முருகவேல் ராஜன்:** நான் சொல்லியதனுடைய பொருளை அப்படி எடுத்துக்கொள்வதாக இருந்தால், அதைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கலாம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** என்று சொன்னதை ** என்று சொல்லவில்லை. ஆளுநர் உரையைத் தமிழிலே வாசிக்கின்ற மரபு, பேரவைத் தலைவர் அவர்கள் வாசிக்கின்ற ஒரு மரபு இருந்தது; அதை மாற்ற வேண்டாம்; அந்த மரபு கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்கிற கருத்தைத்தான், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அடுத்த பிரச்சினைக்கு வருகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையின் ஷரத்து 4-லே சொல்லப்பட்டிருக்கிற செய்தி; "2002 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு திறமையாகப் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது என்பதை நான் மகிழ்வுடன் குறிப்பிட விரும்புகிறேன்" என்று நம்முடைய ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில், சட்டம்-ஒழுங்கு பராமரிக்கப்படுகிறது என்று சொன்னால், கொலை, கொள்ளை, களவு, வழிப்பறிக் கொள்ளை, கள்ளச் சாராயம் போன்ற சட்ட விரோதச் செயல்கள், கள்ளச் சாராயச் சாவுகள் குறைந்திருக்கின்றன; சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையை நாங்கள் ஒரு கட்டுக்குள் கொண்டு வைத்திருக்கிறோம் என்று சொல்வதற்கு, ஆளுங்கட்சி இதுபோன்ற செய்திகளை உதாரணங்களாக எடுத்து வைத்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்; அது பொருளுள்ளதாக இருந்திருக்கும். மாறாக, சட்டம்-ஒழுங்கு சிறப்பாகப் பராமரிக்கப்பட்டது என்பதற்காக, அதற்கு ஆதாரவாக ஆளுங்கட்சி எடுத்துக் கொண்டிருக்கின்ற, இந்த அரசு எடுத்துக்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2003 ஜனவரி 29] [திரு. க. முருகவேல் ராஜன்]

கொண்டிருக்கிற உதாரணங்களை நாம பார்க்க வேண்டும். "சிறுபான்மையினரின் சமய விழாக்கள் உள்பட, அனைத்து சமய விழாக்களும் அமைதியான முறையில் நடைபெற்றன; பல ஆண்டுகளுக்குப் பிறகு, சிவகங்கை மாவட்டத்தில் கண்டதேவி தேர்த் திருவிழா வெற்றிகரமாக நடைபெற்றது" என்றுள்ளது. சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையைச் சிறப்பாகப் பராமரிக்கிறோம் என்பதற்காக, சிறுபான்மையினர் சம்பந்தப்பட்ட செய்திகளையும், தாழ்த்தப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட செய்திகளையும் எடுத்துத்தான் சட்டம்-ஒழுங்கை நாங்கள் சரியாகப் பராமரித்திருக்கிறோம்; கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறோம் என்று பேச வேண்டிய நிலைமை சரிதானா, அந்த முறை சரிதானா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிறுபான்மையினரின் சமய விழாக்கள் உள்பட, அனைத்து சமய விழாக்களும் அமைதியான முறையில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்த இந்த அரசு அனுதினமும் சிறுபான்மையின மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் தங்கள் உரிமை பறிக்கப்பட்டதற்கான ஒரு சட்டம் இயற்றியதற்காகத் தெருக்களிலே கூடுவதற்கும், போராடுவதற்கும், இன்றளவிலும் அவர்கள்--சட்டத்தை நீக்குவதற்கு-- பாடுபட்டுக் கொண்டிருப்பதற்கான ஒரு நிலைமையை ஏன் உருவாக்கி இருக்கிறீர்கள்? மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்ததன்மூலம், இன்றைக்கு சிறுபான்மை மக்களின் மனங்களில் எல்லாம் ரத்தத்தைக் கசிய விட்டிருக்கிறது; பட்டியலின மக்களின் உணர்வுகளுக்கு இந்த அரசு குந்தகம் விளைவித்திருக்கிறது என நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை மக்களுடைய உரிமையைப் பறிக்கக்கூடிய சட்டங்களை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது மிகத் தவறான ஒன்று. கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்திற்கும், மதமாற்றத் தடைச் சட்டத்திற்கும் மாறுபாடு உண்டு. நாங்கள் மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டுவரவில்லை. கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் என்பது, பெரும்பான்மை மக்களுக்கும் பொருந்தும். இந்து மதத்தைச் சார்ந்தவர்களாயினும், கட்டாயமாக பிற மதத்தவர்களைத் தங்கள் மதத்திற்கு இழுத்தால் அவர்கள் மீதும் அந்தச் சட்டம் பாயும்; எல்லோருக்கும் பொதுவான சட்டம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 7-05*

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டம்-ஒழுங்கு சிறப்பாகப் பராமரிக்கப்பட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முருகவேல் ராஜன், ஏன் என்னைப் பதவி இறக்கம் செய்துவிட்டீர்கள்?

**திரு. க. முருகவேல் ராஜன்:** மன்னிக்க வேண்டும்; பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்-ஒழுங்கு பராமரிப்புக்காக அடுத்தபடியாக எடுத்துக் கொண்டிருக்கிற அந்தச் செய்தியை நாம் பார்க்க வேண்டும். காலையிலே பேசுகிறபோதுகூட மாண்புமிகு உறுப்பினர், சொல்லாற்றலிலே. பேச்சாற்றலிலே சிறந்து விளங்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் அருமைச் சகோதரி வளர்மதி ஜெபராஜ் அவர்கள்கூடச் சொல்கிறபோது, கண்டதேவி தேர்த் திருவிழாவை வெற்றிகரமாக நடத்தி, இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தின் கண்கண்ட தெய்வமாக இருக்கிறார்கள் என்றுகூடக் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு. அந்தப் பொருள் இன்றைக்கு மிக முக்கியமான பொருளாக எடுக்கப்பட்டு இருக்கிறது. கண்டதேவி தேர் ஓடியது என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. ** *(மணியடிக்கப்பெற்றது.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முருகவேல் ராஜன், தேர் இப்போதுதான் ஓடிக்கொண்டிருக்கிறது; மறுபடியும் நிறுத்திவிடாதீர்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முக்கியமான பிரச்சினை இது; சமூக உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினை; பேசி, முடிவு செய்து, இரண்டு பக்கத்திலும் ஓர் இணக்கமான சூழ்நிலையை உருவாக்கி, தேரை ஓட வைத்து இருக்கிறார்கள். ஆகவே, அதற்குள்ளே போய் மறுபடியும் இந்தப் பிரச்சினையைக் கிளறவேண்டாம்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** நானும் அங்கே இணக்கமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் பேசுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, ** *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முருகவேல் ராஜன் அவர்கள் தயவுசெய்து, கவனிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். சுமுக முறையிலே இரு பிரிவினருக்கும் உள்ள கருத்து வேறுபாடுகள் எல்லாம் பேசப்பட்டு, தீர்க்கப்பட்டு, ஒரு சுமுக உறவு அங்கே நடைமுறையில் இருக்கிறது. கடந்த கால வன்முறைச் சம்பவங்களோ, கசப்பு உணர்வுகளோ, எல்லாம் மறைந்த நிலையில் ஒரு சுமுக உறவு இருக்கின்ற நிலையில் இதைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேசாமல் இருப்பது, அமைதிக்கு உகந்ததாக இருக்கும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முருகவேல் ராஜன், அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. வேறு பிரச்சினையைப் பற்றிப் பேசுவதாக இருந்தால் பேசுங்கள்; அல்லது இதோடு பேச்சை முடியுங்கள் *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு சிவகங்கை மாவட்டத்திலே நடைபெற்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் துறையினுடைய அமைச்சர் என்ற முறையிலே என்னையும் சிவகங்கை மாவட்டத்தினுடைய காவல் துறைக் கண்காணிப்பாளர், மற்றும் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரையும் அனுப்பி அங்கே இருக்கின்ற இரண்டு சமுதாய மக்களையும் அழைத்துப்பேசி, எடுக்கப்பட்ட முடிவுக்குப் பின்பு கண்டதேவி தேர் மிகச் சிறந்த முறையில் ஓட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பிரச்சினையைக் கிளப்பி, அங்கே இருக்கின்ற மக்களிடத்திலே ஒற்றுமையைக் குலைக்க வேண்டாம் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த பிரச்சினை ஏதாவது பேசி இரண்டு நிமிடத்தில் முடியுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2003 ஜனவரி 29

**திரு. க. முருகவேல் ராஜன்:** எனக்கு நீங்கள் கொடுத்த நேரம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இன்னும் 2 பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. க. முருகவேல் ராஜன்:** ஒரு பிரச்சினைக்குரிய பிரச்சினையைப் பேசுவதாலே நேரம் மறுக்கப்படக் கூடாது. பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதற்காக அல்ல. ஏற்கெனவே நீங்கள் 10 நிமிடங்களுக்கு மேல் பேசி இருக்கிறீர்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கண்டதேவி சம்பந்தப்பட்டு நீங்கள் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. வேறு பிரச்சினையைப் பற்றிப் பேச வேண்டுமானால் பேசி, 2 நிமிடத்தில் முடியுங்கள். இல்லாவிட்டால், அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டு விடுவேன். (குறுக்கீடு) அது ஒரு முக்கியமான பிரச்சினை; ஏகப்பட்ட, சிக்கல்பட்ட பிரச்சினை அது என்பது தெரியும்; பேசி முடிவு பண்ணிவிட்டார்கள். மறுபடியும் குழப்பத்தை உண்டாக்கிவிடக்கூடாது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்).....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன், 2 நிமிடம் அவருக்குக் கொடுங்கள். திரு. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அதைப்போலவே இந்த 4-வது ஷரத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது: "தருமபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட சமூகப் பொருளாதார ஏற்றதாழ்வுகளைச் சாதகமாக்கிக் கொண்டுதான் நக்சல்பாரிகள் அங்கே வளருவதற்கு முயற்சித்தார்கள் என்றும், எனவே, தருமபுரி மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான திட்டம் ஒன்றைத் தீட்டுவதன் மூலம், உருவாக்குவதன் மூலம், நக்சல்பாரிகளின் வளர்ச்சியை அரசு தடுக்க முன்வந்து இருக்கிறது என்றும் சொல்கிறார்கள்; மகிழ்வுடன் வரவேற்கிறேன்; இந்த ஒரு விஷயத்தை நாங்கள் மகிழ்வுடன் வரவேற்கிறோம். சமூகப் பொருளாதார ஏற்றதாழ்வுகள்தான்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2003 ஜனவரி 29] [திரு. க. முருகவேல் ராஜன்]

பிற்பகல் 7-10

இளைஞர்களைத் தவறான வழிகளுக்கு இட்டுச் செல்கின்றன என்பதைப் புரிந்துகொண்டமைக்காக நாங்கள் மிகவும் மகிழ்ச்சியுடையவர்களாக இருக்கிறோம். ஆனால் சமூகப் பொருளாதார ஏற்றதாழ்வு என்பதை ஏதோ தருமபுரி மாவட்டத்திற்கு மட்டும் உள்ள பிரச்சினையாக நாம் பார்க்கக்கூடாது. இன்றைக்கு தருமபுரி மாவட்டத்தில் கூடியவர்கள் அனைவரும் தமிழகத்தின் பல்வேறு முனைகளிலிருந்து வந்துதான் கூடினார்கள், கூட்டம் நடத்தினார்கள் என்று நேற்று இந்த அவையிலே பேசுகிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூடச் சுட்டிக்காட்டினார்கள் இங்கே சமூக பொருளாதார ஏற்றதாழ்வுகளை மட்டும் நாம் பிரச்சினையாகப் பார்ப்பதைவிட, சமூக ஏற்றதாழ்வுகளையும் நாம் பிரச்சினைகளாக எடுத்துக்கொண்டால், இன்னும் விரைவிலே இளைஞர்கள் தீவிரவாதப் பாதைக்குப் போவதைத் திருப்ப முடியும் என்று கருதுகிறோம்.

கந்து வட்டியை மட்டும் ஒழித்தால் போதாது. இந்தப் பேரவையிலே, கன்னிப் பேச்சாக வினாவை எழுப்புகிறபோதே கேட்டேன்; கந்து வட்டியோடு கட்டப் பஞ்சாயத்தையும் ஒழிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று நான் என்னுடைய கன்னி வினாவாகக் கேட்கிறபோது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்கூட, கட்டப் பஞ்சாயத்தையும், கந்து வட்டியையும் ஒழிப்பதற்கு இந்த அரசு உறுதி கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்கள், இந்தப் பிரச்சினையில் கந்து வட்டியை மட்டும் ஒழிப்பதற்கு ஒரு சட்டம் போட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, பாட்டாளி மக்கள் கட்சி எதைக் கேட்க விரும்புகிறது என்றால், கந்து வட்டியும், கட்டப் பஞ்சாயத்தும் ஒட்டிப் பிறந்த இரட்டைப் பிறவிகள். கள்ளச்சாராயம் அதோடு பிறந்த இன்னொரு பிறப்பாக இருப்பதாலே, கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு நம்மிடம் சட்டம் இருக்கிறது. ஆனால், இப்போது காவல் நிலையங்களைப் பொய்யாக்கிவிட்டு, --எப்படித் தொழில்கள், கல்வி நிலையங்கள் இப்போது தனியார்மயம் ஆகிக் கொண்டிருக்கின்றனவோ அப்படி-- நீதிமன்றங்களும், காவல்துறையும் தனியார்மயமாகிக் கொண்டிருக்கின்றன; கட்டப் பஞ்சாயத்து மூலமாக, அடாவடிப் பேர்வழிகளின் மூலமாக இன்றைக்குக் கட்டப் பஞ்சாயத்துக் கூடங்கள் உருவாகிக் கொண்டு இருக்கின்றன. எனவே, இதைப்போன்று, நீதிபதி மோகன் அவர்கள்கூட, தென்னாட்டிலே தொடர்ந்து நடக்கிற வன்முறைகளை, சாதிக் கலவரங்களை ஒடுக்குவதற்கு— என்ற காரணம்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம்பொதுவாக, கட்டப் பஞ்சாயத்துகள் காவல் துறை வசம் இருக்கின்றன என்று கூறுகிறார்கள். கட்டப் பஞ்சாயத்து எங்கெங்கு மக்களைப் பாதிக்கின்ற நிலையில் இருக்கிறதோ, அந்தத் தகவலைச் சொல்லுங்கள். கடுமையான நடவடிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்து வருகிறார்கள். கட்டப் பஞ்சாயத்தில் ஈடுபடுகிறவர்கள் ஆளும் கட்சிக்காரர்களாக இருந்தாலும், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அரசின் கவனத்திற்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் கொண்டு வாருங்கள், பாரபட்சம் இல்லாமல், கட்சி பேதம் இல்லாமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுத்து அந்தக் கட்டப் பஞ்சாயத்தில் ஈடுபடுகிறவர்களைச் சட்டத்தின் பிடியில் சிக்க வைத்து நடவடிக்கை எடுப்பார்கள் என்று அரசின் சார்பில் உறுதியைக் கூறுகின்றேன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** உறுதியைக் கொடுத்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முருகவேல் ராஜன், இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதி மோகன் அவர்கள் அறிக்கையில், சாதிக் கலவரங்கள் தடுக்கப்பட வேண்டுமென்றால், தென்னாட்டிலே தொழில் வளர்ச்சி பெருக வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தருமபுரியின் கட்டமைப்பில் தொழில் வளர்ச்சியைப் பெருக்கி சமூக பொருளாதார ஏற்றதாழ்வுகளை நீக்கி அங்கே அமைதி திரும்புவதற்கான வழிவகை காணுகிற அவர்கள், நாடு முழுவதும் அத்தகைய ஒரு நடவடிக்கையை மேற்கொண்டு, வேறு எங்கும் இளைஞர்கள் தீவிரவாதப் பாதைக்குச் சென்று விடாமல் தடுப்பதற்கு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதே பகுதியிலே, காவலர்கள் குறை தீர்ப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5 நாட்களில் விரிவான கூட்டங்களை நடத்தி,





காவல் துறையினரின் மன உறுதியை உயர்த்துகிற நிலைமையை உருவாக்கி இருக்கிறார்கள், அதற்காக முதலமைச்சர் அவர்களைப் பாராட்ட விழைகிறேன் என்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கிற ஆட்சியாளர்கள் தேர்தலைச் சந்திக்கிறபோதே, தங்களுடைய தேர்தல் அறிக்கையிலே காவல் துறையினர் நீண்ட காலமாகக் கேட்டு வருகிற காவலர் சங்கம் வைப்பதற்கு, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டால், நிச்சயமாக வழிவகை காணும் என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்குக் காவலர் சங்கம் வைக்கக் கோருகிற கோரிக்கையை மாற்றுவதற்கு, திசை திருப்புகிற முயற்சியாகத்தான் இப்போது இத்தகைய கூட்டங்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இங்கே என்ன நடக்கிறது என்றால், காவலர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். திரு. நன்மாறன் (குறுக்கீடு) நீங்கள் சொன்னது; நீதியரசர் ரத்தினவேல் பாண்டியனுடைய அறிக்கை அது; தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க வேண்டும் என்று சொன்னது.

**திரு. க. முருகவேல் ராஜன்:** நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் அறிக்கை என்று அதை எடுத்துக்கொள்ளலாம். பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள் முருகவேல்ராஜன். திரு. நன்மாறன். (குறுக்கீடு)

**திரு. க. முருகவேல் ராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன். அதைப்போலவே காவலர்கள் மனு கொடுக்க வருகிறபோது, குறை தீர்க்கிற கூட்டத்திற்கு வருகிறபோது, இடமாற்றம், பணிமாற்றம் போன்ற சிறிய கோரிக்கைகளைத் தவிர, தங்கள் மேல் அதிகாரிகள் தங்களுக்குக் கொடுக்கின்ற தொந்தரவுகளைப் பற்றி மனு கொடுப்பதற்குக்கூட அனுமதிப்பது இல்லை, 'வடிகட்டப்படுகிறோம், எனவே காவலர்களுக்குச் சங்கம் வைப்பது ஒன்றுதான் சரியான தீர்வாக இருக்கும்' என்பதைக் காவலர்கள் இப்போது கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த அரசு கூட்டங்களை நடத்தி, குறைகளைக் கேட்பதைவிட, காவலர்கள் சங்கம் வைப்பதற்கு வாய்ப்புக் கொடுக்கிற வகையை உருவாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[2003 ஜனவரி 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அத்தோடு உரையை முடியுங்கள், அவ்வளவுதான். திரு. நன்மாறன்.

*பிற்பகல் 7-15*

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை, இன்றைக்குத் தமிழக மக்களுடைய எதிர்பார்ப்பிற்கு ஏற்ப இல்லை என்பதை வருத்தத்தோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். மன்றத்திற்கு வெளியே இருக்கக்கூடிய மக்கள், இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப ஆளுநர் உரை அமையும் என்று எதிர்பார்க்கிறார்கள். உலக மயம், தாராளமயம், தனியார்மயம் என்கிற L.P.G. என்று அழைக்கப்படுகிற அந்த அச்சமான சூழலில் ஒவ்வொரு துறையும் கடுமையான பாதிப்புக்கு ஆளாகிற நேரத்தில், அதனைத் தவிர்க்கிற முறையில், மக்களுக்கு ஆதரவு தரக்கூடிய முறையில் அறிக்கை இல்லை என்பதையும், இது ஏமாற்றம் அளிக்கிறது என்பதையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில், ஆளுநர் உரை ஆங்கிலத்தில் அமைந்ததை அனைவரும் அறிவோம். அதனுடைய மொழிபெயர்ப்புக் குறித்து ஏற்கெனவே இங்கே பேசப்பட்டது. ஆனால் எதிர் வரும் காலத்தில் அப்படி அமையக் கூடாது என்பதை நாங்கள் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த மன்றம் ஆங்கில வழியிலேயே நடத்தப்பட்டு, அதிலிருந்து மீள்வதற்காகவே தமிழ் மொழியில் வேண்டும் என்பதற்காக நீண்ட போராட்டம் நடந்திருக்கிறது. அதனுடைய விவாரங்களுக்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை. நீண்ட போராட்டத்திற்குப் பின்னால் தமிழ் இடம் பெற்று இருக்கிறது. ஆளுநர் உரை என்பது அரசின் கொள்கை அறிவிப்பு. யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே என்று கூறுவதுபோல, இந்த அரசு எவ்வாறு செயல்படும் என்பதற்கு ஓர் அறிவிப்பாக ஆளுநர் உரை அமைகிறது. அதை ஆங்கிலத்தோடு நிறுத்தி விடுவது என்பது, தமிழக மக்களுக்கு இழைக்கிற நீதியாக இருக்காது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர் வரும் காலத்தில், அதனுடைய மொழிபெயர்ப்புத் தமிழில் இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்துகிறேன். வேண்டுமானால், ஒரு திருத்தம் செய்யலாம். ஆளுநர் உரை தமிழில் படிக்கப்பட்டதாகக் கருதிப் பதிவு செய்யப்பட வேண்டுமென்று இங்கே ஒரு தீர்ப்புச் சொல்லப்பட்டது. ஆளுநர் உரை வேண்டுமானால் வாசிக்கப்பட்டதாகக் கருதிப் பதிவு செய்யப்படலாமே தவிர, தமிழில் வாசித்ததாகப் பதிவு செய்வது என்பது பொருந்தாது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2003 ஜனவரி 29] [திரு. என். நன்மாறன்]

அடுத்து, தமிழ்நாட்டில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், மக்களவை உறுப்பினர், ஒரு குறிப்பிட்ட இயக்கத்தினுடைய முன்னணித் தலைவர், வைகோ அவர்கள் பொடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு இருக்கிறார். அவருடைய கொள்கைகளில் எல்லாம் எங்களுக்கு உடன்பாடு இல்லை. ஆனால் பொடா-வின் கீழ்-- பொடா என்பதே தமிழகத்தில் பயன்படுத்தப்படக் கூடாது என்பது எங்களது நிலை. இதில் --வைகோ அவர்கள் நெடுங்காலமாகச் சிறையிலேயே இருப்பது என்பது பொருந்தாது. அவரும் இந்தச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ள மற்றவர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த அறிக்கையில் தொழிலாளர் நிலை என்பது சொல்லாமல் விடப்பட்டு இருக்கிறது. போக்குவரத்துத் தொழிலாளர்கள்—இந்த நேரத்தில் நாங்கள் இங்கு வரும்போது—எல்லோரும் கேட்கிறார்கள், அது என்ன, இது என்ன என்று. நான் ஒன்றும் சொல்ல முடியவில்லை. போக்குவரத்து என்பது தமிழக அரசின் கையில் என்ன இருக்கும்? எவ்வளவு நாளைக்கு இது உத்தரவாதமாக இருக்கும்? ஒவ்வொரு நோமும் ஒவ்வோர் அறிவிப்பு வருகிறது. என்னதான் நடக்கிறது என்பதில் தொழிலாளர்கள் மத்தியில் ஓர் அச்சமற்ற சூழ்நிலையை உருவாக்கி, நாட்டுடைமை என்கிற அந்த உயரிய கோட்பாட்டிலிருந்து தமிழக அரசு விடுபடவில்லை என்பதை உறுதி செய்யக்கூடிய முறையில் கவர்னருடைய உரை அமைந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி அமையவில்லை.

அதேபோலச் சாலைப் பணியாளர்கள் — இன்றைக்குக் காலையில்கூட செய்தி வந்தது. சாலைப் பணியாளர்கள் — ஏற்கெனவே ஒரே நாள் இரவில் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். சாத்தான்குளத்தில் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற ஒரு செய்தியும் வந்தது. சாலைப் பணியாளர்கள் எதிர்பார்க்கிறார்கள், சட்டமன்றம் கூடுகின்ற நேரத்தில் ஏதாவது வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று. அது சம்பந்தமாகவும் அறிக்கையில் இல்லையென்று வருத்தத்தோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மூடிய ஆலைகள் திறக்கப்படுமா என்று ஆலைத் தொழிலாளர்கள் விடாமல் வருகிறார்கள்; எம்.எல்.ஏ.க்களிடம் கையெழுத்து வாங்குகிறார்கள்; எல்லோருக்கும் தெரியும். மோசடி பண்ணுகிற ஆள் வேகவேகமாக மோசடி

பண்ணிவிட்டுப் போய்விடுகிறான். உண்மையாக வேலை பார்க்கிற ஆள் எட்டு இடங்களில் கையெழுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அந்தக் கையெழுத்தில், ஒரு கையெழுத்து miss ஆகிவிட்டால், திருப்பி விடுகிறான். பாவம், அவர்கள் முடியாத காலத்தில், அவர்களுக்கு உரிய தொகையை, வாங்குவதற்குக்கூடக் கஷ்டப்படுகிறார்கள். ஆலை திறக்காதா, வாழ்க்கைக்கு விடிவு பிறக்காதா என்று கவலையோடு இருக்கிறார்கள். அது சம்பந்தமாகவும் அறிக்கையில் இல்லை.

கைத்தறி பாதுகாக்கப்பட வேண்டும். இலவச வேட்டி-சேலை என்பது எப்போது ரத்து செய்யப்பட்டதோ, அதிலிருந்தே கைத்தறி நலிவடைந்துவிட்டது. இலவச வேட்டி-சேலைத் திட்டம் மீண்டும் வருமென்று அறிக்கையில் இடம் பெறவேண்டும்; ஆனால் இடம் பெறவில்லை.

அதேபோல நகைத் தொழிலாளர்கள்; நன்றாகப் போய்க்கொண்டிருந்த ஒரு தொழில், இன்றைக்கு எல்லா மாவட்டங்களிலும் மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுடைய அந்தத் தொழில் மேம்பாட்டிற்காகவும் அறிக்கையில் எதுவும் இல்லாதது வருந்தத்தக்கது.

இந்த அறிக்கையில் ஓர் இடத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்-ஆசிரியர் பிரச்சினை முறையாகவும் மதிநுட்பமாகவும் கையாளப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வாறு இல்லை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தொடர்ந்து இந்த மன்றத்திலே தலைவர்களோடு பேச வேண்டும்; பேசித் தீர்வு காணக் கூப்பிடுங்கள், என்றோம். அதிலேயும் ஒரு பிடிவாதம் காட்டினீர்கள் நீண்ட நாட்களாகி ஒரு மிகுந்த கவலைக்குரிய தன்மை என்பது உருவானது. அது முறையாக, மதிநுட்பமாகத் தீர்க்கப்படவில்லை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 7-20*

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தை இந்த அவையிலே பதிய வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தீவிர நடவடிக்கையாலே, இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கக்கூடிய



அத்தனை நெசவாள மக்களும் இன்புற்றிருக்கக்கூடிய ஒரு நிலையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவா,க்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அந்த நெசவாள மக்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கிடைக்க வேண்டுமென்ற ஒரு காரணத்தாலே, நடந்து முடிந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில்கூட இந்த நெசவாள மக்களுக்காக 47 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகையைத் தாயுள்ளத்தோடு கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் தந்திருக்கிறார்கள். கைத்தறி மானியத்தின்போது விரிவாக அந்த விவரங்களைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன். இப்போது அறிவிப்பு. நடவடிக்கை எல்லாம் இருக்கலாம். ஆனால், இப்போது அவர்களுடைய வாழ்க்கை—இப்போது எல்லோரும் தொகுதிகளிலே இருக்கிறோம். கைத்தறித் தொழிலாளர்களுடைய வாழ்க்கை—எப்படி இருக்கிறது? அமைச்சர் அவர்கள், அரசு எடுத்திருக்கிற நடவடிக்கை என்கின்ற முறையிலே, அதிகாரிகள் மூலமாக வந்திருப்பதைச் சொல்லலாம். இலவச வேட்டி-சேலை என்பது குறிப்பிடப்படவில்லை. அது வந்தால்தான் அவர்கள் வாழ்க்கைக்கு உத்தரவாதம் இருக்குமென்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, தஞ்சை மாவட்டத்திற்குப் போயிருந்தோம். வறட்சியைப் பார்வையிடப் போயிருந்தோம். எங்கள் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வரதராஜன், திரு. ஜி. இராமகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மோகன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்கிற முறையில் நான், தோழர் பாலபாரதி ஆகியோர் சென்றிருந்தோம். தோழர் சிவபுண்ணியம் அவர்களும் ஒரு கட்டத்தில், துவக்கத்தில் கலந்து கொண்டார்கள். அந்த மாவட்டச் செயலாளர்களும் வந்தார்கள். பார்த்தால் கொடிய நிலை; பயிர் வந்தாகிவிட்டது. வறட்சி என்றால், விவசாயமே இல்லாமல் இல்லை. பயிர் வந்தாகி விட்டது. 2 வயது, 1½ வயது குழந்தை தொட்டிலில் படுத்துக்கொண்டு, அதனுடைய எதிர்காலம் கேள்விக்குறியாக மாறியிருக்கிறபோது, தாய், தந்தை மன உணர்வு எப்படி இருக்குமோ, அதுதான் விவாசாயிகளுக்கும்; அதைப் பார்க்கப் பார்க்க நமக்கே வேதனையாக இருக்கிறது. பட்டுப் போய் வருகிறது. இன்றைக்கு ஒரு லெவலில் இருக்கிறது என்றால், காலையிலே மேலும் கூடும். அதைப் பார்த்துவிட்டு வந்துதான் அவர்கள் அதிர்ச்சிக்கு

[திரு. என். நன்மாறன்] [2003 ஜனவரி 29

ஆளாகிறார்கள். அதுதான் கவலையோடு சொல்ல விரும்புகிறேன். காலையிலே நடைபெற்ற விவாதம்; அதன் உள்ளே போக விரும்பவில்லை. பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்புத் தந்து விட்டார்கள். 1974-லே என்ன நடந்தது, 1989-லே என்ன நடந்தது என்றால், என்ன பிரயோஜனம்? இன்றைக்கு விவசாயி, காலையிலே கர்நாடகாவிலே இருந்து தண்ணீர் வருமா, நம்முடைய பயிர் காப்பாற்றப்படுமா என்று இருக்கையில், இப்படிப்பட்ட பேச்சு என்பது மன்றத்தில் இருப்பது, விவசாயிகளுக்கு உதவி செய்யாது என்பதை வருத்தத்தோடு சொல்ல விரும்புகிறேன். அந்த விவசாயிகளுக்காகப் பல நடவடிக்கைகள் இருக்கின்றன. இப்போது உணவு தருகிறோம்; உணவைப் பார்த்தோம். கோயிலில் தருகிற மாதிரி ரொம்பவும் குறைவாக இருக்கிறது. அவர்கள் காட்டுகிறார்கள்; 1½ வயது, 2 வயது குழந்தைகளுக்குத் தருவது மாதிரி இருக்கிறது; பெரிய ஆட்களுக்கே அதுதான். ஆகவேதான் கேட்கிறோம், உணவு ....

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இப்போது மதிய உணவுத் திட்டம், தேவைப்படுகின்ற அளவுக்கு—அதில் அளவு இல்லை—ஒருவர் சாப்பிடுகின்ற அளவுக்கு, தேவைப்படுகின்ற அளவுக்கு வாங்கிக் கொள்ளலாம் என்ற நடவடிக்கையில்தான் வழங்கப்பட்டு வருகிறது. தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த நோக்கமும் கிடையாது. நாங்களும் போயிருந்தோம். வேண்டுமென்றால், ஓர் அனைத்துக் கட்சிக் குழுவை அமைத்து அதை உறுதி செய்யலாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இதைத் தீர்ப்பதற்கு ஒரு ....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. உண்மையல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, அந்த மாதிரி குறிப்பிட்ட சில மையங்களில் தவறு நடந்து கொண்டிருக்கிறது என்று அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படும். ஒவ்வொரு தனி நபருக்கும் 200 கிராம் அரிசி தரப்படுகிறது. 200 கிராம் அரிசி என்பது சாதமாக மாறுகிறபோது போதிய அளவு இருக்கக்கூடும். 100 கிராம் போதும் என்று அதிகாரிகள் சொன்னபோது, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அதிகமாகத் தரவேண்டுமென்று, 200 கிராம் ஒவ்வொரு தனி நபருக்கும் தரவேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள்.



2003 ஜனவரி 29]

**திரு. என். நன்மாறன்:** ஆகவே, இந்தச் சிரமத்தைத் தவிர்ப்பதற்கு, ஏற்கெனவே வழி சொல்லியிருக்கிறோம். அரிசியைக் கொடுத்துவிட்டால் அவர்கள் சமைத்துக் கொள்வார்கள். ஆகவே, அரிசி கொடுக்க வேண்டும். குடும்பச் செலவுக்கு 25 ரூபாய் என்கிற கோரிக்கையையும் மீண்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, வங்கிகளில் பயிர்க் கடன் வாங்கியிருக்கிறார்கள். இந்தக் கடன்கள் ரத்து செய்யப்பட வேண்டும். அது அசலோடு ரத்து செய்யப்பட வேண்டும். கந்து வட்டிக் கொடுமை என்பதும் அந்த வட்டாரத்தில் இருந்தால், அதன்மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதுவும் சேர்ந்து விவசாயிகளைத் தாக்கும். ஆகவே, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயிர் இழந்தவர்களின் குடும்பங்கள்; ஒரு விவாதம் வந்தது. அது என்ன? நாங்கள் போய்ப் பார்த்தோம். எங்களுக்குக் கிடைத்த தகவலுக்கும், அதிகாரிகள் சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஓர் ஆட்சியைப் பற்றிக் குறை சொல்கிறபோது, ஒரு கருத்தைச் சொல்கிறபோது, ஏதோ வேண்டுமென்றே சொல்வதாகக் கருத வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, கடந்த காலத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, அதிகாரிகளிடம் பல பிரச்சினைகளுக்கு ஆளாகி இருக்கும். இப்போது ஆளுங்கட்சியாக வந்துவிட்டது. அதிகாரிகள் எப்படி நடந்து கொள்வார்கள் என்று தெரியும். ஆகவேதான், அதிகாரிகள் சொல்வது எல்லாவற்றையும் நம்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நாங்களும் கூட ஒரு தனி அனைத்துக் கட்சிக் குழு அமைக்கலாம். இங்கே அறிக்கை தர வேண்டுமென்றால் அதையும் தருகிறோம். இங்கே பேசப்பட்டது மாதிரி இல்லை. உயிரிழப்பு; பிரகாஷ் விஷயம் இங்கே சொன்ன மாதிரி இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையில் ஒன்றைச் சொன்னார்கள். ஆனால் அந்த வட்டாரத்தில், அந்தப் பகுதியினர் அது 'பட்டினிச் சாவு' என்றுதான் சொல்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 7-25

அடுத்து நண்பர்களே, தனியார் கல்லூரி; இரண்டு நாட்களாக வருகிற செய்தி; நம்முடைய மாணவர்களுடைய எதிர்கால வாழ்க்கை.

[திரு. என். நன்மாறன்] [2003 ஜனவரி 29

தனியார் கல்லூரி உரிமையாளர்கள் தங்கள் இஷ்டம்போல் நடந்துகொள்வதை நாம் அனுமதிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம். அது முடிந்துவிட்டது. ஆனால், சிறுபான்மையினர் மத்தியில் இருக்கக்கூடிய அச்சத்தைப் போக்குகிற முறையில அறிக்கையில் இடம் பெறவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வருத்தப்படக்கூடாது. சபையிலிருந்து வெளியே போன பிறகு, மந்திரிகள் மாற்றப்படுகிறார்கள். அதில் ஒரு செயல் ஊக்கம் இருக்க வேண்டுமென்று தொடக்கத்தில் சொல்லப்பட்டது. அமைச்சர்கள் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தவர்கள், ஒவ்வொரு இலாகாவையும் மாற்றுவது கட்சிக்குள்ள உரிமை. ஆனால் வெளியே ஜனங்கள் கேட்பது; இங்கே சபையில் உறுப்பினர்களுக்குத் தகவல் வருகிறது. இருக்கைகள் மாற்றப்பட்டுள்ளன. ஆனால் இவ்வளவு தூரம் மாற்றவேண்டி என்ன அவசியம் இருக்கிறது என்பதையும் ஏதாவது ஒரு வடிவத்தில் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிற அதிகார வரம்புக்கு உட்பட்டது. திறமையான நிருவாகம், மக்கள் மேம்பாட்டுத் திட்டங்களில் திறமையான நடவடிக்கை போன்ற பலவற்றை உள்ளடக்கி, பல பிரச்சினைகள் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அரசியல் சட்டரீதியாக இருக்கிற உரிமையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசுவது முறையாக இருக்காது என்று கருதுகிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இருக்கிற அரசியல் சட்ட பூர்வமான ஓர் உரிமையைப் பற்றி ஒரு கேள்வியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்கவில்லை. திரு. நன்மாறனும் அதைக் கேட்கவில்லை. எங்கள் party-யின் நோக்கமும் அதுவல்ல. அமைச்சரவை மாற்றம் என்பது 13 தடவை, 14 தடவை ஏற்படும்பொழுது நிருவாகத் துறையில் பாதிப்பு ஏற்படுகிறது என்று மக்கள் பரவலாகப் பேசிக்கொள்கிறார்கள். குறைந்தபட்சம் சபைக்காவது அது தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுதான் அவாது கருத்து. முதலமைச்சர் அவர்களைக் கேள்வி கேட்கும் நோக்கமே கிடையாது.



2003 ஜனவரி 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் நன்மைக்கு, நிர்வாகச் செம்மைக்கு என்னென்ன தேவையோ, அதைச் செய்கின்ற அதிகாரம், உரிமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரைக்கும், நாட்டுக்கு நல்லதை மட்டும் செய்வார்கள் என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, தமிழகத்தில் இருக்கக்கூடிய வறட்சி; மத்திய அரசைப் பற்றி இரண்டு கருத்துகளை இந்த அரசு பதிவு செய்தது. ஒன்று, ஏற்கெனவே நம்முடைய நிதியமைச்சர் அறிக்கை வைத்தார், மத்திய அரசு நம்மிடம் எப்படி நடந்துகொள்கிறது என்று. இந்த அறிக்கையிலும்கூட நிதிக்குழு நம்மை எப்படிப் பாரபட்சமாகப் பார்க்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதேநேரத்தில், மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம், நம்புகிறோம் என்கிறார்கள். ஒரு தெளிவான நிலையை எடுக்க வேண்டும். வேறு ஓர் அரசாக இருந்தால் நிலை குலைந்திருக்கும் என்று வருகிறது. இதே நெருக்கடி இந்தியா பூராவும் இருக்கிறது. உலக நெருக்கடி இந்தியாவைப் பாதிக்கிறது, இந்திய நெருக்கடி மாநிலங்களைப் பாதிக்கிறது. இவ்வளவிலேயும் மேற்கு வங்க அரசும், திரிபுரா அரசும் ஒரு மாற்றுக் கொள்கையோடு போகிறது. தமிழக அரசும் அப்படிச் செல்லவேண்டுமென்பதுதான் எங்களுடைய விருப்பம். அது ஆளுநர் உரையில் பிரதிபலிக்கவில்லை என்பதை வருத்தத்தோடு சுட்டிக்காட்டி அமைகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. இராஜரெத்தினம்.

***திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளன்மையோடு வாரி வழங்கும் வான்மேக நெஞ்சம் கொண்டு, கள்ளச் சிந்தை கொண்டு வரும் பகையைத் துள்ளி எழுந்து துண்டாடி, தூளாக்கி, தமிழகத்தில் பொற்கால நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற, என்னை வாழவைத்த தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி, என்னுடைய பணிவான நன்றியைச் சமர்ப்பித்து, ஆளுநர் உரையின் மீது உரையாற்றுகின்ற அரிய வாய்ப்பை அளித்திட்டமைக்காக, நான் நித்தம் வணங்கும் அன்னையை மீண்டும் வணங்கி, ஆளுநர் உரையை நான் சார்ந்திருக்கிற

[திரு. ப. இராஜரெத்தினம்] [2003 ஜனவரி 29

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், தமிகத்திலே இருக்கின்ற கோடானு கோடி மக்களின் சார்பிலும் நான் வரவேற்றுப் பேச விழைகின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, 'மகத்திலே பிறந்தவர், ஜகத்தினை ஆள்வார்' என்பது முதுமொழி. அந்த முதுமொழியை மெய்மொழியாக்கி இன்றைக்குத் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கின்றார் நம்முடைய அம்மா அவர்கள். காவிரி வறண்டிடாது. புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்களுடைய வீரத்தால், உங்களுடைய விவேகத்தால், உங்களுடைய தீரத்தால், மீண்டும் காவிரி கரைபுரண்டு ஓடும் என்கின்ற வாலாற்றைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எழுதிக் கொண்டிருக்கின்ற நேரத்திலே, மிகச் சிறப்பானதொரு ஆளுநர் உரை இங்கே அமைந்திருக்கின்றது. சோகம், துரோகம், தவிர்த்து வரும் பகைமை சேர வரும்போது நேரே எதிர்நின்று அவற்றை நிர்மூலமாக்கி வரும் நித்தியத் தலைவி நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. சோம்பித் திரிபவர்கள், சூழ்ச்சித் தொழில் உடையோர், மக்களை மாக்கள் என நினைக்கும் வக்கணைகள் இவையெல்லாம் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, நீங்கள் காம் உயர்த்தி இரட்டை விரல் நீட்டிவிட்டால் நிலைகுலைந்து சரிந்துவிடும் என்னும் சரித்திரத்தை 2001-லே ஏற்படுத்தினீர்கள்.

பிற்பகல் 7-30

பேரவைத் தலைவர் அவர்களே, 2001-லே நடைபெற்ற மாபெரும் பொதுத் தேர்தலிலே இதய தெய்வம் தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 141 இடங்களிலே போட்டியிட்டு, 133 இடங்களிலே வெற்றிவாகை சூடினார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, இடைத் தேர்தல் வருகின்ற நேரத்திலே எல்லாம், இடைத் தேர்தல்களைப் பற்றிப் பொதுமக்கள் ஒரு கருத்தாகச் சொல்வதுண்டு. இடைத் தேர்தல் என்பது, அந்த ஆட்சிக்கு வழங்கப்படுகின்ற நற்சான்றிதழ் என்று சொல்வார்கள். அதேபோல, அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் நடைபெற்ற நான்கு இடைத் தேர்தல்களிலும்-- (1) ஆண்டிப்பட்டி, (2) அச்சரப்பாக்கம் (3) வாணியம்பாடி, (4) சைதாப்பேட்டை என்று நான்கு தொகுதிகளிலும்--சிறப்பான வெற்றியைப் படைத்திருக்கின்றவர்தான் நம்முடைய அன்னை புரட்சித் தலைவி, தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2003 ஜனவரி 29] [திரு. ப. இராஜரெத்தினம்]

இன்றைக்கு ஆளுநர் உரை என்பது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கொள்கையை, ஏழை, எளிய மக்கள் ஏற்றம் பெற வேண்டுமென்ற இந்த நல்ல சித்தாந்தத்தை உள்ளடக்கிய வேதமாய், வித்தகமாய், நாதமாய், நற்பெயராய் அமைந்திருக்கின்ற அம்மாவினுடைய ஆட்சியினுடைய மாட்சிமைகளை உணர்த்துகின்ற காலத்தின் பெட்டகமாய், தித்திக்கும் தேனமுதாய், தெவிட்டாத தென்னமுதாய் இனிக்கின்ற வகையிலே உள்ள இந்த ஆளுநர் உரையை நான் வாழ்த்தி, வரவேற்றுப் போற்றி உரையாற்ற விழைகின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே, தொழில் வளர்ச்சிக்காக பல்வேறு அரும் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. 13-7-2001-லே நடைபெற்ற Confederation of Indian Industry என்னும் ஆலோசனைக் கூட்டத்திலே தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உரையாற்றுகின்ற நேரத்திலே கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்:—

"My Government has pledged to make Tamil Nadu, the most attractive investment destination in India. To achieve this, we have proposed to initiate several business policies, such as (1) investor-friendly and transparent decision-making, (2) high priority infrastructure development, (3) human resources development, (4) continuous efforts to improve power availability."

இவ்வாறு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொழில் துறையினுடைய வளர்ச்சிக்காக ஊக்கமும், ஆக்கமும் கொடுக்கின்ற முதலமைச்சராக இன்றைக்குத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆளுநர் உரையில் இருக்கின்ற நல்ல பல சிறப்பு அம்சங்களை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கட்டி வைத்த காலணாக் காசையும் கந்து வட்டிக்குத் தந்துவிட்டு— கட்டிவைத்த காலணாக் காசையும் கந்து வட்டிக்கு தந்து விட்டு- அடுத்த வேளை உணவுக்கு அண்ணாந்து பார்க்கின்ற உழைக்கும் வர்க்கத்தைக் காக்க புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கந்து வட்டித் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, 'பாலைவனம் சோலைவனம் ஆகவேண்டும். பைங்கிளிகள் அங்கே வந்து பாடவேண்டும்' என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்றைக்கு 20 இலட்சம் ஹெக்டேர் நிலங்களை— தரிசு நிலமாக இருக்கின்ற அந்த நிலங்களை எல்லாம் வளம் மிகுந்த பூமிகளாக மாற்றுகின்ற தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. ப. இராஜரெத்தினம்] [2003 ஜனவரி 29

காவல் காக்கும் கரங்களுக்கு ஆறுதல் அளித்து, அவர்களை எல்லாம் நேரிலே வரவழைத்து, சந்தித்துக் குறை கேட்டவர்கள்; இந்தியத் துணைக் கண்டத்திலே மாத்திரம் அல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் பெருநிலத்திலே எந்த முதல்வரும், எந்தத் தலைவரும் செய்திராத சாதனையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்து ஆற்றியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கங்கை-காவிரி இணைப்பைப் பற்றி எல்லாம், பல்வேறு தலைவர்கள், உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஏதோ உலகத்தைக் கண்டுபிடித்தவர் கொலம்பஸ் என்று சொல்வதைப்போல, ஏதோ இன்றைக்கு கங்கை-காவிரியை இணைக்கின்ற திட்டத்தைத் தாங்கள்தான் முதன்முதலிலே பேச முனைந்திருக்கிறோம் என்று சிலர் கற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள். நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். 1984 ஆம் ஆண்டிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டெல்லி நாடாளுமன்ற மேலவையில் உறுப்பினராக இருந்தார்கள். அந்த மேலவையிலே பேசுகின்ற நேரத்திலே கங்கை-காவிரியினுடைய இணைப்பைக் குறித்து வலியுறுத்திப் பேசியவர்தான் புரட்சித் தலைவி, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

*பிற்பகல் 7-35*

அதேபோல, இந்த ஆளுநர் உரையிலே தமிழகத்திலே இருக்கின்ற 28 மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்து, அந்த வறட்சி மிகுந்த மாவட்டங்களை வளம் மிகுந்த மாவட்டங்களாக ஆக்குகின்ற அரும்பணியிலே அம்மா அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியின் அவலத்தால் ஏற்பட்ட மாபெரும் நிதி நெருக்கடியைத் தமது சீர்திருத்த நடவடிக்கைகளால் இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்—அந்த இடர்ப்பாடுகளை எல்லாம்—களைந்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக இருக்கிற கருணாநிதி அவர்கள், நடந்ததை நடக்காததவை போலவும், நடக்காதவற்றை நடந்தவை போலவும் சித்தரித்துக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நீங்களும் பல்வேறு முறை அழைத்து விட்டீர்கள்; ஜனநாயகக் கடமையை ஆற்ற வாருங்கள் என்று சொன்னீர்கள். அமர்ந்து



2003 ஜனவரி 29] [திரு. ப. இராஜரெத்தினம்]

கொண்டே பேசலாம் என்று சொன்னீர்கள். ஆனாலும், அவருக்கு ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு விருப்பமில்லை. இன்றைக்கு அவருடைய வழியிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும்—சென்ற ஆளுநர் உரையின்போது நாம் பார்த்துக் கொண்டிருந்தோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் உயர்திரு கருணாநிதி அவர்கள்—வந்து அமர்ந்தார்கள். உடனே இருந்தவர்களை எல்லாம் அழைத்துச் சென்று விட்டார்கள் என்று சொல்வதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் அனைவரும், தலைவர் எவ்வழியோ உறுப்பினர்களும் அவ்வழிதான் என்று நிரூபிக்கின்ற வகையிலே, இன்றைக்கு ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஜெர்மனியை ஆண்ட சர்வாதிகாரி ஹிட்லர் அவருடைய அமைச்சரவையிலே அமைச்சராக இருந்த ஒருவரைப் பற்றி உலகத்திலே சொல்வார்கள்; அவரை அண்டப் புளுகர் என்று சொல்வார்கள். புளுகுக்கு உதாரணமாக ஒரு வார்த்தையைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், கோயபல்ஸ் என்று உதாரணம் காட்டிச் சொல்வார்கள். அந்த கோயபல்ஸ் சொல்வான் Repeat a lie hundred times, it becomes truth என்று. அதேபோல, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருக்கின்ற கருணாநிதி அவர்கள், தொடர்ந்து கோயபல்ஸ் பிரச்சாரங்களை முடுக்கி விட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முன்னால், கருணாநிதி அவர்களே, உங்களுடைய கோயபல்ஸ் பிரச்சாரம் பலிக்கப் போவதில்லை, எடுபடப் போவதில்லை, நிர்மூலம் ஆக்கப்படும் என்று இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு உதாரணமாக இதே அவையிலே முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் சொன்னார்கள்; புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சுட்டிக்காட்டி, ராஜீவ் காந்தி கொலையாளிகளான தாணுவும், சிவராசனும் இருப்பது போன்ற ஒரு படத்தைச் சுட்டிக்காட்டி, இவர்கள் புரட்சித் தலைவியோடு தொடர்புடையவர்கள் என்று சொன்னார்கள். ஆனால் கெட்டிக்காரன் புளுகு 8 நாள் என்று சொல்வார்கள். புரட்சித் தலைவி அவர்கள் 8 மணி நேரத்திலேயே, அவர்கள் தாணு அல்ல; சிவராசன் அல்ல; ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் நஞ்சேகவுடா, தாட்சாயிணி என்று படம் பிடித்துக் காட்டி, கெட்டிக்காரன் புளுகு 8 நாள் அல்ல 8 மணி நேரம் கூட நிற்காது என்கிற ஒரு நிலையைச் செய்து காட்டி இருக்கின்றார்கள்.

[திரு. ப. இராஜரெத்தினம்] [2003 ஜனவரி 29

அதேபோல இதே அவை அறியும்; அருமை அண்ணன் கணேசன் அவர்களும் நன்றாக அறிவார்கள். நபார்டு வங்கிக்கு அம்மா அவர்கள் கடிதம் எழுதியதன் காரணமாகத்தான் கூட்டுறவு வட்டியைத் தள்ளுபடி செய்ய இயலவில்லை என்று கருணாநிதி தொடர்ந்து கோயபல்ஸ் பிரச்சாரத்தைச் செய்து கொண்டே இருந்தார். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-லே முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தான் அதுபோன்ற எந்த ஒரு கடிதத்தையும் எழுதவில்லை என்று நிரூபித்து இருக்கின்றார்கள். அவர்கள் அதைச் சொன்னதோடு மட்டுமல்லாமல், உடனடியாக 311 கோடி ரூபாய் விவசாயிகளுடைய கூட்டுறவு வட்டியை, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்தார்கள். அத்தகைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முன்னால், கருணாநிதியினுடைய கோயபல்ஸ் பிரச்சாரம் எடுபடப் போவதில்லை என்று ஆணித்தரமாக நான் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

எனக்கு முன்னாலே பேசிய மரியாதைக்குரிய மூத்த உறுப்பினர் திரு. ஹக்கீம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களைப் பார்த்துச் சொன்னார்கள்; 'நீங்கள் தொடங்குகிற விஷயங்களை எல்லாம் சாவிலே தொடங்குகிறீர்களே' என்று சொன்னார்கள். நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்; குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதி அவர்கள் தன்னுடைய அரசியலைத் தொடங்கியதே சாவை வைத்துத்தான். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே மாணவனாக இருந்த உதயகுமாரைக் கொன்றுவிட்டு, 'உதயகுமார் என்னுடைய மகன் அல்ல' என்று அவனுடைய தந்தையை வைத்து ஒரு கடிதத்தை வாங்கி, இதே அவையிலே படித்துக் காட்டி, கோயபல்ஸ் பிரச்சாரத்தைச் செய்தவர்தான் கருணாநிதி என்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அற்புதத் திட்டங்களைப் படைக்கின்ற அரசாக இருக்கிறது. இன்றைக்கு உலகத்திலே வாழுகிற கோடானுகோடி மக்களுக்கு, நாம் உட்பட அனைவருக்குமே இதயம் இருக்கிறது. ஆனால் யாருமே இதய நோயைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. உலகத்திலேயிருக்கின்ற எத்தனையோ கோடிப் பேர் மத்தியிலே, அவர்களுடைய இதயத்திலே உதிக்காத உன்னதமான திட்டம்;



2003 ஜனவரி 29] [திரு. ப. இராஜரெத்தினம்]

இன்றைக்கு--ஏழையாக இருக்கின்றவன், தன்னுடைய இதயம் மாசுபட்டுவிட்டால், அவனுக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமா, வேண்டாமா என்று தெரியாத ஒரு சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற--ஏழை மக்களுக்குக்கூட, இதயம் காக்கும் திட்டத்தின்கீழ் பல இலட்சம் ரூபாய் செலவு செய்து Bye-pass surgery செய்து அவர்களைக் குணமாக்குகின்ற அந்த இதயம் காக்கும் திட்டம், அம்மாவினுடைய அற்புதத் திட்டம் என்று இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 7-40

எனக்கு முன்னாலே பேசிய நம்முடைய கம்யூனிஸ்ட் சட்டமன்ற உறுப்பினர்கள்கூட, இன்றைக்கு வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற இலவச மதிய உணவுத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். நான் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். இன்றைக்கு 63 திருக்கோயில்களிலே ஆரம்பித்து, தொடர்ந்து 144 திருக்கோயில்களிலே புரட்சித் தலைவி அவர்கள் தொடங்கி வைத்த திருக்கோயில்கள் அன்னதானத் திட்டம். மிகச் சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது. அதேபோல இன்றைக்கு தமிழகத்திலே வாழ்ந்துகொண்டிருக்கிற வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற பல இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுடைய பசியைப் போக்குவதற்காகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலவச மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். நான் கேட்க ஆசைப்படுவதெல்லாம், தமிழ்நாட்டிலே, இந்தியத் திருநாட்டிலே, ஏன், உலகத்திலே எத்தனை மாநிலங்கள் இருக்கின்றன, எத்தனை முதல்வர்கள் இருக்கிறார்கள், உலகம் முழுவதும் எத்தனை நாடுகள் இருக்கின்றன, அந்த நாட்டிலே எல்லாம் தலைவர்கள் இருக்கின்றார்களே, அவர்களுக்கெல்லாம் உருவாகாத ஒரு சிந்தனை இது. ஏன், நான் குறிப்பிட்டுக் கேட்க ஆசைப்படுகிறேன். பொதுவுடைமைச் சித்தாந்தத்தைப் பேசுகின்றவர்கள்கூட, ஒரு தனி நபர் உணவு அருந்தினாரா இல்லையா என்று கவலைப்படுகின்ற ஒரு சூழ்நிலை இல்லாத நேரத்திலே, தனி நபர் பட்டினியைப் பற்றி நினைத்துப் பார்த்து, அவர்களுக்கு அமுது ஊட்டுகின்ற அன்னையாக, அன்னமிட்ட கையாக, தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், இந்தத் தமிழ்நாடே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டத்தைப் பார்த்து இன்றைக்குப் போற்றிக் கொண்டிருக்கிறது; வாழ்த்திக் கொண்டிருக்கிறது; வரவேற்றுக் கொண்டிருக்கிறது.

எனக்கு முன்னாலே பேசியவர்கள் அனைவருமே சொன்னார்கள். தமிழ்மொழியைப் பற்றிச் சொன்னார்கள். நான் பணிவோடு தெரிவிப்பதெல்லாம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி ஒன்றுதான் தமிழ் மக்களுடைய, தமிழ் மொழி வளர்ச்சியினுடைய ஏற்றத்திற்கு பாடுபட்ட இயக்கம் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1998-லே டெல்லி நாடாளுமன்றத்திற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே 18 மக்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சென்றார்கள். அதிலே நானும் ஒருவன். அப்போது மைய அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே ஆதரவுக் கடிதத்தைக் கேட்ட நேரத்திலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள்; ஆறு பாயின்ட்டுகளைச் சொல்லி, இந்த விவரங்களையெல்லாம் நீங்கள் உங்களுடைய தேசிய செயல் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அதிலே ஒன்றுதான், தமிழ்மொழி ஆட்சி மொழி ஆக்கப்பட வேண்டுமென்பது. அந்த நிபந்தனையோடு கூடிய ஆதரவைத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1998-லே மைய அரசுக்கு வழங்கினார்கள். தேசிய செயல் திட்டத்திலே தமிழ் மொழி ஆட்சி மொழி ஆக்கப்பட வேண்டுமென்கிற ஷரத்தை ஏற்றிய பெருமை தமிழகத்தினுடைய முதல்வர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

அதேபோல நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய தினம் வரையிலே எட்டு உலகத் தமிழ் மாநாடுகள் நடத்தப்பட்டதாகக் குறிப்புகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 1966-லே சம்பந்தம் என்பவர் மலேசியா அமைச்சராக இருந்தவர், நடத்தியிருக்கிறார். அதற்குப் பிறகு 1968-லே சென்னையிலே தமிழகத்தினுடைய முதலமைச்சராக, வாழ்ந்து மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் நடத்திக் காட்டியிருக்கிறார்கள். அதற்கு அடுத்தாற்போல பிரான்சிலே நடைபெற்றிருக்கிறது; இலங்கையிலே நடைபெற்றிருக்கிறது. மதுரையிலே மிகப் பிரம்மாண்டமான உலகத் தமிழ் மாநாட்டை நடத்திக் காட்டினார்கள். நம்முடைய ஒப்பற்ற தலைவர் புரட்சித்தலைவர், பொன்மனச் செம்மல், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள். அதற்குப் பிறகு 8-வது உலகத் தமிழ் மாநாட்டை நடத்திக் காட்டிய பெருமைக்குரியவர் தமிழ் தரணியை ஆண்டு கொண்டிருக்கின்ற, தமிழ் மொழி உயர்வுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தஞ்சையிலே (மேசையைத் தட்டும்





ஒலி) மிகப் பிரம்மாண்டமாக உலகத் தமிழ் மாநாட்டை நடத்திக் காட்டினார்கள். ஆகவே, இன்றைக்குத் தமிழ் மொழியினுடைய உயர்வுக்காகப் பாடுபடக்கூடிய ஒரு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, 1998-லே மைய அரசில் பங்கேற்கக்கூடிய ஒரு சூழ்நிலையிலே புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினுடய இன்றியமையாத் திட்டங்களை, முக்கிய தேவைகளை தேசிய செயல் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். அதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 7-45

காவிரிப் பிரச்சினை, 69 சதவிகித இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை, மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு தருகின்ற பிரச்சினை, தமிழ் மொழியை ஆட்சிமொழியாக்குதல், சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம், முல்லைப் பெரியார் அணை—நீர்த்தேக்கத் திட்டத்தினுடைய—பிரச்சினை, இந்த ஆறு கோரிக்கைகளையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வைத்து அன்றைக்கு மைய அரசாங்கத்தில் சேர்ந்தார்கள். தான் ஆட்சிக் கட்டிலிலே இங்கே தமிழகத்திலே இல்லாத ஒரு சூழ்நிலையிலேயும் தமிழக மக்களுடைய இன்றியமையாத பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணித்தரமாகக் குரல் கொடுத்தார்கள். ஆனால், 1999-லே அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசிலே பங்கேற்கக்கூடிய ஒரு சூழலிலே, அவர்கள் என்ன கோரிக்கை வைத்தார்கள், எதைக் கேட்டார்கள் தமிழக மக்களுக்காக? ஒன்றுமே கேட்கவில்லை. தி.மு.க. தலைவர் கருணாநிதி ஒன்றே ஒன்றுதான் கேட்டார். என்ன கேட்டார் என்று சொன்னால், Industries, Commerce என்று இரண்டு துறைகளாக இருந்ததை, தன்னுடைய மச்சானுக்காக Combined-ஆக இரண்டும் வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கேட்டார். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களுக்காகக் கேட்டார்கள்; ஆனால், கருணாநிதி, தன்னுடைய சொந்த மச்சானுக்காகக் கேட்டார். இதுதான் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவிக்கும், தி.மு.க. தலைவர் கருணாநிதி அவர்களுக்கும் உள்ள வேறுபாடு என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இங்கே வறட்சியைப் பற்றியும், தஞ்சைத் தரணி வறண்டு கிடப்பதைப் பற்றியும்

தி.மு.க.-வினர் வாய்கூசாமல் பேசுகிறார்கள். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். 1976-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி எதற்காகக் கலைக்கப்பட்டது என்பதைப் படித்துப் பார்த்தேன்; புத்தகங்களைத் திறந்து பார்த்தேன்; திருப்பிப் பார்த்தேன்; குறிப்புகளைப் புரட்டிப் பார்த்தேன். அதிலே ஒரு அதிர்ச்சித் தரத்தக்க விவரக் குறிப்பை நான் பார்க்க நேர்ந்தது: 1976 ஜனவரி 30ஆம் தேதி கலைக்கப்பட்ட ஆட்சியைப் பற்றி, ஜனவரி 29ஆம் தேதி அன்றைய ஆளுநராக இருந்த மரியாதைக்குரிய கே.கே. ஷா அவர்கள் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு ஒரு அறிக்கையை அனுப்புகிறார்கள். அந்த அறிக்கையிலே; திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே 'நெல் விற்பனையில் பெரும் ஊழல்கள்' என்னும் தலைப்பிலே மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்ற ஒரு சில விவரக் குறிப்புகளை நான் இங்கே அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

1974 ஆம் ஆண்டு மத்தியிலே, மாநிலத்தில் நெல் தேவை ஏற்படும்போது தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து மாநிலத்தின் மற்ற பகுதிகளுக்கு அரிசி கொண்டு போவதற்கான தடை நீக்கப்படுகிறது என்கிற உத்தரவை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி அன்றைக்குப் போட்டது. அதன் வாயிலாக, வறட்சி நிவாரண நிதியிலே துஷ்பிரயோகம், அதேபோல், நெல்லைக் கடத்தினார்கள் தஞ்சைத் தரணியிலேயிருந்து. அப்படியெல்லாம் ஊழல் செய்தவர்களுக்கு வறட்சி நிவாரணப் பணியிலேயிருந்த நிதியைச் சுரண்டிச் சாப்பிட்டவர்களுக்கு, இன்றைக்கு தஞ்சைத் தரணியைப் பற்றியும், தமிழகத்திலே இருக்கின்ற வறட்சியைப் பற்றியும் பேசுவதற்கு அருகதை இருக்கிறதா என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது நான் பேசிக்கொண்டிருக்கின்ற இதே நேரத்திலே, விரைவிலே பெரம்பலூர் மாவட்டத்திற்குத் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வர இருக்கின்றார்கள் என்கிற ஒரு செய்தி நம்முடைய காதிலே விழுந்து கொண்டிருக்கின்றது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெரம்பலூருக்கு வருகை தருகின்ற நேரத்திலே, பெரம்பலூரிலே இன்றியமையாத ஒருசில தேவைகளை அம்மா அவர்கள் பூர்த்தி செய்து தருவார்கள் என்று ஆவலோடு நாங்கள் காத்துக் கொண்டிருக்கின்றோம்.

பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பந்தட்டை ஒன்றியம், கல்லாறு விசுவக்குடி அணை பொதுப்பணித் துறையின் சார்பிலே 12 கோடி





ரூபாய்க்குக் கட்டப்படும் என்று சொன்னால், அங்கே நிலத்தடி நீர் உயர வாய்ப்பு இருக்கிறது. வேளாண்மைத் தொழிலுக்குத் தண்ணீர் தேவை; அங்கே இருக்கின்றது. அதையும் நாங்கள் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே வேப்பந்தட்டை வட்டம், கல்லாறு விசுவக்குடி அணைத் திட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்று பணிவோடு நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சின்னமுட்லு அணைத் திட்டம், அதையும் நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டும் என்று இன்றைய தினம் நான் இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன். அற்புதம் ஆயிரம் ஆற்றிடும் ஆட்சி, அநாதைப் பெண் குழந்தைகளுக்காக ஆடும் தொட்டில்கள், பொற்குவியும் தொழில் துறை பசுமைத் திட்டம் என எண்ணற்ற சாதனை அம்மாவின் ஆட்சியில், --இதையெல்லாம் நாட்டு மக்கள் வாழ்த்திக்கொண்டிருக்கின்றார்கள்; இதைப் பார்த்து வரவேற்றுக் கொண்டிருக்கின்றார்கள்; போற்றிக் கொண்டிருக்கின்றார்கள்; புகழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலே தோன்றியவர்கள் எல்லாம் உன்னத நிலையை அடைந்தது இல்லை. பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலே தோன்றியவர்கள் எல்லாம் உன்னத நிலையை அடைந்தது இல்லை. மனிதப் பிறவி எடுத்தவர்கள் எல்லாம் மகத்தான சாதனைகளைப் படைத்தது இல்லை. அரசியல் வானில் தோன்றியவர்கள் எல்லாம் அற்புத நிலாவாக ஒளி வீசியது இல்லை. ஆனால், உன்னதத்தின் உன்னதமாய், மகத்துவத்தின் மகத்துவமாய், அற்புதத்தின் அற்புதமாய், ஒவ்வொரு நாளும், புதுப் புது சாதனை, ஒவ்வொரு நாளும் புதுப் புது சிந்தனை என்று படைத்து வருகின்ற நம்முடைய அம்மா அவர்களுடைய ஆட்சி இன்று தமிழகத்தில், நாளை பாரதத்தில் என்று கூறி, ஆளுநர் உரையை வரவேற்று, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

## 8. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *30-1-2003* அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் *7-50*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 30-1-2003 அன்று தளர்த்தி, அந்த நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

*30-1-2003* அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(30-1-2003)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *7-51* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*14. 2001-2002* ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு லிமிடெட்டின் இருபத்து மூன்றாவது ஆண்டறிக்கை [*(1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

*15. 2001-2002* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் இருபத்து ஏழாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

*16. 2001-2002* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்-*1*) முப்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [*1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

*17. 2001-2002* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்-*2*) இருபத்து எட்டாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

*18. 2001-2002* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்-*3*) பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

*19. 2001-2002* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்-*4*) பதினாறாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

*20. 2001-2002* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்-*5*) ஆறாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

[2003 ஜனவரி 29

21. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்-2) பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

22. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (சேலம் கோட்டம்-1) முப்பதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

7. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஒன்றாவது அறிக்கை (2001-2003)

8. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து இரண்டாவது அறிக்கை (2001-2003).

9. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து மூன்றாவது அறிக்கை (2001-2003).

10. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து நான்காவது அறிக்கை (2001-2003).

11. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபதாவது அறிக்கை (2002-2003).

12. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்து ஒன்றாவது அறிக்கை (2002-2003).

13. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்து இரண்டாவது அறிக்கை (2002-2003).

14. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (முதலாவது பட்டியல்) வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

15. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

16. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

18534